# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003


## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

# பி.ஏ., (தமிழ்)

## இளங்கலை - முதலாமாண்டு

## இரண்டாம்பருவம்

## 137 21

## பொதுத்தமிழ்

# Part 1 தமிழ் II

**Author:**

**DR. M.CHITHAMBARAM**, *Associate Professor in Tamil, Tamil Research Centre, Alagappa Government Arts College, Karaikudi-630003*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr.S.Naganathan,** *Assistant Professor of Tamil, Ramasamy Tamil College, Karaikudi-630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE12/B.A.Tamil/Printing of Course Materials/2021 Dated 23/04/2021 Copies 2200**

# 137 21 பகுதி I

# தமிழ் தாள் - II

## நோக்கம் : மொழி அறிவு,

## இலக்கண அறிவை வளர்த்தல்

### பிரிவு –1 பக்தி இலக்கியம்

**கூறு: 1**

திருஞானசம்பந்தர் தேவாரம் - கோளறு பதிகம் - வேயுறு தோளி பங்கன்

**கூறு: 2**

ஆண்டாள் - திருப்பாவை – முதல் பதினைந்து பாடல்கள்

**கூறு: 3**

குமரகுருபரர் – மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - முதல் ஐந்து பாடல்கள்

### பிரிவு – 2 சிறுகதை, உரைநடை

**கூறு: 4**

சிறுகதை – நீலபத்மநாபன் - வானவீதியிலே

**கூறு: 5**

உரைநடை – கம்பன் - புறத்திணை – தி. சொக்கலிங்கம்

### பிரிவு – 3 இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

**கூறு: 6**

1. முதல் எழுத்துகள், சார்பெழுத்துகள்
2. மொழி முதல் எழுத்துகள், மொழி இறுதி எழுத்துகள்

**கூறு: 7**

1. ஒற்றெழுத்து மிகலும் மிகாமையும்
2. ஆகு பெயர், அன்மொழித்தொகை
3. வினா - விடை வகைகள்

**கூறு: 8**

1. தமிழ்ச்சொல் அமைப்பின் சிறப்பு – பெயர், வினை, இடை, உரி வடிவங்கள்
2. பிறமொழிச்சொற்களைத் தமிழில் ஆளும் முறைகள்

**கூறு: 9**

1. அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சி
2. திணை, பால், எண், இட இயைபு

**கூறு: 10**

1.இக்கால இலக்கியங்கள்

(அ) மரபுக் கவிதை

(ஆ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

**கூறு: 11**

1. உரைநடை இலக்கியங்கள் - தோற்றமும் வளர்ச்சியும்

(அ) கட்டுரை (ஆ) சிறுகதை

(இ) புதினம் (ஈ) நாடகம்

**கூறு: 12**

1.இக்கால இலக்கியக் களங்கள்

திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, இதழ்கள் தமிழுக்கு ஆற்றிவரும் பணிகள்

**கூறு: 13**

1.தமிழும் சமயங்களும்

(அ) சைவம் (ஆ) வைணவம் (இ) சமணம் (ஈ) பௌத்தம்

(உ) இசுலாம் (ஊ) கிறித்துவம்

**கூறு 14**

இணையம் - பற்றிய செய்திகள்

# பிரிவு – 1

குறிப்பு

## பக்தி இலக்கியம்

### கூறு: 1 - திருஞானசம்பந்தர் தேவாரம்

### கோளறு பதிகம் - வேயுறு தோளி பங்கன்

**திருஞானசம்பந்தர் வரலாறு:**

சோழ நாட்டில் பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயர்களால் அழைக்கப்படும் தலம் சீர்காழி என்பதாகும். இத்தலத்தில் சிவபெருமானுக்கு இறைத்தொண்டு செய்து வந்தவரான சிவபாதவிருதயர் - பகவதியார் என்பாருக்கு மகனாய்ச் சைவமும் தமிழும் செய்த திருத்தவத்தால் வந்துதித்தார் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தர் மூன்று வயதாக இருந்தபொழுது அவரின் தந்தையார் சிவபாத இருதயர் சீர்காழி ஆலயத்தினுள்ளிருக்கின்ற திருக்குளத்தின் கரையில் அவரை அமர வைத்துவிட்டு குளத்தில் இறங்கி மூழ்கி நீராடினார். நீண்ட நேரம் தந்தையைக் காணாத திருஞானசம்பந்தர் கண்களில் கண்ணீர் ததும்பும்படி அழுதார். இதனைச் சேக்கிழார்,

“வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்”

எனக் குறிப்பார். திருஞானசம்பந்தரின் அழுகுரலானது இறைவனின் திருச்செவியில் கேட்க இறைவனின் ஆணைக்கிணங்க இறைவியாகிய பார்வதிதேவி பொற்கிண்ணத்தில் ஞானப்பால் கெண்டு வந்து ஊட்டினார். இறைவியின் ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தர்,

“உவமை யிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்”

குறிப்பு

என விளக்குவார் சேக்கிழார். சிவபாதவிருதயர் சிறிதுபொழுதிலே தம்முடைய நியமங்களை முடித்துக் கொண்டு கரையிலேறி, சிவபெருமானைத் தரிசித்து ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரை நோக்கி 'எச்சில் மயங்க உனக்கு இதனைத் தந்தவரைக் காட்டு' எனக் கேட்க பிள்ளையார் தம்முடைய திருப்பாடல் சிவபெருமானுடைய திருச்செவியில் கேட்கும் வண்ணம் முன்னர் அத்திருச்செவியையே சிறப்பித்து,

"தோடு உடைய செவியன், விடை ஏறி, ஓர் தூ வெண்மதி சூடி,
காடு உடைய சுடலைப் பொடி பூசி, என் உள்ளம் கவர் கள்வன்-
ஏடு உடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த, அருள்செய்த,
பீடு உடைய பிரமாபுரம் மேவிய, பெம்மான்-இவன் அன்றே!"

என்று பாடத் தொடங்கியருளினார். திருஞானசம்பந்தருக்கு திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமான் முத்துச்சிவிகையும், அவருக்கு நிழற்றுதற்கு முத்துக் குடையும், ஊதுதற்கு முத்துச் சின்னங்களுங் கொடுத்தருளினார். திருஞானசம்பந்தர் மீண்டும் சீர்காழி அணைந்து திருத்தோணியப்பரை பாடிப் பரவிக் கொண்டு இருக்கும் நாளில் திருநாவுக்கரசர் அவருடைய அருட்திறத்தைக் கேள்வியுற்று, அவரைக் காணச் சீர்காழிக்கு அருகில் வந்தருளினார். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் வந்தமையை அறிந்து திருவுளம் மகிழ்ந்து, அடியார் கூட்டத்தோடும் அவரை எதிர்கொண்டு வணங்கி வரவேற்றார். எதிரே வந்த திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரை வணங்க, திருஞானசம்பந்தரும் அவரை வணங்கித் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். இருவரும் சிவபெருமானை வணங்கி மகிழ்ந்தனர். பின் திருநாவுக்கரசர் பிற தலங்களை வணங்கச் செல்லத் திருஞானசம்பந்தர் அவருடன் திருக்கோலக்கா வரை சென்று, வணங்கி சீர்காழி அடைந்தார். பின்னர் மழநாட்டில் காவேரி வடகரையே சென்று, திருப்பாச்சிலாச்சிராமத்தை அடையும்முன் அந்நகரத்தில் இருந்த கொல்லி மழவன் என்பவன் தன்னுடைய மகள் முயலகனென்னும் நோயினால் வருந்துதலைக் கண்டு, கவலையுற்று, வேறொரு மருந்தினாலும் நீங்காமை கண்டு அவளைத் திருக்கோயிலினுள்ளே

குறிப்பு

கொண்டே போய்ச் சுவாமியின் முன் இட்டு வைத்தான். திருஞானசம்பந்தர் அந்நகரத்தினை அணைந்தபொழுது கொல்லி மழவன் திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு, தன் குறையினைத் தெரிவித்து தன் மகளை நோயினின்று மீட்டு அருளுதல் வேண்டும் எனப் பணிந்து நின்றான். திருஞானசம்பந்தர் அதைக்கேட்டு, அருள்சுரந்து, அவளுடைய நோயை நீக்கும்பொருட்டு, 'துணிவளர் திங்கள்' எனத்தொடங்கி 'மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோவிவர் மாண்பே' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடன் அப்பெண் நோய் நீங்கித் தன் தந்தையை அடைந்தாள். அது கண்ட மழவன் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு, அவளோடும் திருஞான சம்பந்தரை விழுந்து வணங்கினான். திருச்செங்காட்டாங்குடியில் இருக்கின்ற சிறுத்தொண்ட நாயனார் திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு, தம்முடைய திருப்பதியில் அழைத்துக் கொண்டு போனார். ஞானசம்பந்தரும் அத்தலத்தில் உறைகின்ற கணபதீச்சர மென்னுந்திருக்கோயிலை வணங்கி, சிறுத்தொண்ட நாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடியருளினார். சில நாளாயின பின், திருமருகலுக்குப் போய், இறைவனை வணங்கிக் கொண்டு அங்கிருந்தார். அந்நாளிலே, ஒரு வணிகன் அந்தத் தலத்தின் வழியே செல்பவன் ஒரு கன்னிப்பெண் அருகிருக்க கோயிலுக்குப் புறத்தில் ஒரு மடத்தில் இரவில் உறங்கிக் கொண்டிருந்த பொழுது பாம்பினாலே தீண்டப்பட்டு மாண்டான். அதுகண்டு அப்பெண்ணானவள் வருந்தி அவனைப் பாம்பு தீண்டியும் தான் அவனைத் தீண்டாமல், வீழ்ந்து புரண்டு அழுதாள், அது கண்ட திருஞானசம்பந்தர் நிகழ்ந்ததைக் கூறுமாறு வேண்ட அப்பெண் 'வைப்பூரில் இருக்கின்ற தாமனென்னும் பெயரையுடைய என் தந்தைக்கு மகள்கள் எழுவர் ஆவர். அவர்களில் என்னை நீங்கலாக மூத்தோர் அறுவரையும் தன் மருமகனாகிய இவனுக்கே திருமணம் செய்து கொடுப்பேன் என்று சொல்லிச் சொல்லி, மற்றவர்களிடம் பொருளைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டான். அது கண்டு மனவருத்தமுற்ற இவனுக்கே நான் மனைவியாதல் வேண்டும் என நினைந்து, என் பெற்றோர்களுக்குத் தெரியாமல் இவனையே சார்ந்து வந்தேன். இவனும் பாம்பினாலே தீண்டப்பட்டு இறந்தான். நான் கடல் நடுவே கப்பல் கவிழப் பெற்றார் போல வருந்தி நிற்கின்றேன். தேவரீர்! அடியேனுடைய துன்பமெல்லாம் நீங்க அருள் செய்வீர்! என வேண்டினாள். திருஞானசம்பந்தர் பாம்பின்

குறிப்பு

விடம் நீங்கும் வண்ணம் திருமருகல் இறைவன் மேல் ‘சடையா யெனுமால்’ என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். உடனே வணிகன் விடந்தீர்ந்து எழுந்து, திருஞானசம்பந்தரை வணங்கி நின்றான். அப்பெண்ணும் மகிழ்ந்து வணங்கினாள். திருஞானசம்பந்தர் அக்கன்னியையும் வணிகனையும் மணம் செய்து கொள்ளுமாறு செய்து அவர்களுக்கு விடைகொடுத்து, அங்கே எழுந்தருளியிருந்தார். பின்னர் பல தலங்களுக்குச் சென்று இறைவனைப் பாடிப் பரவியபின் திருவீழிமிழலையை வந்தடைந்தார். அங்கு திருநாவுக்கரசரும் வந்தணைந்தார். இருவரும் திருவீழிமிழலையில் இருந்த நாளில் மழையின்மையாலும் காவேரிப்பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாயிற்று. அதனால் உயிர்களெல்லாம் வருத்தமுற்றன. சிவனடியார்களையும் பசிநோய் வருத்திற்று. அதுகண்டு திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவுளமிரங்கி, இறைவனின் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு, அன்றிரவு துயின்றார்கள். துயிலும்போது, சிவபெருமான் அவ்விருவரின் கனவில் தோன்றி, அடியார்களுடைய வருத்தத்தை நீக்கும் பொருட்டு, இப்பஞ்சம் நீங்கும்வரைக்கும் நாம் தினந்தோரும் திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப்பீடத்திலும் ஒவ்வொரு காசு உங்களுக்குத் தருகின்றோம்’ எனக் கூறி மறைந்தருளினார். திருஞானசம்பந்தர் விழித்தெழுந்து, இறையருளை நினைந்து திருநாவுக்கரசரோடு திருக்கோயிலிற் புகுந்தபோது, கிழக்குப்பீடத்திலே காசு இருத்தலைக் கண்டு, விருப்பத்தோடுந் தொழுது, அதனை எடுத்து, ‘நாள்தோறும் சிவனடியார்களெல்லாரும் வந்து அமுது செய்யக்கடவர்கள்’ என்று தெரிவித்து, தம்முடைய திருமடத்தில் வரும் அடியார்களுக்கு திருவமுது செய்வித்தார். திருநாவுக்கரசரும் மேற்குப்பீடத்தில் வைக்கப்படும் பொற்காசை எடுத்து, அப்படியே அடியார்களைத் திருவமுது செய்வித்தார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டினை அடைந்த பொழுது அத்திருக்கோயிற் திருக்கதவு அடைக்கப்பெற்றுள்ளமையைக் கண்டனர். அதனைக் கண்ட கண்ட திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை நோக்கி, ‘அப்பரே! இந்தத் திருக்கதவு திறக்கப்படும் பொருட்டு நீரே திருப்பதிகம் பாடும்” என்றார். அப்பரும் திருப்பதிகத்தைத் திருக்கதவு திறக்கப்படும்பொருட்டு

குறிப்பு

"பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே"

பாட அது திறக்கப்படாமல் தாழ்ந்தது; அதுகண்டு, 'இரக்கமொன்றிலீர்' என்று திருக்கடைக்காப்பிலே பாடி வணங்கினார். உடனே திருமறைக்காட்டு இறைவனின் திருவருளினாலே திருக்கதவு திறக்கப்பட்டது. அப்பொழுது அப்பர் பெருமான் திருஞானசம்பந்தரை நோக்கி, 'எம்பெருமானுடைய திருவருளினாலே இந்தத் திருக்கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் என்றும் வழங்கும் பொருட்டுத் தேவரீர் இது அடைக்கப்படும்படி திருப்பதிகம் பாடியருளும்' என்றார். திருஞானசம்பந்தர்

"சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய் கவெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே"

என்னும் முதற்றிருப்பாட்டுப் பாடிய மாத்திரத்தில் திருக்கதவு அடைக்கப்பட்டது. அதுகண்டு, நாயன்மார் இருவரும் இறைத்திருவருளை வியந்து மகிழ்ந்து வணங்கினார்.

அந்நிலையில் பாண்டிய நாட்டில் கூன்பாண்டியன் சமண சமயத்தைச் சார்ந்திருந்தான். மன்னன் சமணம் சார்ந்திருந்தமையால் மக்களும் அச்சமயத்தினைச் சார்ந்திருந்தனர். அப்பாண்டியனுடைய மனைவியும் சோழர்குலச் செல்வியுமாகிய மங்கையர்க்கரசியாரும் அவ்வரசனுடைய முதன்மந்திரியாராகிய குலச்சிறையாரும் சைவர்களாய் இருந்தனர். அவர்கள் பாண்டியநாடு செய்த பெருந் தவத்தினாலே திருஞானசம்பந்தரின் அருளாற்றலையும் அவர் திருமறைக்காட்டில் இருப்பதனையும் கேள்வியுற்றனர். உடன் மங்கையாக்கரசியாரின்

குறிப்பு

ஆணைக்கிணங்க திருஞான சம்பந்தரைப் பாண்டிய நாட்டிற்கு அழைத்து வரக் குலச்சிறையார் திருமறைக்காடு சென்றார். அவரின் வேண்டுகோளினை ஏற்றுத் திருஞானசம்பந்தர் பாண்டியநாடு சென்றார். மதுரையம்பதியை அடைந்து தங்கியிருந்த திருஞானசம்பந்தரின் திருவிடத்திற்குச் சமணர்கள் தீ வைத்தனர். அதனை அறிந்த திருஞானசம்பந்தர் அத்தீயானது 'பையவே சென்று பாண்டியருக்கு ஆகுக!' எனத் திருவாய் மலர்ந்தருளினார். சிவபத்தியிற் சிறந்த பாண்டிமாதேவியாருடைய திருமாங்கலி யத்தைப் பாதுகாத்தல் வேண்டினமையாலும் மந்திரியாராகிய குலச்சிறை நாயனாருடைய அன்பினாலும், அரசனிடத்தில் அபராதம் உறுதலாலும், அவனுக்கு மீண்டும் சைவமார்க்கத்தை அடையும் விதி உண்மையாலும், அவன் வெப்பு நீங்கும்படி தம்முடைய அருமைத் திருக்கரங்களினாலே தீண்டி விபூதி சாத்தும் பெரும்பேற்றை உடையனாதலாலும் தீப்பிணியைப் 'பையவே சென்று' என்று அருளிச் செய்தார். தீயின் வெப்பமானது கூன்பாண்டியனை வெப்புநோயாகத் தாக்கியது. சமணர்கள் 'அரசே! உம்முடைய இடப்பாகத்து நோயை நாங்கள் எங்கள் சமய மந்திரத்தினாலே தீர்ப்போம். அவர் வலப்பாகத்து நோயை தீர்க்கக்கடவர்' எனச் சொல்லி, அரசனுடைய இடப்பாகத்தைப் பீலியினாலே தடவினார்கள். அதினாலே வெப்பு நோய் மேலும் வளர, பாண்டியன் அதைப் பொறுக்க இயலாது திருஞானசம்பந்தரைப் பார்த்தான். திருஞானசம்பந்தர் அரசனுடைய நோக்கத்தைக் கண்டு, 'மந்திரமாவது நீறு' என்னுந் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி. அவனுடைய வலப்பாகத்தை திருநீறு கொண்டு, திருக்கையினாலே தடவியருள; அவ்வலப்பாகம் வெப்புநோய் நீங்கிக் குளிர்ந்தது. சமணர்கள் மருத்துவம் செய்த இடப்பாகத்து வெப்புநோய் முன்னையிலும் இருமடங்காய் மிகுந்து பொங்க அதனையும் சிவபெருமான் திருவருளால் நீக்கியருளினார் திருஞானசம்பந்தர். சமணர்கள் மனநடுங்குற்று, மயிற்பீலி தீய, அவ்வெப்புத்தீ அவர்களையும் தாக்க செருக்கு அழிந்து, தூரத்தில் நின்றனர். பாண்டிய மன்னன் சமணர்களை நோக்கி, 'சமணர்களே! நீங்கள் தோற்றுப் போனீர்கள். என்னை விட்டு அகலப்போய் விடுங்கள்' என்று சொல்லி, பின் திருஞானசம்பந்தரை நோக்கி, 'அடியேனை ஒரு பொருளெனக் கொண்டு உய்வித்த தாங்களே இடப்பாகத்து வெப்பையும்

குறிப்பு

தேவரீரே நீக்கியருளும்' என வேண்டினான். திருஞானசம்பந்தர் இடப்பாகத்தையும் முன்போலத் தீருநீறு கொண்டு தடவியருள பண்டியன் வெப்புநோய் முழுதும் நீங்கியது.அதுகண்ட பாண்டிமாதேவியாரும் குலச்சிறைநாயனாரும் திருஞானசம்பந்தரின் திருவடிகளிலே விழுந்து வணங்கினர். திருஞானசம்பந்தர் தமிழ்ப் பதிகத்தினால் பாண்டியனுடைய வெப்புநோயை நீக்கியமையை அறிந்த சமணர்கள், அனல்வாதம், புனல் வாதம் செய்யத்தலைப்பட்டனர். அதன்படி சமணர்கள் நாங்கள் எங்கள் சமயக்கருத்தை ஏட்டிலே தீட்டி, அக்கினியில் இடுவோம். திருஞானசம்பந்தரும் தனது சமயக்கருத்தினை எழுதி நெருப்பில் இடுதல் வேண்டும். எந்த ஏடு தீயில் கருகாமல் மேல் வருகிறதோ அவர்களே வென்றவர்கள் என்றனர். திருஞானசம்பந்தரும் 'நீங்கள் சொல்லியது நன்று. அரசனெதிரே அப்படியே செய்வோம், வாருங்கள்' என்று சொல்லியருளினார். திருஞானசம்பந்தர் திருநள்ளாற்றின் மேலதாகிய 'போகமார்த்த பூண்முலையாள்' என்னுந் திருப்பதிகத்தையே விரும்பி, திருநள்ளாறரை வணங்கி, அது எழுதப்பட்ட திருவேட்டைக் கழற்றி, 'இவை அக்கினியில் இடப்படுமாயிற் பழுதில்லை. இது சத்தியம்' என்னுங்கருத்தையுடைய 'தளிரிளவளரொளி' என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, அவ்வேட்டை தீயில் இட்டருளினார். இட்ட ஏட்டில் எழுதப்பட்ட திருப்பதிகம் தீயில் கருகாது பச்சையாய் விளங்கிற்று. சமணர்களும் தங்கள் நூற்பொருளை எழுதிய ஏட்டை நெருப்பில் இட்டனர். அது எரிந்து அழிந்தது. திருஞானசம்பந்தர் தாம் அக்கினியில் இட்ட ஏட்டைக் குறித்த நாழிகையிலே கண்டு, யாவரும் வியக்கும்படி எடுத்தருளினார். அது முன்னையிலும் பசுமையும் புதுமையும் உடைத்தாய் விளங்கிற்று. பிள்ளையார் அவ்வேட்டைச் சபை முன்னே காட்டி, திருமுறையிலே முன்போலக் கோத்தருளினார். பின்னர் சமணர்கள் நாங்கள் எங்கள் சமயவுண்மையை எழுதிய ஏட்டை ஓடுகின்ற வைகையாற்றிலே இடுவோம் எதிர்த்துச் செல்லும் ஏடே மெய்ப்பொருளையுடையது என்றார்கள். திருஞானசம்பந்தரும் 'அப்படியே செய்வோம்' என்று அருளிச்செய்தார். உடன் சமணர்கள் 'அத்திநாத்தி' என்று எழுதிய ஏட்டை நதி நீரில் இட்டதும் அது விரைந்து கடலை நோக்கி ஓடிற்று. திருஞானசம்பந்தர் சைவ சமயத்துண்மைப் பொருளை விளக்கும் 'வாழ்க அந்தணர்' என்னும் திருப்பதிகத்தை ஏட்டில் எழுதி அத்திருவேட்டைத் தமது

குறிப்பு

திருக்கரத்தினாலே வைகை நதியில் இட்டருளினார். அத்திருவேடு நதியிலே எதிர்ந்து நீரைக் கிழித்துக்கொண்டு சென்று கரையேறியது. திருஞானசம்பந்தர் 'வேந்தனும் ஓங்குக' என்று பாடியருளியபடியால் பாண்டிய மன்னனின் கூனும் நிமிர்ந்தது. பாண்டியன் சைவராயினமையால் சைவசமயம் பாண்டிய நாட்டில் தழைத்தோங்கிற்று.

திருஞானசம்பந்தர் திருவோத்தூரில் இறைவனை வணங்கிக் கொண்டு இருந்த நாளில் அந்தத் தலத்தில் உள்ள சிவனடியார் ஒருவர் திருஞானசம்பந்தரை வணங்கி சிவபெருமானுக்காகத் தான் வளர்த்த பனைமரங்கள் எல்லாம் ஆண்பனைகளாகிக் காய்க்காமல் போயின. எனவே அவை பெண் பனைகளாகிக் காய்க்கும் பொருட்டு 'தாங்கள் திருவருள் செய்ய வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தார். திருஞானசம்பந்தர் அது கேட்டுத் திருக்கோயிலிற்சென்று இறைவனை வணங்கி, 'பூந்தொத்தாயின' என்னும் திருப்பதிகம் பாடியருளினார். அத்திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பிலே 'குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்' என்று அருளிச் செய்தார். அதனால் ஆண்பனைகளெல்லாம் குரும்பைக் குலைகளையுடையனவாய்ப் பெண்பனைகளாயின. அதனைக் கண்டவர்களெல்லாரும் மகிழ்ந்து திருஞானசம்பந்தரைப் போற்றினர்.

திருமயிலாப்பூரில் வணிகர் குலத்தில் பிறந்த சிவநேசர் என்பார் தன் மகளாகிய பூம்பாவை என்பாளைத் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்து கொடுக்க வளர்த்து வந்தார் ஒருநாள், பூம்பாவை தன் தோழியரோடு கன்னிமாடத்துக்குப் பக்கத்தில் இருக்கின்ற பூஞ்சோலையிற் சென்று பூக்கொய்யும் பொழுது ஒரு பாம்பு மல்லிகைப் பந்தரிலே மறைந்து வந்து, அவளுடைய விரலிலே காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்னும் நான்கு தந்தங்களும் எலும்பிலே தாவக் கடித்து, நஞ்சை உகுத்தது. பாம்பினால் தீண்டப்பெற்ற பூம்பாவை உயிர் நீத்தாள். சிவநேசர் அதுகண்டு மயங்கி 'இவளைப் திருஞானசம்பந்தருக்கு என்று சொல்லியதனால் நான் வருந்தவேண்டியதில்லை' எனத் துன்பம் நீங்கி, 'திருஞானசம்பந்தர் வருமளவும் இவ்வுடலைத் தகனஞ் செய்து, எலும்பையும் சாம்பரையும் சேமித்து வைப்பேன்' என்று துணிந்து, அப்படியே தகனஞ்செய்து

குறிப்பு

எலும்பையும் சாம்பரையும் ஓர் குடத்தில் இட்டு வைத்திருந்தார். பின்னொரு நாளில் திருஞானசம்பந்தரை மயிலாப்பூர் அழைத்து வந்த சிவநேசச் செட்டியார் அவரிடம் நிகழ்ந்தவற்றைக் கூறி அக்குடத்தினை ஒப்படைத்தார். நிகழ்ந்தவை அறிந்த திருஞானசம்பந்தர் 'மட்டிட்ட புன்னையங் கானல்' என்னும் பதிகத்தைப் பாடிப் பூம்பாவையை உயிர்ப்பித்தார். சிவநேசச் செட்டியார் தம்மகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என வேண்டினார். ஆனால் திருஞானசம்பந்தர் சிவநேசச் செட்டியாரிடம் யாம் உயிர்ப்பித்த பெண் எனது மகளே ஆவாள், எனவே திருமணம் செய்தல் என்பது தகாது எனக் கூறி மகளாகவே ஏற்றுப் போற்றினார்.

இவ்வாறு சிவபெருமான் திருவருளால் பல்வேறு அருட்திறங்களைச் செய்த திருஞானசம்பந்தருக்குத் திருக்கலியாணம் செய்யும் பருவம் வந்தடைந்தது. எனவே சிவபாதவிருதயர் திருநல்லூர் நம்பாண்டார் நம்பியின் மகளை மணம் பேசி முயற்சிகளைச் செய்வித்தார். திருஞானசம்பந்தரோ 'இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே, நான் இவளோடு சிவபெருமானது திருவடியை அடைவேன்' எனத் திருவுளங்கொண்டு அடியார்களும் சுற்றத்தாரும் சூழ்ந்து வர மனைவியாரோடு திருக்கோயிலில் நுழைந்து தம்முடைய திருமணத்தைத் தரிசித்தவர்களுடைய பாசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு, 'திருநல்லூர்ப்பெருமணத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுளே! தேவரீருடைய திருவடிகளை அடையும் பதம் இது' என்று கூறி 'கல்லூர்ப்பெருமணம்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப்பொழுது சிவபெருமான் 'நீயும் உன் மனைவியும் உன்னுடைய திருமணத்தைக் காண வந்தவர்களும் இந்தச் சோதியினுள்ளே வந்து நம்மை அடையுங்கள்" என்று அருளிச் செய்து திருக்கோயில் உட்பட மேலோங்கிய சுத்தசோதி வடிவமாகி அச்சோதிக்கு ஒரு திருவாயிலை வகுத்துக் காட்டியருளினார். திருஞானசம்பந்தர் இறைவன் உணர்த்தியவாறே திருவருட் சோதியில் கலந்து இறைத்திருவடியைப் பெற்றுப் பெருமகிழ்வடைந்தார்.

குறிப்பு

**பதிகம் எழுந்த சூழல்:**

பாண்டிய நாட்டில் கூன்பாண்டியன் சமணசமயத்தைச் சார்ந்திருந்மையால் மக்களும் அச்சமயத்தினைச் சார்ந்திருந்தனர். கூன்பாண்டியனின் மனைவியும் சோழர்குலச் செல்வியுமாகிய மங்கையர்க்கரசியாரும் பாண்டிய நாட்டில் மீண்டும் சைவத்தினைத் தளைக்கச் செய்ய விரும்பினர். எனவே மங்கையாக்கரசியாரின் ஆணைக்கிணங்க திருஞானசம்பந்தரைப் பாண்டிய நாட்டிற்கு அழைத்து வரக் குலச்சிறையார் திருமறைக்காடு சென்றார். அவரின் வேண்டுகோளினை ஏற்றுத் திருஞானசம்பந்தர் பாண்டியநாடு செல்ல முற்பட்டார். அப்போது திருநாவுக்கரசர் ‘தாங்கள் சிறுகுழந்தையாய் இருக்கிறீர். அந்த அமண் கையர் வஞ்சனைக்கு ஓர் எல்லை இல்லை. மேலும் தங்களுக்கு இப்பொழுது கிரகங்கள் வலியில்லை. ஆதலால் தாங்கள் அவ்விடத்திற்கு எழுந்தருளுதற்கு உடன்படுவது ஒண்ணாது” என்று விண்ணப்பஞ்செய்தார். உடன் திருஞானசம்பந்தர் சிவபெருமான் நம்முடைய சிந்தையில் கோயில்கொண்டு வீற்றிருத்தலினால் நமக்குத் தீங்கு வராது’ எனக் கூறி இறைவனின் திருவடிகளைத் துதித்து, ‘வேயுறு தோளி பங்கன்’ என்னுங் கோளறுபதிகத்தைப் பாடியருளினார். அந்தத் திருப்பதிகத்தைக் கேட்டதன் பின், அப்பரும், அதற்கு உடன்பட்டு தாமும் அவர்முன்னே எழுந்தருள அமைந்தபொழுது; திருஞானசம்பந்தர் ‘அப்பரே! நீர் இந்தச்சோழ மண்டலத்திலே தானே எழுந்தருளியிரும்’ எனச் சொல்லி வணங்கிப் பாண்டியநாடு புறப்பட்டார்.

**திருமுறை: இரண்டாம் திருமுறை பதிகம்: எண்: 85**

**பதிகம்: கோளறு பதிகம் வேயுறு தோளிபங்கன் பண்: பியந்தைக்காந்தாரம்**

**ஒன்பான் கோள்கள் நல்லனவே செய்யும்:**

மூங்கில்போன்ற தோளினை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும் விடம் உண்ட கண்டத்தினை உடையவனுமாகிய சிவபிரான் குற்றமில்லாத திங்கள், கங்கை ஆகியவற்றை முடிமேல் அணிந்தவனாய் மகிழ்ச்சியுற்ற நிலையில் வீணையை மீட்டிக்கொண்டு என் உளம் புகுந்து நிறைந்துள்ளான். எனவே

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பாம்பிரண்டு எனப்படும் இராகு, கேது முதலான ஒன்பான் கோள்களும் குற்றம் அற்ற நலத்தைச் செய்வனவாய் அமையும். அவை அடியார்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும் என ஒன்பான் கோள்களும் நன்மை செய்யும் திறத்தினை விளக்குகிறார் திருஞானசம்பந்தர்.

குறிப்பு

வேய் உறு தோளி பங்கன், விடம் உண்ட கண்டன்,
மிகநல்ல வீணை தடவி,
மாசு அறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் வியாழம், வெள்ளி,
சனி, பாம்பு இரண்டும், உடனே
ஆசு அறும்; நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 1

**நட்சத்திரங்களும் நாள்களும் நல்லனவே செய்யும்:**

சிவபெருமான் என்பு, பன்றிக்கொம்பு, ஆமையோடு ஆகியன மார்பின்கண் விளங்கப் பொன்போன்ற மகரந்தம் பொருந்திய ஊமத்தை மலர்மாலை, கங்கை ஆகியவற்றை முடிமேல் சூடி உமையம்மையாரோடு எருதேறி வந்து என் உளம் புகுந்து எழுந்தருளிக்கின்றான். இறைவன் இவ்வாறு எழுந்தருளி இருப்பதனால் அசுவினி, முதலாக உள்ள நாள்களில் ஆகாதனவாகிய ஒன்பதாவதாகிய ஆயில்யம், பத்தாவதாகிய மகம், பதினாறாவதாகிய விசாகம், பதினெட்டாவதாகிய கேட்டை, ஆறு ஆகிய எண்ணிக்கையில் வருவனவாகிய திருவாதிரை என்பனவும் பிறவுமான நட்சத்திரங்களாகிய பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி, என்பனவும் ஆகாத திதிகள் கிழமைகள் என்பனவும் அன்போடு மிக நல்லனவே செய்யும். அடியவர்கட்கும் மிக நல்லனவே செய்யும் எனச் சிவபெருமானை வணங்கும் அடியவர் பெரும் நன்மையினை எடுத்துரைக்கின்றார் திருஞானசம்பந்தர்.

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க,

**குறிப்பு**

எருது ஏறி, ஏழை உடனே,
பொன் பொதி மத்தமாலை புனல் சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு, ஒன்றொடு, ஏழு, பதினெட்டொடு, ஆறும்,
உடன் ஆய நாள்கள் அவைதாம்,
அன்பொடு நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 2

திருஞானசம்பந்தரால் குறிக்கப்பட்ட இத்தகைய நட்சத்திரங்களை,

"ஆதிரை பரணி ஆரல் ஆயில்யமுப் பூரம் கேட்டை
தீதுறு விசாகம் சோதி சித்திரை மகம்ஈ ராறும்
மாதனம் கொண்டார் தாரார் வழிநடைப் பட்டார் மீளார்
பாய்தனில் படுத்தார் தேறார் பாம்பின்வாய்த் தேரைதானே."

என்னுஞ் சோதிடநூலின் பாட்டும் எடுத்துரைக்கும்.

**திருமகள் முதலாகிய தேவியரும் நல்லனவே செய்வர்:**

அழகிய பவளம் போன்ற ஒளி பொருந்திய திருமேனியில் ஒளி பொருந்திய திருவெண்ணீற்றை அணிந்து மணம் பொருந்திய கொன்றை, திங்கள் ஆகியவற்றை முடிமேல் அணிந்து சிவபிரான் உமையம்மையாரோடு வெள்ளை விடைமீது ஏறிவந்து என் உளம் புகுந்துள்ளான். அத்தகைய காரணத்தால் திருமகள், துர்க்கை, செயமகள், நிலமகள், திசைத் தெய்வங்கள் ஆன பலரும் அரிய செல்வங்களையே நல்லனவாகத் தரும். அடியாரவர்கட்கும் மிகவும் நல்லனவே தரும் என்பதன்வழி சிவனடியார்கள் பெறும் நன்மைகளானது வெளிப்பட்டு நிற்கின்றது.

உரு வளர் பவள மேனி ஒளி நீறு அணிந்து,
உமையோடும், வெள்ளை விடை மேல்,
முருகு அலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
திருமகள், கலை அது ஊர்தி, செயமாது, பூமி,
திசை தெய்வம் ஆன பலவும்,

அரு நெதி நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,

அடியார் அவர்க்கு மிகவே. 3

குறிப்பு

**காலன், கொடுநோய்கள் போன்றனவும் நல்லனவே செய்யும்:**

பிறைபோன்ற நுதலை உடைய உமையம்மையாரோடு ஆலின்கீழ் இருந்து சனகாதி முனிவர்களுக்கு வேதங்களை அருளிய எங்கள் பரமன் கங்கை, கொன்றைமாலை ஆகியனவற்றை முடிமேல் அணிந்து என் உளம் புகுந்துள்ளார். எனவே சினம் மிக்க காலன், அக்கினி, யமன், யமதூதர், கொடியநோய்கள் முதலிய அனைத்தும் மிக்க குணமுடையனவாய் நல்லனவே செய்யும். அடியவர்களுக்கும் மிகவும் நல்லனவே செய்யும் என்பார் திருஞானசம்பந்தர்.

மதி நுதல் மங்கையோடு, வட பால் இருந்து

மறை ஓதும் எங்கள் பரமன்,

நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து, என்

உளமே புகுந்த அதனால்

கொதி உறு காலன், அங்கி, நமனோடு தூதர்,

கொடுநோய்கள் ஆனபலவும்,

அதிகுணம் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,

அடியார் அவர்க்கு மிகவே. 4

**அவுணரும் ஐம்பூதமும் நல்லனவே செய்யும்:**

நஞ்சணிந்த கண்டனும், எந்தையும், உமையம்மையாரோடு விடையேறி வரும் எம் தலைவனுமாகிய சிவபிரான், இருள் செறிந்த வன்னிஇலை, கொன்றைமாலை ஆகியவற்றை முடிமேல் அணிந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால் கொடிய சினமுடைய அவுணர், இடி, மின்னல், செருக்குடைய பூதங்கள் ஆகியன நம்மைக் கண்டு அஞ்சி நல்லனவே செய்யும்.. அடியவர்கட்கும் மிக நல்லனவே செய்யும் என்பது திருஞானசம்பந்தின் திருவாக்கு ஆகும்.

குறிப்பு

நஞ்சு அணி கண்டன், எந்தை, மடவாள் தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்,
துஞ்சு இருள் வன்னி, கொன்றை, முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும், உரும் இடியும், மின்னும்,
மிகையான பூதம் அவையும்,
அஞ்சிடும்; நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 5

**கானுறு விலங்கினமும் நல்லனவே செய்யும்:**

ஒளியும் வரியும் பொருந்திய புலித்தோலாடையை உடுத்து வரிந்து கட்டிய கோவண ஆடையராய் உள்ள பெருமானார் உமையம்மையாரோடும் உடனாய் அன்றலர்ந்த மலர்கள், வன்னி, கொன்றை, கங்கை ஆகியவற்றை முடிமிசைச் சூடிவந்து என் உளத்தின் கண் புகுந்துள்ள காரணத்தால் வலியகுரங்கு, புலி., கொலையானை, பன்றி, கொடிய பாம்பு, கரடி, சிங்கம் ஆகியன நமக்கு நல்லனவே செய்யும்! அடியார்கட்கும் மிக நல்லனவே செய்யும் என்பார் திருஞானசம்பந்தர்.

வாள்வரி அதள் அது ஆடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடும் உடன் ஆய்,
நாள்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
கோள் அரி, உழுவையோடு, கொலை யானை, கேழல்,
கொடு நாகமோடு, கரடி,
ஆள் அரி, நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார்அவர்க்கு மிகவே. 6

குறிப்பு

**உடல்உறு நோய்கள் பலவும் உறுதுயர் தாரா:**

செப்புப் போன்ற இள நகில்களை உடைய உமையம்பிகையை ஒருபாகத்தே கொண்டு விடையேறிவரும் செல்வனாகிய சிவபிரான் தன்னை அடைந்த இளமதியையும், கங்கையையும் முடிமேல் அணிந்தவனாய், என் உள்ளத்தின்கண் புகுந்து எழுந்தருளிய காரணத்தால், வெம்மை தண்மை, வளி மிகுந்த பித்தம், வினைகள் இவற்றால் வரும் துன்பங்கள் நம்மை வந்து நலியாது. அடியார்களுக்கும் அவை நல்லனவே செய்யும் என்பது திருஞானசம்பந்தரின் திருப்பாடல் ஆகும்.

செப்பு இளமுலை நல் மங்கை ஒருபாகம் ஆக
விடை ஏறு செல்வன், அடைவு ஆர்
ஒப்பு இளமதியும் அப்பும் முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு, குளிரும், வாதம், மிகை ஆன பித்தும்,
வினைஆன, வந்து நலியா;
அப்படி நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 7

**இராவணன் போன்ற அவுணர்களாலும் இடர்கள் வந்தமையா:**

மன்மதன் அழியுமாறு நெற்றி விழியைத் திறந்து எரித்து விடைமீது உமை மங்கையோடும் உடனாய் இருந்து, முடிமிசை ஒளிபொருந்திய பிறை, வன்னி, கொன்றைமலர் ஆகியனவற்றைச் சூடிச் சிவபெருமான் வந்து என் உளம்புகுந்துள்ள காரணத்தால் ஏழ்கடல்களால் சூழப்பட்ட இலங்கை மன்னன் இராவணனாலும் பிறராலும் வரும் இடர்கள் நம்மை வந்து நலியாது. ஆழ்ந்த கடலும் நமக்கு நல்லனவே செய்யும். அடியார்களுக்கும் அவை நல்லனவே புரியும் எனக் குறிப்பிடுவார் திருஞானசம்பந்தர்.

வேள் பட விழி செய்து, அன்று, விடைமேல் இருந்து,
மடவாள் தனோடும் உடன் ஆய்,
வாள்மதி வன்னி கொன்றைமலர் சூடி வந்து, என்

**குறிப்பு**

உளமே புகுந்த அதனால்

ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்

இடர் ஆன வந்து நலியா;

ஆழ் கடல் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,

அடியார் அவர்க்கு மிகவே. 8

**தேவர்கள், அலைகடல், மேரு போன்றவற்றாலும் நலமே விளையும்:**

பல்வேறு கோலங்கொண்டருளும் தலைவனும், உமைபாகனும், எருதேறிவரும் எங்கள் பரமனுமாகிய சிவபிரான், முடிமீது கங்கை, எருக்கமலர் ஆகியவற்றை அணிந்து வந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால் தாமரைமலர்மேல் உறையும் பிரமன், திருமால், வேதங்கள் தேவர்கள் ஆகியோராலும், கெட்ட காலங்கள், அலைகடல், மேரு ஆகியவற்றாலும் வரும் தீமைகள் எவையாயினும் நமக்கு நல்லனவாகவே அமையும். அடியார்களுக்கும் அவை மிகவும் நல்லனவே செய்யும் எனச் சிவனடியார்கள் அருட்திறத்தினை எடுத்துரைக்கின்றார் திருஞானசம்பந்தர்.

பல பல வேடம் ஆகும் பரன், நாரிபாகன்,

பசு ஏறும் எங்கள் பரமன்,

சல மகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

மலர் மிசையோனும் மாலும் மறையோடு தேவர்

வரு காலம் ஆன பலவும்,

அலைகடல், மேரு, நல்ல; அவை நல்ல நல்ல

அடியார் அவர்க்கு மிகவே. 9

**புத்தர் முதல் அமணர்களை வெல்லும் திறம் வந்தமையும்:**

பூங்கொத்துக்கள் அணிந்த கூந்தலினளாகிய உமையம்மையாரோடு சென்று அருட்குணம் காட்டி அருச்சுனனுக்கு அருள்புரிந்த வேடவடிவம் கொண்ட சிவபிரான் முடிமேல் ஊமத்தை மலர், பிறை, பாம்பு ஆகியவற்றை அணிந்து, என் உளம் புகுந்துள்ள

காரணத்தால், புத்தர்களையும் அமணர்களையும் அவ்வண்ணலின் திருநீறு வாதில் தோற்றோடச் செய்யும். நமக்கு வரும் அத்தகைய தீமைகள் நல்லனவற்றையே செய்யும். அடியார்களுக்கும் அவ்வாறே நல்லனவே செய்யும் எனபது திருஞானசம்பந்தரின் அருள்வாக்கு ஆகும்.

குறிப்பு

கொத்து அலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணம் ஆய வேட விகிர்தன்,
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்துதென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே;
அத்தகு நல்லநல்ல; அவை நல்லநல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 10

**பதிகம் பாடியோர் வானவராகி அரசு புரிவர்:**

தேன் பொருந்திய பொழில்களைக் கொண்டதும், கரும்பு, விளைந்த செந்நெல் ஆகியன நிறைந்துள்ளதும், வளரும் செம்பொற்குவியல் எங்கும் நிறைந்திருப்பதும், நான்முகனால் முதன்முதல் படைக்கப்பட்டதுமான பிரமாபுரத்துத் தோன்றி மறைஞானம் பெற்ற ஞான முனிவன் ஆகிய ஞானசம்பந்தன் வினைப்பயனால் தாமே வந்துறும் கோளும் நாளும் பிறவும் அடியவரை வந்து நலியாத வண்ணம் பாடிய சொல்லால் இயன்ற மாலையாகிய இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை என்பதாக இப்பதிகமானது நிறைவு பெறுகின்றது.

தேன் அமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ,
நான்முகன் ஆதி ஆய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்,
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்

ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள், வானில்
அரசு ஆள்வர்; ஆணை நமதே. 11



**பயிற்சி வினாக்கள்,**

**1.வேயுறு தோளிபங்கன் - பதிகம் எழுந்த சூழலை விளக்குக.**

பாண்டிய நாட்டில் கூன்பாண்டியன் சமணசமயத்தைச் சார்ந்திருந்மையால் மக்களும் அச்சமயத்தினைச் சார்ந்திருந்தனர். அப்பாண்டியனுடைய மனைவியும் சோழர்குலச் செல்வியுமாகிய மங்கையர்க்கரசியாரும் பாண்டிய நாட்டில் மீண்டும் சைவத்தினைத் தளைக்கச் செய்ய விரும்பினர். எனவே மங்கையாக்கரசியாரின் ஆணைக்கிணங்க திருஞானசம்பந்தரைப் பாண்டிய நாட்டிற்கு அழைத்து வரக் குலச்சிறையார் திருமறைக்காடு சென்றார். அவரின் வேண்டுகோளினை ஏற்றுத் திருஞானசம்பந்தர் பாண்டியநாடு செல்ல முற்பட்டார். அப்போது திருநாவுக்கரசர் 'தாங்கள் சிறுகுழந்தையாய் இருக்கிறீர். தங்களுக்கு இப்பொழுது கிரகங்கள் வலியில்லை. ஆதலால் தாங்கள் அவ்விடத்திற்கு எழுந்தருளுதற்கு உடன்படுவது ஒண்ணாது" என்று விண்ணப்பஞ்செய்தார். உடன் திருஞானசம்பந்தர் சிவபெருமான் நம்முடைய சிந்தையில் கோயில்கொண்டு வீற்றிருத்தலினால் நமக்குத் தீங்கு வராது' எனக் கூறி இறைவனின் திருவடிகளைத் துதித்து, 'வேயுறுதோளி பங்கன்' என்னுங் கோளறுபதிகத்தைப் பாடியருளினார். அந்தத் திருப்பதிகத்தைக் கேட்டதன் பின், அப்பரும், அதற்கு உடன்பட்டு தாமும் அவர்முன்னே எழுந்தருள அமைந்தபொழுது; திருஞானசம்பந்தர் 'அப்பரே! நீர் இந்தச்சோழ மண்டலத்திலே தானே எழுந்தருளியிரும்' எனச் சொல்லி வணங்கிப் பாண்டியநாடு புறப்பட்டார்.

**2. ஒன்பான் கோள்கள் அடியார்களுக்கு நன்மை தரும் தன்மையைத் திருஞானசம்பந்தர் வழி விளக்குக.**

மூங்கில்போன்ற தோளினை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும் விடம் உண்ட கண்டத்தினை உடையவனுமாகிய சிவபிரான் குற்றமில்லாத திங்கள், கங்கை ஆகியவற்றை முடிமேல் அணிந்தவனாய் மகிழ்ச்சியுற்ற நிலையில் வீணையை மீட்டிக்கொண்டு என் உளம் புகுந்து நிறைந்துள்ளான். எனவே

குறிப்பு

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பாம்பிரண்டு எனப்படும் இராகு, கேது முதலான ஒன்பான் கோள்களும் குற்றம் அற்ற நலத்தைச் செய்வனவாய் அமையும். அவை அடியார்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும்.

வேய் உறு தோளி பங்கன், விடம் உண்ட கண்டன்,
மிகநல்ல வீணை தடவி,
மாசு அறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் வியாழம், வெள்ளி,
சனி, பாம்பு இரண்டும், உடனே
ஆசு அறும்; நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 1

**3.கானுறை விலங்குகள் அடியார்க்கு துன்பம் செய்யா திறத்தினை விவரி?**

ஒளியும் வரியும் பொருந்திய புலித்தேலாடையை உடுத்து வரிந்து கட்டிய கோவண ஆடையராய் உள்ள பெருமானார் உமையம்மையாரோடும் உடனாய் அன்றலர்ந்த மலர்கள், வன்னி, கொன்றை, கங்கை ஆகியவற்றை முடிமிசைச் சூடிவந்து என் உளத்தின் கண் புகுந்துள்ள காரணத்தால் வலியகுரங்கு, புலி., கொலையானை, பன்றி, கொடிய பாம்பு, கரடி, சிங்கம் ஆகியன நமக்கு நல்லனவே செய்யும்! அடியார்கட்கும் மிக நல்லனவே செய்யும்.

வாள்வரி அதள் அது ஆடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடும் உடன் ஆய்,
நாள்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
கோள் அரி, உழுவையோடு, கொலை யானை, கேழல்,
கொடு நாகமோடு, கரடி,
ஆள் அரி, நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார்அவர்க்கு மிகவே.

குறிப்பு

**4.வேயுறு தோளிபங்கன் பதிகத்தில் காணப்படும் இராவணன், திருமால், பிரமன், சமண. பௌத்தர் குறித்த செய்திகளைத் தருக.**

மன்மதன் அழியுமாறு நெற்றி விழியைத் திறந்து எரித்து விடைமீது உமை மங்கையோடும் உடனாய் இருந்து, முடிமிசை ஒளிபொருந்திய பிறை, வன்னி, கொன்றைமலர் ஆகியனவற்றைச் சூடிச் சிவபெருமான் வந்து என் உளம்புகுந்துள்ள காரணத்தால் ஏழ்கடல்களால் சூழப்பட்ட இலங்கை மன்னன் இராவணனாலும் பிறராலும் வரும் இடர்கள் நம்மை வந்து நலியாது. ஆழ்ந்த கடலும் நமக்கு நல்லனவே செய்யும். அடியார்களுக்கும் அவை நல்லனவே புரியும்.

வேள் பட விழி செய்து, அன்று, விடைமேல் இருந்து,
மடவாள் தனோடும் உடன் ஆய்,
வாள்மதி வன்னி கொன்றைமலர் சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடர் ஆன வந்து நலியா;
ஆழ் கடல் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

பல்வேறு கோலங்கொண்டருளும் தலைவனும், உமைபாகனும், எருதேறிவரும் எங்கள் பரமனுமாகிய சிவபிரான், முடிமீது கங்கை, எருக்கமலர் ஆகியவற்றை அணிந்து வந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால் தாமரைமலர்மேல் உறையும் பிரமன், திருமால், வேதங்கள் தேவர்கள் ஆகியோராலும், கெட்ட காலங்கள், அலைகடல், மேரு ஆகியவற்றாலும் வரும் தீமைகள் எவையாயினும் நமக்கு நல்லனவாகவே அமையும். அடியார்களுக்கும் அவை மிகவும் நல்லனவே செய்யும்.

பல பல வேடம் ஆகும் பரன், நாரிபாகன்,
பசு ஏறும் எங்கள் பரமன்,
சல மகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வரு காலம் ஆன பலவும்,

அலைகடல், மேரு, நல்ல; அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

குறிப்பு

பூங்கொத்துக்கள் அணிந்த கூந்தலினளாகிய உமையம்மையாரோடு சென்று அருட்குணம் காட்டி அருச்சுனனுக்கு அருள்புரிந்த வேடவடிவம் கொண்ட சிவபிரான் முடிமேல் ஊமத்தை மலர், பிறை, பாம்பு ஆகியவற்றை அணிந்து, என் உளம் புகுந்துள்ள காரணத்தால், புத்தர்களையும் அமணர்களையும் அவ்வண்ணலின் திருநீறு வாதில் தோற்றோடச் செய்யும். நமக்கு வரும் அத்தகைய தீமைகள் நல்லனவற்றையே செய்யும். அடியார்களுக்கும் அவ்வாறே நல்லனவே செய்யும்.

கொத்து அலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணம் ஆய வேட விகிர்தன்,
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்துதென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே;
அத்தகு நல்லநல்ல; அவை நல்லநல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

**5.வேயுறு தோளிபங்கன் பதிகத்தில் பதிகப் பயனாகச் சுட்டப்படுவதனை எழுதுக.**

தேன் பொருந்திய பொழில்களைக் கொண்டதும், கரும்பு, விளைந்த செந்நெல் ஆகியன நிறைந்துள்ளதும்,வளரும் செம்பொற்குவியல் எங்கும் நிறைந்திருப்பதும், நான்முகனால் முதன்முதல் படைக்கப்பட்டதுமான பிரமாபுரத்துத் தோன்றி மறைஞானம் பெற்ற ஞான முனிவன் ஆகிய ஞானசம்பந்தன் வினைப்பயனால் தாமே வந்துறும் கோளும் நாளும் பிறவும் அடியவரை வந்து நலியாத வண்ணம் பாடிய சொல்லால் இயன்ற மாலையாகிய இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை என்பதாக இப்பதிகமானது நிறைவு பெறுகின்றது.

குறிப்பு

தேன் அமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ,
நான்முகன் ஆதி ஆய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்,
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள், வானில்
அரசு ஆள்வர்; ஆணை நமதே. 11

## கூறு: 2 –

# ஆண்டாள் திருப்பாவை – முதல் பதினைந்து பாடல்கள்

**ஆண்டாள் வரலாறு:**

ஆண்டாள் தமிழகத்தில் திருமால்மேல் ஆழங்காற்பட்டு அன்பு பாராட்டிய வைணவ ஆழ்வார்களுள் மிகவும் சிறப்புப் பெற்றவர். ஆண்டாளின் சிறப்பு யாதெனில் 'அஞ்சுகுடிக்கொரு சந்ததி' எனப் போற்றப்பட்டவர். அதாவது எம்பெருமானுக்கு யாது நேரிடுமோ? என அஞ்சி அவனுக்கே பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரின் திருமகள் ஆண்டாள். மேலும் ஆழ்வார்களில் ஒரே பெண்பிள்ளை ஆண்டாள்தான். ஆண்டாள் தன் பெயருக்கு ஏற்றவண்ணம் உலக மக்களையும், உலகைப் படைத்தளித்த ஆண்டவனையும் ஆண்டவள். மற்றைய ஆழ்வார்கள் இறைவனின் மாயையில் அகப்பட்டுக் கிடக்க, இறைவனே அவர்களது மயக்கங்களைப் போக்கி அவர்களுக்கு 'மயர்வற மதிநலம் அருளி' ஆட்கொண்டான். ஆனால் ஆண்டாளோ நப்பின்னையின் பிடியில் உறங்கிக் கொண்டிருந்த கண்ணனை அறிதுயில் எழுப்பி 'உனக்கும் எங்களுக்கும் உள்ள உறவானது ஒழிக்க ஒழியாது' என்று சீவாத்மா பரமாத்மாவுக்குண்டான உறவைச் சொல்லி 'எங்களது குற்றேவலை

ஏற்கவேண்டும்' என்று முறையிட்டு ஆட்கொள்ளச் செய்து அவனால் ஆட்கொள்ளப்பட்டாள்.



ஆடி மாதம் பூரம் நட்சத்திரத்தில் திருவில்லிபுத்தூர் நந்தவனத்தில் துளசி செடியின் அடியில் ஆண்டாள் அவதாரம் செய்தாள். பெரியாழ்வார் ஆண்டாளை எடுத்து 'சுரும்பார் குழற்கோதை' எனத் திருப்பெயரிட்டு அன்பாக வளர்த்து வந்தார். பெரியாழ்வார் திருவில்லிபுத்தூர் நந்தவனத்தில் உள்ள மலர்களைப் பறித்து அழகிய மாலையாக தொடுத்துத் திருமாலுக்குச் சூட்டும் பணியைத் தலைமேற்கொண்டு பக்தி செலுத்தி வந்தார். அவ்வாறு மலர்களைப் பறிக்கும்போதும், மாலையாகத் தொடுக்கும்போதும் அவருக்குத் தெரிந்த சமயம், தமிழ் தொடர்பான அனைத்தையும் கோதைக்கு கற்றுத் தந்தார். பெரியாழ்வாரின் மூலம் திருமாலின் சிறப்புகளைக் கேட்க, கேட்க இளம் வயதிலேயே கோதைக்கு திருமால் மீது இனம்புரியாத அன்பு தோன்றியது. ஆழ்வார் சொல்வதைக் கேட்டு வளர்ந்த கோதை வளர்ந்து பெரியவளானதும் சிறுவயது முதல் தான் கேட்டு வளர்ந்த கண்ணனையே மணாளனாக அடையவேண்டும் என உறுதி கொண்டாள். எனவே கண்ணனை அடையும் அழகு தனக்கிருக்கிறதா? என்று அறிந்துகொள்ள திருமாலுக்குச் சூட்டப்படவிருக்கும் மாலைகளை யாரும் அறியாமல் தான் அணிந்து பார்த்து கண்ணனுடன் தன்னை மணப்பெண்ணாகக் கற்பனை செய்து அகம் மகிழ்ந்தாள். மாலைகளை அணிவதும் கண்ணாடி முன் நின்று கண்ணனை நினைத்து மகிழ்ந்து மீண்டும் மாலையை எடுத்து வைப்பதும் கோதையின் வழக்கமாயிற்று. இதனால் கோதை சூடிக் கொடுத்த மாலைகளே இறைவனுக்கும் சூட்டப்பட்டன. ஒருநாள் கோதையின் செயலினை அறிந்த விஷ்ணுசித்தர் கோதையைக் கடிந்துகொண்டார். மேலும் கோதை சூடிய மாலையைப் புறம்தள்ளி புதிய மாலையைத் தொடுத்து இறைவனுக்குச் சூட்டினார். ஆனால் அன்றிரவு திருமால் அவரது கனவில் தோன்றி கோதை அணிந்த மாலைகளே தனக்குப் பிடித்தமானவை எனவும் அவற்றையே தனக்குச் சூட்ட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இத்தகைய சிறப்பினாலே 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்றும் 'இறைவனையே ஆண்டவள்' என்ற பொருளில் ஆண்டாள் என்றும் போற்றப்படுகிறார். கோதை திருமண வயதடைந்த பின்னர் அவளுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட திருமண

குறிப்பு

ஏற்பாடுகளை மறுத்து, திருவரங்கத்தில் உறையும் இறைவனையே மணப்பதென்று பிடிவாதமாக இருந்தாள். யாது செய்வதென அறியாது திகைத்திருந்த பெரியாழ்வாரின் கனவில் தோன்றிய இறைவன், கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோயிலுக்கு அழைத்துவருமாறு பணித்தார். குறித்த நாளன்று கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோதை, கோயில் கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்து இறைவனையே மணந்து பெருமை பெற்றாள்.

ஆண்டாள் தனது 15ஆம் வயதில் இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு முன் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு நூல்களை இயற்றியுள்ளார். இவ்விரு நூல்களும் அதன் இலக்கிய செழுமை, தத்துவம், பக்தி ஆகியவற்றிக்காக அனைவராலும் போற்றப்படுகின்றது. இவரது இரண்டாவது படைப்பான நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டுள்ளது. இறைவனை நினைத்துருகிப்பாடும் காதல்ரசம் மிகு பாடல்களின் தொகுப்பாக காணப்படுகின்றது.

**திருப்பாவை எழுந்த சூழல்:**

ஆண்டாள் திருவரங்கநாதரை திருமணம் செய்வதற்காக மார்கழி மாதம் முழுவதும் நோன்பிருந்தாள். இறைவனை மட்டுமே நினைந்து ஆய்பாடியில் வாழும் கோபிகையாகத் தன்னைக் கற்பனை செய்து கொண்டு பக்தியுடன் இயற்றியவையே திருப்பாவை ஆகும். திரு என்றால் உயர்ந்த, மதிப்பிற்குரிய என்பது பொருளாகும். பாவை என்றால் பெண் என்று பொருள்படும். தமிழர்களின் வாழ்வியலில் சங்ககாலம் தொடங்கிச் சிறப்புற்றிருந்த பாவைநோன்பு என்பதனையும் குறிக்கும். எனவே இந்நூல் திருப்பாவை எனப்பட்டது. திருப்பாவை, உலக மாயைகளில் அமிழ்ந்து கிடக்கும் மானுடர்களின் சீவாத்மாவை துயில் எழுப்பித் திருமால் என்னும் பரமாத்மாவின்பால் ஆற்றுப்படுத்தும் தன்மையுடையதாய் அமைந்தது என்பது வைணவ சித்தாந்த மரபாகும்.

**திருப்பாவையின் சிறப்பு:**

ஆண்டாளின் முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் தன்னுட் கொண்டமைந்துள்ளது. திருமால் நெறி போற்றும் வைணவ வழிபாட்டில் ஒன்றறக் கலந்து விட்ட ஒன்று திருப்பாவையாகும்.

மாதவனாகிய எம்பெருமானுக்கு உகந்த மார்கழி மாதக் காலைகளில் அனைத்து வைணவக் கோயில்களிலும் இசைக்கப்படுவதே இதன் பெரும் சிறப்பு ஆகும். இறைவனை அடையும் வழியைக் கண்டுகொண்ட ஆண்டாள் 'வையத்து வாழ்வீர்காள்!' என உலக மாந்தரை அழைத்து அவர்கட்கு திருமாலை அடைந்து உய்யும் வழியைக் கூறி உணர்த்துவதால் இத்திருப்பாவை 'ஆற்றுப்படை' என்னும் இலக்கண வகையைச் சேர்ந்தது எனலாம். இந்தத் திருப்பாவை 'சங்கத் தமிழ் மாலை' என்று குறிப்பிடப்படுகிறது. திருப்பாவை வழிபாடானது இல்லறமென்னும் பெருங்கடலிலே விழுந்து துயர் உறுவோர்க்கு அவரைக் கரைசேர்க்கும் மிதவை ஆகும். பாலைவனத்தில் நடந்து நடந்து காலும் மனமும் நொந்து போனவர்கள் குளிர்ந்த தடாகம் கண்ணில் பட்டால் எப்படிக் மகிழ்ந்து போவார்களோ அதுபோல திருப்பாவை எனும் தடாகத்தில் மகிழ்வர். இவ்வாறு அனைத்துப் பாவங்களையும், துன்பங்களையும் போக்கி பரமனாகிய திருமாலின் திருவடியைக் காட்டும் கோதையின் முப்பது பாசுரங்களையுடைய 'திருப்பாவை' யினை அறியாத மானிடர்களைப் பூமி சுமப்பது பாவமாகும் என்பதனை,

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் – கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதுவும் வம்பு.

என்ற பாடலானது எடுத்துரைக்கும்.

**திருப்பாவை: நாராயணனே நமக்கே பறை தருவான்:**

மார்கழி மாதம் பிறந்து விட்டது. முழு நிலவு ஒளிவீசுகிறது. செல்ல வளம் நிறைந்த ஆயர்பாடியில் வசிக்கும் செல்வச் சிறுமீர்களே! அழகிய அணிகலன்களை அணிந்த கன்னியரே! துயிலெழுங்கள் இன்று நாம் அதிகாலையில் நீராடக் கிளம்புவோம். கூர்மையான வேலுடன் நம்மைப் பாதுகாத்து வரும் அரிய தொழிலைச் செய்யும் நந்தகோபன், அழகிய கண்களையுடைய யசோதாபிராட்டி ஆகியோரின் சிங்கம் போன்ற மகனும், கரிய நிறத்தவனும், தாமரை மலரைப் போன்ற சிவந்த

குறிப்பு

கண்களை உடையவனும், சூரிய, சந்திரர்களைப் போல ஒளிவிடும் திருமுகத்தையுடையவனும் ஆகிய நாராயணனே கண்ணனாக அவதாரம் செய்து நமக்கு அருள் தரக் காத்திருக்கிறான். அவனை நாம் பாடிப் புகழ்ந்தால் இந்த உலகமே நம்மை வாழ்த்தும் என்று கூறித் தோழியரை பாவைநோன்பு நோக்க அழைக்கிறாள் ஆண்டாள்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய். 1

**பாவைக்குச் செய்யும் கிரியைகள்:**

திருமால் கண்ணனாக அவதாரம் செய்த ஆயர்பாடியில் வாழும் சிறுமிகளே! நாம், இவ்வுலகில் இருந்து விடுபட்டு, பாற்கடலில் பையத் துயில்கின்ற பரந்தாமனின் திருவடிகளை அடைவதற்காக, மேற்கொள்ளும் வழிபாட்டில் பாவையை வணங்கி நோன்பிருக்கும் வழிமுறைகளைக் கேளுங்கள். நெய் உண்ணக்கூடாது, பால் அருந்துதல் கூடாது. அதிகாலை துயில் எழுந்து நீராடல் வேண்டும். கண்ணில் மை தீட்டக்கூடாது. கூந்தலில் மலர் சூடக்கூடாது. தீய செயல்களை மனதாலும் நினைத்தல் கூடாது. தீய சொற்களைச் சொல்வது கூடப் பாவம் என்பதால் பிறரைப் பற்றிக் கோள் சொல்லல் கூடாது. இல்லாதவர்களுக்கும், துறவிகளுக்கும், ஞானிகளுக்கும் அவர்கள் போதும் என்று சொல்லுமளவு தானம் செய்தல் வேண்டும் என்று நோன்பிருக்கும் முறைகளை உணர்த்துகின்றாள் ஆண்டாள்.

ஒரு செயலில் வெற்றி பெற உள்ளவுறுதி மிகவும் இன்றயமையாததாகும். மனிதன் வாயினைக் கட்டினால் மனம் கட்டுப்படும். மனம் கட்டுப்படுமானால் இறைவன் தெரிவான். அதனால் தான் பாவை

குறிப்பு

நோன்பின் போது நெய், பால் முதலியவற்றைத் தவிர்த்து உடலைக் காப்பதுடன், தீயசொற்கள், தீயசெயல்களைத் தவிர்த்து மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்வதனையும் முன்மொழிகின்றாள் ஆண்டாள். இந்தப் பாடலில் மங்களாசாசனம் பெற்ற 108 வைணவத்திருப்பதிகளுள் 107 ஆவது திருப்பதியாகிய திருப்பாற்கடல் சுட்டப்படுகின்றது.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய். 2

**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்:**

சிறுமியரே! நம் பரந்தாமன் வாமன அவதாரத்தில் மூன்றடிகளால் விண்ணையும் மண்ணையும் அளந்து தன்னுடையதாக்கிக் கொண்ட ஓங்கி உலகளந்த உத்தமன். அவனது சிறப்பினைப் பாடி, நம் பாவைக்கு மலர்கள் அணிவித்து வழிபாடு செய்வதற்கு முன் முன் நீராடச் செல்வோம். இப்பாவை நோன்பிருப்பதால் உலகம் முழுவதும் மாதம் மும்முறை மழை பெய்யும். மழை பெய்தல் காரணமாக வயல்களில் செந்நெல் செழித்து வளரும். மீன்கள் வயலுக்குள் பாய்ந்தோடி துள்ளி விளையாடும். குவளை மலர்களில் புள்ளிகளையுடைய வண்டுகள் தேன் குடிக்க வந்து தேனுண்டு கிறங்கிக் கிடக்கும். வள்ளல் போன்ற பசுக்கள் பாலை வாங்கக் குடம் நிறைக்கும். என்றும் வற்றாத செல்வத்தை இந்த இந்நோன்பானது தந்து நிற்கும்.

திருப்பாவை என்பது திருமால் குறித்து பாடப்பட்டதாகும். அதிலே முதல் பத்து, அடுத்த பத்து, அதற்கடுத்த பத்து என மூன்று பிரிவாக்கி அதற்குள் ஒரு பாடலில் வாமன அவதாரத்தை பாடுகிறாள் ஆண்டாள்.

குறிப்பு

திருமாலின் பாதம் பட்டால் வைகுந்தம் உறுதியாகும். எனவேதான் உத்தமன் என்று போற்றுகிறாள் ஆண்டாள்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய். 3

**சரமழைபோல் வாழ உலகினில் பெய்திடாய்:**

மேகத்திற்கு அதிபதியே! நாங்கள் சொல்வதைக் கேட்பாயாக! உன்னிடம் ஒரு துளி நீரைக் கூட வைத்துக் கொள்ளாதே. கடல் நீர் முழுவதையும் முகர்ந்து கொண்டு மேலே சென்று, உலகாளும் முதல்வனாகிய கண்ணனின் நிறம் போல் கருத்து, வலிமையான தோள்களையுடைய பத்மநாபனின் கையிலுள்ள ஒளிநிறைந்த சக்கரத்தைப் போல் மின்னலை வீசி, வலம்புரி சங்கு ஒலிப்பது போல் இடி ஒலியெழுப்பி, வெற்றியை மட்டுமே ஈட்டும் அவனது சார்ங்கம் என்னும் வில்லில் இருந்து புறப்படும் அம்புகளைப் போல் மழை பொழிவாயாக! அம்மழையால் நாங்கள் இவ்வுலகில் மகிழ்வுடன் வாழ்வோம். மார்கழி நீராடலுக்காக அனைத்து நீர்நிலைகளையும் நிரப்பி எங்களை மகிழ்ச்சியடையச் செய்வாயாக என வேண்டி நிற்கின்றாள் ஆண்டாள்.

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்

குறிப்பு

ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய். 4

**போய பிழையும் புகுதருவான் நின்றனவும தீயினில் தூசாகும்:**

மாயமாகிய செயல்களைச் செய்பவனும், இறைவனும் மதுராபுரியில் அவதரித்தவனும், பெருகியோடும் தூய்மையான நீரைக் கொண்ட யமுனைத் துறைவனும் ஆயர்குலத்தில் பிறந்த அழகிய விளக்கு போன்றவனும், தேவகியாகிய தாயின் வயிற்றுக்கு பெருமை அளித்தவனும், இவனது சேட்டை பொறுக்காத யசோதை தாய் இடுப்பில் கயிறைக் கட்ட அது அழுத்தியதால் ஏற்பட்ட தழும்பை உடையவனும் ஆன எங்கள் கண்ணனை, நாங்கள் தூய்மையாக நீராடி, மணம் வீசும் மலர்களுடன் காணப் புறப்படுவோம். அவன் புகழைப் பாடி மனதினால் சிந்திப்போம். அவ்வாறு வழிபடுவதால் செய்த பாவங்களும் செய்கின்ற பாவங்களும் தீயினில் புகுந்த தூசு போல காணாமல் போய்விடும் என கண்ணனை வழிபடுவதால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுகின்றாள் ஆண்டாள்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூமலர்த் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய் 5

குறிப்பு

**அரியென்ற பேரரவம் உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்:**

தோழியே! நீ உடனே எழுந்திரு! பறவைகள் அதிகாலையில் எழுந்து கீச்சிடும் இனிய ஒலி இன்னும் கேட்கவில்லையா? கருடனை வாகனமாகக் கொண்ட எம்பிரானின் திருக்கோயிலில் வெள்ளை நிற சங்குகள் எழுப்பும் பேரரவம் செவியில் விழவில்லையா? பேய் வடிவம் எடுத்து. தன்னைக் கொல்ல வந்த பூதகி என்ற அரக்கியிடம் பால் குடிப்பது போல் நடித்து அவளது உயிரைப் பறித்தவனும், சக்கர வடிவில் வந்த சகடன் என்ற அரக்கனின் உயிரைக் குடித்தவனுமான கண்ணனை யோகிகளும், முனிவர்களும் 'அரி அரி' என்று அழைக்கும் குரலும் கூடவா உனக்குக் கேட்கவில்லை! உடனே எழுந்து இவற்றையெல்லாம் கேட்டு உள்ளம் குளிர்வாயாக.

பூதகி என்ற அரக்கியை கம்சன் அனுப்பி வைத்தான். அவளை இம்சை செய்து கண்ணன் கொன்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்தானில்லை. அவனுக்கு பால் தந்து தாய் இடத்தை அடைந்து விட்டாள் பூதகி. அந்த தாய்மையைப் பாராட்டும் விதத்தில் அவளது மடியில் அமர்ந்து பாலைக் குடிப்பது போல் அமைதியாக உயிரைக் குடித்து அவளுக்கு வைகுந்தம் அளித்தான் எம்பெருமான்.

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய் எழுந்திராய்! பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்து அரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் 6

**கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ:**

அறிவில்லாதவளே! ஆனைச்சாத்தன் எனப்படும் வலியன்குருவிகள் கீச்சிடும் குரலும், அவை தங்கள் துணையுடன் பேசும் ஒலியும் உனக்கு

கேட்கவில்லையா? மணம் மிக்க கூந்தலை உடைய ஆய்க்குலப் பெண்கள் மத்து கொண்டு தயிர் கடையும் ஓசையும், அப்போது அவர்களது கழுத்தில் அணிந்துள்ள அச்சுத்தாலியும், ஆமைத்தாலியும் இணைந்து ஒலியெழுப்புவது இன்னுமா கேட்கவில்லை? எல்லோருக்கும் தலைமையேற்று அழைத்துச் செல்வதாகச் சொன்ன பெண்ணே! நாங்கள் நாராயணான கேசவனைப் புகழ்ந்து பாடுவது உன் காதில் கேட்டும் உறங்கும் மர்மமென்ன? ஒளிபொருந்திய முகத்தைக் கொண்டவளே! உன் வீட்டுக்கதவைத் திற எனத் துயில் எழுப்புகிறாள் ஆண்டாள்.

**குறிப்பு**

பெருமாளுக்கு ஆயிரம் திருநாமங்கள் உண்டு. இதில் 'கேசவா' என்ற திருநாமத்தை ஏழுமுறை சொல்லிவிட்டு, அன்றாட அலுவல்களுக்குக் கிளம்பினால், அன்றையப் அலுவல்கள் தங்கு தடையின்றி முடியும் என்பது நம்பிக்கை ஆகும். 'கேசவன' என்ற சொல்லுக்கே தடைகளை நீக்குபவன் என்று பொருள். வாழ்வில் ஏற்படும் தடைகளைக் கடக்கும் இப்பாடலை, திவ்ய தேசங்களில் ஒன்றான ஆயர்பாடி தலத்தை மனதில் கொண்டு ஆண்டாள் பாடியருளினாள்.

கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசம் உடையாய்! திறவேலோர் எம்பாவாய். 7

**மாவாய் பிளந்தான், மல்லரை மாட்டிய தேவாதி தேவன்:**

மகிழ்வினை மட்டுமே உடைமையாகக் கொண்டவளே! கீழ்வானம் வெளுத்து எருமைகள் மேய்ச்சலுக்காக புல் மைதானங்களில் நிற்கின்றன. உன்னைத் தவிர மற்ற பெண்கள் அனைவரும் நீராடுவதற்காக வந்து விட்டனர். அவர்களும் உடனே நீராடப் போக வேண்டும் என

நினைக்கின்றனர். எனினும் உனக்காக அவர்களை தடுத்து நிறுத்திக் கொண்டு உன்னைக் கூவிக் கூவி அழைக்கிறோம். கேசி என்னும் அரக்கன் குதிரை வடிவில் வந்த போது அதன் வாயைப் பிளந்து கொன்றவனும், கம்சனால் அனுப்பப்பட்ட முஷ்டிகர் உள்ளிட்ட மல்லர்களை வென்றவனும், தேவாதி தேவனுமான கண்ணனை நாம் வணங்கினால், அவன் 'ஆஆ' என்று அலறிக்கொண்டு நமக்கு அருள் தருவான். பெண்ணே! உடனே கிளம்பு என துயின்று கொண்டு இருக்கும் தன் தோழியைத் துயில் எழுப்புகின்றாள் ஆண்டாள்.

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரை போகாமல் காத்துன்னை
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆஆ என்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய். 8

**மணிக்கதவம் தாள் திறவாய்:**

ஒளிநிறைந்த நவரத்தினங்களால் கட்டப்பட்ட மாளிகையில், சுற்றிச்சூழ விளக்கெரிய, நறுமணதிரவியம் மணம் வீச, அழகிய பஞ்சுமெத்தையில் உறங்கும் எங்கள் மாமன் மகளே! உன் வீட்டு மணிக்கதவைத் திறப்பாயாக. எங்கள் அன்பு மாமியே! அவளை நீ எழுப்பு. உன் மகளை எத்தனை நேரமாக நாங்கள் கூவி அழைக்கிறோம்! அவள் பதிலே சொல்லவில்லையே! அவள் ஊமையா? செவிடா? சோம்பல் அவளை ஆட்கொண்டு விட்டதா? அல்லது எழ முடியாதபடி ஏதாவது மந்திரத்தில் சிக்கி விட்டாளா? உடனே எழு. எங்களுடன் இணைந்து மாயங்கள் செய்பவன், மாதவத்துக்கு சொந்தக்காரன், வைகுண்டத்துக்கு அதிபதி என்றெல்லாம் புகழப்படும் அந்த நாராயணனின் திருநாமங்களைச் சொல் என அறிவுறுத்தகின்றாள் ஆண்டாள்.

உலக மாந்தர் மாளிகை, பஞ்சு மெத்தை என இவ்வுலகின் மாய வாழ்க்கையில் சிக்கி சோம்பலில் கட்டுண்டு கிடக்கின்றனர். இதில் இருந்து அவர்களின் ஆன்மாவை மீட்டு பகவானின் இருப்பிடமான வைகுண்டமே நிலையானது என்பதை அறிவுறுத்த வேண்டும். அந்த வைகுண்டத்தை அடைய பகவானின் திருநாமங்களைச் சொல்ல வேண்டும் என்பதனை மேற்கண்ட பாடலானது விளக்கி நிற்கின்றது.

**குறிப்பு**

தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணை மேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன்மகள் தான்
ஊமையோ அன்றிச் செவிடோ, அனந்தலோ?
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய். 9

**கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணனும் பெருந்துயில் தந்தானோ:**

முன்னைப் பிறப்பில் எம்பெருமானாகிய நாராயணனை எண்ணி நோன்பிருந்து அவனது நாமத்தினைச் சொல்லி வழிபட்டதன் பயனாக, இப்போது துறக்கம் ( சொர்க்கம் ) போல் இன்பத்தினை அனுபவிக்கின்ற பெண்ணே! உன் இல்லக்கதவை திறக்காவிட்டாலும் பரவாயில்லை. பேசவும் மாட்டாயோ? நறுமணம் வீசும் துளசியை தலையில் அணிந்த நாராயணனை நாம் போற்றி பாடினால் அவன் நம் பாவை நோன்புக்குரிய பலனை உடனே தந்தருள்வான். முன்னைக் காலத்தில், கும்பகர்ணன் என்பவனை உறக்கத்தில் சிறந்தவன் என்பார்கள். ஆனால் உன் உறக்கத்தைப் பார்த்தால், நீ அவனையும் தோற்கடித்து விடுவாய் போல் தோன்றுகிறது. சோம்பல் திலகமே! கிடைத்தற்கரிய அணிகலனே! எந்த தடுமாற்றமும் இல்லாமல் கதவைத் திறந்து வெளியே வா என அழைக்கின்றாள் ஆண்டாள்.

குறிப்பு

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய். 10

**குற்றமொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே:**

கன்றுகளோடு கூடிய பசுக்களிடமிருந்து பால் கறப்பவனாகவும், தங்களைப் பகைக்கும் பகைவர்களை எதிர்த்து நின்று போரிடும் தன்மையுடையவனும், குற்றமற்றவனுமாகிய கோபாலனை தழுவத் துடிக்கின்ற கோவலர்தம் பொற்கொடியே! புற்றில் இருக்கும் பாம்பின் படத்தைப் போன்ற அல்குலை உடைய மயில் போன்றவளே! நம் சுற்றுப்புறத்திலுள்ள எல்லாத் தோழியரும் உன் இல்லத்தின் முன் வந்து கூடி நிற்கின்றனர். மேலும் அப்பெண்கள் மேகவண்ணனாகிய கண்ணனைப் புகழ்ந்து பாடிக் கொண்டும் இருக்கின்றனர். செல்வத்தையும், பெண்மையையும் புனிதமாய் காப்பவளே! இதையெல்லாம் கேட்டும் அசையாமலும், பேசாமலும் உறங்கிக் கொண்டிருக்கிறாயே! பொருளற்ற இந்த உறக்கத்தினால் உனக்கு என்ன பலன் கிடைக்கப் போகிறது? எனவே எழுந்து வருவாய் என அழைக்கின்றாள் ஆண்டாள்.

நீராடச் செல்ல வேண்டிய நேரம் கடந்து கொண்டே இருக்கின்றது. ஆயினும் தோழியோ இன்னும் எழுந்து வந்தபாடில்லை! எனினும் அவளை விட்டுவிட்டு, நீராடச் செல்வது பக்தி மரபில் சிறப்புடைய செயலன்று. பிறரை விட்டுவிட்டு, தான் மட்டும் இறைவனை அடைய முயல்வது உயரிய நெறியன்று. அனைவரும் இறைவனை நாட வேண்டும், அவன் புகழ் பாட வேண்டும். அவனருளைப் பெற்றுச் சிறக்க வேண்டும் எனும் உயரிய நோக்கத்தினை வெளிப்படுத்துவதாய் இப்பாடலானது அமைந்துள்ளது.

குறிப்பு

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருகச் செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே
புற்றரவு அல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய். 11

**தென் இலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு இனியான்:**

பசியால் கனைத்துத் திரியும் கன்றுகளை எண்ணிய எருமைகள் தங்கள் மடியில் சொரியும் பாலைச் சிந்தியபடியே அங்குமிங்கும் அலைகின்றன. அவை சொரிந்த பால் இல்லத்து வாசல்களை சேறாக்குகின்றது. இந்த அளவுக்கு விடாமல் பால் சொரியும் எருமைகளுக்கு உரியவனான ஆயனின் தங்கையே! கொட்டுகின்ற பனி எங்கள் தலையில் விழ, உன் இல்லத்தின் தலைவாசலில் காத்து நிற்கிறோம். மேலும் அன்று சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனின் மேல் சினம் கொண்டு அவனை அழிக்க இராமாவதாரம் எடுத்த கோமானாகிய அந்த நாராயணனின் பெருமையைப் பாடுகின்றோம். நீயோ, இன்னும் பேசாமல் இருக்கிறாய்! எல்லா இல்லத்திலும் உள்ள அனைவரும் எழுந்து விட்ட பிறகும், உனக்கு மட்டும் ஏன்பேருறக்கம்? எனக் கேட்டுத் துயில் எழுப்புகின்றாள் ஆண்டாள்.

எருமைகள் பால் சொரிந்து உறங்கும் தோழியின் இல்ல வாசலை சேறாக்கி விட்டதால், அவளது வீட்டுக்குள் நுழைய முடியாத பெண்கள், அவளது வீட்டு வாசலிலுள்ள ஒரு கட்டையைப் பிடித்துக் தொங்கியபடி அவளை எழுப்பு கிறார்கள். இந்தப் பாடலில். தலையில் பனி பெய்கிறது என்கிற குறிப்பானது காணப்படுகின்றது. தலையில் பனியால் குளிர்ச்சி. கீழே பால் வெள்ளத்தால் குளிர்ச்சி, இத்தனையையும் தாண்டி இறைவனை அடைய முயற்சிக்கிறார்கள் ஆய்பாடிப் பெண்கள் என்பதனை இப்பாடலானது வெளிப்படுத்தி நிற்கின்றது.

குறிப்பு

கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழ நின் வாசல் கடைபற்றி
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோர் எம்பாவாய். 12

**வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று:**

பறவை வடிவம் கொண்டு வந்த பகாசுரனின் வாயைப் பிளந்து அழிக்கவும், பிறன்மனைவியை நாடிய இராவணனின் தலையைக் கொய்யவும் அவதாரம் செய்த நாராயணனின் புகழைப் பாடியபடியே, நம் தோழியர் எல்லாரும் பாவை நோன்பு இருக்கும் இடத்திற்கு சென்றாகி விட்டது. கீழ்வானத்தில் வெள்ளி முளைத்து விட்டது. வியாழன் மறைந்து விட்டது. பறவைகள் கீச்சிட்டு பாடுகின்றன. தாமரை மலர் போன்ற கண்களையுடைய பெண்ணே! விடியலை உணர்த்தும் இந்த அறிகுறிகள் தெரிந்தும் உடல்நடுங்கும்படி, குளிர்ந்த நீரில் நீச்சலடித்து குளிக்க வராமல் என்ன செய்கிறாய்? அந்தக் கண்ணனை நினைக்கும் ஒவ்வொரு நாளும் நன்னாளே! மார்கழியில் அவனை நினைப்பது இன்னும் சிறப்பல்லவா? எனவே, உறக்கம் என்கிற திருட்டை தவிர்த்து எங்களுடன் நீராட வா எனத் தோழியை அழைக்கின்றாள் ஆண்டாள்.

இப்பாடலுள் கள்ளம் தவிர்ந்து என்கிறாள் ஆண்டாள். காலத்தே செயல்படாமல் தடுக்கும் உறக்கம் கூட ஒருவகையான கள்ளம் தான். எனவே அத்தகைய கள்ளத்தைத் தவிர்த்து இறைவன் நாமத்தைச் சொல்லி ஈடேற்றம் பெறல் வேண்டும் என அறிவுறுத்துகின்றாள் ஆண்டாள்.

குறிப்பு

புள்ளின்வாய் கீண்டானை பொல்லா அரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீர் ஆடாதே
பள்ளிக்கிடத்தியோ! பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய். 13

**பங்கயக் கண்ணானை பாடேலோர் எம்பாவாய்:**

இந்நன்னாளில் எங்களை அதிகாலையில் முன்னமே வந்து துயில் எழுப்புவேன் என்று வீரம் பேசிய பெண்ணே! கொடுத்த வாக்கை மறந்ததற்காக நாணப்படாதவளே! உன் வீட்டின் பின்வாசலிலுள்ள தோட்டத்தின் தடாகத்தில் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து மணம் செய்கின்றன. ஆம்பல் மலர்கள் தலை கவிழ்ந்தன. காவி உடையணிந்த துறவிகள் தங்கள் வெண்பற்கள் ஒளிவீச கோயில்களை நோக்கி, திருச்சங்கு முழக்கம் செய்வதற்காக சென்று கொண்டிருக்கின்றனர்.ஆனால், பெண்ணே! சங்கும் சக்கரமும் ஏந்திய பலமான கரங்களை உடையவனும், தாமரை போன்ற விரிந்த கண்களையுடையவனுமான கண்ணனைப் பாட இன்னும் நீ எழாமல் இருக்கிறாயே! என தோழி முன்னம் உரைத்த வாக்குறுதியை நினைவுறுத்தி கொடுத்த வாக்கினைக் காப்பாற்றாது உறங்குதல் உயரிய செயலன்று, நாணமுடையதாகும் எனவும் மொழிந்து துயில் எழுப்பகின்றாள் ஆண்டாள்.

உங்கள் புழக்கடை தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்

குறிப்பு

எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானை பாடேலோர் எம்பாவாய். 14

**மாற்றாரை மாற்றழிக்க வல்லானைப் பாடேலோர் எம்பாவாய்:**

ஏலே என் தோழியே! இளமைக் கிளியே! நாங்களெல்லாம் உனக்காக இவ்வளவு நேரம் காத்திருந்தும், இப்படியெல்லாம் அழைத்தும் உறங்குகின்றாயே? என்று சற்றுக் கடுமையாகவே தோழிகள் அவளை அழைத்தனர். அப்போது அந்த தோழி, கோபத்துடன் என்னை அழைக்காதீர்கள்! இதோ வந்து விடுகிறேன், என்கிறாள்.

உடனே தோழிகள், உன்னுடைய வார்த்தைகள் மிக நன்றாக இருக்கிறது. இவ்வளவு நேரம் உறங்கிவிட்டு இப்போது எங்களிடம் கோபிக்காதே என்கிறாயே, என்று சிடுசிடுத்தனர்.அப்போது அவள், சரி..சரி...எனக்கு பேசத்தெரியவில்லை. நீங்களே பேச்சில் திறமைசாலிகளாய் இருங்கள். நான் ஏமாற்றுக்காரியாக இருந்து விட்டுப் போகிறேன், என்கிறாள்.அடியே! நாங்களெல்லாம் முன்னமே எழுந்து வர வேண்டும். உனக்காக காத்திருக்க வேண்டும். அப்படியென்ன எங்களிடமில்லாத சிறப்பு உனக்கு இருக்கிறது? என்று கடிந்து கொள்கிறார்கள். அவளும் சண்டைக்காரி. பேச்சை விட மறுக்கிறாள். என்னவோ நான் மட்டும் எழாதது போல் பேசுகிறீர்களே! எல்லாரும் வந்துவிட்டார்களா? என்கிறாள்.தோழிகள் அவளிடம், நீயே வெளியே வந்து இங்கிருப்போரை எண்ணிப் பார். வலிமை பொருந்திய குவலயாபீடம் என்னும் யானையை அழித்தவனும், எதிரிகளை வேட்டையாடும் திறம் கொண்டவனுமான மாயக்கண்ணனை வணங்கி மகிழ உடனே வருவாய், என்று அழைக்கின்றனர்.

எல்லே இளங்கிளியே! இன்னும் உறங்குதியோ!
சில்லென்று அழையேன்மின் நங்கைமீர்! போதருகின்றேன்
வல்லையுன் உன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக

குறிப்பு

ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்து எண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய். 15

ஆண்டாள் திருப்பாவையில் இடம்பெற்றுள்ள இப்பதினைந்தாவது பாடலுடன் துயிலும் தோழியை எழுப்புதலாகிய படலம் நிறைவு பெறுகின்றது.

**பயிற்சி வினாக்கள்:**

**1. திருப்பாவை பாடியருளிய ஆண்டாளின் வரலாற்றினை விளக்கி வரைக.**

**ஆண்டாள்:**

ஆண்டாள் தமிழகத்தில் திருமால்மேல் ஆழங்காற்பட்டு அன்பு பாராட்டிய வைணவ ஆழ்வார்களுள் மிகவும் சிறப்புப் பெற்றவர். ஆண்டாளின் சிறப்பு யாதெனில் 'அஞ்சுகுடிக்கொரு சந்ததி' எனப் போற்றப்பட்டவர். அதாவது எம்பெருமானுக்கு யாது நேரிடுமோ? என அஞ்சி அவனுக்கே பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரின் திருமகள் ஆண்டாள். மேலும் ஆழ்வார்களில் ஒரே பெண்பிள்ளை ஆண்டாள்தான். ஆண்டாள் தன் பெயருக்கு ஏற்றவண்ணம் உலக மக்களையும், உலகைப் படைத்தளித்த ஆண்டவனையும் ஆண்டவள். மற்றைய ஆழ்வார்கள் இறைவனின் மாயையில் அகப்பட்டுக் கிடக்க, இறைவனே அவர்களது மயக்கங்களைப் போக்கி அவர்களுக்கு 'மயர்வற மதிநலம் அருளி' ஆட்கொண்டான். ஆனால் ஆண்டாளோ நப்பின்னையின் பிடியில் உறங்கிக் கொண்டிருந்த கண்ணனை அறிதுயில் எழுப்பி 'உனக்கும் எங்களுக்கும் உள்ள உறவானது ஒழிக்க ஒழியாது' என்று சீவாத்மா பரமாத்மாவுக்குண்டான உறவைச் சொல்லி 'எங்களது குற்றேவலை ஏற்கவேண்டும்' என்று முறையிட்டு ஆட்கொள்ளச் செய்து அவனால் ஆட்கொள்ளப்பட்டாள்.

ஆடி மாதம் பூரம் நட்சத்திரத்தில் திருவில்லிபுத்தூர் நந்தவனத்தில் துளசி செடியின் அடியில் ஆண்டாள் அவதாரம் செய்தாள். பெரியாழ்வார் ஆண்டாளை எடுத்து 'சுரும்பார் குழற்கோதை'

எனத் திருப்பெயரிட்டு அன்பாக வளர்த்து வந்தார். பெரியாழ்வார் திருவில்லிபுத்தூர் நந்தவனத்தில் உள்ள மலர்களைப் பறித்து அழகிய மாலையாக தொடுத்துத் திருமாலுக்குச் சூட்டும் பணியைத் தலைமேற்கொண்டு பக்தி செலுத்தி வந்தார். அவ்வாறு மலர்களைப் பறிக்கும்போதும், மாலையாகத் தொடுக்கும்போதும் அவருக்குத் தெரிந்த சமயம், தமிழ் தொடர்பான அனைத்தையும் கோதைக்கு கற்றுத் தந்தார்.பெரியாழ்வாரின் மூலம் திருமாலின் சிறப்புகளைக் கேட்க, கேட்க இளம் வயதிலேயே கோதைக்கு திருமால் மீது இனம்புரியாத அன்பு தோன்றியது. ஆழ்வார் சொல்வதைக் கேட்டு வளர்ந்த கோதை வளர்ந்து பெரியவளானதும் சிறுவயது முதல் தான் கேட்டு வளர்ந்த கண்ணனையே மணாளனாக அடையவேண்டும் என உறுதி கொண்டாள். எனவே கண்ணனை அடையும் அழகு தனக்கிருக்கிறதா? என்று அறிந்துகொள்ள திருமாலுக்குச் சூட்டப்படவிருக்கும் மாலைகளை யாரும் அறியாமல் தான் அணிந்து பார்த்து கண்ணனுடன் தன்னை மணப்பெண்ணாகக் கற்பனை செய்து அகம் மகிழ்ந்தாள். மாலைகளை அணிவதும் கண்ணாடி முன் நின்று கண்ணனை நினைத்து மகிழ்ந்து மீண்டும் மாலையை எடுத்து வைப்பதும் கோதையின் வழக்கமாயிற்று. இதனால் கோதை சூடிக் கொடுத்த மாலைகளே இறைவனுக்கும் சூடப்பட்டன. ஒருநாள் கோதையின் செயலினை அறிந்த விஷ்ணுசித்தர் கோதையைக் கடிந்துகொண்டார். மேலும் கோதை சூடிய மாலையைப் புறம்தள்ளி புதிய மாலையைத் தொடுத்து இறைவனுக்குச் சூட்டினார். ஆனால் அன்றிரவு திருமால் அவரது கனவில் தோன்றி கோதை அணிந்த மாலைகளே தனக்குப் பிடித்தமானவை எனவும் அவற்றையே தனக்குச் சூட்ட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இத்தகைய சிறப்பினாலே ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’ என்றும் ‘இறைவனையே ஆண்டவள்’ என்ற பொருளில் ஆண்டாள் என்றும் போற்றப்படுகிறாள். கோதை திருமண வயதடைந்த பின்னர் அவளுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட திருமண ஏற்பாடுகளை மறுத்து, திருவரங்கத்தில் உறையும் இறைவனையே மணப்பதென்று பிடிவாதமாக இருந்தாள். யாது செய்வதென அறியாது திகைத்திருந்த பெரியாழ்வாரின் கனவில் தோன்றிய இறைவன், கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோயிலுக்கு அழைத்துவருமாறு பணித்தார். குறித்த நாளன்று கோயிலுக்கு அழைத்துச்

செல்லப்பட்ட கோதை, கோயில் கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்து இறைவனையே மணந்து பெருமை பெற்றாள்.



ஆண்டாள் தனது 15ஆம் வயதில் இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு முன் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு நூல்களை இயற்றியுள்ளார். இவ்விரு நூல்களும் அதன் இலக்கிய செழுமை, தத்துவம், பக்தி ஆகியவற்றிக்காக அனைவராலும் போற்றப்படுகின்றது. இவரது இரண்டாவது படைப்பான நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டுள்ளது. இறைவனை நினைத்துருகிப்பாடும் காதல்ரசம் மிகு பாடல்களின் தொகுப்பாக காணப்படுகின்றது.

**2. திருப்பாவையின் சிறப்புகளை விளக்கி எழுதுக.**

ஆண்டாளின் முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் தன்னுட் கொண்டமைந்துள்ளது. திருமால் நெறி போற்றும் வைணவ வழிபாட்டில் ஒன்றறக் கலந்து விட்ட ஒன்று திருப்பாவையாகும். மாதவனாகிய எம்பெருமானுக்கு உகந்த மார்கழி மாதக் காலைகளில் அனைத்து வைணவக் கோயில்களிலும் இசைக்கப்படுவதே இதன் பெரும் சிறப்பு ஆகும். இறைவனை அடையும் வழியைக் கண்டுகொண்ட ஆண்டாள் 'வையத்து வாழ்வீர்காள்!' என உலக மாந்தரை அழைத்து அவர்கட்கு திருமாலை அடைந்து உய்யும் வழியைக் கூறி உணர்த்துவதால் இத்திருப்பாவை 'ஆற்றுப்படை' என்னும் இலக்கண வகையைச் சேர்ந்தது எனலாம். இந்தத் திருப்பாவை 'சங்கத் தமிழ் மாலை' என்று குறிப்பிடப்படுகிறது. திருப்பாவை வழிபாடானது இல்லறமென்னும் பெருங்கடலிலே விழுந்து துயர் உறுவோர்க்கு அவரைக் கரைசேர்க்கும் மிதவை ஆகும். பாலைவனத்தில் நடந்து நடந்து காலும் மனமும் நொந்து போனவர்கள் குளிர்ந்த தடாகம் கண்ணில் பட்டால் எப்படிக் மகிழ்ந்து போவார்களோ அதுபோல திருப்பாவை எனும் தடாகத்தில் மகிழ்வர். இவ்வாறு அனைத்துப் பாவங்களையும், துன்பங்களையும் போக்கி பரமனாகிய திருமாலின் திருவடியைக் காட்டும் கோதையின் முப்பது பாசுரங்களையுடைய 'திருப்பாவை' யினை அறியாத மானிடர்களைப் பூமி சுமப்பது பாவமாகும் என்பதனை,

**குறிப்பு**

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் – கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதுவும் வம்பு.

என்ற பாடலானது எடுத்துரைக்கும்.

**3. 'மணிக்கதவம் தாள் திறவாய்' – என ஆண்டாள் விளித்து உரைப்பன யாவை?**

ஒளிநிறைந்த நவரத்தினங்களால் கட்டப்பட்ட மாளிகையில், சுற்றிச்சூழ விளக்கெரிய, நறுமணதிரவியம் மணம் வீச, அழகிய பஞ்சுமெத்தையில் உறங்கும் எங்கள் மாமன் மகளே! உன் வீட்டு மணிக்கதவைத் திறப்பாயாக. எங்கள் அன்பு மாமியே! அவளை நீ எழுப்பு. உன் மகளை எத்தனை நேரமாக நாங்கள் கூவி அழைக்கிறோம்! அவள் பதிலே சொல்லவில்லையே! அவள் ஊமையா? செவிடா? சோம்பல் அவளை ஆட்கொண்டு விட்டதா? அல்லது எழ முடியாதபடி ஏதாவது மந்திரத்தில் சிக்கி விட்டாளா? உடனே எழு. எங்களுடன் இணைந்து மாயங்கள் செய்பவன், மாதவத்துக்கு சொந்தக்காரன், வைகுண்டத்துக்கு அதிபதி என்றெல்லாம் புகழப்படும் அந்த நாராயணனின் திருநாமங்களைச் சொல் என அறிவுறுத்தகின்றாள் ஆண்டாள்.

உலக மாந்தர் மாளிகை, பஞ்சு மெத்தை என இவ்வுலகின் மாய வாழ்க்கையில் சிக்கி சோம்பலில் கட்டுண்டு கிடக்கின்றனர். இதில் இருந்து அவர்களின் ஆன்மாவை மீட்டு பகவானின் இருப்பிடமான வைகுண்டமே நிலையானது என்பதை அறிவுறுத்த வேண்டும். அந்த வைகுண்டத்தை அடைய பகவானின் திருநாமங்களைச் சொல்ல வேண்டும் என்பதனை மேற்கண்ட பாடலானது விளக்கி நிற்கின்றது.

தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணை மேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன்மகள் தான்

ஊமையோ அன்றிச் செவிடோ, அனந்தலோ?
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய். 9

**4.பொழுது புலர்ந்ததன்மையை ஆண்டாள் உணர்த்தும் விதத்தினை விவரி?**

அரியென்ற பேரரவம் உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்: தோழியே! நீ உடனே எழுந்திரு! பறவைகள் அதிகாலையில் எழுந்து கீச்சிடும் இனிய ஒலி இன்னும் கேட்கவில்லையா? கருடனை வாகனமாகக் கொண்ட எம்பிரானின் திருக்கோயிலில் வெள்ளை நிற சங்குகள் எழுப்பும் பேரரவம் செவியில் விழவில்லையா? பேய் வடிவம் எடுத்து. தன்னைக் கொல்ல வந்த பூதகி என்ற அரக்கியிடம் பால் குடிப்பது போல் நடித்து அவளது உயிரைப் பறித்தவனும், சக்கர வடிவில் வந்த சகடன் என்ற அரக்கனின் உயிரைக் குடித்தவனுமான கண்ணனை யோகிகளும், முனிவர்களும் ‘அரி அரி’ என்று அழைக்கும் குரலும் கூடவா உனக்குக் கேட்கவில்லை! உடனே எழுந்து இவற்றையெல்லாம் கேட்டு உள்ளம் குளிர்வாயாக.

பூதகி என்ற அரக்கியை கம்சன் அனுப்பி வைத்தான். அவளை இம்சை செய்து கண்ணன் கொன்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்தானில்லை. அவனுக்கு பால் தந்து தாய் இடத்தை அடைந்து விட்டாள் பூதகி. அந்த தாய்மையைப் பாராட்டும் விதத்தில் அவளது மடியில் அமர்ந்து பாலைக் குடிப்பது போல் அமைதியாக உயிரைக் குடித்து அவளுக்கு வைகுந்தம் அளித்தான் எம்பெருமான்.

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய் எழுந்திராய்! பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்து அரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்

மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் 6

குறிப்பு

**கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ:**

அறிவில்லாதவளே! ஆனைச்சாத்தன் எனப்படும் வலியன்குருவிகள் கீச்சிடும் குரலும், அவை தங்கள் துணையுடன் பேசும் ஒலியும் உனக்கு கேட்கவில்லையா? மணம் மிக்க கூந்தலை உடைய ஆய்க்குலப் பெண்கள் மத்து கொண்டு தயிர் கடையும் ஓசையும், அப்போது அவர்களது கழுத்தில் அணிந்துள்ள அச்சுத்தாலியும், ஆமைத்தாலியும் இணைந்து ஒலியெழுப்புவது இன்னுமா கேட்கவில்லை? எல்லோருக்கும் தலைமையேற்று அழைத்துச் செல்வதாகச் சொன்ன பெண்ணே! நாங்கள் நாராயணான கேசவனைப் புகழ்ந்து பாடுவது உன் காதில் கேட்டும் உறங்கும் மர்மமென்ன? ஒளிபொருந்திய முகத்தைக் கொண்டவளே! உன் வீட்டுக்கதவைத் திற எனத் துயில் எழுப்புகிறாள் ஆண்டாள்.

பெருமாளுக்கு ஆயிரம் திருநாமங்கள் உண்டு. இதில் ‘கேசவா’ என்ற திருநாமத்தை ஏழுமுறை சொல்லிவிட்டு, அன்றாட அலுவல்களுக்குக் கிளம்பினால், அன்றையப் அலுவல்கள் தங்கு தடையின்றி முடியும் என்பது நம்பிக்கை ஆகும். ‘கேசவன’ என்ற சொல்லுக்கே தடைகளை நீக்குபவன் என்று பொருள். வாழ்வில் ஏற்படும் தடைகளைக் கடக்கும் இப்பாடலை, திவ்ய தேசங்களில் ஒன்றான ஆயர்பாடி தலத்தை மனதில் கொண்டு ஆண்டாள் பாடியருளினாள்.

கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசம் உடையாய்! திறவேலோர் எம்பாவாய். 7

குறிப்பு

**மாவாய் பிளந்தான், மல்லரை மாட்டிய தேவாதி தேவன்:**

மகிழ்வினை மட்டுமே உடைமையாகக் கொண்டவளே! கீழ்வானம் வெளுத்து எருமைகள் மேய்ச்சலுக்காக புல் மைதானங்களில் நிற்கின்றன. உன்னைத் தவிர மற்ற பெண்கள் அனைவரும் நீராடுவதற்காக வந்து விட்டனர். அவர்களும் உடனே நீராடப் போக வேண்டும் என நினைக்கின்றனர். எனினும் உனக்காக அவர்களை தடுத்து நிறுத்திக் கொண்டு உன்னைக் கூவிக் கூவி அழைக்கிறோம். கேசி என்னும் அரக்கன் குதிரை வடிவில் வந்த போது அதன் வாயைப் பிளந்து கொன்றவனும், கம்சனால் அனுப்பப்பட்ட முஷ்டிகர் உள்ளிட்ட மல்லர்களை வென்றவனும், தேவாதி தேவனுமான கண்ணனை நாம் வணங்கினால், அவன் ‘ஆஆ’ என்று அலறிக்கொண்டு நமக்கு அருள் தருவான். பெண்ணே! உடனே கிளம்பு என துயின்று கொண்டு இருக்கும் தன் தோழியைத் துயில் எழுப்புகின்றாள் ஆண்டாள்.

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரை போகாமல் காத்துன்னை
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆஆ என்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய். 8

**பங்கயக் கண்ணானை பாடேலோர் எம்பாவாய்:**

இந்நன்னாளில் எங்களை அதிகாலையில் முன்னமே வந்து துயில் எழுப்புவேன் என்று வீரம் பேசிய பெண்ணே! கொடுத்த வாக்கை மறந்ததற்காக நாணப்படாதவளே! உன் வீட்டின் பின்வாசலிலுள்ள தோட்டத்தின் தடாகத்தில் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து மணம் செய்கின்றன. ஆம்பல் மலர்கள் தலை கவிழ்ந்தன. காவி உடையணிந்த துறவிகள் தங்கள் வெண்பற்கள் ஒளிவீச கோயில்களை நோக்கி, திருச்சங்கு முழக்கம் செய்வதற்காக சென்று கொண்டிருக்கின்றனர்.ஆனால், பெண்ணே! சங்கும் சக்கரமும் ஏந்திய

பலமான கரங்களை உடையவனும், தாமரை போன்ற விரிந்த கண்களையுடையவனுமான கண்ணனைப் பாட இன்னும் நீ எழாமல் இருக்கிறாயே! என தோழி முன்னம் உரைத்த வாக்குறுதியை நினைவுறுத்தி கொடுத்த வாக்கினைக் காப்பாற்றாது உறங்குதல் உயரிய செயலன்று, நாணமுடையதாகும் எனவும் மொழிந்து துயில் எழுப்பகின்றாள் ஆண்டாள்.

உங்கள் புழக்கடை தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானை பாடேலோர் எம்பாவாய். 14

**5. நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய் - விளக்கி வரைக.**

சிறுமியரே! நம் பரந்தாமன் வாமன அவதாரத்தில் மூன்றடிகளால் விண்ணையும் மண்ணையும் அளந்து தன்னுடையதாக்கிக் கொண்ட ஓங்கி உலகளந்த உத்தமன். அவனது சிறப்பினைப் பாடி, நம் பாவைக்கு மலர்கள் அணிவித்து வழிபாடு செய்வதற்கு முன் முன் நீராடச் செல்வோம். இப்பாவை நோன்பிருப்பதால் உலகம் முழுவதும் மாதம் மும்முறை மழை பெய்யும். மழை பெய்தல் காரணமாக வயல்களில் செந்நெல் செழித்து வளரும். மீன்கள் வயலுக்குள் பாய்ந்தோடி துள்ளி விளையாடும். குவளை மலர்களில் புள்ளிகளையுடைய வண்டுகள் தேன் குடிக்க வந்து தேனுண்டு கிறங்கிக் கிடக்கும். வள்ளல் போன்ற பசுக்கள் பாலை வாங்கக் குடம் நிறைக்கும். என்றும் வற்றாத செல்வத்தை இந்த இந்நோன்பானது தந்து நிற்கும்.

திருப்பாவை என்பது திருமால் குறித்து பாடப்பட்டதாகும். அதிலே முதல் பத்து, அடுத்த பத்து, அதற்கடுத்த பத்து என மூன்று பிரிவாக்கி அதற்குள் ஒரு பாடலில் வாமன அவதாரத்தை பாடுகிறாள் ஆண்டாள்.

திருமாலின் பாதம் பட்டால் வைகுந்தம் உறுதியாகும். எனவேதான் உத்தமன் என்று போற்றுகிறாள் ஆண்டாள்.

குறிப்பு

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய். 3

## கூறு: 3

## மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

## வருகைப்பருவம் - முதல் ஐந்து பாடல்கள்:

**குமரகுருபரர் வரலாறு:**

குமரகுருபரர் பாண்டி நாட்டில் அமைந்துள்ள திருவைகுண்டத்திலே சைவவேளாளர் மரபில் சண்முகசிகாமணிக் கவிராயர் என்பாருக்கும் அவர்தம் அருமைத் துணைவியார் சிவகாமி அம்மையாருக்கும் அருமை மகவாய் அவதரித்தவர். பிறந்து மொழி பயின்ற காலம் தொடங்கி சிறந்து இறைவன் சேவடியே சிந்தித்த இத் தம்பதியருக்கு மகனாகிய குமரகுருபரர் பிறந்து ஐந்து ஆண்டுகள் கடந்தும் பேசாது இருந்தார். குமரகுருபரர் பேசாதிருப்பதைக் கண்ட பெற்றோர், திருச்செந்தூர் சென்று முருகக் கடவுளின் அருள் வேண்டி நின்றனர். செந்தூர் முருகன் தன் ஞானவேலால் குமரகுருபரரின் நாவில் பிரணவ மந்திரமாகிய ‘ஓம்’ என்பதனை எழுத ஊமை நீங்கிப் பாடலுற்றார். சைவ சித்தாந்த சாத்திர சாரமாய் விளங்கும் ‘கந்தர்

கலிவெண்பா' என்னும் பாடலை செந்தூர் பெருமான்மீது அருளிச்செய்தனர்.

குறிப்பு

"பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்"

எனத் தொடங்கும் கந்தர் கலிவெண்பாவில் முருகனை வணங்கினால் பெரும் பேறுகளைக் குறிப்பிடுவார் குமரகுருபரர். அத்தகைய பேறுகள்

"ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவதானமும் சீர்ப்
பேசும் இயல்பல் காப்பியத் தொகையும் - ஓசை
எழுத்து முதலாம் ஐந்திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து - ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மை விடுத்து
ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகம் துய்பித்துச் - சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்"

என்பதாய் அமையும். மேற்கண்ட பாடலைப் பாடி குமரகுருபரர் நிறைவு செய்த உடன் முருகப்பெருமான் அவர் கனவில் தோன்றி 'நீ குருபரனாகுக' என்று அருளியதால், அன்று முதல் குமரகுருபரர் எனப்பட்டார்.

குமரகுருபரர் தருமபுரத்தில் ஞான குருவாய் எழுந்தருளியிருந்த மாசிலாமணித் தேசிகரிடம் ஞானம் பெற விரும்பிச் சென்றார். அவர்தம் ஆணையின்படி சிதம்பரம் சென்றார். அவ்வாறு செல்லும் வழியில் வைத்தீசுவரன் கோவிலில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் குமரக்கடவுள்மீது 'முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' என்னும் நூலைப் பாடியருளினார். சிதம்பரம் ஆடல்வல்லான்மீது 'சிதம்பர மும்மணிக் கோவை' 'சிதம்பரச் செய்யுட்கோவை' என்னும் இரண்டு நூல்களையும், அம்பிகைமீது, 'சிவகாமியம்மை இரட்டைமணிமாலை'

என்னும் நூலையும் பாடினார். குமரகுருபரரை தருமபுரம் மாசிலாமணி தேசிகர் தனது மாணவனாய் ஏற்றுக் கொண்டு ஞான உபதேசம் நல்கினார். தனக்கு ஞானம் போதித்த மாசிலாமணி தேசிகர் மீது 'பண்டார மும்மணிக் கோவை' என்னும் நூலை பாடியருளினார். பின் வடநாடு சென்று காசிவிசுவநாதப் பெருமான்மீது 'காசிக்கலம்பகம்' பாடினார். அந்நாட்டு மகம்மதிய அரசனிடம் மடம் அமைக்க இடம்பெற விரும்பினார். ஆனால் அவன் அதற்கு இசைவு தராமையால் கலைமகள்மீது 'சகலகலாவல்லிமாலை' பாடி இந்துஸ்தான் மொழியையறிந்து, சிங்கத்தின் மீது அமர்ந்து சென்று அரசனிடம் இடம் பெற்று சைவ மடங்களையும் கேதாரநாதர் ஆலயத்தையும் நிறுவினார். குமரகுருபரரின் படைப்புகளுள் 'மீனாட்சியம்மை குறம்' 'மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை' 'மதுரைக்கலம்பகம்' 'நீதிநெறிவிளக்கம்' போன்றவையும் குறிப்பிடத்தக்கவையாகும். திருவாரூர் சென்ற குமரகுருபரர் தியாகராசப் பெருமான் மேல் 'திருவாரூர் நான்மணிமாலை' என்னும் நூலையும் பாடியருளினார்.

குறிப்பு

குமரகுருபரரின் பாடல்கள் கற்பார், கேட்பார் மனத்தைத் தன்பால் ஈர்த்துக் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்க வைக்கும் தனித்துவம் உடையவை. சந்தம், மோனை, எதுகை முதலிய தொடையும், தொடை விகற்பமும் அணிநலமும் அமைந்திருப்பது குமரகுருபரர் பாடலின் தனிச் சிறப்பு எனலாம். குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கம் மக்களுக்கான நெறிகளை மிகச்சிறப்பாக எடுத்துரைக்கும் நூலாகும். உலக மக்கள் தம்மை விடச் செல்வத்திற் குறைந்திருப்பாரைப் பார்த்து, தமது உடைமை அம்மா பெரிது என்று அகம் மகிழல்வேண்டும். ஆனால் தம்மைவிட மிகுதியாகப் படித்திருப்பவர்களைப் பார்த்து, நாம் படித்த படிப்பெல்லாம் இவர் படிப்புக்கு எந்த அளவின் தன்மையது என்று வருந்திச் செருக்கினை விட்டொழித்தல் வேண்டும் என்னும் கருத்தானது மிகச் சிறப்புடைத்தாம். இதனை விளக்கும் பாடல்,

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க - தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று

குறிப்பு

என்பதாகும். இந்நூலின் பிறிதோர் பாடல் தெய்வம் எனப்படுவோர் யாவர் என விளக்கி நிற்கும். நல்லொழுக்கமுடைய பெண்ணுக்கு அவள் கணவனே தெய்வமாவான், புதல்வர்களுக்கு அவர்கள் தாய் தந்தையர்களே தெய்வமாவார்கள், நல்லொழுக்கமுடைய மாணவர்களுக்கு அவர்கள் ஆசிரியர்களே தெய்வமாவார், இவர்கள் நீங்கலாக மற்ற எல்லோருக்கும் அரசனே தெய்வமாவான். இதனை,

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும் - அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை

என்ற பாடலானது விளக்கி நிற்கின்றது. இவ்வாறு தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் சமயத்திற்கும் அரும்பணி ஆற்றிய குமரகுருபரர் ஒரு வைகாசித் திங்கள் தேய்பிறைப் பக்கத்து மூன்றாம் நாளில் முக்தி அடைந்தார்.

**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் எழுந்த சூழல்:**

முருகப்பெருமான் திருவருளால் குமரகுருபரர் ‘மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்’ பாடினார். இதனை அறிந்த திருமலை நாயக்கர் அப்பிள்ளைத்தமிழை மீனாட்சியம்மை திருமுன் அரங்கேற்றம் செய்யச் செய்தார்.அப் பிள்ளைத்தமிழின் வருகைப் பருவத்து ஒன்பதாவது செய்யுளாகிய ‘தொடுக்குங் கடவுட் பழம் பாடற் தொடையின் பயனே’ என்று தொடங்குஞ் செய்யுளுக்குக் குமரகுருபரர் பொருளுரைக்கும் பொழுது மீனாட்சியம்மையார் அருச்சகரின் பெண்போல் தோற்றம் கொண்டு திருமலைநாயக்கர் கழுத்தில் அணிந்திருந்த மணிமாலையைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினார். இத்தகைய நிகழ்வானது குமரகுருபரரின் புலமைத்திறத்ததையும் தமிழின் மேன்மையையும் எடுத்துரைக்கின்றது.

**பிள்ளைத் தமிழ் இலக்கணமும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும்:**

குமரகுருபரர் பாடியருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், பிள்ளைத்தமிழ் நூல்களிற் சிறந்தது எனப் போற்றப் பெறுகிறது. பிள்ளைத்தமிழ் என்பது தமிழ்மொழியில் அமைந்துள்ள

குறிப்பு

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். இது தெய்வங்கள், மக்களுள் உயர்ந்தோர், அரசர்கள், வள்ளல்கள் போன்றோருள் ஒருவரை பிள்ளையாகப் பாவித்துத் பத்துப் பருவங்களை அமைத்து நூறு ஆசிரிய விருத்தத்தால் பாடப் பாடப்படுவதாகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஒவ்வொன்றும் பத்துப் பத்துப் பருவங்களுடையன. முதல் ஏழுபருவங்கள் இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவாக அமையும். ஆண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதி மூன்று பருவங்கள் சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆகும். பெண்பாற்பிள்ளைத் தமிழின் இறுதி மூன்று பருவங்கள் அம்மானை, நீராடல், ஊசல் என்பதாய் அமையும். காப்புப் பருவம் இரண்டாம் திங்களிற் பிள்ளையைக் காக்க என்று காத்தற் கடவுள் முதலிய தேவர்களை வணங்கிப் பாடுவதாகும். செங்கீரைப் பருவம் ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்ந்து முகம் அசைய ஆடுதல்ஆகும். இது ஐந்தாம் திங்களில் நிகழும். தாலப் பருவம் என்பது தாலாட்டைக் கவனிக்கும் பருவம். ஏழாந்திங்களில் நிகழ்வதாகும். எட்டாந் திங்களில் நிகழும் என்று கூறுவாரும் உண்டு. சப்பாணிப் பருவம் இருகைகளை ஒன்றாகச் சேர்த்துக் கொட்டும் பருவம். இது ஒன்பதாந் திங்களில் நிகழும். முத்தப் பருவம் என்பது குழந்தையிடம் முத்தம் தருமாறு தாய் தந்தை முதலியோர் வேண்டி நிற்றல். இது பதினொன்றாந் திங்களில் நிகழ்வதாய் பாடப்பெறும். வருகைப் பருவம் சிறுநடை எய்தும் பருவம். இது பதின்மூன்றாந் திங்களில் நிகழும். பன்னிரண்டாம் திங்கள் எனவும் கூறுவர். அம்புலிப் பருவம் வானிலுள்ள நிலவினை குழந்தையுடன் விளையாடுதற்குச் செவிலித் தாயார் முதலியோர் அழைக்கின்ற பருவம். பதினைந்தாந் திங்களில் நிகழ்வது. பதினெட்டாந் திங்களில் நிகழ்வது என்பாரும் உண்டு. அம்மானைப் பருவம் குழந்தையை நோக்கி முத்தம்மானை முதலிய அம்மானையை எடுத்து ஆடியருள வேண்டுமெனக் கூறும் பருவம். நீராடற் பருவம் பிள்ளையை நோக்கி மகளிர்கள் ஆற்று வெள்ளத்தில் நீராட வேண்டிக் கூறும் பருவம். ஊசற் பருவம் குழந்தையை ஊஞ்சலில் ஏற்றி மகளிர் அவ் ஊஞ்சலை ஆடச் செய்கின்ற பருவம். இறுதியில் உள்ள மூன்று பருவங்களும் ஐந்து ஆண்டு முதல் ஒன்பது ஆண்டு வரை நிகழுஞ் செயல்களாய்ப்

பாடப்பெறும்.மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ் இவ்வாறு பத்துப் பருவங்களைப் பின்பற்றிப் பாடப்பட்டதாகும்.

**குறிப்பு**

இந்நூலின் காப்புப் பருவத்தில் மீனாட்சி அம்மையைத் திருமகள் காத்தல் வேண்டும் எனப் பாடும் பாடல் சிறந்த கற்பனை நயம் அமைந்ததாகும். திருமால் மார்பில் வீற்றிருக்கும் திருமகளை அவர் மார்பில் இருக்கும் கௌத்துவ மணி பருக்கைக் கல்லாக உறுத்த பஞ்சினும் மெல்லிய சிற்றடி துன்புற வருந்துகிறாள். அம்மணியின் ஒளியோ திருமகள் உடலையும் வருத்தியது.வருத்தம் தீர நிழல் தேடி துளசிமாலையின் தண்ணிழலில் தங்கினள் என்பது சிறந்த கற்பனை நயம் ஆகும்.

வருகைப்பருவத்தில் இடம்பெற்றுள்ள 'தொடுக்குங் கடவுள்' என்ற பாடலை ஆசிரியர் அரங்கேற்றம் செய்யும் பொழுது மீனாட்சியம்மையே சிறுமியுருக் கொண்டு வந்து செவிமடுத்தார் எனில் அதன் சொற்சுவை, பொருட்சுவை பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? பழம் பாடல் தொடையன் பயனே! தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே! தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே! இளமென் பிடியே! உயிரோவியமே! வஞ்சிக் கொடியே! மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே! எனும் விளிகள் உவமையாகு பெயராய் அமைந்து மீனாட்சி அம்மையின் தெய்வத் திருவருட் சிறப்புகளை விளக்கி நிற்கின்றன. இப்பாடலில் "அகந்தைக் கிழங்கை யகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக் கோயிலுக்கு ஏற்றிய விளக்கே என்ற அடி சிந்தித்தற்குரித்தாம். அகந்தை என்பது ஆணவம் என்று பொருள்படும். அது 'நான்' என்றும் 'எனது' என்று கருதி மயங்குவது ஆகும். இவற்றை வெல்பவர்களே வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகுவர் எனக் குறிப்பார் வள்ளுவர். இதனை,

> யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்

என்னும் குறள் விளக்கி நிற்கும். இத்தகைய நான், எனது என்னும் உணர்வுகள் மக்கள் உள்ளமாகிய பள்ளத்தில் வேரூன்றிக் கிழங்குபோற் பருத்துக் கிடப்பதால் அதனைக் 'கிழங்கு' என்றும் அக்கிழங்கினை வேருடன் பறித்தெறிந்தவரே சிறந்த தொண்டராவர் என்றும் அவருள்ளமே மீனாட்சி அம்மன் உறையும் திருக்கோயில்

என்றும் குமரகுருபரர் குறிப்பது அவர்தம் அறிவு நலத்திற்குச் சிறந்த சான்றாம்.

அம்மானைப் பருவத்தில் இடம்பெற்ற பாடலில் அம்மை முத்தாற் செய்த அம்மானையை எடுத்து வானில் எறிகிறாள். அது மணப்பந்தரில் சிவபிரான்மேல் அம்மையார் வெள்ளிய அமுதத்திரளையை எறிவதுபோலத் தோன்றுகின்றது. அவ் அம்மானை மீனாட்சி அம்மை செங்கையில் எடுத்தபோது சிவப்பு நிறமாகவும் கண்ணால் நோக்கியபோது கருப்பு நிறமாகவும் நகைத்தபோது வெண்ணிறமாகவும் காட்சி அளித்தது. அக் காட்சியானது மக்கள் உயிர்க்குரிய இயற்கைக் குணத்தை இராசதம், தாமதம், சாத்துவிகம் என்ற முக்குணங்களும் பற்றுவதுபோலும் உள்ளது எனக் கற்பனை செய்வார் குமரகுருபரர். குமரகுருபரர்,தமிழின்பால் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். இதனை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் பல இடங்களில் தமிழை சிறப்பித்துக் கூறியமையால் அறியலாம். மீனாட்சி அம்மையை முது தமிழ் நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே, தமிழொடு பிறந்து பழமதுரையில் வளர்ந்தகொடி, மதுரம் ஒழுகிய தமிழினியல் பயின் மதுரை மரகதவல்லி என அழைப்பதாய் அமைந்த தொடர்கள் சிறந்த சான்றுகளாகும். காப்புப் பருவத்தில் திருமாலைப் “பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே” எனச் சிறப்பிப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தமிழைக் குறிக்கும் இடமெல்லாம் பைந்தமிழ், மதுரம் ஒழுகிய தமிழ், தென்னன் தமிழ், தெய்வத் தமிழ், செஞ்சொற்றமிழ் பசுந்தமிழ் எனச் சிறப்பிப்பதும் இவர்தம் தமிழ் உணர்விற்குச் சான்றாகும்.

**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - வருகைப் பருவம்**

**தமிழ்க்கூட லுங்கொண்ட காமர்பூங் கொடியே வருக:**

அழகிய சிலம்பணியானது ஒலியினைச் செய்யவும் மணிகளின் ஒலியமைந்த கிண்கிணி இரைகின்ற ஒலியைச் செய்யவும் சிறிய அடிகளைப் பெயர்த்து வைத்து மீனாட்சியம்மை நடக்கும்பொழுது அம்மையின் செம்பஞ்சுக் குழம்பு தோய்ந்த அடித்தழும்பானது, பூமியில் வந்திருக்கும் தேவலோகப் பெண்கள் தங்கள் மேகம் போன்ற கூந்தலில் அணிந்துள்ள இளம்பிறையிலும், சிவபெருமான் சடைமுடியில் அணிந்துள்ள இளம்பிறையிலும் தோன்றுகின்றது. மேலும் அழகிய

**குறிப்பு**

சிலம்பினின்று வெளியாகும் மெல்லியகுரலைக் கருத்தில் கொண்டோ அல்லது அம்மையின் தளர்கின்ற இளநடையைக் கருத்தில் கொண்டோ அம்மையின் சிவந்த சிலம்பணிந்த பாதத்தைப்பற்றி வருகின்ற தெய்வப்பெண்கள் கூட்டத்தினுடன் சிறகுகளையுடைய அன்னமும் பின்றொடர்ந்து வருகின்றது. இத்தகைய சிறப்புகளுடன் இடையில் மணிமேகலை என்னும் அரையணி ஒலிக்க, எனது மனமாகிய தாமரை மலரையும் அழகிய சொல்லையுடைய தமிழ்மொழி பழகும் கூடல்நகரையும் திருக்கோயில்களாகக் ˙கொண்டிருக்கும், அழகிய மலர்க்கொம்பு போன்றவளே! வருக, கற்பகக்காடு போலக் கடம்பவனத்தில் நிறைந்து விளங்குகின்ற கயற்கண் அம்மையே! வருக எனப் போற்றுகின்றார் குமரகுருபரர்.

˙சிலம் போலிட அரிக்குரற்கிண்கிணி
அரற்றுசெஞ் சீறடிபெயர்த்து
அடியிடுந் தொறும்நின் அலத்தகச் சுவடுபட்டு
அம்புவி அரம்பையர்கடம்

மஞ்சு துஞ் சளகத் திளம்பிறையும் எந்தைமுடி
வளரிளம் பிறையுநாற
மணிநூ புரத்தவிழும் மென்குரற்கோவசையும்
மடநடைக் கோதொடர்ந்துன்

செஞ்சிலம் படிபற்று தெய்வக் குழாத்தினொடு
சிறையோதி மம்பின்செலச்
சிற்றிடைக் கொல்கிமணி மேகலை இரங்கத்
திருக்கோயில் எனவெனெஞ்சக்

கஞ்சமுஞ் செஞ்சொல் தமிழ்க்கூட லுங்கொண்ட
காமர்பூங் கொடிவருகவே

குறிப்பு

கற்பகா டவியில்கடம்பா டவிப்பொலி

கயற்கணா யகிவருகவே 1

**தொண்டர்மனப் பொற்கோயில் குடிகொண்ட மாணிக்கவல்லியே வருக:**

ஆழமான பெரிய திருப்பாற்கடல் வயிறு வருந்திப் பெற்ற கரிய கூந்தலையுடைய இலக்குமியும், இனிமை சொரியும் தமிழ் மொழிக் கடலின் நூலாகிய துறையில் மூழ்கும் மெல்லிய நடையையுடைய கூந்தலைக் கொண்ட பெண் யானையாகிய கலைமகளும், அறுகால்களையுடைய வண்டுகள் பொருந்தும் தாமரை மலராகிய வீட்டில்புகுந்து கொள்ள, சிவமணம் கமழும்படி விரிந்த தொண்டர்களுடைய மனமாகிய அகன்ற மதியாகிய மலர்பூத்த தடாகம் என்னும் அழகிய கோயிலில் குடிபுகுந்துள்ள மாணிக்க வல்லியே!, வில்லைப்பிடித்த மன்மதன் பிறையையொத்த நெற்றியையுடைய தன் மனைவியாகிய இரதியுடன் பலவகையான பழைய வடிவங்களைத் தாங்கிப் போர்புரிவதற்கு எடுத்திருக்கும் பல விற்களைப் போல, ஆகாய உச்சியை எட்டிப் பூங்கொத்துடன் தலை வணங்கி நிற்கின்ற, சர்க்கரையுண்டாகின்ற கரும்பாகிய இனியகாடுகளையுடைய மதுரையில் எழுந்தருளியிருக்கின்ற தோகையுடைய சிறந்த மயில் போன்றவளே! வருக, கற்பகாடவியில் கடம்பாடவிப் பொலி கயற்கண் நாயகி வருக!! என சிறப்பித்துரைக்கின்றார் குமரகுருபரர்.

குண்டுபடு பேரகழி வயிறுளைந் தீன்றபைங்

கோதையும் மதுரமொழுகும்

கொழிதமிழ்ப் பனுவல் துறைப்படியும் மடநடைக்

கூந்தலம் பிடியும் அறுகால்

வண்டுபடு முண்டக மனைக்குடி புகச்சிவ

மணங்கமழ விண்டதொண்டர்

மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட

மாணிக்க வல்லிவில்வேள்

**குறிப்பு**

துண்டுபடு மதிநுதல் தோகையொடும் அளவில்பல
தொல்லுரு எடுத்தமர்செயுந்
தொடுசிலை எனக்ககன முகடுமுட்டிப்பூந்
துணர்த்தலை வணங்கிநிற்கும்

கண்டுபடும கன்னல்பைங் காடுபடு கூடற்
கலாபமா மயில்வருகவே
கற்பகா டவியில் கடம்பா டவிப்பொலி
கயற்கணா யகிவருகவே 2

**கூடாரை வென்று திக்கு விசயம் கண்ட கூடல் அரசியே வருக:**

முயற்கறை பரவிய இளஞ்சந்திரன் தவழ்கின்ற கருப்பம் தாங்கும் பலாமரத்தின் முட்கள் நிறைந்த குடம்போன்ற பழத்துடன், வளைந்த பெரிய தென்னையின் மூன்று பக்கம் புடைத்திருக்கின்ற தேங்காய் சிந்தும்படி, தாக்கி நீரைப்பருகி இருளடைந்துள்ள மேகம் பரவி நின்ற மருத நிலத்தின் பெரிய சோலைகள் அல்லாமலும், மேல் ஏழு உலகங்களையும் ஒரு சேர வருத்தி வெளியில் மூடியுள்ள அண்டச் சுவர்த்தலத்தையும் தகர்த்து, வெளியிலுள்ள பெரும்புறக் கடல் நீரையும் உட்கொண்டு கலக்கிச் செயலிற் பரந்த கடல்போன்ற சேனைகள் போர்க்களத்தை இடமாகக் கொள்ளும்படி, தாயாகிய நீ திசையெங்கும் வெற்றியடைந்து வந்தாய்! அவ்வாறு வந்த நாளில், தெய்வத்தன்மையுடைய கயல்மீன் கொடிகளைத் திக்குகள் எங்கும் எடுத்தாற்போல எட்டுத்திக்கும் முட்டும்படி குதித்துக் கயல்மீன்கள்பாய்கின்ற, வரம்புகள் நெருங்கிய பெரிய வயல் இடங்களையுடைய தமிழ் வளர்ந்த மதுரைக் காவலனான பாண்டியன் மகளே! வருக, கற்பகாடவியில் கடம்பாவிப் பொலி கயற்கண் நாயகி வருக!! என வேண்டி நிற்கின்றார் குமரகுருபரர்.

குறிப்பு

முயல்பாய் மதிக்குழவி தவழ்சூல் அடிப்பலவின்
முட்பொதி குடக்கனியொடு
முடவுத் தடந்தாழை முப்புடைக் கனிசிந்த
மோதிநீர் உண்டிருண்ட

புயல்பாய் படப்பைத் தடம்பொழில்கள் அன்றியேழ்
பொழிலையும் ஒருங்கலைத்துப்
புறமூடும் அண்டச் சுவர்த்தலம் இடித்தப்
புறக்கடல் மடுத்துழக்கிச்

செயல்பாய்கடற்றானை செங்களங்கொள அம்மை
திக்குவிச யங்கொண்டநாள்
தெய்வக் கயற்கொடிகள்திசைதிசை எடுத்தெனத்
திக்கெட்டு முட்டவெடிபோய்க்

கயல்பாய் குரம்பணை பெரும்பணைத் தமிழ்மதுரை
காவலன் மகள்வருகவே
கற்பகா டவியில் கடம்பாடவிப்பொலி
கயற்கணா யகிவருகவே 3

**மழவிளங் களிறீன்ற பிடியே வருக:**

மணி வடங்கள் பொருந்திய உன் இரண்டு கொங்கைகளாகிய குடங்கள் சொரிகின்ற இனிய அமுதைப்பருகி, வாயின் கடையில் ஒழுகும் வெள்ளை அருவி என்னும்படி நிலவைச்சொரியும் கிம்புரிப் பூண் அணிந்த தந்தங்களினால், மலையை இடித்துப் பெருமையான பொன்னாகிய செந்தூளை மத்தகத்தில் அணிவதைப் போலப் பூசி, ஏழு கடலையும் பெரிய கையால் முகந்து குறைத்துப் பின் மத நீரினால் நிறைத்து, வளைவுற்ற சந்திரனை அங்குசப்படை என்று கூற, வானத்து உச்சியைத் துதிக்கையால் தடவி, நட்சத்திரங்கள் ஆகிய முத்துக்களைப் பதித்த முகபடாம் என்று சொல்லும்படி ஏழு முகில்கள் என்ற கூட்டங்களை நெற்றியில் சுற்றும், மதம் பொருந்திய சிறிய கண்களையும் பெரியகொலைத் தொழிலையுமுடைய மிகவும் இளைய யானையை (பிள்ளையாரை)ப் பெற்ற பெண் யானையே! வருக, கற்பகாடவியில்

கடம்பாடவிப் பொலி கயற்கண் நாயகி! வருக என போற்றியுரைக்கின்றார் குமரகுருபரர்.

குறிப்பு

வடம்பட்ட நின்துணைக் கொங்கைக் குடங்கொட்டு
மதுரவமு துண்டுகடைவாய்
வழியும்வெள் ளருவியெனநிலவுபொழி கிம்புரி
மருப்பிற் பொருப்பிடித்துத்

தடம்பட்ட பொற்றாது சிந்துரங் கும்பத்
தலத்தணிவ தொப்பவப்பிச்
சலராசி ஏழுந் தடக்கையின் முகந்துபின்
தானநீ ரால்நிரப்பி

முடம்பட்ட மதியங் குசப்படை எனக்ககன
முகடுகை தடவிஉடுமீன்
முத்தம் பதித்திட்ட முகபடாம் எனவெழு
முகிற்படாம் நெற்றிசுற்றும்

கடம்பட்ட சிறுகட் பெருங்கொலைய மழவிளங்
களிறீன்ற பிடிவருகவே
கற்பகா டவியில் கடம்பாடவிப்பொலி
கயற்கணா யகிவருகவே 4

**தடமலர்க் கடிபொழிற் கூடல்வளர் கவுரியன் மகளே வருக:**

தேன் வழிகின்ற தாமரைமலர் போன்ற பொன்மயமான சிறிய பாதங்கட்கு ஊட்டப்படுகின்ற செம்பஞ்சுக் குழம்பினால், தெளிந்த அமுதை அள்ளி எறியும்மிக இளைய வெள்ளிய சந்திரனானது சிவந்த நிறமதியாக, கரையை மோதும் ஆகாயத்தில் ஒழுகுகின்ற உயர்வானஅலைகளையுடைய பெரிய கங்கையாறு சோணை நதியாக, சிவபெருமானுடைய மகுடமான சடையில் பாதத்தின் சுவடுபடஅழுத்துகின்ற பச்சை நிறமுள்ள பூங்கொம்பே!, ஒளியை வீசுகின்றநட்சத்திரங்கள் நடக்கின்ற பெரிய வானத்தில் செல்லுகின்ற கடவுள் வேழத்தின் மத்தகத்து வீற்றிருக்கும் சேயிழையாகிய இந்திராணிக்கும், பச்சைநிறமான கமுகமரம் வெண்கவரி வீசுவதற்கு

குறிப்பு

நிற்பது போல உயர்ந்திருக்கும் மணக்காற்று வீசுகின்ற அகன்ற பூக்களையுடைய சிறந்த சோலைகளும் சூழ்ந்த கூடலில் வளர்கின்ற பாண்டியன் மகளே! வருக, கற்பகாடவியில் கடம்பாடவிப் பொலிகயற்கண்நாயகி வருக!! எனத் தொழுது நிற்கின்றார் குமரகுருபரர்.

தேனொழுகுகஞ்சப் பொலன்சீ றடிக்கூட்டு
செம்பஞ்சி யின்குழம்பால்
தெள்ளமு திறைக்கும் பசுங்குழவி வெண்திங்கள்
செக்கர்மதி யாக்கரைபொரும்

வானொழுகு துங்கத் தரங்கப் பெருங்கங்கை
வாணிநதி யாச்சிவபிரான்
மகுடகோ டீரத் தடிச்சுவ டழுத்தியிடு
மரகதக் கொம்புகதிர்கால்

மீனொழுகு மாயிரு விசும்பிற் செலுங்கடவுள்
வேழத்தின் மத்தகத்து
வீற்றிருக் குஞ்சே யிழைக்கும் பசுங்கமுகு
வெண்கவரி வீசும்வாசக்

கானொழுகு தடமலர்க் கடிபொழிற் கூடல்வளர்
கவுரியன் மகள்வருகவே
கற்பகா டவியில் கடம்பாடவிப்பொலி
கயற்கணா யகிவருகவே 5

**பயிற்சி வினாக்கள்:**

1.குமரகுருபரர் வாழ்வினையும் இலக்கியப் பணியினையும் எடுத்தெழுதுக.

**குமரகுருபரர்:**

குமரகுருபரர் பாண்டி நாட்டில் அமைந்துள்ள திருவைகுண்டத்திலே சைவவேளாளர் மரபில் சண்முகசிகாமணிக் கவிராயர் என்பாருக்கும் அவர்தம் அருமைத் துணைவியார் சிவகாமி அம்மையாருக்கும் அருமை மகவாய் அவதரித்தவர். பிறந்து மொழி

குறிப்பு

பயின்ற காலம் தொடங்கி சிறந்து இறைவன் சேவடியே சிந்தித்த இத் தம்பதியருக்கு மகனாகிய குமரகுருபரர் பிறந்து ஐந்து ஆண்டுகள் கடந்தும் பேசாது இருந்தார். குமரகுருபரர் பேசாதிருப்பதைக் கண்ட பெற்றோர், திருச்செந்தூர் சென்று முருகக் கடவுளின் அருள் வேண்டி நின்றனர். செந்தூர் முருகன் தன் ஞானவேலால் குமரகுருபரரின் நாவில் பிரணவ மந்திரமாகிய ‘ஓம்’ என்பதனை எழுத ஊமை நீங்கிப் பாடலுற்றார். சைவ சித்தாந்த சாத்திர சாரமாய் விளங்கும் ‘கந்தர் கலிவெண்பா’ என்னும் பாடலை செந்தூர் பெருமான்மீது அருளிச்செய்தனர்.

“பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்”

எனத் தொடங்கும் கந்தர் கலிவெண்பாவில் முருகனை வணங்கினால் பெரும் பேறுகளைக் குறிப்பிடுவார் குமரகுருபரர். அத்தகைய பேறுகள்

“ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவதானமும் சீர்ப்
பேசும் இயல்பல் காப்பியத் தொகையும் - ஓசை
எழுத்து முதலாம் ஐந்திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்’ புலமை பாலித்து - ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மை விடுத்து
ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்”

என்பதாய் அமையும். மேற்கண்ட பாடலைப் பாடி குமரகுருபரர் நிறைவு செய்த உடன் முருகப்பெருமான் அவர் கனவில் தோன்றி ‘நீ குருபரனாகுக’ என்று அருளியதால், அன்று முதல் குமரகுருபரர் எனப்பட்டார்.

குறிப்பு

குமரகுருபரர் தருமபுரத்தில் ஞான குருவாய் எழுந்தருளியிருந்த மாசிலாமணித் தேசிகரிடம் ஞானம் பெற விரும்பிச் சென்றார். அவர்தம் ஆணையின்படி சிதம்பரம் சென்றார். அவ்வாறு செல்லும் வழியில் வைத்தீசுவரன் கோவிலில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் குமரக்கடவுள்மீது 'முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' என்னும் நூலைப் பாடியருளினார். சிதம்பரம் ஆடல்வல்லான்மீது 'சிதம்பர மும்மணிக் கோவை' 'சிதம்பரச் செய்யுட்கோவை' என்னும் இரண்டு நூல்களையும், அம்பிகைமீது, 'சிவகாமியம்மை இரட்டைமணிமாலை' என்னும் நூலையும் பாடினார். குமரகுருபரரை தருமபுரம் மாசிலாமணி தேசிகர் தனது மாணவனாய் ஏற்றுக் கொண்டு ஞான உபதேசம் நல்கினார். தனக்கு ஞானம் போதித்த மாசிலாமணி தேசிகர் மீது 'பண்டார மும்மணிக் கோவை' என்னும் நூலை பாடியருளினார். பின் வடநாடு சென்று காசிவிசுவநாதப் பெருமான்மீது 'காசிக்கலம்பகம்' பாடினார். அந்நாட்டு மகம்மதிய அரசனிடம் மடம் அமைக்க இடம்பெற விரும்பினார். ஆனால் அவன் அதற்கு இசைவு தராமையால் கலைமகள்மீது 'சகலகலாவல்லிமாலை' பாடி இந்துஸ்தான் மொழியையறிந்து, சிங்கத்தின் மீது அமர்ந்து சென்று அரசனிடம் இடம் பெற்று சைவ மடங்களையும் கேதாரநாதர் ஆலயத்தையும் நிறுவினார். குமரகுருபரரின் படைப்புகளுள் 'மீனாட்சியம்மை குறம்' 'மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை' 'மதுரைக்கலம்பகம்' 'நீதிநெறிவிளக்கம்' போன்றவையும் குறிப்பிடத்தக்கவையாகும். திருவாரூர் சென்ற குமரகுருபரர் தியாகராசப் பெருமான் மேல் 'திருவாரூர் நான்மணிமாலை' என்னும் நூலையும் பாடியருளினார்.

குமரகுருபரரின் பாடல்கள் கற்பார், கேட்பார் மனத்தைத் தன்பால் ஈர்த்துக் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்க வைக்கும் தனித்துவம் உடையவை. சந்தம், மோனை, எதுகை முதலிய தொடையும், தொடை விகற்பமும் அணிநலமும் அமைந்திருப்பது குமரகுருபரர் பாடலின் தனிச் சிறப்பு எனலாம். குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கம் மக்களுக்கான நெறிகளை மிகச்சிறப்பாக எடுத்துரைக்கும் நூலாகும். உலக மக்கள் தம்மை விடச் செல்வத்திற் குறைந்திருப்பாரைப் பார்த்து,தமது உடைமை அம்மா பெரிது என்று அகம் மகிழல்வேண்டும். ஆனால் தம்மைவிட மிகுதியாகப்

குறிப்பு

படித்திருப்பவர்களைப் பார்த்து, நாம் படித்த படிப்பெல்லாம் இவர் படிப்புக்கு எந்த அளவின் தன்மையது என்று வருந்திச் செருக்கினை விட்டொழித்தல் வேண்டும் என்னும் கருத்தானது மிகச் சிறப்புடைத்தாம். இதனை விளக்கும் பாடல்,

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க - தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று

என்பதாகும். இந்நூலின் பிறிதோர் பாடல் தெய்வம் எனப்படுவோர் யாவர் என விளக்கி நிற்கும். நல்லொழுக்கமுடைய பெண்ணுக்கு அவள் கணவனே தெய்வமாவான், புதல்வர்களுக்கு அவர்கள் தாய் தந்தையர்களே தெய்வமாவார்கள், நல்லொழுக்கமுடைய மாணவர்களுக்கு அவர்கள் ஆசிரியர்களே தெய்வமாவார், இவர்கள் நீங்கலாக மற்ற எல்லோருக்கும் அரசனே தெய்வமாவான். இதனை,

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும் - அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை

என்ற பாடலானது விளக்கி நிற்கின்றது. இவ்வாறு தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் சமயத்திற்கும் அரும்பணி ஆற்றிய குமரகுருபரர் ஒரு வைகாசித் திங்கள் தேய்பிறைப் பக்கத்து மூன்றாம் நாளில் முக்தி அடைந்தார்.

**1 பிள்ளைத்தமிழ் இலக்கணமும் மினாட்சியம்மை பிள்ளைத் தமிழும் என்பது குறித்துக் கட்டுரைக்க.**

பிள்ளைத் தமிழ் இலக்கணமும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும்:

குமரகுருபரர் படியருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், பிள்ளைத்தமிழ் நூல்களிற் சிறந்தது எனப் போற்றப் பெறுகிறது.பிள்ளைத்தமிழ் என்பது தமிழ்மொழியில் அமைந்துள்ள

குறிப்பு

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும்.இது தெய்வங்கள், மக்களுள் உயர்ந்தோர்,அரசர்கள், வள்ளல்கள் போன்றோருள் ஒருவரை பிள்ளையாகப் பாவித்துத் பத்துப் பருவங்களை அமைத்து நூறு, ஆசிரியவிருத்தத்தால் பாடப் பாடப்படுவதாகும்.இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஒவ்வொன்றும்பத்துப் பத்துப் பருவங்களுடையன. முதல் ஏழுபருவங்கள் இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவாக அமையும். ஆண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதி மூன்று பருவங்கள் சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆகும். பெண்பாற்பிள்ளைத் தமிழின் இறுதி மூன்று பருவங்கள் அம்மானை, நீராடல், ஊசல் என்பதாய் அமையும். காப்புப் பருவம் இரண்டாம் திங்களிற் பிள்ளையைக் காக்க என்று காத்தற் கடவுள் முதலிய தேவர்களை வணங்கிப் பாடுவதாகும். செங்கீரைப் பருவம் ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்ந்து முகம் அசைய ஆடுதல்ஆகும். இது ஐந்தாம் திங்களில் நிகழும். தாலப் பருவம் என்பது தாலாட்டைக் கவனிக்கும் பருவம். ஏழாந்திங்களில் நிகழ்வதாகும். எட்டாந் திங்களில் நிகழும் என்று கூறுவாரும் உண்டு. சப்பாணிப் பருவம் இருகைகளை ஒன்றாகச் சேர்த்துக் கொட்டும் பருவம். இது ஒன்பதாந் திங்களில் நிகழும். முத்தப் பருவம் என்பது குழந்தையிடம் முத்தம் தருமாறு தாய் தந்தை முதலியோர் வேண்டி நிற்றல். இது பதினொன்றாந் திங்களில் நிகழ்வதாய் பாடப்பெறும். வருகைப் பருவம் சிறுநடை எய்தும் பருவம். இது பதின்மூன்றாந் திங்களில் நிகழும். பன்னிரண்டாம் திங்கள் எனவும் கூறுவர். அம்புலிப் பருவம் வானிலுள்ள நிலவினை குழந்தையுடன் விளையாடுதற்குச் செவிலித் தாயார் முதலியோர் அழைக்கின்ற பருவம். பதினைந்தாந் திங்களில் நிகழ்வது. பதினெட்டாந் திங்களில் நிகழ்வது என்பாரும் உண்டு. அம்மானைப் பருவம் குழந்தையை நோக்கி முத்தம்மானை முதலிய அம்மானையை எடுத்து ஆடியருள வேண்டுமெனக் கூறும் பருவம். நீராடற் பருவம் பிள்ளையை நோக்கி மகளிர்கள் ஆற்று வெள்ளத்தில் நீராட வேண்டிக் கூறும் பருவம். ஊசற் பருவம் குழந்தையை ஊஞ்சலில் ஏற்றி மகளிர் அவ் ஊஞ்சலை ஆடச் செய்கின்ற பருவம். இறுதியில் உள்ள மூன்று பருவங்களும் ஐந்து ஆண்டு முதல் ஒன்பது ஆண்டு வரை நிகழுஞ் செயல்களாய்ப்

**குறிப்பு**

பாடப்பெறும்.மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ் இவ்வாறு பத்துப் பருவங்களைப் பின்பற்றிப் பாடப்பட்டதாகும்.

இந்நூலின் காப்புப் பருவத்தில் மீனாட்சி அம்மையைத் திருமகள் காத்தல் வேண்டும் எனப் பாடும் பாடல் சிறந்த கற்பனை நயம் அமைந்ததாகும். திருமால் மார்பில் வீற்றிருக்கும் திருமகளை அவர் மார்பில் இருக்கும் கௌத்துவ மணி பருக்கைக் கல்லாக உறுத்த பஞ்சினும் மெல்லிய சிற்றடி துன்புற வருந்துகிறாள். அம்மணியின் ஒளியோ திருமகள் உடலையும் வருத்தியது.வருத்தம் தீர நிழல் தேடி துளசிமாலையின் தண்ணிழலில் தங்கினள் என்பது சிறந்த கற்பனை நயம் ஆகும்.

வருகைப்பருவத்தில் இடம்பெற்றுள்ள ‘தொடுக்குங் கடவுள்’ என்ற பாடலை ஆசிரியர் அரங்கேற்றம் செய்யும் பொழுது மீனாட்சியம்மையே சிறுமியுருக் கொண்டு வந்து செவிமடுத்தார் எனில் அதன் சொற்சுவை, பொருட்சுவை பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? பழம் பாடல் தொடையன் பயனே! தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே! தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே! இளமென் பிடியே! உயிரோவியமே! வஞ்சிக் கொடியே! மலயத்துவசன்பெற்ற பெருவாழ்வே! எனும் விளிகள் உவமையாகுபெயராய் அமைந்து மீனாட்சி அம்மையின் தெய்வத் திருவருட் சிறப்புகளை விளக்கி நிற்கின்றன. இப்பாடலில் “அகந்தைக் கிழங்கை யகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக் கோயிலுக்கு ஏற்றிய விளக்கே என்ற அடி சிந்தித்தற்குரித்தாம். அகந்தை என்பது ஆணவம் என்று பொருள்படும். அது ‘நான்’ என்றும் ‘எனது’ என்று கருதி மயங்குவது ஆகும். இவற்றை வெல்பவர்களே வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகுவர் எனக் குறிப்பார் வள்ளுவர். இதனை,

யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்

என்னும் குறள் விளக்கி நிற்கும்.இத்தகைய நான், எனது என்னும் உணர்வுகள் மக்கள் உள்ளமாகிய பள்ளத்தில் வேரூன்றிக் கிழங்குபோற் பருத்துக் கிடப்பதால் அதனைக் ‘கிழங்கு’ என்றும் அக்கிழங்கினை வேருடன் பறித்தெறிந்தவரே சிறந்த தொண்டராவர் என்றும் அவருள்ளமே மீனாட்சி அம்மன் உறையும் திருக்கோயில்

குறிப்பு

என்றும் குமரகுருபரர் குறிப்பது அவர்தம் அறிவு நலத்திற்குச் சிறந்த சான்றாம்.

அம்மானைப் பருவத்தில் இடம்பெற்ற பாடலில் அம்மை முத்தாற்செய்த அம்மானையை எடுத்து வானில் எறிகிறாள். அது மணப்பந்தரில் சிவபிரான்மேல் அம்மையார் வெள்ளிய அமுதத்திரளையை எறிவதுபோலத் தோன்றுகின்றது. அவ் அம்மானை மீனாட்சி அம்மை செங்கையில் எடுத்தபோது சிவப்பு நிறமாகவும் கண்ணால் நோக்கியபோது கருப்பு நிறமாகவும் நகைத்தபோது வெண்ணிறமாகவும் காட்சி அளித்தது. அக் காட்சியானது மக்கள் உயிர்க்குரிய இயற்கைக் குணத்தை இராசதம், தாமதம், சாத்துவிகம் என்ற முக்குணங்களும் பற்றுவதுபோலும் உள்ளது எனக் கற்பனை செய்வார் குமரகுருபரர். குமரகுருபரர்,தமிழின்பால் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். இதனை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் பல இடங்களில் தமிழை சிறப்பித்துக் கூறியமையால் அறியலாம். மீனாட்சி அம்மையை முது தமிழ் நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே, தமிழொடு பிறந்து பழமதுரையில் வளர்ந்தகொடி, மதுரம் ஒழுகிய தமிழினியல் பயின் மதுரை மரகதவல்லி என அழைப்பதாய் அமைந்த தொடர்கள் சிறந்த சான்றுகளாகும்.காப்புப் பருவத்தில் திருமாலைப் “பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே” எனச் சிறப்பிப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தமிழைக் குறிக்கும் இடமெல்லாம் பைந்தமிழ், மதுரம் ஒழுகிய தமிழ், தென்னன் தமிழ், தெய்வத் தமிழ், செஞ்சொற்றமிழ் பசுந்தமிழ் எனச் சிறப்பிப்பதும் இவர்தம் தமிழ் உணர்விற்குச் சான்றாகும்.

**2 மழகளிற்றைப் பெற்றவளாய் மீனாட்சியம்மையை விளித்துக் குமரகுருபரர் உரைப்பன யாவை?**

மணி வடங்கள் பொருந்திய உன் இரண்டு கொங்கைகளாகிய குடங்கள் சொரிகின்ற இனிய அமுதைப்பருகி, வாயின் கடையில் ஒழுகும் வெள்ளை அருவி என்னும்படி நிலவைச்சொரியும் கிம்புரிப் பூண் அணிந்த தந்தங்களினால், மலையை இடித்துப் பெருமையான பொன்னாகிய செந்தூளை மத்தகத்தில் அணிவதைப் போலப் பூசி, ஏழு கடலையும் பெரிய கையால் முகந்து குறைத்துப் பின் மத நீரினால் நிறைத்து, வளைவுற்ற சந்திரனை அங்குசப்படை என்று கூற, வானத்து உச்சியைத்

**குறிப்பு**

துதிக்கையால் தடவி, நட்சத்திரங்கள் ஆகிய முத்துக்களைப் பதித்த முகபடாம் என்று சொல்லும்படி ஏழு முகில்கள் என்ற கூட்டங்களை நெற்றியில் சுற்றும், மதம் பொருந்திய சிறிய கண்களையும் பெரியகொலைத் தொழிலையுமுடைய மிகவும் இளைய யானையை (பிள்ளையாரை)ப் பெற்ற பெண் யானையே! வருக, கற்பகாடவியில் கடம்பாடவிப் பொலி கயற்கண் நாயகி! வருக என போற்றியுரைக்கின்றார் குமரகுருபரர்.

வடம்பட்ட நின்துணைக் கொங்கைக் குடங்கொட்டு
மதுரவமு துண்டுகடைவாய்
வழியும்வெள் ளருவியெனநிலவுபொழி கிம்புரி
மருப்பிற் பொருப்பிடித்துத்

தடம்பட்ட பொற்றாது சிந்துரங் கும்பத்
தலத்தணிவ தொப்பவப்பிச்
சலராசி ஏழுந் தடக்கையின் முகந்துபின்
தானநீ ரால்நிரப்பி

முடம்பட்ட மதியங் குசப்படை எனக்ககன
முகடுகை தடவிஉடுமீன்
முத்தம் பதித்திட்ட முகபடாம் எனவெழு
முகிற்படாம் நெற்றிசுற்றும்

கடம்பட்ட சிறுகட் பெருங்கொலைய மழவிளங்
களிறீன்ற பிடிவருகவே
கற்பகா டவியில் கடம்பாடவிப்பொலி
கயற்கணா யகிவருகவே

**3. வழிபடும் அடியவர் உள்ளக் கோவிலில் உவந்துறையும் மீனாட்சியம்மையின் அருட்திறத்தினை விளக்குக.**

ஆழமான பெரிய திருப்பாற்கடல் வயிறு வருந்திப் பெற்ற கரிய கூந்தலையுடைய இலக்குமியும், இனிமை சொரியும் தமிழ் மொழிக் கடலின் நூலாகிய துறையில் மூழ்கும் மெல்லிய நடையையுடைய கூந்தலைக் கொண்ட பெண் யானையாகிய கலைமகளும், அறுகால்களையுடைய வண்டுகள் பொருந்தும் தாமரை மலராகிய

குறிப்பு

வீட்டில்புகுந்து கொள்ள, சிவமணம் கமழும்படி விரிந்த தொண்டர்களுடைய மனமாகிய அகன்ற மதியாகிய மலர்பூத்த தடாகம் என்னும் அழகிய கோயிலில் குடிபுகுந்துள்ள மாணிக்க வல்லியே!, வில்லைப்பிடித்த மன்மதன் பிறையையொத்த நெற்றியையுடைய தன் மனைவியாகிய இரதியுடன் பலவகையான பழைய வடிவங்களைத் தாங்கிப் போர்புரிவதற்கு எடுத்திருக்கும் பல விற்களைப் போல, ஆகாய உச்சியை எட்டிப் பூங்கொத்துடன் தலை வணங்கி நிற்கின்ற, சர்க்கரையுண்டாகின்ற கரும்பாகிய இனியகாடுகளையுடைய மதுரையில் எழுந்தருளியிருக்கின்ற தோகையுடைய சிறந்த மயில் போன்றவளே! வருக, கற்பகாடவியில் கடம்பாடவிப் பொலி கயற்கண் நாயகி வருக!! என சிறப்பித்துரைக்கின்றார் குமரகுருபரர்.

குண்டுபடு பேரகழி வயிறுளைந் தீன்றபைங்
கோதையும் மதுரமொழுகும்
கொழிதமிழ்ப் பனுவல் துறைப்படியும் மடநடைக்
கூந்தலம் பிடியும் அறுகால்

வண்டுபடு முண்டக மனைக்குடி புகச்சிவ
மணங்கமழ விண்டதொண்டர்
மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட
மாணிக்க வல்லிவில்வேள்

துண்டுபடு மதிநுதல் தோகையொடும் அளவில்பல
தொல்லுரு எடுத்தமர்செயுந்
தொடுசிலை எனக்ககன முகடுமுட்டிப்பூந்
துணர்த்தலை வணங்கிநிற்கும்

கண்டுபடும கன்னல்பைங் காடுபடு கூடற்
கலாபமா மயில்வருகவே
கற்பகா டவியில் கடம்பா டவிப்பொலி
கயற்கணா யகிவருகவே

**4.மீனாட்சியம்மை திக்குகளை வென்று நின்ற திறத்தினை விவரி?**

முயற்கறை பரவிய இளஞ்சந்திரன் தவழ்கின்ற கருப்பம் தாங்கும் பலாமரத்தின் முட்கள் நிறைந்த குடம்போன்ற பழத்துடன், வளைந்த

**குறிப்பு**

பெரிய தென்னையின் மூன்று பக்கம் புடைத்திருக்கின்ற தேங்காய் சிந்தும்படி, தாக்கி நீரைப்பருகி இருளடைந்துள்ள மேகம் பரவி நின்ற மருத நிலத்தின் பெரிய சோலைகள் அல்லாமலும், மேல் ஏழு உலகங்களையும் ஒரு சேர வருத்தி வெளியில் மூடியுள்ள அண்டச் சுவர்த்தலத்தையும்தகர்த்து, வெளியிலுள்ள பெரும்புறக் கடல் நீரையும் உட்கொண்டு கலக்கிச் செயலிற் பரந்த கடல்போன்ற சேனைகள் போர்க்களத்தை இடமாகக் கொள்ளும்படி, தாயாகிய நீ திசையெங்கும் வெற்றியடைந்து வந்தாய்! அவ்வாறு வந்த நாளில், தெய்வத்தன்மையுடைய கயல்மீன் கொடிகளைத் திக்குகள் எங்கும் எடுத்தாற்போல எட்டுத்திக்கும் முட்டும்படி குதித்துக் கயல்மீன்கள்பாய்கின்ற, வரம்புகள் நெருங்கிய பெரிய வயல் இடங்களையுடைய தமிழ் வளர்ந்த மதுரைக் காவலனான பாண்டியன் மகளே! வருக, கற்பகாடவியில் கடம்பாவிப் பொலி கயற்கண் நாயகி வருக!! என வேண்டி நிற்கின்றார் குமரகுருபரர்.

முயல்பாய் மதிக்குழவி தவழ்சூல் அடிப்பலவின்
முட்பொதி குடக்கனியொடு
முடவுத் தடந்தாழை முப்புடைக் கனிசிந்த
மோதிநீர் உண்டிருண்ட

புயல்பாய் படப்பைத் தடம்பொழில்கள் அன்றியேழ்
பொழிலையும் ஒருங்கலைத்துப்
புறமூடும் அண்டச் சுவர்த்தலம் இடித்தப்
புறக்கடல் மடுத்துழக்கிச்

செயல்பாய்கடற்றானை செங்களங்கொள அம்மை
திக்குவிச யங்கொண்டநாள்
தெய்வக் கயற்கொடிகள்திசைதிசை எடுத்தெனத்
திக்கெட்டு முட்டவெடிபோய்க்

கயல்பாய் குரம்பணை பெரும்பணைத் தமிழ்மதுரை
காவலன் மகள்வருகவே
கற்பகா டவியில் கடம்பாடவிப்பொலி
கயற்கணா யகிவருகவே

# பிரிவு – 2

# சிறுகதை, உரைநடை

## கூறு: 4

## சிறுகதை – நீலபத்மநாபன் - வானவீதியில்

குறிப்பு

நீலபத்மநாபன் 1938 இல் பிறந்தவர். தன் பள்ளிப்பருவம் தொடங்கி எழுதி வருபவர். கேரளப்பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பட்டமும் மின் பொறியியல் பட்டமும் பெற்று கேரள மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராக முப்பது ஆண்டுகள் பணியாற்றியவர்.

பொறியியல் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்து போதே இவர் எழுதிய இன்ஜீனியர் ஓரங்கநாடகம் அகில இந்திய வானொலியின் நாடகப்போட்டியில் முதலிடம் பெற்றது. தலைமுறைகள், பள்ளிகொண்டபுரம், உறவுகள், மின் உலகம், வட்டத்தின் வெளியே, இலை உதிர்காலம், தேரோடும் வீதி, கூண்டினுள் பட்சிகள் என்பன போன்ற இருபது நாவல்களை எழுதியவர்.பத்து சிறுகதைத்தொகுதிகள், நான்கு கவிதைத் தொகுதிகள், ஒன்பது கட்டுரைத்தொகுதிகள் முதலியவற்றை வெளியிட்டவர். இவருடைய படைப்புகள் ஆங்கிலம், ஜெர்மன், ரஷிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.சாகித்ய அகாதெமியின் விருதினை இலைஉதிர் காலம் படைப்பிற்காகப் பெற்றவர். மொழிபெயர்ப்புப் பணிக்காக ஐயப்ப பணிக்கரின் கவிதைகள் எனும் நூலிற்கு சாகித்ய அகாதெமியின் விருதினைப் பெற்றவர். உறவுகள் நாவலுக்காக ராஜா சர் .அண்ணாமலைச் செட்டியார் விருது, தேரோடும் வீதிக்காக தமிழக அரசு விருது, போன்றவற்றையும் தஞ்சைத் தமிழ்பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருதினையும் கோவை ரங்கம்மாள் பரிசினையும் பெற்றவர். சாகித்ய அகாதெமி இவர் எழுத்தையும் வாழ்வையும் குறும்படமாக வெளியிட்டுள்ளது.

நீல பத்மநாபனின் ‘வானவீதியில்’ என்னும் சிறுகதைத் தொகுப்பு பதினெட்டுக் கதைகளைத் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது. இந்நூல் மணிவாசகர் பதிப்பகத்தின் வெளியீடாகும். இதன் முதல் கதை

குறிப்பு

வைபோகம் என்பதாகும். இச்சிறுகதை வாழ்க்கைக்குப் பொருள் தேடி இளமையைத் தொலைக்கும் தம்பதியரைப் பற்றிய கதை ஆகும். திருமணமான புதிதில் மனைவியை விட்டு வெளிநாடு பிரிந்து சென்ற கணவன் வெளிநாட்டில் வேலையில் கிடைக்கும் விடுமுறையில் தன் வீட்டிற்கு வருகிறான். அவனின் வருகை அறிந்த நட்பும் உறவும் அவன் வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த பொருள்களைப் பிரித்துத் தான் கொண்டு போவதிலேயே கவனம் செலுத்துகிறது. அத்தகைய உறவுகளும் நட்புகளும் கலைந்து சென்ற பின் தன் அருமையான மனைவியைப் பார்க்கிறான். தன் மனைவியின் இளமையையும் அழகையும் கண்டு மகிழ்வதற்குக் கூட நேரம் இல்லாமல் பிரிந்து போன அந்த நாட்கள் நெஞ்சினில் வந்து நிழலாடுகின்றன. மனைவியோ வெளிநாட்டில் இருந்த காலங்களில் தன் நினைப்பு வருமா? என்று வினவுகிறாள். அதற்கு கணவன் காலை ஏழு மணிக்கெல்லாம் வேலை நடக்கும் இடத்திற்குச் சென்றுவிட்டு ரெண்டு மணிக்கு வீட்டிற்குத் திரும்புவது, பின் சொந்தமாய் சாப்பாடு தயாரிப்பது, மாலையில் கூட்டாளிகளின் வருகை, டிவியில் படங்கள் பார்ப்பது என்று கடந்து போகும் பொழுதுகளில் நினைப்பதற்குக்கூட நேரமிருக்காது. இரவில் தனிமைப்படுக்கையில் வாழும்போது தான் சித்திரவதை, உன் போட்டோவினைப் பார்த்துக் கொண்டே விழித்திருக்கும் இரவுகள் அதிகம் என்கிறான். வெளிநாட்டு வேலைகளில் துயரங்களைச் சந்திக்கும் ஆண்களின் நிலையினை இது எடுத்துக் காட்டுகிறது. கணவனும் நீயும் அப்படித்தானே என்று மனைவியிடம் வினவுகிறான். அதற்கு அவளோ ஆண்களைப் போல் பெண்களால் எதையும் வெளியில் சொல்ல முடியாது என்கிறாள்.

இத்தகைய கூற்று ஆண் பெண் வாழ்வியல் நிலைகளில் காணப்படும் கட்டமைப்புகளை விளக்கி நிற்கிறது எனலாம். தன் மனைவியை தன்னுடன் அழைத்துச் செல்லலாம் எனில் அவ்வாறு மனைவியை அழைத்து வந்த அருமைராஜ் தன் கம்பெனியில் முதலாளியின் கவனத்தை மனைவியின் மூலமாகக் கவர்ந்து உயர்பதவி அடைந்த நிலை கண்முன் வந்து நிற்கிறது. அத்தகைய மோசமான வாழ்க்கை தன்னால் இயலாது என்றே கருதுகிறான். அதேநிலையில் மனைவியைத் தாய்நாட்டில் விட்டுப்போன கணவன்கள் ஏமாந்த நிலையும் கண்முன்

வந்து போகிறது. இவ்விரு சிந்தனைகளில் தடுமாறும் கதையின் நாயகன் வெளிநாடு செல்லவேண்டாம் என்றும் முடிவெடுக்க இயலவில்லை.



வெளிநாடு செல்வதற்காக வாங்கிய கடன் தற்போதுதான் அடைக்கப்பட்டிருக்கிறது. எனவே வாழ்வதற்கான பணத்தினைத் தேட மீண்டும் செல்ல வேண்டிய தேவை ஏற்படுகிறது, உடன் மனைவி, நான் எஸ். எஸ். எல்சி பாஸ் செய்திருக்கிறேன். ஒரு வேலை வாங்கிக் கொடுங்கள் என வேண்ட அருமைராஜ் மனதினுள் வந்து போகிறான். எனவே வேறு வழியின்றித் தானே வெளிநாடு செல்வதற்கு விண்ணப்பித்து வருகிறான். மனைவிக்கு டாட்டா காட்டி பிரிந்து மீண்டும் வெளிநாடு செல்கிறான் என்பதாய்க் கதை முடிகிறது.

வைபோகம் என்னும் இக்கதை தன் வாழ்விற்குத் தேவையான பணத்தினைத் தேட வெளிநாடு செல்லும் கணவன்களின் மன உளைச்சலைத் வெளிப்படுத்தி நிற்கிறது

## வானவீதியில்

வானவீதியில் என்னும் சிறுகதை முதன் முதலில் விமானப் பயணத்தை மேற்கொள்ளும் ஒருமனிதனின் மனதினுள் ஏற்படும் பயம் கலந்த போராட்டங்களை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. ரன்வேயில் இருந்து மேலெழும் விமானத்தினை வருணிக்கும் காட்சியில் கதையும் மேலேழும்பத் தொடங்குகிறது. சபரிநாதன் கதையின் நாயகன். விமானப் பயணத்திற்குப் புதிதான அவன் விமானத்தில் பெல்டினை அணியத் தடுமாறுகிறான். அப்பொழுது அருகில் இருப்பவர் உதவுகிறார். சபரிநாதன் அவரைக் கவனிக்கிறான். அவர் பெயர் சுஜாதன். இருவரும் ஏழெட்டு ஆண்டுகள் ஒன்றாய்ப் படித்தவர்கள். சபரி, சுஜாதனை அவனின் திருமணத்தின் போது சந்தித்தது. பதினெட்டு வருடங்கள் கடந்து போயிற்று. சுஜாதன் திருமணம் ஒரே மேடையில் நடந்த இரண்டு திருமணங்கள். சுஜாதனின் தங்கை மாப்பிள்ளை சுஜாதன் மனைவியின் அண்ணன் ஆவார். சுஜாதன் தன் மனைவியுடன் நன்றாகவே வாழ்ந்தான். ஆனால் அது எல்லாம் இரண்டு வருடங்கள்தான். சுஜாதன் மனைவி தன் குழந்தையைப் பிரசவிப்பதற்காகத் தாய்வீடு சென்றவள், திரும்பி வந்ததில் இருந்தே வாழ்க்கையில் புயல் வீசத்தொடங்கியது. பிரச்சினை

பெரிதாக சுஜாதன் மனைவி அவனைப் பிரிந்து தாய் வீடு சென்று விட்டாள். பலர் சமாதானம் பேசியும் வர மறுத்து விட்டாள். அதில் இருந்து சுஜாதன் தனியாக வாழத் தயாராகி விட்டான். சபரி அதனைப் பற்றி வினவ அதற்கு சுஜாதன் ஒரு மனிதனின் வாழ்க்கையில் வளர்ச்சிக்குப் பெரிதும் முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் மனைவியும் குழந்தைகளுமே என்கிறான். பிரிவற்கான காரணம் வினவுகிறான் சபரி. அதற்குச் சுஜாதன் தன் மனைவி கெட்டவனுடன் வாழப்பிடிக்கவில்லை என்று சொன்னதாய்க் குறிப்பிடுகிறான். அதனைக் கேட்ட சபரி நீ கெட்டவனா? என்று வினவ அதற்குச் சுஜாதன் தன் மனைவி தன்னைப் பிரிந்து செல்லும் வரை தான் நல்லவனாகவே இருந்தேன் என்கிறான். மேலும் தன் குடும்பம் மிகப்பெரிய குடும்பம் என்றும் தன்வீட்டில் பலர் வேலை செய்தனர் என்றும் தன் தாய்க்குப்பிறகு அவர்களை வைத்து வேலை வாங்கத் தெரியாத மனைவி அவர்களுள் சிலர் சொன்ன பொய்யான கதைகளை நம்பி தன்னைச் சந்தேகித்தாள் எனவும் குறிப்பிடுகிறான்.அதன் காரணமாய்த் தங்களுக்குள் இரவு நேரத்தில் சண்டை வரும்போதெல்லாம் சண்டை போடப் பிடிக்காமல் தோட்டத்தில் சென்று சிறிது நேரம் அமர்ந்து விட்டு வருவதைத் தன் மனைவி தவறாய் புரிந்து கொண்டு பிரச்சினை செய்தாள் என்கிறான். அதுவே தங்கள் பிரிவிற்குக் காரணமாய் அமைந்தது என்றும் விளக்குகிறான் சுஜாதன். இந்நிலையில் சபரி தன் மனைவியை நினைத்துக் கொள்கிறான். தன் மனைவியும் சுஜாதன் மனைவியைப் போலச் சண்டையிடுபவள்தான், ஆனால் அவர்களின் வாழ்க்கை இன்று வரை தொடர்ந்து சென்று கொண்டுதான் இருக்கிறது எனக் கருதுகிறான். ஆனால் சுஜாதன் வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கலுக்கு அவன் மனைவியின் பெற்றோர் தங்கள் பிள்ளையை வளர்த்த வளர்ப்பு முறை சரியில்லாமல் அமைந்ததே காரணம் என்பதனை உணர்கிறான். சபரி சுஜாதனிடம் மகனைப் பார்ப்பது உண்டா என்று வினவுகிறான். எப்பொழுதாவது தான் சென்று பார்ப்பதாகவும் அவன் படிப்பிற்குத் தேவையான பணத்தினை கொடுத்து வருகிறேன் என்று கூறுகிறான்.இந்த நிலையில் விமானம் கீழே இறங்குகிறது. ஒருமனிதன் எவ்வளவுதான் உறவுகளை வெறுத்து வானில் ஏறிப் பறந்தாலும் ஒருநிலையில் கீழே

இறங்கித்தான் ஆக வேண்டும் என்பதனை உணர்த்துவதாய் இக்கதை அமைகிறது.

குறிப்பு

## தாய்

'தாய்' என்னும் இக்கதை சரவணன் என்னும் பாத்திரத்தினை மையமாக வைத்துச் சுழல்கிறது. சந்தோஷ் என்னும் பெயரினை உடைய இன்ஸ்பெக்டர் சரவணனின் வீட்டிற்குச் சாதாரண உடையில் வருகிறார். அவரும் சரவணனும் நல்ல நண்பர்கள்.சரவணனுக்குச் சந்தோஷை முதலில் அடையாளம் தெரியவில்லை. சந்தோஷ் சரவணன் இருவரும் நீலகிரியில் வேலை பார்த்தபொழுது இருவரும் சேர்ந்து கிளப்பில் அமர்ந்து ரம்மி ஆடியதை நினைவுறுத்தியதும் சரவணனுக்குப் புரிகிறது, நீலகிரியில் பார்த்த சரவணனுக்கும் இன்று பார்க்கிற சரவணனுக்கும் மிகப்பெரிய அளவில் வேறுபாடு காணப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு முன் சரவணனுக்கு வந்த டயபட்டிக்கோமா அவனின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டு விட்டது. இந்த வியாதி சரவணனின் கை, கால் போன்றவற்றை செயலிழக்கச்செய்து விட்டது. எனினும் தன் மனைவி மனோன்மணி இருப்பதால் தன் காரியங்கள் நடக்கின்றன என்கிறான் சரவணன். தான் வேலைக்குச் சென்று வீடு திரும்புவதே கடினமாக இருப்பதாகவும் தான் வீட்டில் இருக்கும் போது யார் வந்தாலும் தன் மனைவி சமாளித்துவிடுவாள் என்றும் தன் மகன் கடைகளுக்குப் போவது போன்ற பணிகளைச் செய்கிறான் என்றும் கூறுகிறார்.அதனைக் கேட்ட சந்தோஷ் தான் சொல்ல வந்த செய்தியை எப்படிச் சொல்வது? என்று தெரியாமல் தடுமாறுகிறார். பையனை அதற்குள் வேலைக்கு அனுப்பியாச்சா? என்று மீண்டும் வினவுகிறார் சந்தோஷ். அதற்குச் சரவணன் அவனுக்குப் படிப்பு சரியாக வரவில்லை என்பதாலும் வீட்டில் பிரிட்ஜ் வாஷிங்மிஷின் என்பனவற்றின் செலவும் வீட்டுக்கடனின் சுமையும் அதிகமாகி விட்டபடியால் அவனும் இப்போது வேலைக்குச் செல்கிறான். மேலும் படிப்பில் அவனுக்குக் கவனம் இல்லாமல் போயிற்று என்கிறார் சரவணன். நீலகிரியில் பார்த்த சரவணனா இவன் என்று சந்தோஷிற்குத் தோன்றுகிறது, சரவணன் நீலகிரியில் பணியாற்றிபோது தன் மனைவி அடுத்த வீட்டில் போய் அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறாள் என்பதற்காக ஆபிசில் இருந்து இடையில் வந்து சோதனை செய்து கண்டுபிடித்து ரோட்டில் போட்டு அடித்ததும்தான்

குடிக்கும் பிராண்டு சிகரெட்டை மனைவி வாங்கி வைக்க மறந்துவிட்டாள் என்பதற்காக அவளை நள்ளிரவில் வீட்டிற்கு வெளியே தள்ளிக் கதவைச் சாத்தியதும் அவள் தன் வீட்டில் அந்தப் பொழுதில் வந்து தன்னிடம் இருந்த சிகரெட்டில் ஒன்றினை வாங்கிக்கொண்டு போய் கொடுத்ததும் சந்தோஷ் மனதில் நிழலாடுகிறது.

காலம் மனிதர்களை எவ்வளவு மாற்றிப்போடுகிறது? என்று அதிசயப்படுகிறார் சந்தோஷ். பேச்சு மீண்டும் சரவணனின் பையன் பக்கம் திரும்புகிறது. சரவணன் தன் மகன் எங்காவது கலெக்சனுக்குப் போயிருப்பான் என்கிறார். சந்தோஷிற்கு சரவணனின் மகன் பற்றிய சிந்தனை ஓடுகிறது. நேற்று கல்லூரிக்கு அருகில் திருடிய திருட்டு தொடர்பாக ஒருவனைப் பிடித்தபொழுது அது சரவணனின் மகன் என்று தெரியவருகிறது. அவனை அடிக்க கம்பினை ஓங்கியபொழுது இதற்குமேல் அடிக்கவேண்டாம் என்று தன் சட்டையைக் கழட்டுகிறான். முதுகெங்கும் காயங்கள், நகக்கீறல்கள், அதனைக் கண்டு அதிர்ந்து போகிறார் சந்தோஷ். அப்போது கானஸ்டபிள் அவன் அம்மாவின் போக்கு சரியில்லை. அவள் தவறான நடத்தை உடையவள். அதற்கான பணத்தினை வசூல் செய்து வரச் சொல்லியே இப்படி அடித்துத் துன்புறுத்துகிறாள் என்கிறார். இதனை சரவணனிடம் சொல்ல வந்த சந்தோஷ் சரவணனின் நிலையைப் பார்த்து சொல்ல இயலாத வருத்தத்துடன் திரும்புகிறார். அப்பொழுது வழியில் மனோன்மணியைப் பார்க்கிறார். அதீதமான முக ஒப்பனையுடன் காரில் வந்து இறங்கும் அவளைப் பார்த்ததும் இந்தப் பெண்ணா அந்த மனோன்மணி? என்கிற வருத்தத்துடன் காணாததுபோல் கடந்து போகிறார் என்று முடிகிறது கதை. இக்கதை காலத்தின் சுழற்சியும் மனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்களும் தேவையும் மனிதனின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டு விடுகின்றன என்பதனை விளக்கி நிற்கிறது. காலத்தின் கடினமான சுழற்சியில் தாய்மைப் பண்புகூடத் தப்புவதில்லை என்பது தெரியவருகிறது,

## சாளரத்தின் ஊடே

குறிப்பு

இக் கதை அதன் கதைத்தலைப்பிற்கு ஏற்ற வகையில் சாளரத்தின் ஊடே தெரியும் காட்சிகளைக் கொண்டு புனையப்பட்டுள்ளது. கதையின் நாயகன் ஓர் இரவுப் பொழுதில் விழிப்பு ஏற்பட்ட உடன் சாளரத்தின் ஊடே வெளியே பார்க்கிறான். ஆங்காங்கே இருட்டு தன் ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கிறது.நெஞ்சிற்குள் நிரம்பி நிற்கும் பயத்துடன் எதிர்த்திசையைப் பாக்கிறான். எதிர்த்திசையில் இருட்டின் பிம்பத்தில் ஒரு வீடு தென்படுகிறது.அதனை வீடு என்பதா? அல்லது குடிசை என்பதா என்று தோன்றவில்லை. அந்த வீட்டில் இருக்கும் வயதான அம்மா அதன் இளமைக்காலத்தில் கட்டியது என்று அனைவரும் சொல்லிக் கொண்டனர். அதிலும் பாகப்பிரிவினைகள்.நடுபோர்ஷனில் வயதான அம்மா, இரு பக்கங்களிலும் தனித்தனி போர்ஷன்களில் மூன்று மகள்கள், ஒரு மகன் என்று ஐந்து குடித்தனங்கள். அந்த அம்மாவின் மூன்று மகள்களும் திருமணம் செய்து கொடுக்கப்பட்டவர்கள் எனினும் தன் கணவனுடன் வாழாமல் இங்கு வந்து வாழ்ந்தனர். அந்த அம்மாவின் மூத்த மகன் வேலப்பன் மட்டும் தன்பக்கவாட்டு அறையில் இருந்தான். மூன்று பெண்களில் நடுவில் உள்ள பொன்னியின் கணவனுக்குச் சாராய வியாபாரம் அவனும் எப்பொழுதாவது வந்து சண்டையிட்டுப் போவான். துறைமுகத்தின் பக்கம் அவனுக்கு இன்னொரு பெண்ணுடன் தொடர்பு உண்டு என்னும் பேச்சு உண்டு. இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த அந்தக் குடும்பத்தின் வாழ்க்கைப் பாதையில் ஒரு ஞாயிற்றுக் கிழமை திடீரென்று அழுகை ஒலி கேட்டது. வேலப்பன் உத்திரத்தில் தொங்கிக் கொண்டிருந்தான். வேலப்பனுக்குக் கல்யாணமாகி ஐந்து வருடங்கள் இருக்கும்.அவன் மனைவி மாதவி பக்கத்தில் உள்ள பனைவிளை என்னும் பகுதியைச் சார்ந்தவள்.வேலப்பனுக்கு முனிசிபாலிட்டியில் வேலை. அவனின் சம்பளத்தினை நம்பித்தான் மாதவியை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். ஆனால் திருமணம் ஆகி இங்கு வந்த நாளில் இருந்து ஓயாத சண்டை தான். மாதவி சண்டை போட்ட கையோடு பனைவிளைக்குக் கிளம்பி விடுவாள்.வேலப்பனும் உடன் சென்று விடுவான். அதனைப் பிறர் ஏளனமாகப் பேசுவதும் உண்டு.

மாதவி இரண்டாவது பிரசவத்திற்கு தாய் வீடு சென்ற போது பொன்னி அழுது கொண்டே சென்றது தெரியவந்தது. மாதவிக்குத் தாய்

மாமனுடன் ஏற்கனவே தொடர்பு உண்டாம். அதனைத் தெரிந்த வேலப்பன் கிணற்றில் குதிக்க அருகில் இருந்தவர்கள் காப்பாற்றினர். ஆனால் கால் ஒடிந்து மருத்துவம் பார்த்தனர். அப்பொழுதும் பொன்னிதான் கவனித்தாள். மாதவி கண்டு கொள்ளவில்லை.இந்நிலையில் மாதவியின் தங்கச் சங்கிலியை வாங்கிச் சென்றான் பொன்னியின் புருஷன்.வேலப்பன் நடக்கத் தொடங்கி மாதவியின் வீட்டிற்குச் சென்ற போது தங்ஙகச்சங்கிலியுடன் வா என்று விரட்டிவிட்டனர். பொன்னியின் புருஷனோ அதனை விற்று விட்டான். அது இல்லாமல் மனைவியுடன் சேர்ந்து வாழ்தல் இயலாது என்று தெரிந்த வேலப்பன் மனம் உடைந்து தற்கொலை செய்து கொள்கிறான். இந்த நிகழ்வுகள் எல்லாம் தெரிந்த சாளரத்தின் வழி பார்த்துக்கொண்டிருக்கும் கதை சொல்லிக்கு, வேலப்பனின் உருவம் இருளில் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது போல் தெரிகிறது என்பதாய்க் கதை முடிகிறது.

## வேளை காலம் தெரியாமல்

வேளை காலம் தெரியாமல் என்னும் இக்கதை கறார் கந்தசாமி என்பவரை மையமாக வைத்துப் பின்னப்பட்டிருக்கிறது. கறார் கந்தசாமி மிகவும் கறார் ஆனவர். அதனாலே அவருக்கு இப்பெயர் ஏற்பட்டது. கந்தசாமி தன் இளமைக்காலத்தில் ஒரு சின்னக் காபிக்கடையை வைத்து வாழ்க்கையைத் தொடங்கியவர். தனது கடின உழைப்பின் மூலமும் கறார் தன்மையாலும் பெரும் பணக்காரர் ஆகிவிட்டவர். அதனாலே அவருக்கு ஊரில் எதிரிகள் மிகவும் அதிகம். ஆனால் அதனை நினைத்து அவர் வருந்தியது இல்லை. தன் சுயமரியாதையை யாருக்காகவும் அவர் விட்டுக் கொடுத்ததில்லை.தன் மகன்களிடமும் தன் மரணத்தினைப் பற்றிச் சொல்லி வைத்திருந்தார். தனக்கு எழுபத்தைந்து வயதாயிற்று. பிரஷர், சுகர் எல்லாம் உண்டு. எனவே தனக்கு ஏதாவது ஒன்று நேர்ந்தால் யார் வருகிறார்கள். வரவில்லை என்று பார்க்காதே, ஒருமணி நேரத்தில் தூக்கிவிடு என்பதுதான் அது. முதல்நாள் இரவு எட்டு மணிவரை தன் மகன் மாசிலாமணியின் மகள் அதாவது தனது பேத்தியின் திருமணத்திற்காக ஓடி உழைத்தவர்.திடீரென்று ஒரு மாதிரி வருகிறது என்று சொன்னார். உடன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.ஆனால் ஆசுபத்திரியில் காலை ஏழுமணிக்கு அவர் இறந்து

விட்டதாய்க் கூறினர்.ஆனால் மாசிலாமணி அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் திரு
மணத்தினை முடித்தான். பிறகு கந்தசாமிக்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்து அனுப்பிவைத்தனர்.ஆனால் ஊர் அதனைப் பற்றிப் பலவிதமாகப் பேசியது.அதாவது மாசிலாமணி தந்தைக்கு ஏற்ற மகன் என்றெல்லாம் பேசிற்று. அதற்குக் கதைசொல்லி இன்றைய சூழலில் ஒரு திருமணத்தினை ஏற்பாடு செய்து அதற்கான செலவுகளைச் செய்து நடத்துவது என்பது அவ்வளவு எளிதானதன்று. மேலும் காலம் தாழ்த்தினால் இப்பொழுது கிடைத்த ஐ.ஏ.எஸ் மாப்பிள்ளை வீட்டார் மனம் மாறி விடலாம். இப்பொழுது செய்ததே சரி என்று கூறுகிறார். இதன் வழி காலத்தின் போக்கிற்கேற்ப தன் வாழ்வியல் நிகழ்வுகளைத் திட்டமிடல் என்பதே புத்திசாலித்தனமானது என்பது வெளிப்பட்டு நிற்கிறது.

## தேடிப்போனபோது..

தேடிப்போனபோது என்னும் சிறுகதை வானவீதியில் சிறுகதைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஆறாவது சிறுகதை ஆகும்.இக்கதை கல்லூரிக்காலத்து நட்பினைத் தேடிச்செல்லும் மனிதன் அடையும் அனுபவத்தினை வெளிபடுத்தி நிற்கிறது. கதையின் நாயகன் பிரசாத் கன்னியாகுமரியில் நடக்கவிருக்கும் கான்பரன்ஸ் ஒன்றில் பங்கேற்பதற்காகப் பேருந்தில் பயணம் செய்கிறான். அப்பொழுது அந்தப் பேருந்து, செல்லும் வழியில் உள்ள குழித்துறைப் பாலத்தில் மராமத்து வேலை நடைபெறுவதால் சுற்றுப்பாதையில் செல்கிறது. அதனால் ஒருமணி நேரத்தில் கடக்க வேண்டிய பயணநேரம் இரண்டு மணி நேரமாக நீடிக்கின்றது. வயல்வெளிகள் அடர்ந்த பகுதியின் வழியாகப் பேருந்து சென்று கொண்டிருந்த பொழுது ஒரு கிராமத்தின் பெயர் கண்ணில் படுகிறது. உடன் மூளையில் பளிச்சென்று ஒரு மின்னல் வெட்டுகிறது. சென்ற ஆண்டு மதுரையில் ஒரு திருமண வீட்டில் வைத்து ராஜேஸ்வரியைச் சந்தித்த நிகழ்வு அது. ராஜேஸ்வரி கல்லூரிக்காலத்தில் உடன் படித்த தோழி. படிக்கும் காலத்தில் அவ்வளவு நெருக்கமான தோழி இல்லை என்றாலும் தற்பொழுது சந்தித்த பொழுது பாசமாய்ப் பேசினாள். ஒரு முறை குலசேகரப்பட்டினம்

குறிப்பு

வரும்பொழுது பிரம்மபுரம் எஸ்டேட் வாருங்கள். அங்குதான் நான் என் கணவனுடன் வசிக்கிறேன். ஒருநாள் தங்கிவிட்டுப் போவதுபோல் வாருங்கள் என்று அழைத்தாள்.அந்த அழைப்பும் அதனுள் இருந்த அன்பும் ஆவலும் கண்ணின் முன் நிழலாடின. தற்போது அந்த ஊரின்பெயர் கண்ணில்பட்டவுடன் கதையின் நாயகன் கன்னியாகுமரி செல்வதனை விடுத்து குலசேகரத்தில் இறங்கினார். ராஜேஸ்வரியின் வீட்டினை நோக்கி நடக்கத்தொடங்கினார். மனதுக்குள் பிள்ளைகள் எல்லாம் பெரியவர்களாய் வளர்ந்ததன் பின் என்ன இது ரொமான்ஸ் என்ற போராட்டம் தொடங்கியது.எனினும் அதனை வென்று சாலையில் மெதுவாக நடக்கத் தொடங்கினார். அந்தப் பகுதியில் அவர் நடப்பதனைப் பார்த்த கிராம மக்கள் எங்கு செல்லவேண்டும் எனக் கேட்க பிரம்மபுரம் எஸ்டேட் எங்கு இருக்கிறது? என வினவினார். அந்த மக்கள் இப்படி நேரா கூப்பிடு தூரம் சென்றால் வலது கை பக்கம் போர்டு வைத்திருக்கும் என்றனர். மெதுவாக நடந்து அந்தப் போர்டினைப் பார்த்து அதன் வழியில் சென்றார். எதிரே பெரிய இரும்புக் கேட்டும் அதன் உள்ளே பிரமாண்டமான பங்களாவும் தெரிந்தது, உள்ளிருந்து ஒரு வேலைக்காரன் வந்தான் .அவனிடம் ராஜேஸ்வரி வீடு எது என கேட்கச் சிந்தித்து பின் அதனை நீக்கி அவளின் கணவனான அனந்தசுப்பிரமணியன் வீடு என்றார். உடன் அந்த வேலையாள் துக்கம் விசாரிக்க வந்தீங்களா? என வினவி அவர் போனதுக்கு முந்தின வியாழக்கிழமை காலமாயிட்டார். எப்பப் பார்த்தாலும் குடி, பாவம் அந்த அம்மா உள்ளே போய் தேறுதல் சொல்லுங்கோ! என்றார், மேட்டை நோக்கி ஓரடி எடுத்து வைத்த கதையின் நாயகன் ஆகிய பிரசாத்தை அவனின் மனட்சாட்சி கேள்வி கேட்டது.

அன்று வீட்டுக்கு வாங்கோ ஒருநாள் தங்கறாப்புல வாங்கோ அப்படின்னு அழைக்கும்போது ராஜேஸ்வரியின் அன்பும் ஆவலுந் தெரிவதுபோல் தோன்றி தனக்கு அதன் ஆழத்தில் புதைந்திருந்த வெறுமையை உணரமுடியாமல் போயிற்றே என்ற குற்ற உணர்வு உறுத்த ராஜேஸ்வரியின் வீட்டினுள் நுழையாமலே பஸ் நிறுத்தத்தினை நோக்கி நடக்கத் தொடங்கினான் பிரசாத்.

குறிப்பு

இக்கதை மனிதர்களை அவர்களின் வெளிதோற்றத்தினையும் வார்த்தைகளையும் வைத்து அளவிடுவதனைவிட உள்ளுணர்வுகளை வைத்து அளவிடுதலே சிறந்தது என்பதனை விளக்கி நிற்கிறது.

## அன்புள்ள கல்பனாவிற்கு

இக் கதை தனிமனித பாலியல் குறைகளை விவாதிப்பது போல் அமைந்ததாகும். ஒரு பெண்ணைத் திருமணம் செய்த குணசீலன் தான் கூறிய பாலியல் குறையினை மிகைப்படுத்திப் பிரிந்து சென்ற மனைவிக்குக் கடிதம் எழுதுவதாய் இக்கதை அமைந்துள்ளது. முதன்முதலில் கடிதத்தினைத் தொடங்கும் குணசீலன் இக்கடிதத்தினை எழுதுபவன் உன்னைக்கட்டிய கணவன் என்பதற்காக படிக்காமல் கிழிந்தெறிந்து விடாதே! என்ற வேண்டுகோளின்படிதான் தொடங்குகிறான். ஒருமுறையேனும் படித்துவிட்டுக் கிழித்தெறி என்கிற வேண்டுகோள் அவனின் குண இயல்பினை வெளிப்படுத்தி நிற்கிறது,

சென்ற மாதம் நிகழ்ந்த திருமண வீட்டில் தன்னை காயப்படுத்திப் பேசிய தன் மனைவியின் வார்த்தைகளை அப்படியே பதிவு செய்கிறான் குணசீலன். ஒரு புதுமணப்பெண்ணின் ஆசைகளை அபிலாசைகளைப் புரிந்து கொள்ளும் கற்பனை உங்ககிட்ட இருந்திருந்தா நீங்க இந்த கல்யாண நாடகத்தில் மாப்பிள்ளை வேஷம் போட்டுக்கிட்டு வந்திருக்கமாட்டீங்க! நீங்களும் ஒரு ஆண்பிள்ளையா? என்ற கேள்வி தன்னைத் தகிப்பதாய்க் கூறுகிறான். இத்தகைய குற்றச்சாட்டிற்குப் பயந்து போய் தற்கொலை செய்து கொண்ட தெருமுனை வரதனைப்போல் தான் தற்கொலை செய்து கொள்ளப்போவதில்லை என்றும் கூறுகிறான். மேலும் நடந்து போன தவறுகளுக்குத் தன் தந்தை, தாய், உற்றார், உறவினர் யாரும் பொறுப்பாளிகளாய் இல்லை. தான் மட்டுமே பொறுப்பாளி. உன்னுடைய வீட்டினர், உனக்கு அப்படி ஒரு சந்தேகம் இருந்திருந்தால் டாக்டரைப் பார்த்து இருக்கலாமே என்று கூறினார்களாம். நான் டாக்டரைப் பார்க்காமல் இல்லை. அவர்தான் இது ஒரு பெரிய குறையில்லை. திருமணம் ஆனால் சரியாகும் என்றார். நீ நினைப்பதுபோல் இது ஒன்றும் தீர்க்க இயலாத குறை இல்லை. ஆனால் இந்தக் குறையினால் என்னைப் பார்ப்பது கூட உனக்கு அருவெறுப்பானதாய் மாறிவிட்டது. இந்த அருவெறுப்பை எப்படி

உன்னிடம் இருந்து நீக்கப்போகிறேன் என்னும் போது சற்று தயக்கமாய் இருக்கிறது. எனினும் காலம் நீக்கும் என்று நம்புகிறேன்.

குறிப்பு

உனக்கு புது மாப்பிள்ளை பார்ப்பதாய்ப் பிறர் கூறக்கேட்டேன். இன்றைய காலத்தில் ஆணிற்குப் வேறு பெண் கிடைப்பதோ பெண்ணிற்கு வேறு ஆண் கிடைப்பதோ கடினமில்லை. மறுமணம் செய்வதும் செய்யாதிருப்பதும் அவரவர் விருப்பத்தினைப் பொறுத்தது. எனினும் நான் பத்துநாட்கள் மருத்துவமனையில் இருந்து விட்டுக் குறைகளைச் சரிசெய்து விட்டு இன்றுதான் வருகிறேன்.

எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சத்தியநேசனை உன் பெற்றோரைப் போய்ப் பார்க்கச் சொல். வீணாக அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்துவிடாமல் இருப்பதற்கு கடவுள் அருள்பாளிக்கட்டும் என்பதாய்இக்கடிதம் நிறைவடைகிறது. நீல பத்மநாபன் இக்கதையில் கடித உத்தி என்னும் உத்தி வகையினைப் பயன்படுத்தியுள்ளார்.

இந்தக் கதை சமூகத்தில் பாலியல் தொடர்பான புரிந்துணர்வு இன்மையையும் தெளிவின்மையால் அதனுள் பலவிதக் கற்பனைகளை ஏற்றி சிதைவுறும் தம்பதியினரின் வாழ்வியல் சிக்கல்களையும் பாலியல் குறைபாடு என்பது தீர்க்க இயலும் ஒரு குறைபாடே என்பதனையும் விளக்கி நிற்கிறது.

**தீர்த்த கட்டம்**

தீர்த்த கட்டம் என்னும் இச்சிறுகதை பரசுராம தீர்த்தத்தை அடிப்படையாகக் கொண்டமைந்ததாகும். சிறுகதையின் தொடக்கமே பரசுராம தீர்த்தம் அமைந்துள்ள பகுதியின் இயற்கைத் தன்மையை விளக்குவதாய் அமைந்துள்ளது. நிறைந்து நிற்கும் காற்றும் பச்சைத்தன்மை கொண்ட இலைகளின் மணமும் கதையின் நாயகனுக்கு ஒருவிதமான முன்ஜென்மத்தின் தொடக்க உறவினை வெளிப்படுத்தி நிற்கின்றன. இப்பகுதியை கண்டடைய முற்பட்ட கதைத் தலைவனுக்கு ஒரு விறகுவெட்டியே வழிகாட்டுகிறான். அவன் காட்டிய வழியே தொடர்ந்து வந்த நாயகன் பரசுராம் பரசுராமர் இருக்கும் ஆலயத்தினை அடைகிறார். கண்சிமிட்டும் நட்சத்திரங்களின் வானத்தில் விடியல்

குறிப்பு

இன்னும் நேரமிருக்கிறது என்பது வெளிப்பட்டு நிற்கிறது. அக்கோயிலின் அருகே அமைந்திருந்த மணற்பரப்பில் படுத்திருந்த பரசுராம் தன் வாழ்க்கையின் நிகழ்வுகளைப் பின்நோக்கிச் சிந்திக்கிறான். பரசுராம் மேஜர் ஜெகந்நாதனின் மகன். யாரேனும் நீ யார் மகன் என்று கேட்டால் மேஜர் ஜெகந்நாதனின் மகன் என்று சொல்வதில் பெருமை இருந்தது. அப்பாவின் காக்கி உடைகளின் வழியே வெளிப்படும் கம்பீரம் அவன் பார்த்து ரசித்தவை ஆகும்.

பரசுராமனின் தந்தை மேஜர் ஜெகந்நாதன் வீட்டிற்கு வந்துபோன சில நாட்களில் சிவத்த இளைஞன் ஒருவன் வந்து பரசுராமிடம் நீ ரேணுவின் மகனா என்று வினவியது பரசுராமிற்குப் பிடிக்கவில்லை. தன் தந்தை தன் அம்மாவைச் செல்லமாய் அழைக்கும் ரேணு என்ற உச்சரிப்பை பிறன் ஒருவன் வாயில் இருந்து கேட்டபோது நான் மேஜர் ஜெகந்நாதன் மகன், எங்க அப்பா ராணுவத்தில் வேலை செய்கிறார். எங்க அம்மா பேர் ரேணு அல்ல, ரேணுகா என்று சொல்லி நகர்ந்திருக்கிறான். பிறிதொருநாள் தன் தாயை அந்த சிவத்த இளைஞனுடன்சந்தேகப்படும் நிலையில் காணநேர்ந்தது. அதற்குப்பின் அவள் திடீரென்று இறந்து போனாள். அவள் ஏன் இறந்து போனாள் என்பது ஊருக்குப் புதிராய் இருந்தது. ஆனால் தந்தைக்குத் தெரிந்திருந்தது. பிறகு அவளின் முதல் திவசத்தில் ஜகந்நாதன் உடன் இருந்தார். பின் ஏகாந்த வாழ்வு.பரசுராம் கனவில் தந்தை அடிக்கடி வந்து போனார். காக்கி உடை களைந்து மரவுரி தரித்து ஜடாமுடி தரித்து ஜகந்நாதன் மறைந்து போய் ஜமதக்கினி முனிவராய் தோன்றிப் போனார். அதன்பின் பரசுராம் மாத சம்பளம் தரும் வேலையைத் துறந்து இமயமலைச்சாரல் சென்று தேடிஅலைந்து ஒரு குகையில் துறவி ஒருவரைச் சந்திக்கிறான் அவர்தான் பரசுராம தீர்த்தம் செல்! என்று வழிகாட்டுகிறார். அதனால்தான் இங்கு வந்து நிற்கிறான். தான் வாழ்க்கையில் எதிலும் நிலைத்து நிற்க முடியாமல் தடுமாற்றம் நிறைந்து நின்றதற்கான காரணம் இங்கு கிடைக்கும் என நம்புகிறான் பரசுராம்.

இங்கு பித்ருதர்ப்பணம் செய்து விட்டால் தன் பாரம் குறையும் என்றும் நம்புகிறான். தான் பலநாள் மேற்கொண்ட தீர்த்தயாத்திரையின் நிறைவு இன்று கிட்டும் என்றும் கருதுகிறான்.

குறிப்பு

மணலில் படுத்தபடி நினைவுகளுக்குள் மூழ்கிப்போன பரசுராம் கிழக்கு வெளுத்ததை அறிந்தான் இல்லை. அவன் அருகே ஒரு புரோகிதர் என்ன? பித்ருதர்ப்பணம் தானே எனக் கேட்ட குரல் அவன் மூளையைச் சென்று எட்டவில்லை. அவனின் தீர்த்த யாத்திரை நிறைவுபெற்றிருந்தது

**ஊர்ப்பெயர்**

தினகரன் தெரியாத சந்து பொந்துகளில் நுழைந்து ஒரு வழியாகப் பேருந்து நிலையத்தை வந்தடைந்தான். பேருந்தில் பெரிய கூட்டம் ஏதும் இல்லை. கண்டக்டர் டிக்கட்டைக் கொடுத்துக் கொண்டிருந்தார். பஸ்சை சீக்கிரம் எடுக்க மாட்டார்களா என்று தினகரனுக்குத் தோன்றியது. அந்த நேரத்தில் பின்பக்கமாகப் பலர் வந்து ஏறினர். அவர்கள் தன்னைத்தான் தேடி வருகின்றனர் என்பது தினகரனுக்குத் தெரிந்தது. எனினும் தன்னை நிதானமாக வைத்துக் கொண்டான். அவர்கள் பின்பக்கம் வந்து அவனின் சட்டடையைப்பிடித்து, உடனே கிளம்பினால் எப்படி? தலைவர் இன்னும் பேச வேண்டியது இருக்கிறது கூட்டிவரச் சொன்னார் என்றனர். தினகரனுக்கு சென்றால் உயிருடன் திரும்பி வர மாட்டோம் என்பது தெரிந்தது. அந்த நேரத்தில் டிரைவர் பஸ் எடுக்கத் தொடங்கினார். வந்தவர்கள் தினகரனுடன் விவாதம் செய்தனர். கண்டக்டர் சண்டை செய்பவர்கள் இறங்குங்கள் என்று கூறி இறக்கிவிட்டார், இப்போது அவர்கள் தினகரனைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு நடந்தனர். அவர்களின் செயலினைக் கண்ட ஒரு பெரியவர் அவன்தான் வரமாட்டேன் என்கிறானே விடவேண்டியதுதானே என்றார். அதற்கு அவர்கள் இவன் ஒரு ஒற்றன் என்றனர். தினகரன், நான் ஒற்றன் இல்லை பொய் சொல்லுகின்றனர் என்றான். இருந்தும் அவர்கள் விடும்படி இல்லை.

தினகரன் வேறு வழியின்றி நான் ஒற்றன் எனில் போலீஸ் நிலையத்தில் வைத்துப் பேசிக்கொள்ளலாம் என்றான். அதற்குக் கூட்டத்தில் நின்றிருந்த பலர் ஆதரவாகக் குரல் கொடுத்தனர். அப்போது முன்னால் வந்து பேசிய அதே பெரியவர் அவன் சொல்வது சரிதான் போலீஸ் நிலையத்தில் வைத்துப் பேசிக்கொள்ள வேண்டியதுதான்

குறிப்பு

என்றார். அப்போதுதான் அந்தப் பெரியவர் தினகரனைக் கூர்ந்து கவனித்தார். தம்பி உனக்கு எந்த ஊர்? என்றனர். தினகரன் உங்க ஊர்தான் என்றான். மேலும் நீங்க உண்ணாமுலைக்கடை, பஸ்ஸ்டேசன் பக்கம் கஜமுகவிலாசம் ராமரெட்டி தானே! எனக்கு ஊர்ப்பெயரையும் அம்மன் பெயரையும் சொல்லித் தந்ததே நீங்கள்தான். ஒருமுறை நான் ஊர்ப்பெயரை உண்ணாமலைக்கடை என்று சொன்னபோது அம்மன் படத்தினைக்காட்டி உண்ணாமலை அல்ல, உண்ணாமுலை என்று திருத்தியதுடன் அபீதகுசம்மா என்கிற சமஸ்கிருதச் சொல்லையும் சொன்னது நீங்கள்தான் என்றான். இப்பொழுது பிரச்சினை செய்தவர்கள் இவன் பொய் சொல்லுகிறான் நம்பாதீர்கள் என்றனர். ஆனால் அந்தப் பெரியவர் போலீஸ் நிலையம் நோக்கி தினகரனுடன் நகர்ந்தார். பிரச்சினை செய்தவர்கள் காணாமல் போயினர். பெரியவர் தினகரனை பேருந்தில் ஏற்றி இது நம்ம ஊர்தான் போகிறது செல் என்று அனுப்பி வைத்தார்.

ஒழுங்காக உச்சரிக்கப்பட்ட ஊரின் பெயரால் கிடைத்த ஞானம் தன்னை காத்ததை எண்ணி மகிழ்ந்தான் தினகரன்

## விமோசனம்

ஞானம்பிகா கல்லூரிப் பேராசிரியை. பெண்கள் கல்லூரி ஒன்றில் பணியாற்றி வருகிறார். அவர் பணியாற்றும் கல்லூரி அமைந்திருக்கும் ஊரில் அமைந்துள்ள ஹோட்டலில் காபரே நடனம் நடைபெறுகிறது. ஞானாம்பிகா அதனை எதிர்த்துக் குரல் கொடுக்கிறார். அந்நடனம் பெண்களை இழிவு படுத்துவதாய் அமைகிறது என்பது அவருடைய வாதம். அதற்குப் பெண்களிடம் அதிகமான ஆதரவு கிடைக்கப் போராட்டம் வலுக்கிறது. இந்நிலையில் அவர் பணிபுரியும் கல்லூரியில் விழா ஒன்று நடைபெறுகிறது. அதற்கு மிகச்சிறந்த பாடகரான புஷ்பராஜ் வருகை தருகிறார். அவருடைய பாடலைக் கேட்ட மாணவிகள் ஆர்ப்பாட்டம், கூச்சல் போன்றவற்றைச் செய்கின்றனர். மேலும் ஒருபடி மேலே சென்று புஷ்பராஜ் மேல் விழுவதும் அவருக்கு முத்தங்கள் கொடுப்பதுமாய் எல்லை மீறுகின்றனர். இதையெல்லாம் பார்க்கும் ஞானாம்பிகா அரங்கத்திலிருந்து வெளியேறுகிறார். தன் அறையில்

**குறிப்பு**

அமர்ந்து மாணவிகளின் செயலினைப் பற்றிச் சிந்திக்கிறார்: ஒருவேளை எதிர்பாலினக் கவர்ச்சி என்றாலும் இதற்கு முன் பாடகி சர்மிளா அருகில் இருந்த ஆண்கள் கல்லூரிக்குப் பாட வந்திருந்த போது அங்கிருந்த மாணவர்கள் கூச்சல் போட்டு தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனரே அன்றி இவ்வாறு எல்லை மீறி நடந்து கொண்டதில்லையே. ஒருவேளை பெண்கள் தங்களையே இன்னும் சரிசெய்து கொள்ள வேண்டியிருக்கிறதோ? என்று பலவாறாகச் சிந்திக்கின்றார்.

அத்தகைய நேரத்தில் பெண்கள் விமோசன சங்கம் என்பதில் இருந்து கனகாம்பாள் பேசுகிறார். காபரேயினை எதிர்த்து ஊர்வலம் இன்று ஐந்து மணிக்குத் தொடங்குகிறது. நீங்கள் வரவேண்டும் என்கிறார். கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வைப் பார்த்த ஞானாம்பிகா வரஇயலாது என்கிறார். அதற்கு கனகாம்பாள் ஊர்வலத்திற்கு வர முடியாவிட்டாலும் ஊர்வலம் நிறைவடையும் ஹோட்டல் சொர்க்கத்திற்கு ஆறரை மணிக்கு வந்து விடுங்கள் என்கிறார். மறுக்க இயலாது ஞானாம்பிகா ஒத்துக்கொள்கிறார். ஹோட்டல் சொர்க்கத்திற்குக் கிளம்பும் போது உடற்கல்வி இன்ஸ்ரக்டர் ஹர்ஷவர்த்தன் தான் இந்த வழியில்தான் செல்கிறேன் உங்களை அங்கு விட்டுவிடுகிறேன் என்று அழைத்துச் செல்கிறான். காரில் செல்லும்போது செக்ஸ் என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவானதுதான் காபரே நடனத்தைப் பார்ப்பவர்கள் ஆண்கள் மட்டுமல்ல அந்த ஆண்களுடன் வரும் அவர்களின் மனைவியராகிய பெண்களும்தான். இவ்வளவு ஏன்? என்னுடைய மனைவியே என்னை அழைத்துச் செல்லுமாறு கூறினாள் என்கிறான். ஞானாம்பிகா அவனுடன் விவாதம் செய்ய விரும்பாது கேட்டுக்கொண்டே பயணிக்கிறார்.

ஞானாம்பிகா ஹோட்டல் வாசலில் காத்து இருந்தபோது போலீஸ் வருகிறது. கிரிக்கெட் ஆட்டம் முடிந்து அறைகளில் தங்கியிருந்த ஆட்டக்காரர்களுடன் பெண்களும் அரைகுறை ஆடைகளுடன் வெளியே வந்தனர். பெண்கள் குழறல் மொழியுடன் வெளிவந்ததுடன் நாங்கள் ரசிகைகள் அதனால் என்ன? என்று பேசினர். அறையைப் பூட்டிக்கொண்டு பேச என்ன இருக்கிறது? என போலீஸ் வினவியது. பெண்களின்

இத்தகைய நிலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஞானாம்பிகா ஆபாச எதிர்ப்பு ஊர்வலத்தின் நிறைவில் பங்குபெறாது திரும்பினார்.

குறிப்பு

இக்கதை பெண்கள் தங்களை சரிசெய்து கொள்ளாது நடத்தும் போராட்டங்களால் ஒருபயனும் விளையப் போவ தில்லை என்பதனை விளக்கி நிற்கிறது.

## மூவந்தி

தெருவில் ஆட்டோ வந்து நிற்கும் ஓசை கேட்டது, மோந்தி வரும் நேரத்தில் தெருக்கதவை இப்படியா அடைத்துக் கொண்டு படுத்திருப்பாய்! என்று கேட்டவாறு உள்ளே நுழைந்தாள் காமாட்சி. அதனைக் கேட்டவாறே படுத்திருந்தார் ஹரிஹரபுத்திரன். மேலும் மூவந்தி நேரத்திலே வீட்டிற்கு வரும் மகாலெட்சுமிக்கு உன்னைப்போல் கதவைத் திறந்து கொண்டு வரத் தெரியாதா? என்றொரு கேள்வியையும் கேட்டுவைத்தார். காமாட்சி அதனைக் காதில் வாங்காததுபோல் முகம் கைகால்களைக் கழுவிக்கொண்டு விளக்கைப்பொருத்தி பூவை வைத்து வழிபட்டாள். காமாட்சி தும்பைப் பூப்போல் நரைத்துவிட்ட தலைமுடி. ஆனால் கிழவியென்றோ பாட்டி என்றோ பிறர் அழைப்பதைத் தாங்காத மனம். ஹரிஹரபுத்திரன் காமாட்சியைவிட நூறு சந்திரோதயங்களைக் கண்டு விட்ட கிழவன் என்ற தோற்றம் கொண்டவர். காமாட்சி சாமிகும்பிடும்வரை காத்திருந்தவர் போன விசயம் என்னவாயிற்று என்று கேட்டுவைத்தார். உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப்போகிறேன் என்றவள் ஒரு மடக்கு நீரை குடித்துவிட்டு அருகில் வந்து அமர்ந்தாள். உங்கள் மருமகள் உங்களை ரொம்ப விசாரித்தாள். பெயரனையும் அழைத்துக் கொண்டு வந்து உங்களைக் காணவேண்டும் என்று நினைத்தாளாம். ஆனால் வேலைப்பளுவால் முடியவில்லையாம். அதனை நம்புகிறாயா காமாட்சி என்றார் ஹரிஹரன் காமாட்சி நம்பாமல் என்ன செய்வது? என்றாள்.

அப்போது அவருக்குத் தன் மகனின் நினைவு வந்தது. வேகமாக எழுந்திருத்து ஐயப்பன் படம் அருகே சென்று வணங்கியவர் அதனுள் இருந்து பழுப்பேறிப்போன காகிதத்தினை எடுத்தார். அது அவரது மகன்

அவருக்கு எழுதிய கடிதம். அப்பா. நான் உங்களையும் அம்மாவையும் தூரத்தில் விட்டுவிட்டு இங்கு வந்ததை சரியென்று சாதிக்கவோ நியாயப்படுத்தவோ எழுதவில்லை. எவ்வளவு நாள்தான் வேலை இல்லாமல் உங்கள் சொற்ப பென்ஷன் பணத்தில் பங்கு போட்டுக்கொண்டு வாழ்வது. கிரேஸிக்கு இங்கு ஜெர்மனியில் நல்ல வேளை என்று தெரிந்து கொண்டுதான் வந்தேன். மற்றதெல்லாம் ஐயப்பன் சித்தம் என்று எழுதியிருந்தான். படித்தபொழுது அவருக்கு கண்ணீர் வந்தது. அவ்வாறு எழுதிய தன் மகன் கார் விபத்தில் இறந்து போனான் என்று செய்திதான் வந்தது. கார் விபத்தில் செத்தானோ, இல்லை கிரேஸிக்கு அடங்கிப் இருக்கவில்லை என்பதற்காக கொல்லப்பட்டானே? இந்தக் குழந்தை கூட அவனுக்குப் பிறந்ததோ வேறு எவனுக்கும் பிறந்ததோ என்றார் ஹரிஹரபுத்திரன். காமாட்சி வாயை மூடுங்கள் என்றாள் அவர் அடங்கிப்போனார். கிரேஸியின் டிரைவர் மூலம் தனக்குக் கிடைத்த செய்தியை மனைவியிடம் இருந்து மறைத்தார். தன்மகன் கொல்லப்பட்டான் என்பதனை மனைவியிடம் சொல்லும் தைரியம் அவருக்கு வரவில்லை. தன் மகனும் தன்னிடம் வந்து நீங்கள் செய்ததுதான் சரி, அம்மா வயதானவள் தாங்கமாட்டாள் என்று சொல்வதுபோல் அவருக்குத் தோன்றியது.

## வழிபாடு

முத்துக்குமரன் பேசும் வரைக்கும் முத்து அவரைப்பார்த்துக் கொண்டிருந்தான். முன்பு முத்துவின் முகத்தில் இல்லாத முதிர்ச்சி இப்போது இருப்பதுபோல் தோன்றியது. சென்னை நண்பன் உமாமகேஸ்வரனிடம் இருந்து தான் முத்துவினைப் பற்றிய கடிதம் முத்துக்குமரனுக்கு வந்தது. என் தம்பி மகன் முத்து அங்கு வருகிறான். அவன் யாரிடமும் அவ்வளவு எளிமையாகப் பழகுகிறவன் இல்லை. எனவே அவன் தங்க இடம் பார்த்துவை என்ற வந்திருந்தது. அதனை ஏற்று பக்கத்தில் இருந்து கும்பலிங்கம் பிள்ளை லாட்ஜில் இடம் பார்த்து வைத்தார். பின் முத்துக்குமரனுக்கு மாற்றலாகி வேறு ஊர் சென்றுவிட பார்ப்பது அரிதாகிவிட்டது, பின் எப்போதாவது அவனுடன் வேலைபார்க்கும் கல்யாணராமனைப் பார்க்கும் போது விசாரிப்பதோடு சரி.

இப்போது முத்து மதம் மாறப்போவதாய் செய்தி. அதனாலே முத்துக்குமரன் அவனைச் சந்திக்க வரச்சொல்லி இருந்தார். முத்துவே தொடங்கினான். நீங்க என்னை ஏன் வரச்சொன்னீர்கள்? என்பது எனக்குத் தெரியும். நீங்கள் நினைப்பது போல் பீட்டர் கெட்டவன் இல்லை. என்னுடன் வேலை பார்ப்பவன். நான் கல்லூரியில் படித்த காலத்தில் பெரியார் இயக்கவாதிகளிடம் சேர்ந்து கடவுள் மறுப்பு போஸ்டர்கள் ஒட்டி வீட்டில் அடி வாங்கியிருக்கிறேன். எனவே எனக்கு வழிபாடு பற்றிய கேள்விகள் உண்டு. பீட்டர் சர்ச்சுக்கு என்னை அழைத்ததில்லை. அவன் கூட நான்தான் சென்றேன். தொடக்கத்தில் சர்ச்சு வாசலில் நிற்பேன். பின் சர்ச்சுக்குள் சென்று வழிபடத் தொடங்கினேன். ஒருமுறை பீட்டர் அழைத்தான் என்று அவன் ஊருக்குச் சென்று இருந்தேன். அதனால் நான் மதம் மாறப்போகிறேன் என்றும் அவன் தங்கையைத் திருமணம் செய்யப்போகிறேன் என்றும் கூறுகிறார்கள் என்றான். இப்பொழுது முத்துக்குமரன் அது உண்மையில்லையா? என்றதற்கு முத்துவிடம் இருந்து பதில் இல்லை. அவன் கூட நடந்து வந்த முத்துக்குமரன் கோவிலினுள் சென்றார். முத்து வர மறுத்தான். அவரைச் சந்தித்த கல்யாணராமன் முத்து என்ன சொல்கிறான்? என்று கேட்டான். அதற்கு முத்துக்குமரன் நேற்று அவன் வீட்டிற்குப் போயிருந்தேன்.முத்து மதம் மாறப்போகிறானாம், வீட்டில் பெரிய ஏசு படம் வைத்து வழிபடுகிறானாம், ஏதாவது கேட்டால் ஊரைவிட்டு போய்விடுவேன் என்கிறானாம் என்று மட்டும் அவனின் பெற்றோர் கூறினர் என்பதாய் கதை முடிகிறது, இக்கதை வழிபாடு நிலையில் ஏற்படும் கருத்துக்களை முன்மொழிகிறது.

## கோணல்மாணல்

அருண் கலிங்கத்து மாமன்னன் கங்கைகுல நரசிம்மதேவன் பல நூற்றாண்டுகளுக்கு முன் கட்டிய சூரிய கோவிலுக்கு வந்தான். அதன் அமைப்புமுறைமை சிற்பங்களின் சித்திரம் அவனை மயக்கியது. கோயிலுக்குள் நுழைந்ததும் குப்பென்று வியர்த்தது. உள்ளுக்குள் நடுக்கம். வாரத்தின் ஏழுநாட்களைக் குறிக்கும் வகையிலான ஏழுகுதிரைகள் இழுக்கும் ஒற்றைச் சக்கர ரதம் இருபத்து நான்கு மணி

குறிப்பு

நேரங்களைக் குறிக்கும் இருபத்து நாலு சக்கரத் தேரின் குறியீடு. கோயிலினுள் நுழைந்தால் நிர்வாணச் சிற்பங்கள். தனக்கு விவரம் தெரியாத வயதில் வந்து கண்ட கோணல்மாணல் சிற்பங்களின் அழகு. பின் போலீஸ் வேலையில் சேர்ந்து கண்டவர்களுடன் உறவு கொள்ள அந்தப் பாவத்தின் சம்பளமாய் உயிர்க்கொல்லி நோய். அதற்குத் தீர்வு கிடையாதா என்று தேடி வந்தான். கோயிலினுள் செல்லச் செல்ல யாரோ வந்து அழைத்துச் செல்வதுபோல் தோன்றியது. அழைத்துச் சென்றவன் நாங்கள் கும்பகோணம் பகுதியைச் சேர்ந்தவர்கள். இந்தக் கோயில் கட்ட வந்தோம். அரசன், குறித்த காலத்தில் கோயிலை முடிக்கவில்லை என்றால் சிரச்சேதம் என்று கூறினான். உணவு உறக்கம் மறந்து உழைத்தோம். குடும்பம் பிள்ளைகளை மறந்தோம். எனினும் கலசத்தை மேலேற்ற முடியவில்லை. அப்போதுதான் என் மகன் ஆறு வயதானவன் வந்தான். எங்களை எல்லாம் உறங்கச் சொல்லிவிட்டு ஒரே இரவில் கலசத்தை மேலேற்றினான். ஆனால் எங்களால் முடியாததை அவன் முடித்தான் என்றால் எங்கள் மானம் போய்விடும் அல்லவா? அதனால் கோபுரத்தின் மேலிருந்து குதித்து உயிரை விட்டான் என்று கூறினான். அந்தப்பிரமையில் இருந்தான் அருண். மறுநாள் வந்த சுற்றுலாப் பயணிகள், கைடுகள் கண்ட காட்சி கோரமாய் இருந்தது. அருண் கோபுரத்தின் மேலிருந்து குதித்து உயிரை விட்டிருந்தான்.

## கருணைமனு

காலையில் படுக்கையில் இருந்து எழுந்த துணைவேந்தர் ராமசுந்தரத்தின் நெஞ்சினை அந்தச் செய்தி ஏதோ செய்தது. தமிழ் எழுத்தாளர் குமரேசன் நேற்றிரவு மாரடைப்பால் காலமானார் என்பதுதான் அது. மேலே அவரால் பத்திரிக்கையைப் படிக்கமுடியவில்லை. கடந்த ஐந்து மாதங்களுக்கு முன் சூலையில் அவரிடம் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அந்தக் கடிதத்தின் கடைசி வாசகங்கள் இப்படி இருந்தன.பிழைப்புக்காக ஒரு வேலையைப் பார்த்துக் கொண்டு நல்ல இலக்கியம் படைக்க போதிய ஓய்வின்றி இரவில் உழைத்ததால் இதயத்தில் வியாதி பீடித்து ஒவ்வொரு கணமும் மரணத்தை நேருக்கு நேர் கண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.இந்நேரத்தில் என் ஆசை என்

குறிப்பு

மகளை மருத்துவம் கற்பித்து என்னைப் போன்ற இதய நோயாளிகளுக்கு உதவும் ஒரு ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் ஆக்க வேண்டும் என்பதுதான். தார்மீக நியாயத்தையும் இறையருளையும் மிக்க வலிமையுடையவை என்று மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கும் தாங்கள் இவ்விஷயத்தில் இப்போது உதவாமல் இருந்து விட்டால் பிறகு பச்சாதாபப்பட வேண்டியிருக்கும் என்று கூறி முடிக்கிறேன் என்பதாகும். அந்தக் கடிதம் வந்தபோது துணைவேந்தர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால் தற்போது அப்படியே நடந்து விட்டது. இது பச்சாதாபமா! என்று ஒருமுறை கேட்டுக் கொண்டார். பழைய நிகழ்வுகள் அவருக்குள் வந்து போயின. கடந்த பிப்ரவரி மாதத்தில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மண்டபத்தில் வைத்து நடந்தது தமிழ்விழா. தமிழ் எழுத்தாளர்களை அழைத்துக் கௌரவித்த விழா. குமரேசனுக்கும் அழைப்பு போயிருந்தது. அவரின் ஆடம்பரமில்லாத எழுத்து ஆசிரியர் மத்தியிலும் துணைவேந்தர் மத்தியிலும் பெரும் மதிப்பை ஏற்படுத்தி இருந்தது. அந்த விழாவில்தான் மருத்துவ சீட்டு தமிழ் இலக்கியவாதிகளின் பிள்ளைகளுக்கும் ஒதுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குத்தான் குமரேசன் விண்ணப்பித்திருந்தார். அப்பொழுது துணைவேந்தர் அதற்குப் பெரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இப்போது தோன்றிய கருணையில் குமரேசன் மகளின் மருத்துவக்கல்லூரி அட்மிஷன் பைலை எடுத்து வருமாறு கூறினார். அதில் குமரேசன் எழுதிய கவிதை ஒன்று இருந்தது. அதில் குமரேசன்,

பணபலம் ஆள்பலம் இல்லை
அரசியல் செல்வாக்கும் இல்லை
கொடுத்தே கரம் சிவந்த
கொடைவள்ளல் தங்களை
கண்ணனை நாடிய
குசேலனாய் நாடி
யாசிக்கிறேன்

குறிப்பு

என்று எழுதி இருந்தார். உடன் துணைவேந்தர் கல்லூரி முதல்வரைத் தன்னை வந்து பார்க்குமாறு தன் செயலரிடம் சொல்லி அனுப்பினார்.

## தூது

தண்டாயுதத்தின் மகளின் கல்யாணத்திற்கான வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன. ஊர்ப்பெரியவர்களான நமசிவாயமும் சுப்பையாவும் சிவாநந்தமும் தண்டாயுதத்தைப் பார்க்க வந்திருந்தனர். தண்டாயுதம் சிரித்துக்கொண்டே அவர்களைப் பார்த்துக் கேட்டார். என்ன? இன்று மூன்று பேரும் சேர்ந்தே வந்திருக்கிறீர்கள்? மூவரும் எப்படிப் பேச்சைத் தொடங்குவது என்று தெரியாமல் விழித்தனர். பிறகு சிவானந்தமே தொடங்கினார். தண்டாயுதம் என்ன இருந்தாலும் உன் மகளின் கல்யாணத்திற்கு உன் அப்பா, அம்மாவை அழைக்காமல் எப்படி? இதுவரை அமைதியாயிருந்த தண்டாயுதம் தன் கோபத்தைக் காட்டினார். போய் அழைக்காமல் இல்லை, பலமுறை போய் அழைத்தாயிற்று.கல்யாணம் நிச்சயித்தபோதே நேரில்போய்ச் சொல்லியாச்சு,அதுக்கு அப்புறமும் நானும் என் பெண்டாட்டியும் மகனும் நேரே போய்ச் சொல்லிட்டோம். அவர்கள் பேத்தி கல்யாணம் தானே, தானே வரவேண்டியதுதானே! அவர்கள் எல்லாம் சொல்லி வரவேண்டியவுங்களா? நான் தெரியாமல்தான் கேட்கிறேன்? அவர்கள் இந்த பூர்வீக வீட்டில் இருந்திருந்தால் அழைக்க வேண்டும் அப்படின்னு சொல்லமுடியுமா? தம்பி வீட்டில போய் இருப்பதால்தானே இவ்வளவு சிக்கல்களும் என்றார்.

ஆனால் தண்டாயுதத்தின் அப்பாவோ பஞ்சாயத்திற்கு வந்திருந்த மூவரிடமும் என்ன இருந்தாலும் நாங்கள் பெற்றவர்கள் இல்லையா? ஒருமுறை வந்து அழைத்தால் என்ன குறைஞ்சா போய்விடுவான் என்று சொல்லி அழுதனர். இந்த உருக்கம்தான் மூவரையும் தண்டாயுதத்தை நோக்கி அனுப்பியது, இதை தண்டாயுதத்திடம் சொல்லினர் மூவரும். தண்டாயுதம் மேலும் கோபம் ஆனார். அவருக்கு அந்த வயதில் இவ்வளவு வீம்பு இருக்குமானால் அவரை விட முப்பது வயது கம்மியானவன் எனக்கு ரத்தம் எவ்வளவு சூடா இருக்கும். குப்பனும்

குறிப்பு

சுப்பனும் வந்து சொன்னால் எல்லாம் கூப்பிட முடியுமா? என்று அவமானப்படுத்தி அனுப்பிவிட்டார். திருமணம் முடிந்தது. மூவரும் திருமணத்திற்கும் போகவில்லை. திருமணத்திற்கு வந்தவர்கள் எல்லாம் தண்டாயுதத்தின் தாய் தந்தையரைப் பார்த்து விசாரித்து விட்டுத்தான் சென்றனர். அவர்கள் எல்லாரிடமும் ராமலெட்சுமி தன் மகன் அழைக்காததைச் சொல்லி அழுது தீர்த்தாள். இரவு மணி பனிரெண்டு இருக்கும். ராமலெட்சுமி தன் கணவனிடம் மெதுவாகக் கேட்டாள் எல்லாரும் போய் இருப்பார்கள். நாம போய் ஒருமுறை பார்த்துவிட்டு வருவோமா? அதற்கு அவர் சொன்னார், இந்நேரத்திலா? அதுவும் நமக்காகத் தூது போன மூவரையும் அவன் அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான் என்பதற்காக அவர்கள் மூவரும் கல்யாணத்திற்குப் போகவில்லை.

நாம் போனால் நன்றாக இருக்குமா? என்றார். ராமலெட்சுமிஅமைதியானாள். அவள் மனதிற்குள் விசும்புவது கேட்டது. உறவுகளைத் தாண்டி கோபம் போன்ற உணர்வுகள் மனிதனை சில சமயம் தன்னிலையில் இருந்து தாழ்ந்து போகச் செய்கிறது என்பது இதன் மூலம் தெரிகிறது.

## இரு கணவர்கள்

ஊரின் கலகலப்பில் இருந்து சற்றே விலகி இருந்தது அந்தப் தென்னந்தோப்பு. அந்தத் தென்னந்தோப்பில் தனியாக வளர்ந்து நின்ற அந்தப் பலாமரம் அதன் அருகில் வந்து நின்றார் அந்த மனிதர்.ஒரு காலத்தில் அரசன் ஒருவன் பிறந்த போது அவனுடன் சேர்த்து கழுமரம் ஒன்றும் பிறந்ததாய்ப் புராணத்தில் படித்த நினைவு அவர் மனதினுள் ஓடியது. அதைப்போல் அந்தப் பலாமரமும் தனக்காகத் தோன்றியிருக்குமோ? என்று நினைத்தார். வீட்டில் வார்த்தை களால் குத்திக்கிழிக்கும் மனைவி சற்றும் மதிக்காத சக ஊழியர்கள். ஏளனமாய்ப் பார்க்கும் உறவுகள் அவற்றால் முதல் ஹார்ட் அட்டாக்கைச் சந்தித்ததுதான் மிச்சம். அப்போது டாக்டர் வாழ்க்கையில் எல்லாவற்றையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளப் பழகிக்கொள்ளுங்கள்! அதுதான் நல்லது என்று அறிவுரை கூறியிருந்தார். ஆனால் அவரால்

**குறிப்பு**

அது முடியவில்லை. எனவே வாழ்க்கையை முடித்துக் கொள்வது என்று இங்கு வந்தார். மரத்தில் ஏறி கயிற்றைப் போட்டுத் தூக்கில் தொங்க எத்தனித்தபோது யாரோ வருவது தெரிந்தது. உடன் கயிற்றைக் கழட்டிக்கொண்டு மரத்தின் பின்னால் ஒளிந்து நின்றார். வந்தவன் இருபத்தைந்து வயது இளைஞன். அவனும் மரத்தின் அடியில் வந்து நின்றான். மரத்தினை உற்றுப்பார்த்தான், பின் தன் பையில் இருந்த போட்டோவினை ஒருமுறை எடுத்துப் பார்த்தான். அழுவது தெரிந்தது. தான் கையில் கொண்டு வந்திருந்த நைலான் கயிற்றை எடுத்து மரத்தில் போட்டுத் தூக்கிட முயற்சித்தான். உடனே அந்த மனிதர் ஓடிப்போய்த் தடுத்தார். அவன் தன் முயற்சியை நிறுத்திவிட்டு அவரைப்பார்த்தான், இந்த வயதில் என்ன பிரச்சினை? உயிரை மாய்த்துக் கொள்ள? என்றார். மனைவிதான் பிரச்சினை? மாமியாரை என் மனைவி மதிப்பதில்லை. என் அம்மாவும் விட்டுக் கொடுத்துப் போவதில்லை. தினந்தோறும் சண்டைதான் என்றான். அதற்கு அந்த மனிதர் இதுவெல்லாம் பெரிய பிரச்சினையா? அடுத்தவர்கள் செய்யும் தவற்றிற்கு நாம் ஏன்? உயிரை மாய்த்துக் கொள்ளவேண்டும்? பசிக்கிறது வா ஏதாவது சாப்பிடலாம் என்று கூறி அழைத்துச் சென்றார். இந்தச் சிறுகதை கணநேரத்தில் எடுக்கும் முடிவே தற்கொலை என்பதையும் அந்த நிமிடம் கடந்து போனால் ஒருவர் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர்த்து விடலாம் என்பவதையும் இந்த உலகத்தில் எல்லாருக்கும் பிரச்சினைகள் உண்டு, பிரச்சினைக்குத் தீர்வு தற்கொலை அல்ல என்பதையும் விளக்கி நிற்கிறது.

## திறந்த கடிதம்

தான் கையில் வைத்திருந்த கடிதத்தினைப் படிக்கவேண்டும் என்று கூடத் தோன்றவில்லை ரமாகோபிகுமாருக்கு. ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ராதாகிருஷ்ணனின் நாவலுக்கு தான் எழுதிய விமரிசனத்திற்கான பதிலாய் அந்தக் கடிதம் வந்திருந்தது. ரராதாகிருஷ்ணனின் கடைசி அத்தியாயம் நாவல் ஆயிரத்து ஐந்நூறு பக்கங்களைக் கொண்டது. அதை அப்படியே ஒரே மூச்சில் படிக்க வைக்கும் எழுத்து சுவாரசியம் ராதாகிருஷ்ணனின் எழுத்தில் இருந்தது என்பது உண்மைதான். எனினும், அந்த நாவலின் தாக்கம்தான் இந்த விமரிசனத்தை எழுதத் தூண்டியது.

குறிப்பு

**கிதம்** என்கிற ஆங்கிலப் பத்திரிக்கைதான் இந்த நாவலுக்கு விமரிசனம் கேட்டிருந்தது. அதற்காக தான் எழுதியதை வெளியிட்டதுடன் அதற்கு ராதாகிருஷ்ணன் எழுதிய பதில் கடிதத்தினையும் தனக்கே அனுப்பியுள்ளது. இது இருவரையும் சண்டையிடச் செய்யும் உத்தியாக இருக்குமோ என்று கூடத் தோன்றியது.

நாவலை ஒரு வாசகனாகப் படிக்காமல் அவசரஅவசரமாகப் படித்து விட்டு அதில் வரும் பாத்திரங்களை நடைமுறை வாழ்வில் இருக்கும் யாருடனாவது முடிச்சுப் போட்டு அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை தான் எழுதியிருப்பதாய் விமரிசனம் செய்வதில் ஒரு விதமான தந்திரம் இருப்பதாய் ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியிருப்பது உண்மையோ என்று கூட ரமாவிற்குத் தோன்றியது. இதனால்தான் இவ்வளவு கோபம் வருகிறதோ என்ற எண்ணமும் ஏற்பட்டது. தன்னுடைய நோக்கம் அவனால் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதால் ஏற்பட்ட கோபமோ என்று கூடத் தோன்றியது ரமாவிற்கு. ராதாகிருஷ்ணன் அவனின் நாவலை சுயசரிதம் என்று தான் விமரிசனம் செய்ததற்குப் பதில் எழுதியிருந்தான். எனது நாவலை சுயசரிதை என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இலக்கியம் என்பதே வாழ்க்கைதான் என்பது தாங்கள் அறியாததல்ல.

இன்னா செய்தாருக்கும் அவர்கள் நாண நன்னயம் செய்யாவிட்டாலும் அவர்களை சந்திசிரிக்கச் செய்வதல்ல நாவலாசிரியரின் நோக்கம்.அதைக் கூடத் தெரியாதவராய் பொய்த்தூக்கம் நடித்து நாவலையும் நாவலாசிரியரின் வாழ்வையும் கதைசொல்லியையும் எல்லாம் குழப்பி விஷம் துப்பியிருக்கிறீர்கள்.

வக்கணையாக கதைப்பின்னல் இல்லை என்று கூறியிருக்கிறீர்கள்.குறிப்பிட்ட சில பாத்திரங்கள் கதைப்பின்னல்களை வைத்துக்கொண்டு ஸ்டீரியோ டைப் கதைகளை என்னால் எழுத முடியாது. கடைசி அத்தியாயம் போன்ற நாவல்களை ஜீரணிக்க நீங்கள் பல ஜென்மம் எடுக்க வேண்டியிருக்கும் என்பதாய் விரிந்த அந்தக் கடிதத்தினை தொடர்ந்து படிக்க முடியாது ஆத்திரத்தில் கிழித்தெறிந்தார் ரமா.

குறிப்பு

## உத்தியோக காண்டம்

முரளி ஓர் இலக்கியவாதி, சிறந்த எழுத்தாளன். அவனைத் தேடி அவனின் வீட்டிற்கு வருகிறான் ரமணா. அவர்கள் இருவருக்குமான உரையாடலாய் இக்கதை நகர்கிறது. ரமணாவை எதிர்பார்க்காத முரளி நீ கல்பில் அல்லவா இருந்தாய் எப்பொழுது இந்தியா வந்தாய்? லீவு ஏதும் கொடுத்திருக்கிறார்களா? என்று வினவுகிறான்.அதற்கு ரமணா, இல்லை இனிமேல் கல்ப் செல்லப் போவதில்லை இங்கேதான் என்பதுடன் நீ வீட்டில் இருப்பதாய்க் கேள்விப்பட்டே வந்தேன். என்ன ஆயிற்று என்றான் ரமணா. அதற்கு முரளி என்னை கடைக்கோடியில் இருக்கும் பகுதிக்கு இடமாறுதல் செய்திருக்கிறார்கள். உடல்நலம் சரியில்லை என்பதால் விடுப்பில் இருக்கிறேன் என்கிறான்.

முதன்முதலில் இடமாறுதல் தொடர்பாக வந்த ஆணையில் முரளியின் பெயர் இடம்பெறவில்லை. முரளி இலக்கியவாதி என்பதினாலோ என்னவோ நிருவாகம் அவரைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. ஆனால் அந்தப் பட்டியலைப்பார்த்த அஸோஸியேசன் பிரசிடெண்ட் அப்புவிற்குக் கோபம் வந்தது. எப்படி முரளியை டிரான்ஸ்பர் பண்ணாமல் இருக்கலாம்? என்று கோபமாகக் கத்தியதுடன் அதனை மேலதிகாரியின் கவனத்திற்கும் கொண்டு சென்றான். அப்புவுடன் ராமய்யரும் சேர்ந்து கொண்டார். இருவரும் மேலதிகாரியிடம் எப்படி முரளியை மட்டும் டிரான்ஸ்பர் பண்ணாமல் இருக்கலாம். அவன் இங்கே வந்து ஐந்து வருடங்களுக்கு மேல் ஆயிற்று. அவனை மட்டும் எக்ஸம்ட் செய்வதாக இருந்தால் நாங்கள் எல்லோரும் வேலையை விட்டுப் போய்விடுகிறோம். வேலையை எல்லாம் விட்டு விட்டு கதை, கவிதை என்று எழுதிக்கொண்டு இருக்கப் போகிறோம் என்று சண்டை இட்டு டிரான்ஸ்பர் செய்ய வைத்தனர். அதிலும் முரளி வேலைநேரத்தில் கதை, கவிதை எழுதுவது இல்லை. வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும்தான் கதை எழுதுவான். ஆனால் அதையும் குற்றமாக்கி டிரான்ஸ்பர் செய்ய வைத்தனர். ஓர் எழுத்தாளன் இன்னொரு எழுத்தாளனைப் பார்த்து பொறாமைப்படுவதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால் மறந்தும் கூட எழுத்தின் பக்கம் செல்லாத அப்புவும் ராமய்யரும் இச் செயலைச் செய்தது பொறாமையின் தன்மையாலே ஆகும்.

இதே துறையில் வேறு இடத்தில் வேலை பார்த்த அப்பு முரளி வேலைபார்க்கும் அலுவலகத்தில் வேலைபார்த்த சீதாவைத் திருமணம் செய்து கொண்டபின் இந்த அலுவலகத்திற்கு வருவதற்காக தன் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி முரளியை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டே வந்து சேர்ந்தான். மீண்டும் முரளி இங்கு வர மிகச் சிரமப்படவேண்டி இருந்தது. அந்த உணர்வுகூட இல்லாத அப்பு மீண்டும் முரளிக்குத் தீங்கு செய்கிறான். அலுவலகத்தின் வேறு பகுதியின் கிளைக்கு பதவி உயர்வில் செல்லவேண்டிய குமார் வெளிநாடு போயிருப்பதால் அதனை முரளிக்குத் தருவதாய்க் கூறியது நிருவாகம். அதற்கு முரளி இரண்டு மாதங்களில் குமார் திரும்பி வந்ததும் தான் மீண்டும் பதவி இறங்க வேண்டி வரும். அப்பொழுது இந்த இடமும் இல்லாமல் போகும் என மறுத்த போதும் டிரான்ஸ்பர் செய்து அனுப்பினர்.அதில் இருந்து முரளி பாதிக்கப்படுகிறான் என்பதே இக்கதை ஆகும். இக்கதையின் வழி இலக்கியப் பணி ஆற்றுபவர்கள் தம் சகஊழியர்களாலே பழிவாங்கப்படும் அவலம் சமூகத்தில் தொடர்கிறது என்பது வெளிப்பட்டு நிற்கிறது.

**பயிற்சி வினாக்கள்:**

**1.நீலபத்மநாபன் குறித்து எழுதுக.**

நீலபத்மநாபன் 1938 இல் பிறந்தவர். தன் பள்ளிப்பருவம் தொடங்கி எழுதி வருபவர். கேரளப்பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பட்டமும் மின் பொறியியல் பட்டமும் பெற்று கேரள மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராக முப்பது ஆண்டுகள் பணியாற்றியவர்.

பொறியியல் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்து போதே இவர் எழுதிய இன்ஜீனியர் ஓரங்கநாடகம் அகிலஇந்திய வானொலியின் நாடகப்போட்டியில் முதலிடம் பெற்றது. தலைமுறைகள், பள்ளிகொண்டபுரம், உறவுகள், மின் உலகம், வட்டத்தின் வெளியே, இலை உதிர்காலம், தேரோடும் வீதி, கூண்டினுள் பட்சிகள் என்பன போன்ற இருபது நாவல்களை எழுதியவர்.பத்து சிறுகதைத்தொகுதிகள், நான்கு கவிதைத் தொகுதிகள், ஒன்பது கட்டுரைத்தொகுதிகள் முதலியவற்றை வெளியிட்டவர். இவரது படைப்புகள் ஆங்கிலம்,

ஜெர்மன், ரஷிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.சாகித்ய அகாதெமியின் விருதினை இலைஉதிர் காலம் படைப்பிற்காகப் பெற்றவர். மொழிபெயர்ப்புப் பணிக்காக ஐயப்ப பணிக்கரின் கவிதைகள் எனும் நூலிற்கு சாகித்ய அகாதெமியின் விருதினைப் பெற்றவர். உறவுகள் நாவலுக்காக ராஜா சர் .அண்ணாமலைச் செட்டியார் விருது, தேரோடும் வீதிக்காக தமிழக அரசு விருது, போன்றவற்றையும் தஞ்சைத் தமிழ்பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருதினையும் கோவை ரங்கம்மாள் பரிசினையும் பெற்றவர். சாகித்ய அகாதெமி இவர் எழுத்தையும் வாழ்வையும் குறும்படமாக வெளியிட்டுள்ளது.

**2. வானவீதியில் கதையினை விளக்கி எழுதுக.**

வானவீதியில் என்னும் சிறுகதை முதன் முதலில் விமானப் பயணத்தை மேற்கொள்ளும் ஒருமனிதனின் மனதினுள் ஏற்படும் பயம் கலந்த போராட்டங்களை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. ரன்வேயில் இருந்து மேலெழும் விமானத்தினை வருணிக்கும் காட்சியில் கதையும் மேலேழும்பத் தொடங்குகிறது. சபரிநாதன் கதையின் நாயகன். விமானப் பயணத்திற்குப் புதிதான அவன் விமானத்தில் பெல்டினை அணியத் தடுமாறுகிறான். அப்பொழுது அருகில் இருப்பவர் உதவுகிறார். சபரிநாதன் அவரைக் கவனிக்கிறான். அவர் பெயர் சுஜாதன். இருவரும் ஏழெட்டு ஆண்டுகள் ஒன்றாய்ப் படித்தவர்கள். சபரி் சுஜாதனை அவனின் திருமணத்தின் போது சந்தித்தது. பதினெட்டு வருடங்கள் கடந்து போயிற்று. சுஜாதன் திருமணம் ஒரே மேடையில் நடந்த இரண்டு திருமணங்கள். சுஜாதனின் தங்கை மாப்பிள்ளை சுஜாதன் மனைவியின் அண்ணன் ஆவார். சுஜாதன் தன் மனைவியுடன் நன்றாகவே வாழ்ந்தான். ஆனால் அது எல்லாம் இரண்டு வருடங்கள்தான். சுஜாதன் மனைவி தன் குழந்தையைப் பிரசவிப்பதற்காகத் தாய்வீடு சென்றவள், திரும்பி வந்ததில் இருந்தே வாழ்க்கையில் புயல் வீசத்தொடங்கியது. பிரச்சினை பெரிதாக சுஜாதன் மனைவி அவனைப் பிரிந்து தாய் வீடு சென்று விட்டாள். பலர் சமாதானம் பேசியும் வர மறுத்து விட்டாள். அதில் இருந்து சுஜாதன் தனியாக வாழத் தயாராகி விட்டான். சபரி அதனைப் பற்றி வினவ அதற்கு சுஜாதன் ஒரு மனிதனின் வாழ்க்கையில் வளர்ச்சிக்குப் பெரிதும் முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் மனைவியும் குழந்தைகளுமே என்கிறான். பிரிவற்கான காரணம் வினவுகிறான் சபரி.

குறிப்பு

அதற்குச் சுஜாதன் தன் மனைவி கெட்டவனுடன் வாழப்பிடிக்கவில்லை என்று சொன்னதாய்க் குறிப்பிடுகிறான். அதனைக் கேட்ட சபரி நீ கெட்டவனா? என்று வினவ அதற்குச் சுஜாதன் தன் மனைவி தன்னைப் பிரிந்து செல்லும் வரை தான் நல்லவனாகவே இருந்தேன் என்கிறான். மேலும் தன் குடும்பம் மிகப்பெரிய குடும்பம் என்றும் தன்வீட்டில் பலர் வேலை செய்தனர் என்றும் தன் தாய்க்குப்பிறகு அவர்களை வைத்து வேலை வாங்கத் தெரியாத மனைவி அவர்களுள் சிலர் சொன்ன பொய்யான கதைகளை நம்பி தன்னைச் சந்தேகித்தாள் எனவும் குறிப்பிடுகிறான்.அதன் காரணமாய்த் தங்களுக்குள் இரவு நேரத்தில் சண்டை வரும்போதெல்லாம் சண்டை போடப் பிடிக்காமல் தோட்டத்தில் சென்று சிறிது நேரம் அமர்ந்து விட்டு வருவதைத் தன் மனைவி தவறாய் புரிந்து கொண்டு பிரச்சினை செய்தாள் என்கிறான். அதுவே தங்கள் பிரிவிற்குக் காரணமாய் அமைந்தது என்றும் விளக்குகிறான் சுஜாதன். இந்நிலையில் சபரி தன் மனைவியை நினைத்துக் கொள்கிறான். தன் மனைவியும் சுஜாதன் மனைவியைப் போலச் சண்டையிடுபவள்தான், ஆனால் அவர்களின் வாழ்க்கை இன்று வரை தொடர்ந்து சென்று கொண்டுதான் இருக்கிறது எனக் கருதுகிறான். ஆனால் சுஜாதன் வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கலுக்கு அவன் மனைவியின் பெற்றோர் தங்கள் பிள்ளையை வளர்த்த வளர்ப்பு முறை சரியில்லாமல் அமைந்ததே காரணம் என்பதனை உணர்கிறான். சபரி சுஜாதனிடம் மகனைப் பார்ப்பது உண்டா என்று வினவுகிறான். எப்பொழுதாவது தான் சென்று பார்ப்பதாகவும் அவன் படிப்பிற்குத் தேவையான பணத்தினை கொடுத்து வருகிறேன் என்று கூறுகிறான்.இந்த நிலையில் விமானம் கீழே இறங்குகிறது. ஒருமனிதன் எவ்வளவுதான் உறவுகளை வெறுத்து வானில் ஏறிப் பறந்தாலும் ஒருநிலையில் கீழே இறங்கித்தான் ஆக வேண்டும் என்பதனை உணர்த்துவதாய் இக்கதை அமைகிறது.

**3.கருணைமனு கதைப்பொருண்மையை விரித்தெழுதுக.**

காலையில் படுக்கையில் இருந்து எழுந்த துணைவேந்தர் ராமசுந்தரத்தின் நெஞ்சினை அந்தச் செய்தி ஏதோ செய்தது. தமிழ் எழுத்தாளர் குமரேசன் நேற்றிரவு மாரடைப்பால் காலமானார் என்பதுதான் அது. மேலே அவரால் பத்திரிக்கையைப் படிக்கமுடியவில்லை. கடந்த

ஐந்து மாதங்களுக்கு முன் சூலையில் அவரிடம் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அந்தக் கடிதத்தின் கடைசி வாசகங்கள் இப்படி இருந்தன.பிழைப்புக்காக ஒரு வேலையைப் பார்த்துக் கொண்டு நல்ல இலக்கியம் படைக்க போதிய ஓய்வின்றி இரவில் உழைத்ததால் இதயத்தில் வியாதி பீடித்து ஒவ்வொரு கணமும் மரணத்தை நேருக்கு நேர் கண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

இந்நேரத்தில் என் ஆசை என் மகளை மருத்துவம் கற்பித்து என்னைப் போன்ற இதய நோயாளிகளுக்கு உதவும் ஒரு ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் ஆக்க வேண்டும் என்பதுதான். தார்மீக நியாயத்தையும் இறையருளையும் மிக்க வலிமையுடையவை என்று மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கும் தாங்கள் இவ்விஷயத்தில் இப்போது உதவாமல் இருந்து விட்டால் பிறகு பச்சாதாபப்பட வேண்டியிருக்கும் என்று கூறி முடிக்கிறேன் என்பதாகும்.

அந்தக் கடிதம் வந்தபோது துணைவேந்தர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால் தற்போது அப்படியே நடந்து விட்டது. இது பச்சாதாபமா! என்று ஒருமுறை கேட்டுக் கொண்டார். பழைய நிகழ்வுகள் அவருக்குள் வந்து போயின. கடந்த பிப்ரவரி மாதத்தில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மண்டபத்தில் வைத்து நடந்தது தமிழ்விழா. தமிழ் எழுத்தாளர்களை அழைத்துக் கௌரவித்த விழா. குமரேசனுக்கும் அழைப்பு போயிருந்தது. அவரின் ஆடம்பரமில்லாத எழுத்து ஆசிரியர் மத்தியிலும் துணைவேந்தர் மத்தியிலும் பெரும் மதிப்பை ஏற்படுத்தி இருந்தது. அந்த விழாவில்தான் மருத்துவ சீட்டு தமிழ் இலக்கியவாதிகளின் பிள்ளைகளுக்கும் ஒதுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குத்தான் குமரேசன் விண்ணப்பித்திருந்தார். அப்பொழுது துணைவேந்தர் அதற்குப் பெரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இப்போது தோன்றிய கருணையில் குமரேசன் மகளின் மருத்துவக்கல்லூரி அட்மிஷன் பைலை எடுத்து வருமாறு கூறினார். அதில் குமரேசன் எழுதிய கவிதை ஒன்று இருந்தது. அதில் குமரேசன்,

பணபலம் ஆள்பலம் இல்லை

அரசியல் செல்வாக்கும் இல்லை

கொடுத்தே கரம் சிவந்த

கொடைவள்ளல் தங்களை

கண்ணனை நாடிய

குசேலனாய் நாடி

யாசிக்கிறேன்

என்று எழுதி இருந்தார். உடன் துணைவேந்தர் கல்லூரி முதல்வரைத் தன்னை வந்து பார்க்குமாறு தன் செயலரிடம் சொல்லி அனுப்பினார்.

**4.விமோசனம் கதை உணர்த்தும் பெண்களின் நிலையினை தொகுத்துரைக்க**

ஞானம்பிகா கல்லூரிப் பேராசிரியை. பெண்கள் கல்லூரி ஒன்றில் பணியாற்றி வருகிறார். அவர் பணியாற்றும் கல்லூரி அமைந்திருக்கும் ஊரில் அமைந்துள்ள ஹோட்டலில்காபரே நடனம் நடைபெறுகிறது. ஞானாம்பிகா அதனை எதிர்த்துக் குரல் கொடுக்கிறார். அந்நடனம் பெண்களை இழிவுபடுத்துவதாய் அமைகிறது என்பது அவருடைய வாதம். அதற்குப் பெண்களிடம் அதிகமான ஆதரவு கிடைக்கப் போராட்டம் வலுக்கிறது. இந்நிலையில் அவர் பணிபுரியும் கல்லூரியில் விழா ஒன்று நடைபெறுகிறது. அதற்கு மிகச்சிறந்த பாடகரான புஷ்பராஜ் வருகை தருகிறார். அவருடைய பாடலைக் கேட்ட மாணவிகள் ஆர்ப்பாட்டம், கூச்சல் போன்றவற்றைச் செய்கின்றனர். மேலும் ஒருபடி மேலே சென்று புஷ்பராஜ் மேல் விழுவதும் அவருக்கு முத்தங்கள் கொடுப்பதுமாய் எல்லை மீறுகின்றனர். இதையெல்லாம் பார்க்கும் ஞானாம்பிகா அரங்கத்திலிருந்து வெளியேறுகிறார். தன் அறையில் அமர்ந்து மாணவிகளின் செயலினைப் பற்றிச் சிந்திக்கிறார்: ஒருவேளை எதிர்பாலினக் கவர்ச்சி என்றாலும் இதற்கு முன் பாடகி சர்மிளா அருகில் இருந்த ஆண்கள் கல்லூரிக்குப் பாட வந்திருந்த போது

அங்கிருந்த மாணவர்கள் கூச்சல் போட்டு தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனரே அன்றி இவ்வாறு எல்லை மீறி நடந்து கொண்டதில்லையே. ஒருவேளை பெண்கள் தங்களையே இன்னும் சரிசெய்து கொள்ள வேண்டியிருக்கிறதோ? என்று பலவாறாகச் சிந்திக்கின்றார்.

அத்தகைய நேரத்தில் பெண்கள் விமோசன சங்கம் என்பதில் இருந்து கனகாம்பாள் பேசுகிறார். காபரேயினை எதிர்த்து ஊர்வலம் இன்று ஐந்து மணிக்குத் தொடங்குகிறது. நீங்கள் வரவேண்டும் என்கிறார். கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வைப் பார்த்த ஞானாம்பிகா வரஇயலாது என்கிறார். அதற்கு கனகாம்பாள் ஊர்வலத்திற்கு வர முடியாவிட்டாலும் ஊர்வலம் நிறைவடையும் ஹோட்டல் சொர்க்கத்திற்கு ஆறரை மணிக்கு வந்து விடுங்கள் என்கிறார். மறுக்க இயலாது ஞானாம்பிகா ஒத்துக்கொள்கிறார். ஹோட்டல் சொர்க்கத்திற்குக் கிளம்பும் போது உடற்கல்வி இன்ஸ்ரக்டர் ஹர்ஷவர்த்தன் தான் இந்த வழியில்தான் செல்கிறேன் உங்களை அங்கு விட்டுவிடுகிறேன் என்று அழைத்துச் செல்கிறான். காரில் செல்லும்போது செக்ஸ் என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவானதுதான் காபரே நடனத்தைப் பார்ப்பவர்கள் ஆண்கள் மட்டுமல்ல அந்த ஆண்களுடன் வரும்அவர்களின் மனைவியராகிய பெண்களும்தான் இவ்வளவு ஏன்? என்னுடைய மனைவியே என்னை அழைத்துச் செல்லுமாறு கூறினாள் என்கிறான். ஞானாம்பிகா அவனுடன் விவாதம் செய்ய விரும்பாது கேட்டுக்கொண்டே பயணிக்கிறார்.

ஞானாம்பிகா ஹோட்டல் வாசலில் காத்து இருந்தபோது போலீஸ் வருகிறது. கிரிக்கெட் ஆட்டம் முடிந்து அறைகளில் தங்கியிருந்த ஆட்டக்காரர்களுடன் பெண்களும் அரைகுறை ஆடைகளுடன் வெளியே வந்தனர்.பெண்கள் குழறல் மொழியுடன் வெளிவந்ததுடன் நாங்கள் ரசிகைகள் அதனால் என்ன? என்று பேசினர். அறையைப் பூட்டிக்கொண்டு பேச என்ன இருக்கிறது? என போலீஸ் வினவியது. பெண்களின் இத்தகைய நிலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஞானாம்பிகா ஆபாச எதிர்ப்பு ஊர்வலத்தின் நிறைவில் பங்குபெறாது திரும்பினார்.

இக்கதை பெண்கள் தங்களை சரிசெய்து கொள்ளாது நடத்தும் போராட்டங்களால் ஒருபயனும் விளையப்போவதில்லை என்பதனை விளக்கி நிற்கிறது.

குறிப்பு

**5.நீலபத்மநாபனின் கதைகள் வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகளைத் தருக.**

நீலபத்மநாபனின் கதைகளில் காணப்படும் சமுதாயச் செய்திகளைத் தொகுத்து எழுதுதல் வேண்டும்.

# கூறு: 5

# கம்பன் புறத்திணைகள்

## 1. உழிஞைப் போர்

தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்திணைகளுக்கு ஏற்பக் கம்பன் இராமாயணத்தில் போர்ச் செய்திகளை அமைக்கிறான்.

இராவணனின் தலைநகர் இலங்கையாகும். இதைச் சுற்றி மதிலும் அகழியும் இருந்தன. இதற்கு இராவணன் தெய்வக் காவலும் அரக்கர் காவலும் அமைத்திருந்தான்.

அனுமன் கோட்டையைக் கடந்து இலங்கை புகுந்து எரியூட்டிச் சென்ற பின்னர் இராவணன் கோட்டைக்குப் பலத்த காவல் அமைத்திருந்தான்.

**இராவணனின் மந்திராலோசனை**

அங்கு கும்பகன்னன் பகைவரை வேரோடு அழிக்க வேண்டும் என்று கூறுகிறான். இராவணன் விரைந்து செயற்படாமையால் இராமன் அணைகட்டி வானரப் படையோடு இலங்கைக்கே வந்து விட்டான். வந்த பின்னரும் அரக்கர் படை போர் செய்யாது கோட்டைக்குள் இருந்தது. இராமனே போர் தொடங்க வேண்டியதாயிற்று.

குறிப்பு

**மதிற்போர்**

வானரப்படை எழுபது வெள்ளம். அது செய்யும் முதற்போர் மதிற்போரே. இலங்கையின் நான்கு வாயில்களிலும் வானரப் படைகள் நின்றன.

**அங்கதன் தூது**

இராமன் தூது விடுவதே மறமும் நீதியும் என அறிந்து அங்கதனைத் தூதனுப்புகிறான். அவன் இராவணனிடம் "ஒளித்துப் புக்கு உன் ஊரிலே பட்டாய் என்றால் பழி" என்று கூறினான் இராவணன் அங்கதன் உரையைப் பொருட்படுத்த வில்லை.

**உழிஞையும் நொச்சியும்**

நொச்சித்திணை எயில் காத்தலைக் குறிப்பது. உழிஞைத்திணை எயில் வளைத்தலாகும். அங்கதன் வந்தபின் வானரங்கள் 'எயிலை வளைத்தனர்'. இலங்கை மதிலைத் தாக்கியும் அகழியைத் தூர்த்தும் வானரங்கள் போரைத் துவக்கின. முதலில் வானரங்கள் அரக்கரை வென்றன. இராவணன் வடக்கு வாயில் வழியாகக் களம் வந்தான்.

ஒற்றன் சார்த்தூலன் இராவணனிடம் மாருதி மேலை வாயில் உழிஞை வருவதானான் என்று பகர்கிறான். அப்போது நிகும்பன் கூறும்

"ஆயிரம் வெள்ளமன்றே
உழிஞையைத் துடைக்க நொச்சி
உச்சியில் கொண்ட துன்னூர்" என்ற கூற்று சேனைப் பெருக்கத்தையும் கோட்டை காத்தலையும் குறிக்கிறது.

நொச்சிப் போரும் உழிஞைப் போரும் அணிவகுப்புப் படலத்தில் துவங்கி அங்கதன் தூதுப்படலம் முதற்போர் புரி படலம் எனத் தொடர்கின்றன. இங்கு இத்திணைகளுக்குரிய புறத்துறைகள் அமைவது பொருந்தும். ஆனால் இவற்றிற்கு முன்பே ஒற்றுக்கேள்விப் படலம் வீடணன் அடைக்கலப் படலம் ஆகியவற்றிலும் உழிஞைத்துறைகள் இடம்பெறுகின்றன.

**புறத்துறைகள்**

குறிப்பு

உழிஞைத் திணையில் எட்டுத் துறைகளும் தும்பைத் திணையில் ஒரு துறையும் போர்ச் செய்திகளாக இங்கு குறிக்கப் பெறுகின்றன.

**கொள்ளார் தேஎயம் குறித்த கொற்றம்**

இது தொல்காப்பியர் கூறும் உழிஞைத்திணையின் முதல் துறையாகும். இதன் பொருள் தான் வெற்றி கொள்வதற்கு முன்பே பகைவர் நாட்டைக் கைப்பற்றியது போலக் கருதித் தனக்கு வேண்டியவருக்கு அதைக் கொடுப்பதாகும். இத்துறைக்கு உரைதரும் நச்சினார்க்கினியர் “இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது” என்று எழுதுகிறார். இச் செயல் இராமனது வெற்றியை உறுதிப்படுத்துகிறது. இலங்கை மீது இராமனது பற்றின்மையையும் காட்டுகிறது.

**புறத்திறை**

வீடணன் அடைக்கலம் புக்கபின் இராம இலக்குவரும் வானரப் படைகளும் படைவீடு அமைத்து சுவேலமலையின் மேல் தங்குகின்றனர். இது புறத்திருப்பது என்னும் துறையாகும். இத்துறையைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

**குற்றுழிஞை**

இராமனும் படைகளும் வடக்குக் கோபுரத்தில் நின்ற இராவணனைப் பார்க்கின்றனர். சுக்கிரீவன் இராவணன் மேல் பாய்கிறான். இருவரும் மதிற்புறத்தும் அகழியிலும் கடும்போர் புரிகின்றனர்.

இதைத் ‘திறப்பட ஒரு தான் மண்டிய குறுமை’ என்கிறது தொல்காப்பியம். புறப்பொருள் வெண்பாமாலை குற்றுழிஞை என்கிறது. இப்போரில் சுக்கிரீவன் இராவணன் முடியிலுள்ள மணிகளைப் பறித்துக் கொண்டு இராமன் பால் மீள்கிறான். ‘மகுடபங்கப் படலத்தில்’ வரும் பாக்கள் குற்றுழிஞைக்கு விளக்கம் தருவன.

*Self-Instructional Material*

**இகல் மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலம்**

குறிப்பு

இதற்கு இளம்பூரணா் 'தம்முடன் இகலி மதில் மேல் நின்றானை அட்டு அவன் முடிக்கலம் கொண்ட மண்ணுமங்கலம்' என உரை தருகிறாா். இவ்வாறே புறப்பொருள் வெண்பாமாலையும் குறிக்கிறது.

இதற்கு ஏற்பச் சுக்கிரீவன் இராவணனது முடிமணிகளை இராமன் திருவடிகளில் வைக்கிறான். இச் செயலால் சுக்கிரீவன் வானரப் படைகளுக்கு ஓா் உயிா்போல் விளங்கினான் என்று கம்பன் பாடுகிறான்.

இவ் வெற்றியை வீடணன்

"முடி மணி பறித்திட்டாயோ?

இவன் இனி முடிக்கும் வென்றிக்கு

ஆடிமணி இட்டாய் அன்றே"

என்று பாராட்டுகிறான்.

கொள்ளாா் தேஎயம் குறித்த கொற்றம் போலச் சுக்கிரீவன் செய்கையும் இராமன் வெற்றியை உறுதி செகிறது என்று நூலாசிரியா் குறிப்பிடுகிறாா்.

சுக்கிரீவன் தனி ஒருவனாக மதிற்போா் செய்வதைக் கம்பன் 'மகுடபங்கப் படலம்" எனத் தனிப்பலமாகவே பாடுகிறான்.

வானரங்கள் மதிற்போா் செய்வதை 'முதற்போா்ப் படல'த்தில் பாடுகிறான்.

இராமன் 'கொடுமதில் குடுமித் தலைக் கொள்க' என்றான். வானரங்கள் அகழியைத் தூா்த்து மதிலைக் கைப்பற்றின.

**கொற்ற உழிஞை**

மகுடபங்கம் அடைந்த இராவணன் நான்கு வாயில்களிலும் அரக்கா் படையை நிறுத்தினான். மறுநாள் இராமன் கட்டளைப்படி வானரா் எயிலை முற்றும் வளைத்தனா்.

**உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு**

குறிப்பு

இதை நச்சினார்க்கினியர் 'வேந்தனது சிறப்பினை அவன் படைத்தலைவன் முதலியாரும் வேற்று வேந்தன் பால் தூது செல்வோரும் எடுத்துரைத்தல்' என்று விளக்கம் தருவர். அதற்கேற்ப அங்கதன் தூதுப் படலத்தைக் கம்பன் பாடுகிறான்.

அங்கதன் தூது வெற்றி பெருதபோது இராவணன் அங்கதனைப் பிடிக்க ஆணையிடுகிறான். அங்கதன் வந்த அரக்கரைக் கொன்று பேசுகிறான்.

"ஏமம் சார எளியவர் யாவரும்.........போமின் புறத்து" என்கிறான். இவ்வாறு அறம் தழுவுதலை "அறவுழிஞை" எனப் பெயரிட்டுப் புதுத் துறையாக உழிஞைத் திணையில் சேர்க்கலாம் என்ற கருத்தினை நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

**பாசிநிலை**

போர் துவங்குகிறது. வானரங்கள் அகழியைத் தூர்க்கின்றன. மதில்மீது போர் செய்கின்றன

**புறத்தோன் அணங்கிய பக்கம்**

உழிஞைப் போர் தோல்விப் போராகிறது. வானரப் படை தோற்று ஓடுகின்றன. அரக்கர்படை கோட்டைக்கு வெளியே வந்து போரிட ஆயத்தமாகிறது.

**கூழை தாங்கிய எருமை**

வானரங்கள் நிலைகுலைந்து ஓடுவதைக் கண்ட சுக்கிரீவன் இராவணனின் நால்வகைச் சேனைக்கும் முன்னே தான் ஒருவனாக நின்று தடுக்கின்றான். இதைக் 'கூழை தாங்கிய எருமை' எனத் தொல்காப்பியரும் 'எருமை மறம்' எனப் புறப்பொருள் வெண்பாமாலையாரும் குறிப்பர். எருமை மறம் தும்பைத் திணையில் வருவதாகும்.

**குறிப்பு**

இலங்கையில் நடக்கும் முதற்போர் உழிஞைப் போராக அமைகிறது. முதலில் வானரங்கள் இகல் மதில் குடுமி கொண்டு வெற்றி பெற்றன. பின்னர் அரக்கர்கள் வானரங்களைத் துரத்தி வென்றனர்.

தொல்காப்பிய நெறியிலும் புறப்பொருள் வெண்பாமாலை வழியிலும் கம்பன் உழிஞைப்போரை அமைக்கிறான்.

## 2.தும்பைப் போர்

இலங்கைக் கோட்டையின் புறத்தே இராமனுக்கும் இராவணனுக்கும் நடக்கும் தும்பைப் போரைக் கம்பன் முதற்போர்ப் படலத்தில் சித்தரிக்கிறான். மைந்து பொருளாக நடப்பது இந்தப் போர்.

**பூச்சூடுதல்**

முதல்நாள் போரில் இராமனும் இராவணனும் தும்பைப்பூச் சூடிப் போருக்கு வருகின்றனர். மேலும் இரு பூக்களை இராமன் சூடிக் கொள்கிறான். சூரிய குலத்தில் தோன்றியதால் ஆத்தியையும் தெய்வநிலையால் துழாய் மாலையையும் அணிகிறான். இவை அடையாளப் பூவாக சமயப் பூவாக போர்ப்பூவாக அமைகின்றன. 'தும்பை சூடிய இராவணன்' என்று கம்பன் பாடுகிறான்.

முதல்நாள் போரில் இராவணன் தோல்வி காண்பதால் வாகைப்பூச் சூடிச் சென்றதாகக் கம்பன் பாடவில்லை போலும் என்கிறார் நூலாசிரியர்.

**தும்பைப்போர்**

பிரம்மாஸ்திரப் படலத்தில் இந்திரசித்தும் இலக்குவனும் போரிடுகின்றனர். அரக்கவீரர்களைக் கம்பன் 'தும்பையந் தொடையலார்' எனச் சுட்டுகிறான். இலக்குவனோ வானரப்படையோ பூச்சூடவில்லை. இறுதிப் போரில் இராமன் எவ்வகைப் பூவும் அணியவில்லை.

இராம இராவண யுத்தத்திற்கு முன்னர் பல போர்கள் நிகழ்கின்றன. திரிசிரா தூடணன் கரன் முதலியோருடன் இராமன் போர் புரிகிறார். இராமன் தாடகையைக் கொன்ற போர் வேள்வி காக்க-அறம்

குறிப்பு

காக்க நிகழ்ந்த போர். அதில் இராமன் பூச்சூடவில்லை. இலக்குவன் கும்பகன்னன் அதிகாயன் இந்திரசித்து ஆகியோர் எவ்வகைப் பூவும் சூடிலர். வானரப்படையும் பூப் புனையவில்லை.

வாலி சுக்கிரீவன் போரில் இராமனுக்கு அடையாளம் தெரிவதற்காகச் சுக்கிரீவன் "கொடிப்பூச்" சூடுகிறான்.

இதைத் தவிரக் கம்பன் யுத்த காண்டத்தில் நிகழும் போரையே தும்பைப் போராக விளக்குகிறான்.

வெட்சிக்குக் கரந்தையும் நொச்சிக்கு உழிஞையும் எதிர்த்திணை யாதல் போல ஆகாமல் தும்பைக்குத் தும்பையே எதிர்த்திணையாகிறது. ஆகவே இராம இராவணப் போர் தும்பைப் போராகிறது. அதனால் தும்பைத் திணைக்குரிய துறைகள் இங்கு பேசப்படுகின்றன.

**வெருவரு நிலை**

இத்துறை போர் புரியும் வீரனுடைய அஞ்சாமையைப் புலப்படுத்துகிறது. போரில் வீரர்களின் அறுபட்ட உடல் ஆடும். இதனைக் கம்பன் திணைப் பாகுபாடின்றி எல்லாப் போர்க் களங்களிலும் புனைகிறான்.

படைத்தலைவர் வதைப் படலத்தில் பிசாசன் இலக்குவனோடு போரிடுகிறான். போரில் தலை அறுபடுகிறது. அதன் பின்னரும் கொலைத் தொழில் புரிகிறான்.

அதிகாயன் போரில் இலக்குவன் எண்ணிலா அரக்கர்களைக் கொல்கிறான். அவர்களுடைய உடற்குறைகள் ஆடின. தலை அறுபட்ட பின்னும் வில் வீரர்கள் அம்பைச் செலுத்தினர். இப் போரில் கவந்தங்கள் ஆடுவதைக் கம்பன் பல பாடல்களில் புனைகிறான்.

இலக்குவனுக்கும் இந்திரசித்துக்கும் நடக்கும் போரில் துவக்கத்திலேயே கவந்தங்கள் ஆடுகின்றன.

மூலபலவதைப் படலத்தில் கவந்தங்கள் கூட்டமாக ஆடுகின்றன. வானர வீரர்கள் களங் காணச் சென்றபோது அதை வீடணன்

காட்டுகிறான். கவந்தங்கள் ஆடப் பேய்கள் தாளமிடுகின்றன என்கிறான் கம்பன்.

குறிப்பு

ஒரு கவந்தம் ஆடினால் போரில் நாற்பத்தெட்டாயிரம் வீரா்கள் மடிந்திருக்க வேண்டும் என்று ஒரு கணக்கு.

'வெருவரும் நிலை' என்னும் கவந்தம் ஆடும் துறை போரில் இறந்தோரைக் கணக்கிடும் துறையாகவும் அமைகிறது என்கிறாா் நூலாசிரியா்.

**தாா்நிலை**

தனி ஒருவனின் தறுகண்மையையும் வீரத்தையும் காட்டுவதாகும்.

மன்னனை எதிரிகள் சூழ்ந்தபோது வீரன் ஒருவன் தானே சென்று பகைவா்களைத் தாக்குவது 'தாா்நிலை' என்பாா் தொல்காப்பியா்.

புடையை நானே தடுப்பேன் என வீரம் பேசுவது தாா்நிலை என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

இராவணன் சுற்றத்தாரும் படைவீரரும் தங்கள் வீரத்தை மன்னனிடம் கூறிப் பின்னா் போருக்குப் போகின்றனா். கும்பகன்னன் ஒருவனைத் தான் இராவணனே தேடிப் போய்ப் போருக்கு அனுப்புகிறான்.

தம்பி கும்பகா்ணன் சாவைக் கேட்டு இராவணன் துயருறுகிறான். அங்கு இராவணன் மகன் அதிகாயன் வீரம் பேசிப் போருக்குப் புறப்படுகிறான். அடுத்து இராவணனின் சிறந்த மகனான இந்திரசித்து போருக்குக் கிளம்புகிறான். "கொன்றாா் அவரோ கொலை சூழ்க என நீ கொடுத்தாய்" எனத் தந்தையைக் கடிகிறான்.

இதே மாதிரி அசோகவனத்தை அனுமன் அழித்த போதும் "கொன்றனை நீயேயன்றோ அரக்கா் தம் குழுவை எல்லாம்" என்று சினந்து பேசுகிறான்.

இலக்குவன் கணைக்குப் புறமுதுகிட்டு ஓடிவந்த மாபெரும் பாக்கனையும் புகைக் கண்ணனையும் கடிந்து பின்னா் இராவணன் போருக்கு அனுப்புகிறான். புறமுதுகிடல் என்றதன் இழிபும் இங்கு சுட்டப்

பெறுகிறது. படைத்தலைவர்களும் வதைப்படுகின்றனர். பின்னர் கரன் மகன் மகரக் கண்ணன் பலிவாங்கப் புறப்படுகிறான்.

குறிப்பு

**கும்பகன்னன்**

இவன் பெருவீரன் இராவணன் இவனை மதித்தான். முதல் நாள் போரில் தான் தோற்றும் கும்பகன்னனை எழுப்பிப் போருக்கு அனுப்புகிறான்.அவனோ

"என்னை வென்றுளர் என்னில் இலங்கை காவல
உன்னை வென்றுயர்தல் உண்மை"

என்று தெளிவாகக் கூறிச் செல்லுகிறான்.

யுத்த காண்டம் தவிர ஆரணிய காண்டம் சுந்தர காண்டம் ஆகியவற்றிலும் தார்நிலைத் துறை காணப்படுகிறது.

**கரன்**

சூர்ப்பனகை தனக்கு ஏற்பட்ட இழிவைக் கரனிடம் தெரிவித்தாள். அவன் போருக்குப் புறப்படுகிறான். அவனைத் தடுத்த அவன் படைத்தலைவர் பதினால்வர் "தருக இப்பணி என் வயின்" என்றனர். நன்று சொன்னீர்கள். இச்சிறார் மேல் நான் போர் செயின் தேவர் சிரிப்பர்' என்று கூறி அவர்களைப் போருக்கு அனுப்புகிறான்.

பின்னர் கரனே போருக்கு வருகிறான். இலக்குவன் அவனோடு போரிட விரும்புகிறான். ஆனால் இராமனோ "முனிவர்களுக்கு நிருதர் ஆவி யானே பறிக்குவன்" என்று உறுதி கூறியுள்ளேன். ஆதனால் நானே போரிடுவேன் என்று கரனை அழிக்கிறான்.

**மூவகை நிலை**

தொல்காப்பியம் 'தானே யானை குதிரை' என்று மூவகை நிலையைக் குறிக்கும். வெண்பாமாலை யானை மறம் குதிரை மறம் தேர் மறம் தானை மறம் என நால்வகை சுட்டும். இராமன் படைகளில் தானை தவிரப் பிற இல்லை.

கும்பகன்னன் வதையில் யானை குதிரை தேர்நிலைகள் பேசப்படுகின்றன. இலக்குவனோடும் கும்பகன்னன் ஆற்றிய போரில் இம்மூவகை நிலைகளும் பங்கு பெறுகின்றன. படைத்தலைவர் வதையிலும் இம்மூன்றனையும் காண்கிறோம்.

**யானைமறம்**

அதிகாயன் போரை யானைப் போராகக் கம்பன் காட்டுகிறான். இலக்குவன் அம்புகளால் யானைகளைச் சிதைக்கிறான். ஆயிரம் யானைகளைக் கொன்று பரணி பாடுவதற்குரிய தலைவனாக இலக்குவன் இங்கு விளங்குகிறான்.

**எருமை மறம்**

இராம இராவண யுத்தத்தின் முதல் நாள் போரில் அரக்கப்படையின் தாக்குதலுக்கு ஆற்றாது வானரப் படை ஓடியது. சுக்கிரீவன் அதைக் கண்டு எதிர்வரும் படையோடு மராமரம் ஒன்றைக் கையேந்திப் போரிட்டான். அவன் தானையும் அவனைச் சேர்ந்து போரிட்டது.

இந்திரசித்துப் போரிலும் மூலபலப் படைப்போரிலும் வானரப்படை ஓடியது. இராமன் ஏவலின் பேரில் அங்கதன் சென்று வானரப்படைகளின் அச்சம் போக்கித் திரும்ப அழைத்து வருகிறான்.

ஆரணிய காண்டத்தில் இராமனுக்கு ஆற்றாது திரிசிரன் படை சிதறி ஓடியது. திரிசிரன் சாவு அரக்கருக்கு அச்சத்தைத் தந்தது. தூடணன் அவர்களைத் தடுத்து இராமனோடு போரிடச் செய்தான்.

**படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமம**

இதை வெண்பாமாலை ஏம எருமை என விளக்குகிறது. ஒரு படைக்கலனை விடுத்து வேறொரு படைக்கலன் கைக் கொள்ளுதலை இத்துறைப் பாற்படுத்தலாம் என்கிறார் நூலாசிரியர்.

அகம்பன் அனுமன் போரில் அம்பு எய்து போர் செய்தான். வில்லினால் அனுமனை வெல்ல முடியாது என உணர்ந்ததும் தண்டாயுதத்தைக் கைக் கொள்ளுகிறான்.

குறிப்பு

**நூழிலாட்டு**

இலக்குவ இந்திரசித்துப் போரில் இலக்குவன் இந்திரசித்தின் தேர்ப் பாகனைக் கொன்றான். இந்திரசித்து தானே தேரையும் செலுத்திக் கொண்டு தன் மார்பில் பாய்ந்த அம்புகளைப் பறித்து இலக்குவன் மீதும் அனுமன் மீதும் வீசினான்.

இத் தும்பைப் போரில் தனி வீரர்களின் வீரம் காட்டும் துறைகளே மிகுதியாக உள்ளன

## 3.காகுத்தன் கன்னிப்போர்

**கன்னிப்போர்**

கன்னிப்போரென்பது முதற் போர் எனப் பொருள்படும். காப்பிய மாந்தரின் முதல் நிகழ்ச்சிக்கு முதன்மையும் தலைமையும் தந்து காப்பியப் புலவர்கள் பாடுவர். அவ்வாறு அமைந்ததுதான் காகுத்தனின் கன்னிப்போர்.

சீவகன் நிரை மீட்க வேடரோடு போர் புரிகிறான். அதுவே அவன் தொடங்கிய முதற் போராகும். அதைத் திருத்தக்க தேவர் "முதல் விளையாடினானே" என்று பாடுகிறார். திவிட்டன் ஆற்றிய முதற்போரைச் சூளாமணி ஆசிரியர். "கன்னிப் போர்" என்று குறிக்கிறார். கண்ணப்பரின் முதல் வேட்டையைச் சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் 'கன்னிவேட்டை' என்பர். இவ்வழியே கம்பனும் காகுத்தன் செய்யும் முதற்போரைக் 'கன்னிப்போர்' என்று இயம்புகிறான். முதற்போர் தாடகையோடு செய்யும் போராகவும் அமைகிறது. இது பெண்ணோடு செய்யும் போராக அமைந்து பெயரும் பொருந்துகிறது.

**தாடகை ஆற்றலும் தறுகண்மையும்**

தாடகை பெண்ணாயினும் பேராற்றல் உடையவள். ஆயிரம் களிறு ஒன்று சேர்ந்தாற் போன்ற வலிமை உடையவள். பிரமன் வரத்தால் இத்தகைய ஆற்றல் பெற்றவள். அவளுடன் போர் செய்து தோற்றவர் பலர். அவள் பெண்ணாயினும் ஆணைப் போலச்

செயற்பட்டாள். ‘இக்காடு என் காவலில் உள்ளது. இங்கு யாவும் கெடக் கரு அறுத்தனன். நீங்கள் வந்த பரிசு என்ன?’ என்று கேட்டு காகுத்தன் மேல் சூலத்தை எறிய எதிர் நிற்கிறாள்.

கோசிக முனிவர் தயரதனிடம் “என்வேள்வி காக்க நிருதரைத் தடுக்க இராமனைத் தா” எனக் கேட்கிறார். தாடகையை வதம் செய்ய என்று சொல்லவில்லை. ஆனால் இராமன் எதிரில் தாடகை வந்ததும் கூறுகிறார். “இவள் நாணமற்றவள் இவள் பேர் சொன்னாலே ஆடவர் தோற்பர். இவள் ஆண் போலவே செயற்படுபவள்” நெறி திறம்பிய செயல் புரிவோர் யாராயினும் அரசரால் அழித்தற்குரியர். கியாதி குமதி ஆகிய பெண்கள் முறையே திருமாலாலும் இந்திரனாலும் கொல்லப்பட்டனர். அதனால் அவர்களுக்குப் புகழே பெருகியது. இவளைப் பெண்ணென்று நினையாதே. இவளோடு போர் செய்தலே உண்மையான வீரம் என்று அறிவுறுத்துகிறார்.

**காகுத்தன் கலக்கமும் தெளிவும்**

தாடகையைப் பெண்ணென நினைத்த இராமன் முதலில் அவளோடு போர் செய்யத் தயங்கினான். முனிவர் அறம் அறிவுறுத்திய பின்னர் தெளிவு பெறுகிறான்.

அறன் அல்லவும் எய்தினால் அது செய்து என்று ஏவினால் நின் உரை வேதம் எனக் கொண்டு அது செய்தலன்றோ அறம் செய்யும் ஆறு’ என்று நினைக்கிறான். முனிவர் கட்டளையே இப்போது இராமன் உள்ளத்தில் இருக்கிறது. அதனால் தாடகையைக் கொல்கிறான்.

இதன் தொடர்ச்சியாக சுவாகு மாரீசன் போர் நிகழ்கிறது. இப்போர்கள் வேள்விப்படலத்தில் வருகின்றன. இராமனுடைய தெய்வ வாளி சுவாகுவைக் கொன்றது மாரீசனைக் கடலில் தள்ளியது.

இராமன் வாழ்வில் நிகழும் இக் கன்னிப் போர் அரக்கரை அழிக்கும் முதற்போராகத் திகழ்கிறது.

**தாடகை வதையால் இராமன் பெற்ற பயன்கள்**

இராமனுக்கு எண்ணற்ற தெய்வப் படைக்கலங்கள் கிடைக்கின்றன. கோசிக மாமுனிவர் அவற்றிற்குரிய மந்திரங்களைச் சொல்லித் தருகிறார்.

குறிப்பு

"உம்பர் தம் படைகள் எல்லாம் ஊறிய உவகையோடு இராமன் பால் வந்தன" என்று கம்பன் பாடுகிறான். இக் கன்னிப் போரால் படைக்கலச் சேர்க்கையையும் படைப்பயிற்சியையும் இராமன் பெறுகிறான்.

கானகம் செல்ல நேர்ந்தபோது கோசலையைத் தேற்றுகிற இராமன். இந்நிகழ்ச்சியைக் கூறிக் கோசிக முனிவன் போல கானக முனிவர் பாலும் நல்ல பயன்களைப் பெறலாம் என்று கூறுகிறான்.

**பெண்கொலை**

கைகேயியின் மனத்தைத் திரிக்க வந்த கூனி தாடகை வதையால் இராமன் பெண்கொலை புரிந்தவன் என்று கூறுகிறான்.

"ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை என்னுந் தையலாள் படக்
கோடிய வரிசிலை இராமன்" என்று

இராமனது ஆண்மையை இகழ்கிறாள்.

பெண்ணைக் கொன்றவன் பெண்பாலார் இடத்து இரக்கம் காட்டுவானா. அவன் முடிபுனைந்தால் உனக்கும் கேடு வரக் கூடும் என்று கூறிய கூனி கைகேயியின் தூய சிந்தையையும் திரிக்கிறாள்.

தாடகை இயக்கர் குலத்தில் பிறந்து சுந்தனை மணக்கிறாள். சுவாகுவும் மாரீசனும் இவர்களின் மக்கள் ஆவர். சுந்தன் அகத்தியரால் அழிந்தான். முனிவரை முடிக்கப் போருக்குத் தாடகையும் சுவாகுவும் மாரீசனும் எழுந்தனர்.

"அழிவன செய்தலால் அரக்காரகியே இழிக என" முனிவர் சபித்தார். அரக்கரான அவர்கள் இராவணன் பாட்டன் சுமாலியிடம் சென்று உனக்குப் புதல்வராவோம் என்று கூறி உறவு பூண்டனர்.

**குறிப்பு**

தாடகை அங்கநாடு சென்று இராவணன் ஆணையால் அதை அழித்து அருந்தவர்க்கு அல்லல் புரிகிறாள்.

இராவணன் மாரீசனை மானாகப் போகச் சொன்னபோது "உன் தாயை ஆருயிர் உண்டானை யான் கொலச் சமைந்து நின்றேன்" என்று கூறுகிறான். மாரீசன் முதலில் மறுத்தாலும் பின்னர் ஏற்று அதன்படி நடக்கிறான்.

துாடகை வதையைக் கம்பன்.

"முடியடை அரக்கற்கு அந்நாள் முந்தி உற்பாதம் ஆக
படியுடை அற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை
ஒத்தாள்" என உவமை மூலம் விளக்குகிறார்.

தாடகை வதை அரக்கர் வீழ்ச்சிக்குக் கால்கோள் நிகழ்ச்சியாக அமைகிறது.

## 4. புறத்துறை மகளிர்

ஆடவரைப் போலவே பெண்டிரும் வீரம் மிக்கவராய்த் திகழ்ந்தனர். இதைப் புறத்திணையில் அமைந்த மூதின்முல்லைத் துறை உணர்த்துகிறது.

தமிழ் மரபில் போர்க்களம் சென்று கருவி எடுத்து மகளிர் போரிடுவதில்லை. ஆனால் போரில் கொல்லப்பட்ட மணவாளனையோ மைந்தனையோ காணப்போர்க்களம் புகுவர். இறந்தவர் உடல் கண்டு கதறுவர் உயிர் விடுவர்.

**மகளிர் வரும் புறத்திணைகள்**

ஆநிரை கவர்தலும் மீட்டலும் ஆகிய வெட்சி கரந்தைத் திணைகளிலும் எயில் காத்தலும் வளைத்தலுமாகிய நொச்சி உழிஞைத் திணைகளிலும் மகளிர் போர்க்களம் வருவதில்லை. காரணம் இப் போர்கள் வேற்று இடங்களில் நிகழ்கின்றன.

காஞ்சி வாகை தும்பைத் திணைகளில் பெண்கள் இடம்பெறும் துறைகள் காணப்படுகின்றன.

கம்பன் இராமாயணத்தில் யுத்தகாண்டம் எனத் தனியாகவே ஒன்று அமைவதால் போர்ச் செய்திகளைப் புனைகிறான். எல்லாப் போர்க் களங்களிலும் பெண்கள் வருவதாக அவன் குறிக்கவில்லை.

குறிப்பு

தும்பைப்போர் நிகழ்ச்சிகளில் மகளிர் தோன்றுதலைப் பாடுகிறான்.ஷ

**கும்பகன்னன்**

அருமைத் தம்பி கும்பகன்னன் சாவு கேட்டுப் புலம்புகிறானே தவிர இராவணன் போர்க்களம் வரவில்லை.

**அக்க குமாரன்**

தன் மகன் அக்க குமாரன் சாவே முதல் இழப்பாகிறது. அதற்கு இராவணனோ மண்டோதரியோ களத்திற்கு வரவில்லை. மண்டோதரி இராவணனிடம் போய்ப் புலம்புகிறாள். மகனை இழந்த தாயின் அவலத்தைச் சுருக்கமாகக் கம்பன் காட்டுகிறான்.

**இந்திரசித்து**

இவன் இராவணனின் மூத்த மகன் சிறந்த மகன். இவன் இறந்தபோது இராவணனே களம் புகுந்து தேடித் தலையற்ற உடலை அரண்மனைக்குக் கொண்டு போகிறான். அதைப் பார்த்து மண்டோதரி வயிறலைத்துப் பெரிதாக அரற்றிப் புலம்புகிறாள்.

**அதிகாயன்**

இராவணனுடைய மற்றொரு மனைவி தானியமாலி. அவள் மகன் அதிகாயன் போரில் மாண்டான். அவள் இராவணனிடம் அவனது வீரத்தையும் மக்கட் சிறப்பையும் எடுத்துக் கூறி மாளாத் துயரில் மூழ்கினாள். இராவணனுக்கு அறிவுரை கூறுவதாகவும் அவள் புலம்பல் அமைகிறது.

“பேதையாய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ
சீதையால் இன்னும் வருவ சிலவேயோ” என்றும்
“உம்பி உணர்வுடையான் சொன்ன உரை கேளாய்

நம்பி குலக் கிழவன் கூறும் நலம் ஓராய்"

என்றும் கூறிப் பிறர்மனை நயத்தலைக் கண்டிக்கிறாள்.

குறிப்பு

**மண்டோதரியும் தானிய மாலியும்**

இராவணன் மனைவியரான இவர்கள் கூட மக்கள் இறந்த போது போர்க்களம் வரவில்லை. ஆனால் இராவணன் மாண்டபோது மண்டோதரி களத்திற்கு வருகிறாள். "நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினாள்" எனக் கம்பன் அவளைக் குறிப்பிடுகிறான். இது 'தன்னை வேட்டல்' என்னும் புறத்துறையாகும். மண்டோதரி அழுது அரற்றி உயிர் நீத்தாள்.

**அநுமனால் விளைந்த அவலம்**

இராமன் இலங்கை வரும் முன்பே அனுமன் தனியனாக வந்து பெரும்போர் செய்தான். இது சுந்தர காண்ட நிகழ்ச்சியாகும். அனுமனோடு போரிட்டு அக்ககுமாரன் உயிர் இழக்கிறான். அவனோடு அரக்கர் பலர் மாண்டனர். அரக்கியர் தம் கணவர் உடலைக் காணக் களத்துக்கு வந்தனர். அவர்களின் அவலத்தைக் கம்பன் பாடுகிறான். மனைவியர் தம் கணவர்கள் உடல் மீது விழுந்து உயிர்ப்பின்றிக் கண்ணிமைப்பின்றிக் கிடந்தனர். "ஆவி ஒன்று உடல் இரண்டு ஆயதாலே போலும்" அவ்வாறு கிடந்தனர் என்று கம்பன் அரக்கர் இனத்தும் உயர்ந்த அன்பைக் காட்டுகிறான்.

மண்ணுலகில் இருந்து உரிமை மகளிர் வந்தமையால் கணவரை முன்பு தழுவியிருந்த விண்ணுலக மகளிர் ஊடினர் என்றும் கம்பன் பாடுகிறான். களத்துக்கு மகளிர் போவது 'தன்னை வேட்டல்' என்னும் துறையாகும். கணவனோடு உயிர் துறத்தல் காஞ்சித் திணைக்குரிய 'தலையொடு முடிதல்' என்னும் துறையாகும்.

**கவந்தம் ஆடுதல்**

கணவனைத் தேடிக் களம் வந்த பெண்ணொருத்தி கவந்தம் ஆடுதலைக் கண்டாள். அதனோடு தலையினைப் பொருத்தினாள். அது கணவனுடைய தோழனாக இருப்பதைக் கண்டாள். 'என் கணவனைக் காட்டு' என அதனோடு உரையாடுவதாகக் கம்பன் பாடுகிறான்.

குறிப்பு

அடுத்து கணவனுடைய கவந்தத்தையே பார்க்கிறாள். 'நீ நெடுநேரம் ஆடுகிறாய்'ஆட்டத்தை விடு என்று தழுவிக் கொள்கிறாள்.

இந்திர சித்து அதிகாயன் மகரக் கண்ணன் போன்ற பலா் இறந்தாலும் அவா்கள் மனைவியா் போர்க்களம் வரவில்லை.

இராம இராவண யுத்தத்தின் முதல்நாள் போரில் பல அரக்கா்கள் மாண்டனா். அரக்கியா் களம் புகுத்து கணவன்மாரைத் தேடினா். அரக்கா்களின் தலைகள் யானை முகமாகவும் குதிரை முகமாகவும் இருந்தன. ஆகவே அவா்கள் இறந்தபின்னா் அவா்களை அடையாளம் காணமுடியவில்லை. அதனால் விலங்குகளின் யானை முகங்களையும் குதிரை முகங்களையும் தழுவி அரக்கியா் உயிா் விட்டனா். பிறா்மனை நயந்த அரசனுடைய குடிமக்கள் இயல்பாகவே கற்பு மாறிய நிலையைக் கம்பன் குறிப்பாக உணா்த்துகிறான் என்று நூலாசிரியா் நுட்பமாகச் சுட்டுகிறாா்.

**தொட்ட காஞ்சி**

படைத்தலைவா் வதைப் படலத்தில் அரக்கா் மகளிா் போர்க்களம் வருவதாகக் கம்பன் புனைகிறான். பேய்கள் அரக்கா் தலையை வைத்துக் கொண்டு அரக்கியா்க்குக் கொடாது திரிகின்றன. அரக்கியா் பேய்களின் வாயைப் பிளந்தனா். இது காஞ்சித் திணையில் தொட்ட காஞ்சி என்னும் துறையாகும்.

இராவணன் களம் காண் படலத்தில் கம்பன் ஒரு காட்சியைப் பாடுகிறான். இறந்த அரக்கன் வானாடு செல்கையில் பேய் ஒன்று அவனைப் பின்பற்றிப் புண்ணைக் குடைந்து புதுநிணம் சாப்பிடுகிறது. அதைக் கண்ட அரக்கி தன் நகங்களால் பேயின் கண்களைத் தோண்டுகிறாள். இதை இராவணன் காண்கிறான்.

**மூதானந்தம்**

அனுமன் இலங்கையில் பலரைக் கொன்றான். அவா்களுடைய குருதி வெள்ளத்தில் அரக்கியா் பலா் மூழ்கி மாண்டனா் என்று கம்பன் பாடுகிறான். தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் இதை

குறிப்பு

வழிச் செல்வோர் கூற்று என்று குறிப்பிடும். இங்கு இது கவிஞன் கூற்றாகிறது.

இலங்கை மகளிர் அவலமுற்று இறப்பதாகவே கம்பன் காட்டுகிறான்.

“வென்றது பாசத்தாலும் மாயையின் விளைவினாலும்”

என்று கூறுகிறான்.

இந்திர சித்து ‘விசும்பின் ஏகுமேல் வெல்வன்’ என்று வீடணனால் குறிக்கப் பெறுகிறான்.

இந்திர சித்தின் நாகபாசம் கருடன் வருகையால் விடுபடுகிறது.

இராம இலக்குவரோடு போராற்றப் படைத்தலைவர்கள் வருகின்றனர்.

மீண்டும் போர்க்களம் புகுந்த இந்திரசித்து இலக்குவன் ஆற்றலுக்கு நிற்க மாட்டாது விண்ணிடைக் கரந்தான். அயன் படை தொடுத்து அவனை அழிப்பேன் என்ற இலக்குவனை இராமன் தடுக்கிறான்.

இந்திரசித்து நிகும்பலை யாகம் நடத்துகிறான். மகோதரன் போருக்கு வருகிறான்.

**மகோதரன்**

இவன் போராற்ற வரும் போதே தன் மாயத் திறத்தைக் காட்டுகிறான். போர்க்களம் முழுவதும் இருள் பரவுகிறது. மாயையால் மயங்காதவன் அநுமன் ஒருவனே. இலக்குவனும் படைத்தலைவர்களும் வேறு வேறாக நிற்கின்றனர். இலக்குவன் நாணொலி கேட்டு வந்த அநுமன் ‘தெய்வப் படையால் போராற்று. இல்லை எனில் ஒருவரும் மிஞ்சார்’ என்கிறான். இலக்குவன் பாசுபதாஸ்திரம் தொடுக்கிறான். மாயை நீங்குகிறது மகோதரன் மறைகிறான்.

இரண்டாம் முறை களம் புகுந்த மகோதரன் இந்திரனாக உருமாறி வருகிறான் அரக்கர்கள் வானவர்களாக உருமாறி வருகின்றனர். இம் மாயத்தால் இலக்குவன் மயங்குகிறான். இதைப் பயன்படுத்திக் கொண்டு இந்திரசித்து இலக்குவன் மீது பிரம்மாஸ்திரம் தொடுக்கிறான். அனுமன்

மருத்துமாமலையைக் கொணர்ந்து எல்லோருடைய மயக்கத்தையும் போக்குகிறான்.



இலக்குவன் அனுமன் யாவரும் போய் நிகும்பலை யாகத்தை அழிக்கின்றனர்.

இறுதிப்போரில் இந்திரசித்து தன்னுடைய தேரை இழந்ததும் விண்ணேகிக் கல் மழை பொழிகிறான். இலக்குவன் தன் தெய்வப் படைக்கலங்களால் ஒவ்வோர் உறுப்பாக அறுத்துப் பின்னர் தலையை அறுத்து இந்திரசித்தை வெல்லுகிறான்.

**மகரக் கண்ணன்**

இவனும் மாயப்போரில் வல்லவன். கரனுடைய மகன். இராமனைப் பழிவாங்குவதற்காகக் களத்திற்கு வருகிறான். இராமன் அம்புகளுக்கு முன்னே நிற்கலாற்றாது வானிலே மறைகிறான். இடி காற்று தீயை உண்டாக்குகிறான். ‘இது வரத்தால் வந்தது’ என வீடணன் இராமனுக்கு உணர்த்துகிறான். இந்த ஆற்றலை இராமன் அழிக்கிறான். பின்னர் மகரக் கண்ணன் போர்க்களம் முழுவதுமாகத் தன் உருவத்தைத் தோன்றச் செய்கிறான். இராமன் தன் நுண்ணறிவால் எந்த உருவில் குருதி பொழிகிறதோ அதைப் பார்த்து அம்பு எய்து மகரக் கண்ணனைக் கொல்கிறான்.

**இராவணன்**

இராவணன் வரம் பெற்ற பெருவீரன். மாயப்போர் புரிவதிலும் வல்லவன். முதல் நாள் போரில் இராவணன் தோல்வி உறுகிறான். அதில் அவன் மாயம் செய்யவில்லை. இராவணன் இலக்குவன் மீது மோகனப் படையை ஏவுகிறான். வீடணன் இம் மோகப் படையை ‘ஆழியான் படையால் அறுத்தி’ என்கிறான். அவ்வாறே செய்து இலக்குவன் வெல்கிறான்.

இறுதியில் இராவணன் இராமன் மீது மயன் படையைத் தொடுக்கிறான். இராமன் கந்தருவக்கணை எய்து வெல்கிறான். அடுத்து இராவணன் மாயைக் கணையைத் தொடுக்கிறான். இறந்த அரக்க வீரர் எல்லோரும் உயிர்பெற்று வருகின்றனர். தங்களைக் கொன்றவர்கள்

பேரை எல்லாம் சொல்லிக் களத்தில் திரிகின்றனர். பேய்களும் பூதங்களும் களத்தில் தோன்றின.

**குறிப்பு**

இராமன் ஞானமாக்கணை தொடுத்து மாயையை அழிக்கிறான். இராவணன் மாண்டு போகிறான். போரில் இராமன் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக வீடணன் விளங்குகிறான். தங்கள் தோல்விக்குக் காரணம் வீடணன் என்பதை இராவணனும் உணர்ந்தான். இராமனுடைய தெய்வத் தன்மை மாயப் போரை அழிக்கிறது.

கம்பன் இராமாயணத்தில் புறத்திணைப் போர் நெறியை மட்டும் காட்டாது மாயப் போர்களையும் காட்டிக் காப்பியத்திற்கு அழகு செய்கிறான்.

## 5. அல்தமிழ்ப் புறத்திணை

இராமாயணக் கதை வடநாட்டுக் கதை. அதைத் தமிழில் கம்பன் பாடுகிறான். அதனால் பல போர்கள் தமிழ்ப் புறத் திணை நெறிக்கு மாறாக அமைகின்றன. அதை அல்தமிழ்ப் புறத்திணை என்னும் இக் கட்டுரையில் ஆசிரியர் விளக்குகிறார்.

**வெட்சி கரந்தை**

மகாபாரதப் போர் வெட்சி கரந்தையாகத் தொடங்குகிறது. இராமயணத்தில் சீதையை இராவணன் கவர்வதால் போர் தொடங்குகிறது. இது பிறர்மனை நயத்தலால் விளையும் போராகும்.

இக் காப்பியத்தில் வரும் வாலி சுக்கிரீவன் மனைவியைக் கவர்கிறான்.அதனால் வாலியும் இராவணனும் இராமனால் கொல்லப்படுகின்றனர். தமிழ்ப் புறத்திணையில் பிறர்மனை நயத்தலால் எழும் போருக்கு இடமில்லை.

**அறப்போரும் அறம் வழுவிய போரும்**

படைத்தலைவர் போரில் இலக்குவன் மாலியின் தோளை அறுத்தெறிந்தான். மாலி பின்னரும் போர் செய்ய வந்தான். ஆனால்

இலக்குவன் ‘இருகை சுமந்து வாழ்வேன் ஒரு கையுடையவனோடு போர் செய்வலோ’ என்று கூறிப் புறம் போகிறான்.



இந்த அறப்போக்கைக் கும்பகன்னனோடு இராமன் செய்த போரில் காண முடியவில்லை. இராமன் கும்பகன்னனின் வலக்கையை அறுத்தான். தொடர்ந்து நடந்த போரில் அவனது இடக்கையையும் அறுத்தான்.

**தேவர்கள் துணை செய்தல்**

இராம இலக்குவர் அரக்கரோடு போராற்றும் போது தேவர்கள் தோன்றிக் குறிப்பிட்ட கணைகளைக் கூறி ஏவுமாறு அறிவுறுத்துகின்றனர். இ∴து அறந்தழுவிய நெறி ஆகாது.

ஆதிகாயன் இலக்குவன் போரில் வாயுதேவன் தோன்றிப் பிரம்மாஸ்திரத்தை விடுமாறு இலக்குவனுக்கு உரைக்கிறான். அறம் நிறம்பிய இலக்குவன் போர் நெறி இங்கு பின்பற்றப்படவில்லை.

இராமன் திறத்தார் வெற்றிக்குத் தேவர்கள் துணைநிற்கின்றனர். அதற்குக் காரணம் இராமன் தேவர்களுக்காகவே போராடுகிறான். அவன் அவதாரமே தேவர் துயர்களைய எடுத்தாகும்.

**தெய்வப் படைகள்**

தெய்வப் படைகளுக்கு உரிய முறையில் பூசனை செய்து போரில் பயன்படுத்த வேண்டும் என்பதை இராமாயணம் உணர்த்துகிறது. வான்மீகியை ஒட்டிக் கம்பன் இதைக் குறிக்கின்றான்.

கரன் திரிசரா தூடணன் முதலிய அரக்கர்களை இராமனே பொருது வெல்கிறான். இலங்கையில் நடக்கும் முதல் நாள் போர் கும்பகன்னன் போர் மூலபலப்போர் முதலியவற்றில் இராமனே போரிடுகிறான். பிறபோர்களில் இலக்குவனிடம் படை காக்குமாறு கூறி இராமன் அத்திரபூசைக்குச் செல்கிறான்.

“தெய்வ வான் பெரும் எடைகட்கு வரன்முறை திருந்து

மெய்கொள் பூசனை இயற்றினம் விடும் இது விதியால்" என்று இராமன் பிரம்மாத்திரத்தை அருச்சித்துத்தான் தொடுக்கிறான்.

இந்திர சித்து இலக்குவன் மீது சிவன் படையை விடுகிறான். அதைக் கம்பன்

"மனத்தான் மலா் புனல் சாந்தமொடு அவி தூபமும் வகுத்தான்" என்று கூறுகிறான். அதனை மாற்ற இலக்குவனும் அப் பொன்படை 'மனத்தால் நினைந்து அர்ச்சித்ததை யழிப்பாய்' என விடுகிறான்.

இந்திரசித்து பிரம்மாஸ்திரம் விடுமுன் மூலவேள்விக்கு ஆலமாமரத்தை அடைந்து வேண்டுவ செய்கிறான்.

## 6. வியூகப் போர்

வியூகம் வகுத்துப் போரிடுதல் சங்க இலக்கியங்களிலோ புறத்திணைகளிலோ காண முடியாத ஒன்று. சிந்தாமணி வியூகம் வகுத்துப் போரிடுதலைக் குறிக்கிறது.

இந்திர சித்துப் போரைப் பாடும்போது கம்பன் வியூகம் பற்றிப் பேசுகிறான். பாரதத்தில் வியூகப் போர்கள் பேசப் படுகின்றன.

பிரம்மாத்திரப் படலத்தில் இந்திரசித்து படையை கிரவுஞ்ச வியூகமாக அமைக்கிறான். ஆனால் இராம இலக்குவா் தங்கள் படையை வியூகமாக அமைக்கவில்லை. கிரவுஞ்சம்அன்றில் பறவை இந்திரசித்தின் படை வலிமையையும் பயிற்சியையும் காட்டக் கம்பன் இவ்வாறு புனைகிறான்.

இந்திரசித்து நிகும்பலை வேள்வி புரியும் போது அதை அவன் படை சக்கர வியூகமாக அமைந்து காக்கிறது. இதை நொடிப்பொழுதில் இலக்குவனும் அனுமனும் அழிக்கின்றனா்.

**உண்ணாத உறங்காத வில்லி**

இலக்குவன் பதினான்கு ஆண்டுகள் உணவை உறக்கத்தைத் துறந்தான். இவ்வாறு இருந்தவனால் தான் தான் வெல்லப்பட வேண்டும் என்பது இந்திரசித்துப் பெற்றவரம்.

குறிப்பு

இலக்குவன் உறங்காமையைக் குகன் பரதனிடம் "கண்கள் நீர் சொரியக் கங்குல் எல்லை காண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம்" என்று கூறுகிறான்.

இராவணனுக்கு இலக்குவன் பற்றிக் கூறும் சாரன்.

"துறக்கம் எய்தியவரும் துறவாத
உறக்கம் என்பதனை ஓட முனிந்தான்"

என்று குறிப்பிடுகிறான்.

**மறைந்து நின்று செய்த போர்கள்**

சுக்கிரீவனுக்காக இராமன் மறைந்து நின்று வாலியைக் கொன்றான். மறைந்து நின்று கொல்லல் தமிழ் மரபுக்கும் போர் முறைக்கும் முரண்பட்டதாகும்.

பகைவர் வலிமையில் பாதிபெறும் வரம் வாலிக்கு உண்டு. அதனால் இராமன் மறைந்து நின்று போராற்றினான்.

இதை இராவணனும்,

"இரங்கி யான் நிற்ப என்வலி அவன் வயின் எய்த வரம் கொள் வாலி பால் தோற்றனென்" என்று கூறுகிறான்.

இராமாவதாரத்தில் கம்பன் தமிழ்ப் புறத்திணைக்குரிய துறைகளை அமைத்திருப்பதைப் போலவே அல்தமிழ்ப் புறத்திணைக் கூறுகளையும் அமைத்திருக்கிறான். வடமொழிக் கதையைத் தழுவியதாலும் தேவர் அரக்கர் கதை மாந்தர்களாக அமைந்ததாலும் இத்தகைய போர் மரபுகளைக் கையாள்கிறான்.

## 7. போர்ச் செய்தித் தொடர்பு

செய்தித் தொடர்பு இன்றியமையாதது. அதுவும் போர்க் காலங்களில் செய்தித் தொடர்பு மிகமிக இன்றியமையாததாகிறது.

படைகளுக்கு இடையே இத்தொடர்பு மிக விரைவாகவும் பகைவர் அறியா வண்ணமும் நடக்க வேண்டும். இது பற்றி இக் கட்டுரையில் ஆசிரியர் விரிவாக விளக்குகிறார்.

ஒரு திறத்தாரின் செய்தியோ நிகழ்ச்சியோ பகைவர் அறியும் வண்ணம் அமைந்து விடுமானால் அது பகைவருக்கு ஆக்கத்தைத் தரும்.

குறிப்பு

அதனால் போர்க் காலத்தும் போரில்லாக் காலத்தும் பிறநாட்டுச் செய்திகள் அறிய ஒவ்வொரு நாட்டிலும் ஒற்றர் படை அல்லது உளவுப்படை இயங்கிவரும். அதன் செயற்பாடுகள் போர்க் காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறும்.

இராமன் திறத்தார் நிலையையும் எண்ணங்களையும் செயற்பாடுகளையும் இராவணன் ஒற்றர்கள் மூலம் அறிவதாகக் கம்பன் கூறுகிறான். அதுபோலவே இராவணன் திறத்து நிகழ்வுகள் இராமஇலக்குவர்க்கு வீடணன் மூலமே கிடைக்கின்றன. இராமஇலக்குவர் வெற்றிக்கு வீடணன் மூலக்காரணமாகிறான்.

இராவணன் தம்பி வீடணன். இவன் இலங்கையைப் பற்றியும் இலங்கை வீரர்கள் பற்றியும் நன்கு அறிந்தவன். எந்த சிரமமும் இல்லாமல் இராம இலக்குவர்க்குப் பகைபற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

மாயா சீதையைக் கொன்று விட்டு அயோத்தி போவதாகச் சொன்ன இந்திரசித்தின் உண்மை நிலையை அறிய வீடணனே வண்டு உருவில் இலங்கை போய் வருகிறான். ஆகவே போர் தொடங்குமுன்னரே இலங்கை பற்றிய எல்லாச் செய்திகளையும் இராமஇலக்குவர் அறிகின்றனர்.

இலக்குவன் இந்திரசித்தைக் கொன்று தலையொடு வந்தபோது இராமன். “வீடணன் தந்த வென்றி” என்று குறிப்பிடுகின்றான்.

**வானரப்படை**

இராம இலக்குவர் வானரப்படை கொண்டு போராற்றினர். வானரங்களின் வலிமை இராம இலக்குவரின் தலைமையைச் சார்ந்திருந்தது.

கும்பகன்னன் மகரக்கண்ணன் மூலபலப்படை இராவணன் ஆகியோருடன் இராமனே போரிட்டான். இராமன் கருவி வழிபாட்டில் இருந்தபோது இலக்குவன் படைத் தலைமை ஏற்றுப் போர்புரிகிறான். அனுமன் சுக்கிரீவன் அங்கதன் போன்றோரும் போர்களச் சூழலுக்கு ஏற்பப் போரிடுகின்றனர்.

**இந்திரசித்து**

குறிப்பு

நாகபாசத்தாலும் பிரம்மாஸ்திரத்தாலும் இந்திரசித்து இலக்குவனைத் தாக்கிய போது போர்க்களத்தில் இராமன் இல்லை.

இலக்குவனை நாகபாசம் கட்டியபோது அனலனே போய்ச் சேதி சொன்னான். பிரம்மாஸ்திரம் விடுத்த போது போர் முடிந்து இலக்குவனும் வானரரும் வரவில்லையே என்று இருளில் நெருப்புக் கணையின் ஒளியில் இராமனே களம் வருகிறான்.

**அங்கதன்**

இராவணன் தூதுவந்த அங்கதனை தன்பால் இழுக்க நினைக்கிறான். ஆனால் அவனோ இராவணன் பக்கம் சேர விரும்பவில்லை. அதனால் இராவணன் சுகன் சாரன் என்ற ஒற்றர்கள் மூலம் இராமன் தரப்புச் செய்திகளை அறிகிறான்.

சுகனும் சாரனும் வானராக உருமாறி வானரப்படையொடு கலந்தனர். இந்த அரக்கர்களை யோகி ஜீவான்மா பரமான்மாவை அறிவதுபோல வீடணன் கண்டுபிடித்து இராமன் முன் நிறுத்துகிறான்.

இராமனே தன்னைப் பற்றிய செய்திகளை எல்லாம் சொல்லி அவர்களை விடுதலை செய்து அனுப்புகிறான். "இன்று போய் நாளை வா" என்று சொன்னவன் அல்லவா இராமன். அதனால் எதையும் அவன் மறைக்க விரும்பவில்லை.

இராவணன் பக்கம் சார்த்தூலன் என்ற ஒற்றனும் இருந்தான். இவனே இராமன் அணிவகுப்புத் திறத்தை இராவணனுக்கு உணர்த்துபவன். இவர்களன்றிப் பெயர் தெரியாத பல ஒற்றர்களும் இராவணன் பக்கம் பணியாற்றினர்.

**தூது**

இராமன் படைகள் வந்ததை ஒற்றர் மூலம் அறிந்திருந்தும் இராவணன் போருக்கு எழவில்லை. இராமன் அங்கதனைத் தூதனுப்புகிறான்.

அதிகாயன் இலக்குவனோடு போரிட விரும்புகிறான். மயிடனைத் தூதனுப்புகிறான்.

குறிப்பு

**இராவணன் போர் முடிவுகளை அறிதல்**

இராவணனுக்குப் போர்க்களச் செய்திகள் கிடைப்பதைப் பலவகையாகக் கம்பன் பாடுகிறான்.

கும்பகன்னன் போரே இராவணன் தரப்பில் நிகழ்ந்த முதல் தோல்விப் போராகும். அசோகவனத்தில் சீதையைக் கெஞ்சிக் கொண்டிருந்த இராவணனிடம் அரக்கர் செய்தி சொல்லுகின்றனர். மாயா சனகனும் அங்கு இருக்கிறான். இராவணன் செவிக்கருகில் சென்று 'கும்பகன்னன் இறந்தனன்'என்றனர். சீதை முன்னிலையிலேயே இராவணன் புலம்புகிறான். இதனால் இராமனின் வெற்றிச் செய்தியைச் சீதை அறிகிறாள்.

**அதிகாயன் செய்தி**

இராவணனிடம் ஒற்றர்கள் ஓடி 'அதிகாயன் முதல்வராய கோக்குலக் குமரர் எல்லாம் உயிர் கொடுத்தனர்' என்றனர். இராவணன் துன்பத்தால் புழுங்குகிறான். ஆனால் தாயான தானியமாலிதான் அரற்றிப் புலம்புகிறாள்.

அதிகாயன் சாவை அரக்கியர் புலம்பலால் இந்திரசித்து அறிகிறான்.

நாக பாசத்தால் வானரவீரரும் இலக்குவனும் பிணிக்கப்பட்டபோது அந்த வெற்றியை-இந்திரசித்தின் வெற்றியை இராவணன் கொண்டாடச் சொல்லுகிறான். ஆனால் அந்த வெற்றி நிலைக்கவில்லை. கருடன் வந்ததும் நாகபாசம் விலகுகிறது. இலக்குவனும் வானரரும் உயிர் பெறுகின்றனர். இராவணன் இந்திரசித்தை மறுமுறையும் போருக்கு அனுப்புகிறான்.

**படைத்தலைவர் மறைவு**

இதற்கு இடையில் போருக்குச் சென்ற படைத்தலைவர்களும் மாண்டனர். இச்செய்தியைத் தூதர் "மகிழ்ச்சிக்குரிய செய்தி இல்லை" என்றனர்.

**மகரக் கண்ணன் மறைவு**

குறிப்பு

இதற்குப் பின்னர் இராவணனிடம் விடைபெற்று மகரக் கண்ணன் போருக்குச் செல்கிறான். அவன் மாயைப் போர் செய்து இராமன் கணையால் மாண்டான். இச் செய்தி இராவணனிடம் சொல்லப்பட்டபோது அவன் அழவோ அரற்றவோ இல்லை, இந்திரசித்தைக் கூப்பிடுங்கள் என்றான்.

**இந்திரசித்து அழிவு**

போருக்கு வந்த வீரர் அனைவரையும் இராமன் தரத்தார் அழித்தனர். இலக்குவன் இந்திரசித்தின் கங்கனம் கவசம் ஆகியவற்றைச் சிதைத்தான். இந்திரசித்து மறைந்தான்.

அடுத்து மகோதரன் அகம்பன் போருக்கு வருகின்றனர். அவரோடு வந்த நூறு வெள்ளம் சேனையும் அழிந்தது. இச் செய்தியைக் கேட்ட இராவணனால் கூட நம்ப முடியவில்லை. அது பாசுபதாஸ்திரத்தால் நிகழ்ந்தது என்றனர். 'அன்னதேல் ஆகும்' என்றான்.

இந்திரசித்தின் பிரம்மாஸ்திரத்தால் இலக்குவன் வானரர் வீழ்ந்தபோது இந்திரசித்து வெற்றிச் சங்கு ஊதினான். இராமனும் மயங்கி விழுந்த செய்தியைத் தூதர் உரைத்தனர். இராவணன் வெற்றிவிழாக் கொண்டாடினான். மருத்துமா மலையால் இலக்குவன் முதலியோர் உயிர் பெற்று எழுந்தனர். இச் செய்தியைத் தூதர் வெற்றிவிழா மகிழ்ச்சியில் இருந்த இராவணனிடம் வண்டாகி மாலையில் ஏறிச் சொன்னார்கள்.

இந்திரசித்து கொல்லப்பட்டதைத் தூதர் 'உன் மகன் இன்று ஆயினன்' என்றனர் அவரை இராவணன் கொன்றான்.

மூலபலப் படையைத் திரட்டத் தூதர்களே சென்றனர். மூலபலப் படை அழிந்த போதும் இராவணன் ஐயம் கொண்டான். மாலியவான் தூதர் பொய் உரையார் என அறிவுறுத்துகிறான்.

இராம இலக்குவர்களின் செய்தியாளனாக வீடணன் விளங்குகிறான்.

இராவணன் ஒற்றர்கள் வேய்கள் தூதர்கள் என்று பல திறத்தாரை அமைத்துச் செய்தி திரட்டுகிறான்.

**குறிப்பு**

தொல்காப்பியர் ‘ஒற்றினாகிய வேயே’ என்று இதனைக் குறிக்கின்றார். திருவள்ளுவரும் ஒற்றாடல் பற்றிக் குறிப்பிடுகிறார்.

கம்பராமாயணத்தில் செய்தித் தொடர்பு இவ்வாறு காட்டப்படுகிறது.

**பயிற்சி வினாக்கள்:**

**1. கொள்ளார் தேஎயம் குறித்த கொற்றம் என்னும் துறை குறித்து எழுதுக.**

இது தொல்காப்பியர் கூறும் உழிஞைத்திணையின் முதல் துறையாகும். இதன் பொருள் தான் வெற்றி கொள்வதற்கு முன்பே பகைவர் நாட்டைக் கைப்பற்றியது போலக் கருதித் தனக்கு வேண்டியவருக்கு அதைக் கொடுப்பதாகும். இத்துறைக்கு உரைதரும் நச்சினார்க்கினியர் “இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது” என்று எழுதுகிறார். இச் செயல் இராமனது வெற்றியை உறுதிப்படுத்துகிறது. இலங்கை மீது இராமனது பற்றின்மையையும் காட்டுகிறது.

**2. போர்க்களத்தில் செய்தித் தொடர்பு பெறும் இடத்தினை விளக்குக.**

செய்தித் தொடர்பு இன்றியமையாதது. அதுவும் போர்க் காலங்களில் செய்தித் தொடர்பு மிகமிக இன்றியமையாததாகிறது.

படைகளுக்கு இடையே இத்தொடர்பு மிக விரைவாகவும் பகைவர் அறியா வண்ணமும் நடக்க வேண்டும். இது பற்றி இக் கட்டுரையில் ஆசிரியர் விரிவாக விளக்குகிறார்.

ஒரு திறத்தாரின் செய்தியோ நிகழ்ச்சியோ பகைவர் அறியும் வண்ணம் அமைந்து விடுமானால் அது பகைவருக்கு ஆக்கத்தைத் தரும். அதனால் போர்க் காலத்தும் போரில்லாக் காலத்தும் பிறநாட்டுச் செய்திகள் அறிய ஒவ்வொரு நாட்டிலும் ஒற்றர் படை அல்லது உளவுப்படை இயங்கிவரும். அதன் செயற்பாடுகள் போர்க் காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறும்.

இராமன் திறத்தார் நிலையையும் எண்ணங்களையும் செயற்பாடுகளையும் இராவணன் ஒற்றர்கள் மூலம் அறிவதாகக் கம்பன்

கூறுகிறான். அதுபோலவே இராவணன் திறத்து நிகழ்வுகள் இராமஇலக்குவர்க்கு வீடணன் மூலமே கிடைக்கின்றன. இராமஇலக்குவர் வெற்றிக்கு வீடணன் மூலக்காரணமாகிறான்.

குறிப்பு

இராவணன் தம்பி வீடணன். இவன் இலங்கையைப் பற்றியும் இலங்கை வீரர்கள் பற்றியும் நன்கு அறிந்தவன். எந்த சிரமமும் இல்லாமல் இராம இலக்குவர்க்குப் பகைபற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

மாயா சீதையைக் கொன்று விட்டு அயோத்தி போவதாகச் சொன்ன இந்திரசித்தின் உண்மை நிலையை அறிய வீடணனே வண்டு உருவில் இலங்கை போய் வருகிறான். ஆகவே போர் தொடங்குமுன்னரே இலங்கை பற்றிய எல்லாச் செய்திகளையும் இராமஇலக்குவர் அறிகின்றனர்.

இலக்குவன் இந்திரசித்தைக் கொன்று தலையொடு வந்தபோது இராமன். “வீடணன் தந்த வென்றி” என்று குறிப்பிடுகின்றான்.

**3.இராமனின் கன்னிப்போர் குறித்து விவரி.**

கன்னிப்போரென்பது முதற் போர் எனப் பொருள்படும். காப்பிய மாந்தரின் முதல் நிகழ்ச்சிக்கு முதன்மையும் தலைமையும் தந்து காப்பியப் புலவர்கள் பாடுவர். அவ்வாறு அமைந்ததுதான் காகுத்தனின் கன்னிப்போர்.

சீவகன் நிரை மீட்க வேடரோடு போர் புரிகிறான். அதுவே அவன் தொடங்கிய முதற் போராகும். அதைத் திருத்தக்கத்தேவர் “முதல் விளையாடினானே” என்று பாடுகிறார். திவிட்டன் ஆற்றிய முதற்போரைச் சூளாமணி ஆசிரியர். “கன்னிப் போர்” என்று குறிக்கிறார். கண்ணப்பரின் முதல் வேட்டையைச் சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் ‘கன்னிவேட்டை’ என்பர். இவ்வழியே கம்பனும் காகுத்தன் செய்யும் முதற்போரைக் ‘கன்னிப்போர்’ என்று இயம்புகிறான். முதற்போர் தாடகையோடு செய்யும் போராகவும் அமைகிறது. இது பெண்ணோடு செய்யும் போராக அமைந்து பெயரும் பொருந்துகிறது.

**4.மூதானந்தம் எனும் துறை கம்பனில் அமைந்துள்ள திறத்தினைச் சான்று காட்டி நிறுவுக.**

குறிப்பு

அனுமன் இலங்கையில் பலரைக் கொன்றான். அவர்களுடைய குருதி வெள்ளத்தில் அரக்கியர் பலர் மூழ்கி மாண்டனர் என்று கம்பன் பாடுகிறான். இது மூதானந்தம் என்னும் துறையாகும். தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் இதை வழிச் செல்வோர் கூற்று என்று குறிப்பிடும். இங்கு இது கவிஞன் கூற்றாகிறது.

இலங்கை மகளிர் அவலமுற்று இறப்பதாகவே கம்பன் காட்டுகிறான்.

"வென்றது பாசத்தாலும் மாயையின் விளைவினாலும்"
என்று கூறுகிறான்.

இந்திர சித்து 'விசும்பின் ஏகுமேல் வெல்வன்' என்று வீடணனால் குறிக்கப் பெறுகிறான்.

இந்திர சித்தின் நாகபாசம் கருடன் வருகையால் விடுபடுகிறது.

இராம இலக்குவரோடு போராற்றப் படைத்தலைவர்கள் வருகின்றனர்.

மீண்டும் போர்க்களம் புகுந்த இந்திரசித்து இலக்குவன் ஆற்றலுக்கு நிற்க மாட்டாது விண்ணிடைக் கரந்தான். அயன் படை தொடுத்து அவனை அழிப்பேன் என்ற இலக்குவனை இராமன் தடுக்கிறான்.

இந்திரசித்து நிகும்பலை யாகம் நடத்துகிறான். மகோதரன் போருக்கு வருகிறான்.

**5.கூழை தாங்கிய எருமை என்பதனை விளக்குக.**

வானரங்கள் நிலைகுலைந்து ஓடுவதைக் கண்ட சுக்கிரீவன் இராவணனின் நால்வகைச் சேனைக்கும் முன்னே தான் ஒருவனாக நின்று தடுக்கின்றான். இதைக் 'கூழை தாங்கிய எருமை' எனத் தொல்காப்பியரும் 'எருமை மறம்' எனப் புறப்பொருள் வெண்பாமாலையாரும் குறிப்பர். எருமை மறம் தும்பைத் திணையில் வருவதாகும்.

இலங்கையில் நடக்கும் முதற்போர் உழிஞைப் போராக அமைகிறது. முதலில் வானரங்கள் இகல் மதில் குடுமி கொண்டு வெற்றி பெற்றன. பின்னர் அரக்கர்கள் வானரங்களைத் துரத்தி வென்றனர்.

தொல்காப்பிய நெறியிலும் புறப்பொருள் வெண்பாமாலை வழியிலும் கம்பன் உழிஞைப்போரை அமைக்கிறான்.

**6. கம்பனில் காணப்படும் புறத்திணைகளைக் கட்டுரைக்க.**

கம்பனில் காணப்படும் புறத்திணைச் செய்திகளைத் தொகுத்துத் தரல் வேண்டும்.

குறிப்பு

# பிரிவு – 3

## எழுத்தும் சொல்லும்

## கூறு : 6

## 1. முதல் எழுத்துகள் - சார்பெழுத்துகள்:

**முன்னுரை**

உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் காரணமாக விளங்குவது ஒலி. அந்த ஒலிகளுக்குத் தரப்படுகிற அடையாளங்களே எழுத்துக்களாகும்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரை எழுத்துகள் முதல் எழுத்துக்கள் எனவும் சார்பெழுத்துக்கள் எனவும் இரண்டு வகைப்படும்.

**1. முதலெழுத்துக்கள் :**

'உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே' உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துகளும் முதலெழுத்துக்கள் எனப்படும்.

**அவையாவன:**

அ, ஆ, இ,ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

**சார்பெழுத்துக்கள்:**

முதல் எழுத்துக்களைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் எனறு அழைக்கப்படும்.

"உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு.
அ∴கிய இ, உ, ஐ, ஔ, ம∴கான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்."

அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என பத்தாகும்.

குறிப்பு

**உயிர்மெய்**

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யோடும் வருவதால் உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாகும்.

**ஆய்தம்**

“குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே”

(சான்று) எ.்.கு, க.்.சு, க.்.டு, இருப.்.து, க.்.பு, ப.்.றி என வல்லின வகையால் வரும் ஆய்தம் ஆறு.

அவ் + கடிய = அ.்.கடிய எனப் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

அ +கான் = அ.்.கான் எனச் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

ஆக முற்றாய்தம் எட்டு.

**உயிரளபெடை:**

சொல்லுக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும்.அதற்கு உயிரளபெடை என்று பெயர். அளபெடுத்ததற்கு அடையாளமாக நெடிலுக்கு இனமாகிய குற்றெழுத்து பக்கத்தில் வரும். அளபெடுப்பது - அளவு மிகுவது வருவது ஆகும்.

(சான்று) ஆஅ,ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ

இ உ , ஐ ஔக்கு இனம் என மொழிப.

ஐஇ, ஔஉ.

மொழி முதலில் அளபெடுத்தது

(சான்று) “ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை

ஆஅது மென்னு மவர்”

மொழி இடையில் அளபெடுத்தது

(சான்று) ‘‘உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்

செறாஅய் வாழிய நெஞ்சு”

**குறிப்பு**

மொழி இறுதியில் அளபெடுத்தது

(சான்று) ”அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு

நல்ல படாஅ பறை.”

செய்யுள் ஓசை குன்றாத இடத்தும் இன்னிசைக்காகவும் சொல்லிசைக்காகவும் அளபெடுப்பதுண்டு. அவை இன்னிசை அளபெடை

சொல்லிசை அளபெடை எனப் பெயர்பெறும்.

குற்றெழுத்து நெட்டெழுத்தாக ஒலிப்பது இன்னிசை அளபெடை.

(உ.ம்) கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே

எடுப்பதூஉம் எல்லா மழை.”

பெயர்ச் சொல் வினையெச்சச் சொல்லாக வருவது சொல்லிசை அளபெடை.

(சான்று) ‘‘உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் .

வரனசைஇ இன்னு முளேன்”

நெட்டெழுத்து ஏழும் மூன்று இடத்தும் அளபெடுக்கும் என்பதால் உயிரளபெடை இருபத்தொன்றாகும்.

**ஒற்றளபெடை:**

செய்யுளில் ஓசை குறையுமானால் குறிலிணையின் கீழும், குறிலின் கீழும் மொழிக்கு நடுவிலும் கடையிலும் நின்ற ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ∴ ஆகிய பதினோரெழுத்தும் அளபெடுக்கும். அதற்கு அறிகுறி எந்த எழுத்து அளபெடுக்கிறதோ அந்த எழுத்தே பக்கத்தில் நிற்பது. ஒற்று அளபெடுப்பதால் இதற்கு ஒற்றளபெடை என்று பெயர்.

குறிலிணைக்கீழ் இடையில் அளபெடுத்ததற்கு

சான்று:.

‘‘இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்

கலங்ங்கு நெஞ்சமிலை காண்.”

குறிலின்கீழ் இடையில் அளபெடுத்தது

குறிப்பு

(சான்று) ‘‘எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா
னெங்ங் கெனத் திரிவா ரின்.’’

குறிலிணைக் கீழ் கடையில் அளபெடுத்ததற்குச்
சான்று:

மடங்ங் கலந்த மனனே களத்து
விடங்ங் கலந்தானை வேண்டும்’’

குறிற்கீழ் கடையில் அளபெடுத்தற்கு உதாரணம் ’’
‘‘அங்ங் கனிந்த அருளிடத்தார்க்கு அன்புசெய்து
நங்ங் களங்கறுப்பா நாம்’’

பதினோ ரொற்றும் குறிலிணைக்கீழ் இடை, குறிற் கீழ் இடை. குறிலிணைக்கீழ்க் கடை, குறிற்கீழ்க் கடை என்னும் நான்கிடத்தும் அளபெடுப்பதால் ஒற்றளபெடை நாற்பத்து நான்காயிற்று.

ஆய்தம் ஈறாக வாராமையால் அதற்குக் குறிலிணைக் கீழ்க் கடை குறிற்கீழ்க் கடை என்னும் இரண்டிடத்தைக் கழிக்க ஒற்றளபெடை நாற்பத்து இரண்டாகும்.

**குற்றியலிகரம்:**

யகரத்தை முதலாக உடைய சொல் வருமொழியாக வர நிலைமொழி ஈற்றில் நின்ற அறுவகைக் குற்றியலுகரங்களும் திரிந்து குற்றியலிகரங்கள் ஆகும்.

அசைச் சொல் மியாவின் இகரமும் குற்றியலிகரம் ஆகும்.

‘‘யகரம் வரக்குற ளுத்திரி பிகரமும்
அசைச் சொல் மியாவி னிகரமும் குறிய’’

நாகு + யாது = நாகியாது.

எ.்.கு +யாது = எ.்.கியாது

வரகு +யாது=வரகியாது

கொக்கு+யாது= கொக்கியாது

குரங்கு+யாது= குரங்கியாது

தெள்கு+யாது= தெள்கியாது

கேண்மியா என்ற சொல்லில் மியா என்பதன் மகரத்தின்மேல் வந்த இகரம் குற்றியலிகரமாகும்.

ஆக குற்றியலிகரம் முப்பத்து ஏழாம்.

குறிப்பு

**குற்றியலுகரம்:**

தனி நெடில் ஏழு, ஆய்தம் ஒன்று, சொல்லுக்கு இடையிலும் கடையிலும் வராத ஔகாரம், நீங்கிய உயிர் பதினொன்று, வல்லெழுத்து-6, மெல்லெழுத்து - 6,வல்லெழுத்தோடு தொடராத வகரம் நீங்கிய இடையெழுத்து-5 ஆக 36 எழுத்துக்களுள் ஒன்று ஈற்றின் அயல் எழுத்தாக நிற்க,ஈற்றில் உகரம் ஊர்ந்து வரும் வல்லெழுத்து தன் மாத்திரையில் குறுகும்.

அதற்குக் குற்றியலுகரம் என்று பெயர்.

நெடில் தொடர் தவிர மற்ற ஐந்து தொடர்களிலும் ஈற்றயல் எழுத்துக்களுக்கு மேலே ஒன்றோ பலவோ எழுத்துக்கள் வரலாம்.

"நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே."

(சான்று)

நெடில் தொடர்க் குற்றியலுகரம் : காசு, நீறு
ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்எஃகு, இருபஃது
உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் வரகு, கயிறு
வன்றொடர்க் குற்றியலுகரம்கொக்கு, கச்சு
மென்றொடர்க் குற்றியலுகரம் பஞ்சு, சுண்ணாம்பு
இடைத்தொடர்க் குற்றியலுகரம் : பெய்து, மார்பு
ஆக குற்றியலுகரம் முப்பத்தாறாகும்.

**முற்றியலுகரம்:**

மெல்லின மெய்யின் மேலும் இடையின மெய்யின் மேலும் ஏறி நிற்கும் உகமும், தனிக் குற்றெழுத்தைத் தொடர்ந்து வரும் வல்லினமெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமும் முற்றியலுகரம் ஆகும்.

(சான்று)

நாணு, தும்மு, கதவு, நாலு, பசு, நடு.

**ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம்**

ஐயும் ஔவும் தனித்து நிற்கும் போது குறுகாது இரண்டு மாத்திரை பெறும். சொல்லுக்கு முதல், இடை, கடைசியில் ஐகாரமும்,

குறிப்பு

சொல்லுக்கு முதலில் மட்டும் ஔகாரமும் குறுகும். அப்போது ஒரு மாத்திரை அளவு பெறும்.

"தற்சுட்டு அளபொழி ஐ மூவழியும்
நையும் ஔவு முதலற் றாகும்"

ஆகவே ஐகாரக் குறுக்கம் மூன்றாகும்

(சான்று) ஐப்பசி, இடையன், குவளை

ஔகாரக் குறுக்கம் ஒன்றாகும். (உம்) மௌவல்

**மகரக் குறுக்கம்:**

ணகர, னகர மெய்களில் ஒன்றன் முன்னும் வகர உயிர்மெய்யின் பின்னும் மகர மெய் தன் அரை மாத்திரையில் குறுகிக் கால் மாத்திரை பெறும். அதற்கு மகரக் குறுக்கம் என்று பெயர்.

"ண ன முன்னும் வ.ஃகான் மிசையுமக் குறுகும்"

(சான்று)

"வெருளினு மெல்லாம் வெருளும.ஃ தன்றி
மருளினு மெல்லா மருண்ம்"
"திசையறி மீகானும் போன்ம்"
தரும் வளவன்

**விளக்கம்:**

மருளும் என்பது "மருண்ம்"எனவும்

போலும் என்பது "போன்ம"எனவும் ளகர லகரம் திரிந்த ணகர னகரமே இங்கு குறிக்கப் பெறுவன.

**ஆய்தக் குறுக்கம்:**

தனிக்குறில் அடுத்த லகர ளகரம் புணர்ச்சியில் ஆய்தமாகத் திரியும். அது தன் அரை மாத்திரையில் குறுகும். அதற்கு ஆய்தக் குறுக்கம் என்று பெயர்.

"ல ள வீற் றியைபினா மாய்த ம.ஃகும்"

(உம்) கல்+ தீது= க.ஃறீது. முள் + தீது= மு.ஃடீது

ஆக ஆய்தக் குறுக்கம் இரண்டு.

## 2. மொழி முதல் எழுத்துக்களும் மொழியிறுதி எழுத்துக்களும் :

**மொழிமுதல் எழுத்துகள்:**

குறிப்பு

தமிழ்மொழியில் உள்ள எல்லா எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வருவதில்லை. அதே போல எல்லா எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வருவதுமில்லை .

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் மொழி முதல் எழுத்துக்கள் எனப்படும்.

''பன்னீ ருயிருங் கசதந பமவய

ஞங வீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.''

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் க முதல் ங ஈறாகச் சொல்லப்பட்ட பத்து உயிர்மெய் எழுத்துக்களும் மொழி முதல் எழுத்துக்கள் ஆகும்.

(சான்று)

அம்மா, ஆடு, இலை,ஈசல், உரல், ஊஞ்சல், எலி, ஏணி, ஐயர், ஒட்டகம், ஓடம், ஔவை .

கற்கண்டு, சட்டி, தம்பி, நன்றி, படை, மலை, வயல், யவனர், ஞமலி, இங்ஙனம்.

பத்து உயிர் மெய் எழுத்துக்களில் வகரம் எட்டு உயிர்களோடு மொழி முதலில் வரும்.

(சான்று) வளை, வாழை, விடு, வீடு, வெல், வேல், வையம், வெளவால்.

யகரம் ஆறு உயிர்களோடு மொழி முதலில் வரும்.

(சான்று) யவனர், யானை, யுகம், யூகம், யோசனை, யெளவனம்.

ஞகரம் நான்கு உயிர்களோடு மொழி முதலில் வரும்.

(சான்று) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

ஙகரம் மூன்று சுட்டுக்கள், யா வினா, எகர வினா வின்பின் அகரத்தைச் சேர்ந்து நகர மெய் மொழி முதலாகும்.

(சான்று) அங்ஙனம், இயங்னம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்.

க. ச, க ந, ப, ம, என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடும் மொழி முதலாக வரும்.

**மொழி இறுதி எழுத்துக்கள்**

பன்னிரண்டு உயிர்களும் தனித்தும், மெய்யோடு கூடியும் மொழிக்கு இறுதியில் வரும்.

ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்னும் பதினொரு மெய்களும், குற்றியலுகரமும் மொழியிறுதியில் வரும்.

ஆக இருபத்து நான்கு எழுத்துக்கள் மொழியிறுதி எழுத்துக்களாகும்.

“ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயு முகர நாலாறு மீறே”

(உம்) தனித்து ஈறாவது ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ

மெய்யோடு கூடி ஈறாவது விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ,

போ, கௌ.

மெய்கள் ஈறாவது, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள்.

குற்றியலுகரம் ஈறாவது அ.்.கு.

உயிர்க் குறில்கள் அளபெடையில் ஈறாக வரும்.

(சான்று) பலா அ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோா, கௌஉ.

**பயிற்சி வினாக்கள்:**

**1.முதல் எழுத்துகள் குறித்து எழுதுக.**

உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் காரணமாக விளங்குவது ஒலி. அந்த ஒலிகளுக்குத் தரப்படுகிற அடையாளங்களே எழுத்துக்களாகும்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரை எழுத்துகள் முதல் எழுத்துக்கள் எனவும் சார்பெழுத்துக்கள் எனவும் இரண்டு வகைப்படும்.

முதலெழுத்துக்கள் :

‘உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே’ உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துக்களும் முதலெழுத்துக்கள் எனப்படும்.

அவையாவன:

அ, ஆ, இ,ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

குறிப்பு

**2.சார்பெழுத்துக்களின் வகைகள் யாவை?**

சார்பெழுத்துக்கள்

முதல் எழுத்துக்களைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் எனறு அழைக்கப்படும்.

"உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு.
அஃகிய இ, உ, ஐ, ஔ, மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்."

அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என பத்தாகும்.

**3.குற்றியலுகரம் குறித்து விவரி.**

தனி நெடில் ஏழு, ஆய்தம் ஒன்று, சொல்லுக்கு இடையிலும் கடையிலும் வராத ஔகாரம், நீங்கிய உயிர் பதினொன்று, வல்லெழுத்து -6, மெல்லெழுத்து - 6,வல்லெழுத்தோடு தொடராத வகரம் நீங்கிய இடையெழுத்து -5 ஆக 36 எழுத்துக்களுள் ஒன்று ஈற்றின் அயல் எழுத்தாக நிற்க,ஈற்றில் உகரம் ஊர்ந்து வரும் வல்லெழுத்து தன் மாத்திரையில் குறுகும்.

அதற்குக் குற்றியலுகரம் என்று பெயர்.

நெடில் தொடர் தவிர மற்ற ஐந்து தொடர்களிலும் ஈற்றயல் எழுத்துக்களுக்கு மேலே ஒன்றோ பலவோ எழுத்துக்கள் வரலாம்.

"நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே."

(சான்று)

நெடில் தொடர்க் குற்றியலுகரம் : காசு, நீறு

ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எஃகு, இருபஃது

உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் வரகு, கயிறு

வன்றொடர்க் குற்றியலுகரம் கொக்கு, கச்சு

மென்றொடர்க் குற்றியலுகரம் பஞ்சு, சுண்ணாம்பு
இடைத்தொடர்க் குற்றியலுகரம் : பெய்து, மார்பு
ஆக குற்றியலுகரம் முப்பத்தாறாகும்.

குறிப்பு

**4.உயிரளபெடையினை விளக்கி வரைக.**

சொல்லுக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும்.அதற்கு உயிரளபெடை என்று பெயர். அளபெடுத்ததற்கு அடையாளமாக நெடிலுக்கு இனமாகிய குற்றெழுத்து பக்கத்தில் வரும். அளபெடுப்பது - அளவு மிகுந்து வருவது ஆகும்.
(சான்று) ஆஅ,ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ

இ உ , ஐ ஔக்கு இனம் என மொழிப்
ஐஇ, ஔஉ.

மொழி முதலில் அளபெடுத்தது
(சான்று) "ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅது மென்னு மவர்"

மொழி இடையில் அளபெடுத்தது
(சான்று) "உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு"

மொழி இறுதியில் அளபெடுத்தது
(சான்று) "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை."

செய்யுள் ஓசை குன்றாத இடத்தும் இன்னிசைக்காகவும் சொல்லிசைக்காகவும் அளபெடுப்பதுண்டு. அவை இன்னிசை அளபெடை சொல்லிசை அளபெடை எனப் பெயர்பெறும்.

குற்றெழுத்து நெட்டெழுத்தாக ஒலிப்பது இன்னிசை அளபெடை.
(உம்) கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லா மழை."

பெயர்ச் சொல் வினையெச்சச் சொல்லாக வருவது சொல்லிசை அளபெடை.

(சான்று) "உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் .
வரனசைஇ இன்னு முளேன்"

நெட்டெழுத்து ஏழும் மூன்று இடத்தும் அளபெடுக்கும் என்பதால் உயிரளபெடை

குறிப்பு

5.மொழி முதல் எழுத்துக்களைக் கட்டுரைக்க.

மொழிமுதல் எழுத்துகள்:

தமிழ்மொழியில் உள்ள எல்லா எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வருவதில்லை. அதே போல எல்லா எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வருவதுமில்லை .

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் மொழி முதல் எழுத்துக்கள் எனப்படும்.

“பன்னீ ருயிருங் கசதந பமவய

ஞங வீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.”

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் க முதல் ங ஈறாகச் சொல்லப்பட்ட பத்து உயிர்மெய் எழுத்துக்களும் மொழி முதல் எழுத்துக்கள் ஆகும்.

(சான்று)

அம்மா, ஆடு, இலை,ஈசல், உரல், ஊஞ்சல், எலி, ஏணி, ஐயர், ஒட்டகம், ஓடம், ஔவை .

கற்கண்டு, சட்டி, தம்பி, நன்றி, படை, மலை, வயல், யவனர், ஞமலி, இங்ஙனம்.

பத்து உயிர் மெய் எழுத்துக்களில் வகரம் எட்டு உயிர்களோடு மொழி முதலில் வரும்.

(சான்று) வளை, வாழை, விடு, வீடு, வெல், வேல், வையம், வௌவால்.

யகரம் ஆறு உயிர்களோடு மொழி முதலில் வரும்.

(சான்று) யவனர், யானை, யுகம், யூகம், யோசனை, யௌவனம்.

ஞகரம் நான்கு உயிர்களோடு மொழி முதலில் வரும்.

(சான்று) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

ஙகரம் மூன்று சுட்டுக்கள், யா வினா, எகர வினா வின்பின் அகரத்தைச் சேர்ந்து நகர மெய் மொழி முதலாகும்.

(சான்று) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்.

க. ச, க ந, ப, ம, என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடும் மொழி முதலாக வரும்.

# கூறு : 7

## ஒற்றெழுத்து மிகவும் மிகாமையும்



**ஒற்றெழுத்து மிகல்:**

இரண்டு சொற்கள் புணரும்போது இடையில் வல்லெழுத்து மிகுந்து வருதல் உண்டு. வருமொழி முதலில் க, ச, த, ப, ஆகிய எழுத்துக்கள் வரும்போது அவ் வெழுத்துக்கள் மிகுந்து வருதலையே வல்லெழுத்து மிகுதல் என்பர்.

1. பெயர்ச் சொற்களுக்கு முன்னால் ஒற்று மிகும்

(சான்று) விளக்குறிது

தாராக் கடிது

கிளிக் கால்

கடுக்காய், யானைத்தலை.

2. வேற்றுமை உருபின் பின் ஒற்று மிகும்

(சான்று) சாத்தனைக் கண்டேன்.

3. சுட்டின் முன்னர் ஒற்று மிகும்

(சான்று) அக் கொற்றன், இக் கொற்றன், உக்கொற்றன்

4 .தெரிநிலை வினைமுற்றின் முன்னர் ஒற்று மிகும்

(சான்று) கூவிற்றுக் கோழி

5.தெரிநிலை வினை எச்சத்தின் முன் ஒற்று மிகும்

(சான்று) படிக்கச் சென்றான்

தேடிக் கொண்டான்

6. குறிப்பு வினை எச்சத்தின் முன் ஒற்று மிகும்

(சான்று) இருளின்றிக் கண்டான்

7. எனவென் எச்சத்தின் முன் ஒற்று மிகும்

(சான்று) கொள்ளெனக் கொண்டான்

8. உவம உருபின் முன்னர் ஒற்று மிகும்

(சான்று) புலிபோலப் பாய்ந்தான்.

**ஒற்றெழுத்து மிகாமை :**

இரண்டு சொற்கள் புணரும்போது இடையில் வல்லெழுத்து மிகாமல் இயல்பாக வருதல் உண்டு. அதற்கு ஒற்று மிகாமை என்று பெயர்.

1. பெயர்ச் சொல் முன் ஒற்று மிகாது

(சான்று) நீ குறியை

2. வினாப் பெயர் முன் ஒற்று மிகாது

(சான்று) சாத்தனா கொண்டான்.

(சான்று) ஊர கேள்

4. பன்மைச் சொல் முன்னர் ஒற்று மிகாது

(சான்று) பல குதிரை

5. வினைச் சொல் முன் ஒற்று மிகாது

(சான்று) உண்டி கொற்றா

6. வியங்கோள் வினைச்சொல் முன் ஒற்று மிகாது

(சான்று) செல்க போருக்கு

7. வினை எச்சத்தின் பின் ஒற்று மிகாது

(சான்று) காணிய சென்றார்.

8. பெயர் எச்சத்தின் முன் ஒற்று மிகாது

(சான்று) உண்ட குதிரை

9. உவமச் சொல் முன் ஒற்று மிகாது

(சான்று) பொன்னன்ன குதிரை

10. உரையசைச் சொல் முன் ஒற்று மிகாது

(சான்று) அம்மா கொற்றா.

**1. ஆகுபெயர் - அன்மொழித்தொகை**

**ஆகுபெயர்:**

ஒரு பொருளின் இயற்பெயர் பொருளை உணர்த்தாது அதனோடு தொடர்புடைய வேறொன்றை உணர்த்துமானால் அது ஆகுபெயராகிறது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்களும், எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவைப் பெயர்களும், சொல்லும், தானியும்,

காரணமும், காரியமும், வினைமுதலும் ஆக ஆகுபெயர்கள் பல்வகைப்படும்.

இவை தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்து வருபவையாகும். இவை பதினாறு வகையாகும்.

**உதாரணம்**

1. பொருளாகு பெயர்

“தாமரை புரையும் காமர் சேவடி”

தாமரை என்னும் சொல் இங்கு முதற்பொருளை (தாமரையை உணர்த்தாமல் அதன் சினையாகிய மலரை உணர்த்துகிறது. ஆகவே அது பொருளாகு பெயராகிறது.

விளக்கம் :மலர் போலும் காமர் சேவடி”

இதுபோலவே எல்லா ஆகுபெயர்களுக்கும் பொருள் உணர்க

2. இடவாகு பெயர்

“அகன் அமர்ந்து செய்யாள் உறையும்”

அகன் என்னும் இடப்பெயர் அங்கிருக்கிற மனத்தை உணர்த்துகிறது, இடப்பெயர் இடத்தை உணர்த்தாமல் இடவாகுபெயராக மனத்தை உணர்த்துகிறது.

3. கால ஆகுபெயர்

கார் அறுத்தது.

கார் என்னும் மழைக்காலத்தை உணர்த்தாமல் மழைக்காலத்து விளையும் பயிரை உணர்த்துகிறது.

4. சினையாகு பெயர்

வெற்றிலை நட்டான்.

வெற்றிலை என்னும் சினைப்பெயர், கொடியை உணர்த்துவதால் சினை ஆகுபெயராகிறது.

5. குணவாகு பெயர்

நீலம் சூடினாள்.

நீலம் என்னும் நிறப்பெயர் (குணப்பெயர்) அதனையுடைய குவளை மலருக்கு ஆயிற்று. இது பண்பாகு பெயர் எனவும் பெயர் பெறும்.

குறிப்பு

6. தொழிலாகு பெயர்

வற்றலோடு உண்டான்.

வற்றல் என்னும் தொழிற்பெயர் அது பொருந்திய உணவுக்கு ஆகி வருகிறது.

7. எண்ணளவை ஆகுபெயர்

காலாலே நடந்தான்.

கால் என்னும் எண்ணல் அளவைப்பெயர் அது கொண்ட உறுப்பிற்கு ஆயிற்று.

8. எடுத்தளவை ஆகு பெயர்

இரண்டு கிலோ தந்தான்.

இரண்டு கிலோ அளவைப்பெயர் அவ் அளவைக் கொண்ட பொருள்உணர்த்துகிறது

9. முகத்தளவை ஆகுபெயர்

நாழி உடைந்தது.

நாழி என்னும் முகத்தல் அளவைப் பெயர் அதனை உடைய கருவியை உணர்த்துகிறது.

10. நீட்டளவை ஆகுபெயர்

கீழைத் தடி விளைந்தது.

தடி என்னும் நீட்டல் அளவைப் பெயர் அதனால் அளக்கப்பட்ட வயலுக்கு ஆயிற்று.

11. சொல்லாகு பெயர்

இந் நூற்கு உரை செய்தான்.

உரை என்னும் சொல், ஆகுபெயராகி அதன் பொருளைக் குறிக்கிறது.

12. தானி ஆகுபெயர்

விளக்கு முறிந்தது.

விளக்கு என்னும் தானியின் பெயர் அதற்குத் தானமாகிய தண்டைக் குறிக்கிறது. விளக்கு முறிந்தது என்றால் விளக்குத் தண்டு முறிந்தது என்று பொருள்.

13. கருவி ஆகுபெயர்

திருவாசகம் படித்தான்.

வாசகம் என்னும் கருவியின் பெயர் (சொல்) அதன் காரியமாகிய நூலுக்கு ஆகி வருகிறது.

14. காரிய ஆகுபெயர்

இந் நூல் அணி.

அணி என்னும் கருவியின் பெயர் (சொல்) அதன் காரியமாகிய நூலுக்கு ஆகி வருகிறது.

15. கருத்தா ஆகுபெயர்

இந் நூல் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்காயிற்று.

16. உவமை ஆகுபெயர்

காளை வந்தான்.

காளை இங்கு காளைமாட்டைக் குறிக்காமல் காளை போன்ற மனிதனைக் குறிக்கிறது.

**அன்மொழித்தொகை:**

வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை ஆகிய ஐந்து தொகை நிலை மொழிகளுக்குப் புறத்தே அவை அல்லாத பிற மொழிகளும் தொக்கு (மறைந்து) வருவது அன்மொழித்தொகை எனப்படும்.

(சான்று)

**1. பூங்குழல்**

பூவை உடைய குழல் என்று குழலைக் குறிக்குமானால் இரண்டாம் வேற்றுமைத்தொகை. பூங்குழல் வந்தாள். இத்தொடரில் பூங்குழல் என்பது பூங்குழலை உடையவளைக் குறிக்கிறது. அதனால்

இது இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையாகும்.

குறிப்பு

**2. பொற்றொடி**

பொன்னாலாகிய தொடி எனில் மூன்றாம் வேற்றுமைத்தொகை.

பொற்றொடி உடையாள் எனில் மூன்றாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

**3. அணியிலக்கணம்**

அணி இலக்கணம் என்றால் நான்காம் வேற்றுமைத்தொகை.

அணிக்கு இலக்கணம் கூறும் நூல் என நூலை உணர்த்தும்போது நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாகும்.

**4.பொற்றாலி**

பொன்னினாகிய தாலி என்றால் ஐந்தாம் வேற்றுமைத்தொகை.

பொன்னினாகிய தாலி உடையாள் (வந்தாள்) என்றால் ஐந்தாம் வேற்றுமைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

**5. கிள்ளிகுடி**

கிள்ளியது குடி என்றால் ஆறாம் வேற்றுமைத் தொகை. கிள்ளியினது குடி இருக்கும் ஊர் என்று பொருள்பட்டால் ஆறாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

**6. வயிற்றுவலி**

வயிற்றில் வலி என்று வலியைக் குறித்தால் ஏழாம் வேற்றுமைத் தொகை. வயிற்றுவலி வருகிறான் என்றால் ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

**7. தாழ்குழல்**

தாழ்ந்த குழலினை உடையாள் என விரியின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

குறிப்பு

**8. செந்தாமரை**

செம்மையாகிய தாமரை போன்ற முகம் உடையாள் எனப் பெண்ணைக் குறிக்குமானால் இது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

**9. துடியிடை**

துடிபோலும் இடை எனில் உவமைத்தொகை. துடிபோலும் இடை உடையாளைக் குறிப்பின் இது உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

**10. உயிர்மெய்**

உயிரும் மெய்யும் எனில் உம்மைத்தொகை. உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்தைக் குறிக்குமானால் உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

**3..வினா-விடை வகைகள்:**

வினாக்கள் ஆறு வகைப்படும். அவையாவன:

1. அறி வினா

ஆசிரியன் இச் சூத்திரத்திற்குப் பொருள் யாது? எனல்.

2. அறியாமை வினா

மாணாக்கன் இச் சூத்திரத்திற்குப் பொருள் யாது? எனல்.

3. ஐயுறல் வினா

மரமோ மனிதனோ? எனல்.

4. கொளல் வினா

இந்நூல் கடையில் உள்ளதோ? எனல்.

5. கொடை வினா

உனக்கு உடை இல்லையா? என்பது. இல்லை என்றால் வாங்கிக் கொடுப்பதற்காகக் கேட்கப்படும் வினாவாகும்.

6. ஏவல் வினா

தம்பி உண்டாயா? எனல்.

குறிப்பு

**விடைகள்:**

விடைகள் எட்டு வகைப்படும். அவையாவன:

1. சுட்டு விடை

காரைக்குடிக்கு வழி யாது? என வினவின் இது என்பது சுட்டு விடையாகும்.

2. மறை விடை

இது செய்வாயா? என்ற போது “செய்யேன்“ என்பது எதிர்மறை விடையாகும்.

3. நேர் விடை

உண்மை பேசுவாயா? என்ற போது “பேசுவேன்“ என்பது நேர் விடையாகும்.

4. ஏவல் விடை

இது செய்வாயா? என்று கேட்கும் போது “நீ செய்“ என்பது ஏவல் விடையாகும்.

5. வினா விடை

இது செய்வாயா? என வினவின் செய்வேனோ? என்பது வினா விடையாகும். வினாவே விடையாக வருவது.

6. உற்றது உரைத்தல்

இது செய்வாயா? என வினவின் உடம்பு வலித்தது எனல்.

7. உறுவது கூறல்

இது செய்வாயா? என வினவின் உடம்பு வலிக்கும் எனல்.

8. இனமொழி

இதை எழுதுவாயா? எனக் கேட்கும்போது “இதைப் படிப்பேன்“ எனல்.

இலக்கண ஆசிரியர்கள் வினாக்களையும் விடைகளையும் இவ்வாறு வகைப்படுத்தியுள்ளனர்.

குறிப்பு

**பயிற்சி வினாக்கள்:**

**1.ஒற்றெழுத்து மிகும் இடங்கள் குறித்து விவரி.**

இரண்டு சொற்கள் புணரும்போது இடையில் வல்லெழுத்து மிகுந்து வருதல் உண்டு. வருமொழி முதலில் க, ச, த, ப ஆகிய எழுத்துக்கள் வரும்போது அவ் வெழுத்துக்கள் மிகுந்து வருதலையே வல்லெழுத்து மிகுதல் என்பர்.

1. பெயர்ச் சொற்களுக்கு முன்னால் ஒற்று மிகும்

(சான்று) விளக்குறிது
தாராக் கடிது
கிளிக் கால்
கடுக்காய், யானைத்தலை.

2. வேற்றுமை உருபின் பின் ஒற்று மிகும்

(சான்று) சாத்தனைக் கண்டேன்.

3. சுட்டின் முன்னர் ஒற்று மிகும்

(சான்று) அக் கொற்றன், இக் கொற்றன், உக்கொற்றன் -

4 .தெரிநிலை வினைமுற்றின் முன்னர் ஒற்று மிகும்

(சான்று) கூவிற்றுக் கோழி

5. தெரிநிலை வினை எச்சத்தின் முன் ஒற்று மிகும்

(சான்று) படிக்கச் சென்றான்
தேடிக் கொண்டான்

6. குறிப்பு வினை எச்சத்தின் முன் ஒற்று மிகும்

(சான்று) இருளின்றிக் கண்டான்

7. எனவென் எச்சத்தின் முன் ஒற்று மிகும்

(சான்று) கொள்ளெனக் கொண்டான்

8. உவம உருபின் முன்னர் ஒற்று மிகும்

(சான்று) புலிபோலப் பாய்ந்தான்.

**2.ஒற்றெழுத்து மிகா இடங்களை விளக்கி வரைக. :**

இரண்டு சொற்கள் புணரும்போது இடையில் வல்லெழுத்து மிகாமல் இயல்பாக வருதல் உண்டு. அதற்கு ஒற்று மிகாமை என்று பெயர்.

1. பெயர்ச் சொல் முன் ஒற்று மிகாது

குறிப்பு

(சான்று) நீ குறியை

2. வினாப் பெயர் முன் ஒற்று மிகாது

(சான்று) சாத்தனா கொண்டான்.

(சான்று) ஊர கேள்

4. பன்மைச் சொல் முன்னர் ஒற்று மிகாது

(சான்று) பல குதிரை

5. வினைச் சொல் முன் ஒற்று மிகாது

(சான்று) உண்டி கொற்றா

6. வியங்கோள் வினைச்சொல் முன் ஒற்று மிகாது

(சான்று) செல்க போருக்கு

7. வினை எச்சத்தின் பின் ஒற்று மிகாது

(சான்று) காணிய சென்றார்.

8. பெயர் எச்சத்தின் முன் ஒற்று மிகாது

(சான்று) உண்ட குதிரை

9. உவமச் சொல் முன் ஒற்று மிகாது

(சான்று) பொன்னன்ன குதிரை

10. உரையசைச் சொல் முன் ஒற்று மிகாது

**3.ஆகுபெயர் - விளக்குக.**

ஒரு பொருளின் இயற்பெயர் பொருளை உணர்த்தாது அதனோடு தொடர்புடைய வேறொன்றை உணர்த்துமானால் அது ஆகுபெயராகிறது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்களும், எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவைப் பெயர்களும், சொல்லும், தானியும், காரணமும், காரியமும், வினைமுதலும் ஆக ஆகுபெயர்கள் பல்வகைப்படும்.

இவை தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்து வருபவையாகும். இவை பதினாறு வகையாகும்.

**4.அன்மொழித்தொகையின் இலக்கணத்தைச் சுட்டியுரைக்க.**

வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை ஆகிய ஐந்து தொகை நிலை

குறிப்பு

மொழிகளுக்குப் புறத்தே அவை அல்லாத பிற மொழிகளும் தொக்கு (மறைந்து) வருவது அன்மொழித்தொகை எனப்படும்.

(சான்று)

பூங்குழல்

பூவை உடைய குழல் என்று குழலைக் குறிக்குமானால் இரண்டாம் வேற்றுமைத்தொகை. பூங்குழல் வந்தாள். இத்தொடரில் பூங்குழல் என்பது பூங்குழலை உடையவளைக் குறிக்கிறது.

**5. வினா எத்தனை வகைப்படும்?**

வினாக்கள் ஆறு வகைப்படும். அவையாவன:

1. அறி வினா

   ஆசிரியன் இச் சூத்திரத்திற்குப் பொருள் யாது? எனல்.

2. அறியாமை வினா

   மாணாக்கன் இச் சூத்திரத்திற்குப் பொருள் யாது? எனல்.

3. ஐயுறல் வினா

   மரமோ மனிதனோ? எனல்.

4. கொளல் வினா

   இந்நூல் கடையில் உள்ளதோ? எனல்.

5. கொடை வினா

   உனக்கு உடை இல்லையா? என்பது. இல்லை என்றால் வாங்கிக் கொடுப்பதற்காகக் கேட்கப்படும் வினாவாகும்.

6. ஏவல் வினா

   தம்பி உண்டாயா? எனல்.

---

# கூறு 8:

## 1.தமிழ்ச்சொல் அமைப்பின் சிறப்பு

---

**பெயர், வினை, இடை, உரி வடிவங்கள்:**

தொல்காப்பியம் சொல்லுக்கு இலக்கணம் கூறும் போது ஒழுக்க அடிப்படையில் தோன்றிய திணை பற்றிச் சொல்லித் திணைக்கண் தோன்றுவது சொல் எனக் குறிப்பிடுகிறது.

**குறிப்பு**

மக்கட் சுட்டு உயர்திணை என்றும் அவரல்லாத பிற அ.ஃ.றிணை என்றும், இரண்டு திணைகளிலும் சொல் பிறக்கும் என்கிறது.

சொல்லால் அறியப்படுவது சொன்மையும் பொருண்மையும் என இரண்டாகும். சொன்மை சொல்லின் வடிவை உணர்த்தும். பொருண்மை, தெரிபு வேறு நிலையல், குறிப்பில் தோன்றல் எனத் தெளிவுபடுத்தும்.

திணை, பால், எண், இடம், காலம், வேற்றுமை - இவற்றைச் சொல் உணர்த்தும்.

**திணை**

உயர்திணை,அ.ஃ.றிணை என இரண்டாகும். உயர்திணை- மக்களைக் குறிக்கும். (சான்று) திருவள்ளுவர். அ.ஃ.றிணை - மக்கள் அல்லாத பிறவற்றைக் குறிக்கும். (சான்று) மரம்

**பால்**

பால் என்றால் பகுப்பு என்று பொருள். உயர்திணை மூன்று பாலாகவும், அ.ஃ.றிணை இரண்டு பாலாகவும் பிரிக்கப்படும்.

உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால்.

(சான்று) ஒருவன், ஒருத்தி, பலர்.

அ.ஃ.றிணை ஒன்றன்பால், பலவின்பால்.

(சான்று) ஆடு, மாடுகள்.

**எண்**

ஒருமை, பன்மை என இரு வகைப்படும்.

(சான்று) நான், நாங்கள்.

**இடம்**

தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

(சான்று) நான், நீ, அவன்.

**காலம்**

இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூவகைப்படும்.

(சான்று) வந்தேன் - வருகிறேன் - வருவேன்.

குறிப்பு

**தமிழ்ச்சொல் அமைப்பின் சிறப்பு**

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துக்கள் தொடர்ந்தோ பொருள் தருமானால் அது சொல் எனப்படும்.

(சான்று) ஆ = பசு. ஓரெழுத்தால் ஆகின்ற சொல்.

ஆசிரியர் - பல எழுத்துக்களால் ஆகின்ற சொல்.

நன்னூலார் சொல்லை இருவகைப்படுத்துவர். பகுபதம் என்றும் பகாப்பதம் என்றும். பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என உறுப்புக்களாகப் பகுக்கப்படுவது பகுபதம். பகுக்கப்படாதது பகாப்பதம் எனப்படும்.

**பகுபதம்** (உ.ம்) செய் + த் + ஆன் = செய்தான்.

இதில் செய் - பகுதி , த் - இடைநிலை, ஆன் - விகுதி.

செய்+த் + அன் + அன் = செய்தனன்.

இதில் விகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது சாரியை எனப்படும்.

பார்த்தனன் = பார் + த் + த் + அன் + அன்.

இதில் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது சந்தி எனப்படும்.

நடந்தாள் = நட + த் +த் + ஆள்

சந்தி த் ந் என விகாரமாயிற்று.

ஒவ்வொரு சொல்லிலும் இவ்வுறுப்புக்கள் எல்லாம் வரும் என்பது இல்லை.

**பெயர், வினை, இடை, உரி வடிவங்கள்**

தமிழ்ச் சொற்கள் நான்கு வகைப்படும். பெயர், வினை, இடை, உ.ரி என, பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் சார்ந்து இடைச் சொல்லும் உரிச் சொல்லும் வரும்.

**பெயர்ச்சொல்**

பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என அறுவகைப்படும்.

குறிப்பு

| | |
|---|---|
| பொருள் (சான்று) | ஒருவன் |
| இடம் (சான்று) | ஊரன் |
| காலம் (சான்று) | வேனிலான் |
| சினை (சான்று) | செங்கண்ணன் |
| குணம்(சான்று) | அறிஞன் |
| தொழில் (சான்று) | ஓதுவான் |

பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும். காலம் காட்டா.

**வினைச்சொற்கள்**

பொருள் முதலாகிய ஆறு பெயர்களுக்கும் முற்றாக வருவன வினைச்சொற்கள். அவை காலம் காட்டும். ஆகவே தெரிநிலை வினைமுற்றுக்கள் எனப்படும்.

| | |
|---|---|
| (சான்று) அவன் செய்தான் | பொருட்பெயர் கொண்டுத |
| நிலம் குளிர்ந்தது | இடப்பெயர் கொண்டது |
| கார் வந்தது | காலப்பெயர் கொண்டது |
| கை குவிந்தது | சினைப்பெயர் கொண்டது |
| பசப்பு பரந்தது | குணப்பெயர் கொண்டது |
| பிறப்பு ஒழிந்தது | தொழிற்பெயர் கொண்டது |

காலம் காட்டாதவை குறிப்பு வினைமுற்றுக்கள் எனப்படும்.

(சான்று) அவன் நல்லன்

நிலம் நல்லது

கார் நல்லது

கை நல்லது

பசப்பு நல்லது.

பிறப்பு நல்லது

**இடைச்சொற்கள்**

(சான்று) குழையன் - குழை - பெயர், அன் - விகுதி.

நிலத்தினன் - நிலம் + த் + இன் + அன். இதில் பெயர், இடைநிலை, சாரியை, விகுதி வந்தன.

குறிப்பு

உண்ணாய் - உண் + ஆய் வினையும், விகுதியும் வந்துள்ளன.

நடந்தனன் - நட + த் + த் + அன் + அன். வினை, (த் , ந் ஆனது விகாரம். சந்தி,இடைநிலை, சாரியை, விகுதி முதலியன வந்தன.

பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி முதலானவை எல்லாம் இடைச்சொற்களே.

**உரிச்சொல்**

செய்யுட்குரிய சொற்களாகும். பெயரையும் வினையையும் சார்ந்து வரும்.

1. ஒரு சொல் பல பொருளை உணர்த்துவன. 2. பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்துவன என இருவகைப்படும்.

1.கடி என்னும் சொல் காப்பு, மணம், விரைவு, ஆர்த்தல் என்னும் பல பொருள் உடையது.

(சான்று) காப்பு - கடி நகர் அடைந்தது
மணம் - கடி மாலை சூடி
விரைவு - எம்மம்பு கடி விடுதும்
ஆர்த்தல் - கடி முரசு

2. சால, உறு, தவ, நனி என்னும் பல சொற்கள் மிகுதி என்னும் ஒரு பொருளை உடையன.

(சான்று) சால - பருவந்து சாலப் பல கொல்
உறு – உறு வளி துரக்கும்
தவ –தவச் சேய் நாட்டாராயினும்
நனி -வந்து நனி வருந்தினை வாழிய நெஞ்சே

**2.பிற மொழிச் சொற்களைத் தமிழில் ஆளும் முறைகள்:**

தமிழ்ச் சொற்களுக்கு என்று இயல்பாகவே சில அமைப்பு முறைகள் உண்டு. எல்லா உயிரெழுத்தும் மொழிக்கு முதலில் வரும். உயிரோடு இணைந்தன்றி மெய்யெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா.

குறிப்பு

வடமொழிச் சொற்களைத் தமிழில் வழங்கும் முறை குறித்து இலக்கண ஆசிரியர்கள் இலக்கணம் செய்தனர்.

பழங்காலத்தில் வடமொழி மட்டும் தமிழில் கலக்கும் நிலை இருந்தது. இன்று பல மொழிச் சொற்களும் தமிழில் வந்து வழங்குகின்றன.

வடசொற்களைத் தமிழில் கையாள்கிறபோது தற்சமம், தற்பவம் என இரண்டு முறைகளைப் பின்பற்றினர். சில வடமொழிச் சொற்கள் வடமொழி உச்சரிப்புக் கெடாமல் தமிழில் எழுதத் தக்கவாறு அமைந்துள்ளன. அவை தற்சமம் எனப்படும்.

வடமொழி தமிழ்

(சான்று) கமலம் கமலம்.

காரணம் காரணம்

சில வடசொற்களின் ஒலிப்பைத் தமிழ்மொழி ஒலிப்புக்கு ஏற்றவாறு மாற்றித் தமிழ் எழுத்துக்களால் எழுதுவதைத் தற்பவம் என்பர். (சான்று)

பங்கஜம் - பங்கயம்

மாஸம் - மாதம்

தற்பவம் என்னும் முறையைத் தமிழில் பிறமொழிச் சொற்களைக் கையாளும் போதும் பயன்படுத்தலாம். சாக்ரடீஸ் என்பதைச் சோக்ரதர் என்றும் சேக்ஸ்பியர் என்பதைச் செகப்பிரியர் என்றும் எழுதுவது பிற்காலத்தவருக்குத் தெரியாமல் போய்விடும். மயக்கம் தரும். (coffee) என்பதைக் காப்பி என்று எழுதுவது தவறில்லை பொருளில் மாற்றம் இல்லை.

பிறமொழிச் சொற்களைத் தமிழில் பயன்படுத்துகிறபோது தமிழ்மரபும் தனித்த இயல்பும் கெடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தமிழ் எளிமையும் இனிமையும் உடைய மொழி. அதன் தன்மை திரியாதவாறு சொற்களை மொழி மாற்றம் செய்ய வேண்டும்.

பிறமொழிகள் போலத் தமிழில் மெய் முதலாக வருவதில்லை . ஸ்தலம், ஸ் தூ லம் போன்ற வடசொற் களைத் தமிழில் த லம், தூ லம் என்றே கையாள்கிறோம். ஸ்வதந்திரம் , சுதந்திரம். ஸ்வப்னம் ,

சொப்பனம். இங்கு எல்லாம் மெய் முதல் உயிர்மெய் முதலாக மாற்றிக் கொள்கிறோம்.

குறிப்பு

தமிழில் ஒலித்துணையாக வரும் உகரம் பேருதவி புரியக் கூடியது.

லைட்டு, நைட்டு, ஷிப்டு என்று ஒலிப்பது எளிது.

அ, இ, உ, என்னும் மூன்று உயிர்களும் சில வடசொற்களைத் தமிழ்ப் படுத்துகின்றன.

சத்யம்<சத்தியம்

பக்வம்<பக்குவம்

சக்ரம்<சக்கரம்

பிறமொழிச் சொற்களைத் தமிழில் எடுத்தாளும் போது தமிழின் எளிமை கெடாதவாறு இம் முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்:**

**1.திணை, பால் குறித்து எழுதுக.**

**திணை**

உயர்திணை,அஃறிணை என இரண்டாகும். உயர்திணை- மக்களைக் குறிக்கும். (சான்று) திருவள்ளுவர். அஃறிணை - மக்கள் அல்லாத பிறவற்றைக் குறிக்கும். (சான்று) மரம்

**பால்**

பால் என்றால் பகுப்பு என்று பொருள். உயர்திணை மூன்று பாலாகவும், அஃறிணை இரண்டு பாலாகவும் பிரிக்கப்படும்.

உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால்.

(சான்று) ஒருவன், ஒருத்தி, பலர்.

அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால்.

(சான்று) ஆடு, மாடுகள்.

குறிப்பு

**2.பெயர்ச்சொல் - விளக்கி வரைக.**

பொருட்பெயர்,இடப்பெயர், காலப்பெயர்,சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என அறுவகைப்படும்.

பொருள் (சான்று) ஒருவன்

இடம் (சான்று) ஊரன்

காலம் (சான்று) வேனிலான்

சினை (சான்று) செங்கண்ணன்

குணம் (சான்று) அறிஞன்

தொழில் (சான்று) ஓதுவான்

பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும். காலம் காட்டாது.

**3.வினைச்சொற்களின் தன்மைகளை விரித்தெழுதுக**

பொருள் முதலாகிய ஆறு பெயர்களுக்கும் முற்றாக வருவன வினைச்சொற்கள். அவை காலம் காட்டும். ஆகவே தெரிநிலை வினைமுற்றுக்கள் எனப்படும்.

(சான்று) அவன் செய்தான் பொருட்பெயர் கொண்டுத

நிலம் குளிர்ந்தது இடப்பெயர் கொண்டது

கார் வந்தது காலப்பெயர் கொண்டது

கை குவிந்தது சினைப்பெயர் கொண்டது

பசப்பு பரந்தது குணப்பெயர் கொண்டது

பிறப்பு ஒழிந்தது தொழிற்பெயர் கொண்டது

காலம் காட்டாதவை குறிப்பு வினைமுற்றுக்கள் எனப்படும்.

(சான்று) அவன் நல்லன்

நிலம் நல்லது

கார் நல்லது

கை நல்லது

பசப்பு நல்லுத

பிறப்பு நல்லது

**4. உரிச்சொல்லின் இயல்புகளைத் தருக.**

குறிப்பு

செய்யுட்குரிய சொற்களாகும். பெயரையும் வினையையும் சார்ந்து வரும்.

1. ஒரு சொல் பல பொருளை உணர்த்துவன. 2. பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்துவன என இருவகைப்படும்.

1.கடி என்னும் சொல் காப்பு, மணம், விரைவு, ஆர்த்தல் என்னும் பல பொருள் உடையது.

(சான்று) காப்பு - கடி நகர் அடைந்தது

மணம் - கடி மாலை சூடி

விரைவு - எம்மம்பு கடி விடுதும்

ஆர்த்தல் - கடி முரசு

2. சால, உறு, தவ, நனி என்னும் பல சொற்கள் மிகுதி என்னும் ஒரு பொருளை உடையன.

(சான்று) சால - பருவந்து சாலப் பல கொல்

உறு – உறு வளி துரக்கும்

தவ – தவச் சேய் நாட்டாராயினும்

நனி - வந்து நனி வருந்தினை வாழிய நெஞ்சே

5. தற்சமம், தற்பவம் என்பதனை விவரி

பழங்காலத்தில் வடமொழி மட்டும் தமிழில் கலக்கும் நிலை இருந்தது. இன்று பல மொழிச் சொற்களும் தமிழில் வந்து வழங்குகின்றன.

வடசொற்களைத் தமிழில் கையாள்கிறபோது தற்சமம், தற்பவம் என இரண்டு முறைகளைப் பின்பற்றினர். சில வடமொழிச் சொற்கள் வடமொழி உச்சரிப்புக் கெடாமல் தமிழில் எழுதத் தக்கவாறு அமைந்துள்ளன. அவை தற்சமம் எனப்படும்.

வடமொழி தமிழ்

(சான்று) கமலம் கமலம்.

காரணம் காரணம்

சில வடசொற்களின் ஒலிப்பைத் தமிழ்மொழி ஒலிப்புக்கு ஏற்றவாறு மாற்றித் தமிழ் எழுத்துக்களால் எழுதுவதைத் தற்பவம் என்பர். (சான்று)

பங்கஜம் - பங்கயம்

மாஸம் - மாதம்

குறிப்பு

## கூறு: 9

1. **அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகள்**

தமிழ் மொழியில் சொற்கள் நான்கு வகைப்படும். பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகையாகும்.

இவற்றில் பெயர்ச்சொற்கள் மட்டும் வேற்றுமை உருபுகளை ஏற்கும். ஐ, ஆல், கு, இன், அது, கண் என வேற்றுமை உருபுகள் ஆறாகும். தொடரில் வேற்றுமை உருபுகள் மறைந்து வருவதற்கு வேற்றுமைத் தொகை என்று பெயர். வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு வருமானால் வேற்றுமை விரி என்று பெயர்.

இரண்டு சொற்கள் நிலைமொழியும் வருமொழியுமாக இருந்து தம்முள் ஒன்றுபடப் புணர்வதற்குப் புணர்ச்சி என்று பெயர். அது அல்வழிப் புணர்ச்சி என்றும் வேற்றுமைப் புணர்ச்சி என்றும் இருவகைப்படும்.

வேற்றுமை உருபுகள் சொல்லின் இடையே மறைந்து நின்றோ வெளிப்பட்டு நின்றோ புணர்வதற்கு வேற்றுமைப் புணர்ச்சி என்று பெயர்.

(சான்று)

**வேற்றுமைத்தொகை-உருபு-வேற்றுமை விரி**

| | |
|---|---|
| நிலங்கடந்தான் (ஐ) | நிலத்தைக் கடந்தான் |
| கல்லெறிந்தான் (ஆல்) | கல்லால் எறிந்தான் |
| கொற்றன் மகன் (கு) | கொற்றனுக்கு மகன் |
| மலை வீழருவி (இன்) | மலையின் வீழருவி |
| சாத்தன் கை (அது) | சாத்தனது கை |
| குன்றக் கூகை (கண்) | குன்றத்தின் கண் கூகை. |

தொடரில் வேற்றுமைப் பொருளை உணர்த்துவதால் இவை வேற்றுமைப் புணர்ச்சி எனப்பட்டன.

வேற்றுமை அல்லாத வழியில் சொற்கள் புணர்வதற்கு அல்வழிப் புணர்ச்சி என்று பெயர்.

தொகை நிலையில் ஐந்தும் தொகாநிலையில் ஒன்பதுமாக அல்வழிப் புணர்ச்சி பதினான்கு வகைப்படும்.



**சான்று**

1. வினைத் தொகை - கொல் யானை
2. பண்புத் தொகை - கருங் குவளை
3. உவமைத் தொகை - மதி முகம்
4. உம்மைத் தொகை - இராப் பகல்
5. அன்மொழித் தொகை - பொற்றொடி

**தொகாநிலைத் தொடர்கள்**

1. எழுவாய்த் தொடர் - வேலன் வந்தான்
2. விளித் தொடர் - வேலா வா
3. பெயரெச்சத் தொடர் - வந்த வேலன்
4. வினையெச்சத் தொடர் - வந்து போனான்

5.தெரிநிலை வினை முற்றுத் தொடர் - வந்தான் வேலன்

5. குறிப்பு வினை முற்றுத் தொடர் - பெரியன் வேலன்
6. இடைச் சொற்றொடர் - மற்றொன்று
7. உரிச் சொற்றொடர் - நனி பேதை
8. அடுக்குத்தொடர் - பாம்பு பாம்பு

**2.திணை, பால், எண், இட இயைபு**

**இருதிணை:**

திணை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்றே பெயர். உயர்ந்த ஒழுக்கம் உடைய மக்களை உயர்திணை என்றனர். அவ்வாறு இல்லாத பிறவற்றை அஃறிணை என்று கூறினர்.

(உம்) உயர்திணை - மக்கள்

அஃறிணை - மரம், விலங்கு.

**பால்**

பால் என்றால் பகுப்பு என்று பொருள். உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்றாகும்.

(சான்று) கந்தன், சாத்தி, மூவர்.

குறிப்பு

அ∴றிணை ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டாகும்.

(சான்று) அது, அவை

**எண்**

தமிழ்மொழியில் ஒருமை, பன்மை என எண் இரண்டு வகைப்படும். (சான்று) மரம், மரங்கள்.

**இடம்**

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

(சான்று) யான், நீ, அவன்.

**சொற்கள்**

திணை, பால், பால், எண் இட இயைபுகளுக்கு ஏற்ப சொற்கள் பிறக்கும்.

எழுவாய் உயர்திணையாக இருந்தால் பயனிலையும் உயர்திணையாகத் தான் இருக்க வேண்டும்.

(சான்று) இராமன் வந்தான்

இல்லை எனில் திணை வழுவாகும். வழு - குற்றம்

(சான்று) இராமன் வந்தது

**பால்**

எழுவாய் எந்தப் பாலில் வருகிறதோ அதே பாலில் தான் பயனிலையும் வரவேண்டும்.

(சான்று) இராமன் எழுதினான்

சாத்தி படித்தாள்

மக்கள் வந்தனர்

இல்லை எனில் வழு

(சான்று) இராமன் எழுதினாள்

சாத்தி படித்தான்

மக்கள் வந்தன

**எண்**

எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலையும் ஒருமையில் இருக்க வேண்டும். பன்மை எனில் பன்மைப் பயனிலை பெற வேண்டும்.

(சான்று) குதிரை ஓடியது

குதிரைகள் ஓடின

இல்லை என்றால் குற்றமாகும்.

(சான்று)

குதிரை ஓடின. - பிழை

குதிரைகள் ஓடியது. - பிழை

**இடம்**

எழுவாய் தன்மையில் இருந்தால் தன்மைப் பயனிலையும், முன்னிலையில் இருந்தால் முன்னிலைப் பயனிலையும், படர்க்கையில் இருந்தால் படர்க்கைப் பயனிலையும் பெறும்.

(சான்று) நான் வருகிறேன்

நீ வருகிறாய்

அவன் வருகிறான்

இல்லை என்றால் குற்றமாகும்.

(சான்று) நான் வருகிறான்

நீ வருகிறேன்

அவன் வருகிறாய்

ஆகவே தமிழ் மொழியில் திணை, பால், எண், இடங்களுக்குத் தக்கபடியே பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் அமையும் - அமைய வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்**

1.வேற்றுமைப் புணர்ச்சி – விளக்குக

வேற்றுமை உருபுகள் சொல்லின் இடையே மறைந்து நின்றோ வெளிப்பட்டு நின்றோ புணர்வதற்கு வேற்றுமைப் புணர்ச்சி என்று பெயர்.

(சான்று)

| வேற்றுமைத்தொகை- | உருபு- | வேற்றுமை விரி |
|---|---|---|
| நிலங்கடந்தான் | (ஐ) | நிலத்தைக் கடந்தான் |
| கல்லெறிந்தான் | (ஆல்) | கல்லால் எறிந்தான் |
| கொற்றன் மகன் | (கு) | கொற்றனுக்கு மகன் |
| மலை வீழருவி | (இன்) | மலையின் வீழருவி |
| சாத்தன் கை | (அது) | சாத்தனது கை |
| குன்றக் கூகை | (கண்) | குன்றத்தின் கண் கூகை. |

தொடரில் வேற்றுமைப் பொருளை உணர்த்துவதால் இவை வேற்றுமைப் புணர்ச்சி எனப்பட்டன.

2.அல்வழிப் புணர்ச்சி என்றால் என்ன?

குறிப்பு

குறிப்பு

வேற்றுமை அல்லாத வழியில் சொற்கள் புணா்வதற்கு அல்வழிப் புணர்ச்சி என்று பெயர்.

தொகை நிலையில் ஐந்தும் தொகாநிலையில் ஒன்பதுமாக அல்வழிப் புணர்ச்சி பதினான்கு வகைப்படும்.

3.தொகாநிலைத் தொடர்களைச் சான்றுகளுடன் நிறுவுக.

.எழுவாய்த் தொடர் - வேலன் வந்தான்

1. விளித் தொடர் - வேலா வா
2. பெயரெச்சத் தொடர் - வந்த வேலன்
3. வினையெச்சத் தொடர் - வந்து போனான்
4. தெரிநிலை வினைமுற்றுத் தொடர் - வந்தான் வேலன்
5. குறிப்பு வினை முற்றுத் தொடர் - பெரியன் வேலன்
6. இடைச் சொற்றொடர் - மற்றொன்று
7. உரிச் சொற்றொடர் - நனி பேதை
8. அடுக்குத்தொடர் - பாம்பு பாம்பு

4.சொற்கள் பிறக்குமாற்றைச் சுட்டியுரைக்க.

திணை, பால், பால், எண் இட இயைபுகளுக்கு ஏற்ப சொற்கள் பிறக்கும்.

எழுவாய் உயர்திணையாக இருந்தால் பயனிலையும் உயர்திணையாகத் தான் இருக்க வேண்டும்.

(சான்று) இராமன் வந்தான்

இல்லை எனில் திணை வழுவாகும். வழு - குற்றம்

(சான்று) இராமன் வந்தது

## கூறு: 10

## இக்கால இலக்கிய வகைகள்:

**( அ. ) மரபுக் கவிதைகள்:**

தொன்று தொட்டு வருவதை நாம் மரபு என்கிறோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நம் புலவர் பெருமக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்டனர். இயற்கையை - மக்கள்

வாழ்க்கையை உள்ளதை உள்ளவாறே பாடினார். உயர்வு நவிற்சி இல்லை. ஆகவே எந்தப் பொருளை எந்தச் சொல்லால் கூற வேண்டுமோ அதை அப்படியே கூறினர். அதுவே மரபாயிற்று. அம் மரபுகள் கால மாறுதல்களிலும் கூடப் பின்பற்றப்பட்டதால் பழைய இலக்கியங்கள் - கவிதைகள் இன்னும் கூட உயிர்ப்பு உடையனவாக விளங்குகின்றன.

சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்கள் மரபு வழிப் பட்டவை. சங்கமருவிய காலத்து அறநூல்கள்-அகநூல்களிலும் மரபுகள் மதிக்கப்பட்டன. நறுக்குத் தெறித்தாற்போல அறக்கருத்துக்களை வெளிப்படுத்த வெண்பா யாப்பு தழுவிக் கொள்ளப்பட்டது. காவியங்கள் வளர்த்த தமிழ் விருத்தமாக விரிந்தது. சைவ, வைணவ, சமண, பௌத்த சமயக் கொள்கைகளைப் பரப்புமாறு தோன்றிய காவியங்களும் கூட மரபுநிலை பிறழாது திகழ்ந்தன. புராணங்கள், தல புராணங்கள் முதலியவை உயர்வு நவிற்சி அணிகளிலே திளைத்தமையால் காலப்போக்கில் போற்றுவாரற்றுப் போயின.

காலந்தோறும் புலவர்கள் தனிப்பாடல்கள் பாடினார்கள். மரபு சிதையாமல் இருந்ததாலேயே அவை நிலைபெற்றன. இன்று மறுமலர்ச்சிக் கவிதைகளால் தமிழ் வளம் பெறுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமே தமிழ்க் கவிதை உலகில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. எளிமையோடு இனிமையும் கலந்தது. வள்ளலாரும் வேத நாயகமும் அண்ணாமலை ரெட்டியாரும் மரபுக் கவிதைகளை மேன்மைப் படுத்தினர். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தமிழ் வாழ்த்துப்பாடினார். செந்தமிழ் நாடெங்கும் இன்பத் தமிழை எளிமையாகப் பரப்பிய பெருமை பாரதியாரைச் சாரும். பாரதிதாசனோ தமிழுக்குப் புதிய ஆக்கத்தைத் தந்தார். பாரதி, பாரதிதாசன் வழியில் பல கவிஞர்கள் - தமிழைப் பரப்பி வருகின்றனர்.

**பாரதியார்**:

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மகாகவி ஆவார். இவர் கவிதைகளில் தமிழ் உணர்வு, சமுதாய உணர்வு, விடுதலை உணர்வு, பக்தி உணர்வு ஆகியவை ததும்பி நிற்கும். தமிழ்ச் சமுதாய மேம்பாட்டுடன் இந்திய ஒற்றுமையையும் உலக ஒற்றுமையையும்

குறிப்பு

இணைத்துக் கண்டவர். ''எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே" என்றும்,''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்றும் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும் ''பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரதநாடு" என்றும் பாடி மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் உருவாக்கினார்.

"சிந்து நதியின்மிசை நிலவினிலே'' என்று பாடி தேசிய ஒருமைப்பாட்டுக்கு வித்திட்டார். "காக்கை குருவி எங்கள் சாதி'' என்று உயிரனைத்தையும் போற்றுவதற்கு வழிகாட்டினார். ''சாதிகள் இல்லையடி பாப்பா.... உயர்வு தாழ்ச்சி சொல்லல் பாவம்" என்று அறிவுரை வழங்கினார்.

அவரது தெய்வீக ஈடுபாட்டைக் கண்ணன் பாட்டும், கண்ணம்மா பாட்டும் பறைசாற்றும். குயிற் பாட்டு தத்துவ விளக்கம்,''பாஞ்சாலி சபதம்'' காப்பியச்சுவை காட்டுவது.

பாரதியின் சமுதாய விழிப்புணர்வைப் பாரதிதாசனிடமும் தெய்வீக உணர்வைக் கவிமணியிடமும், விடுதலை வேட்கையை வே.இராமலிங்கம் பிள்ளையிடமும் பின்னர் காண்கிறோம். இவர்கள் தமிழுக்கு மும்மணிகளாகத் திகழ்கிறார்கள்.

**பாரதிதாசன்:**

புதுவையில் தோன்றிய புரட்சிக் கவிஞராவார். இயற் பெயர் கனகசுப்புரத்தினம். இவர் கவிதைகளில் தமிழ்ப்பற்றும் சமுதாய உணர்வும் இழையோடும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு'' என்பதும்

எல்லோருக்கும் எல்லாம் வேண்டும் என்பதும் இவரது பரந்த மனத்தின் குறிக்கோளாகும். "ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பொப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ'' என்றும் "கொலை வாளினை எடடா மிகுகொடியோர் செயல்அறவே'' என்றும், சமுதாய விழிப்புணர்வை உண்டாக்குகிறார். இவருடைய சீர்த்திருத்தக் கவிதைகள் புரட்சிப் பிழம்புகள். காதற் கவிதைகள் கனிவு நிறைந்தவை. பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம் இவர் படைத்த சிறு காப்பியங்கள். எங்கும் அழகின்

சிரிப்பைக் கண்டவர். இவரது “தமிழியக்கம்“ புரட்சிப் படைப்பு, சிந்துக்குத் தந்தை பாரதி என்று பாராட்டியவர்.

குறிப்பு

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை:**

எளிமையான தோற்றத்தர். இவர் பாடல்களும் எளிமையும், இனிமையும் அமைதியும் தழுவியவை. பாரதிதாசன் புயல் என்றால் இவர் தென்றல் ஆவார். “மலரும் மாலையும்'' இவர் தந்த கவிதைத் தொகுப்பு. புத்தர் வரலாறு கூறும் “ஆசிய ஜோதி'' இவரது அரிய படைப்பாகும். “மருமக்கள் வழி மான்மியம்'' இவர் தந்த சமுதாய அங்கதப் பாட்டாகும். பாரசீகப் பெருங்கவிஞன் உமர் கயாமின் பாடல்களை அழகு தமிழில் அருமையாகத் தருகிறார். “உள்ளத்து உள்ளது கவிதை உண்மை உருவெடுப்பது கவிதை'' என்று கவிதையின் இயல்பைக் கூறுகிறார்.

“தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி''

என்று சிறுவர்க்குப் பாட்டு எழுதுகிறார்.

**நாமக்கல் கவிஞர்**:

“கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது'' என்று விடுதலை உணர்வு பொங்கப் பாடியவர் இவர். சிறந்த காந்தியவாதி. தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கியவர்.

“தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு''

என்று தமிழினத்தைச் சிறப்பித்துப் பாடியவர். “அவனும் அவளும்'' என்பது இவரது படைப்பு.

**கவியரசு கண்ணதாசன்:**

பழைய இலக்கியக் கருத்துக்களை எளிமையாகக் கையாண்டு எல்லோருக்கும் தமிழின்பம் வழங்கியவர். தம் பாடல் திறனால் திரை உலகுக்குப் பெருமை சேர்த்தவர். மாங்கனி, ஆதிமந்தி ஆட்டனத்தி, தைப்பாவை, கவிதாஞ்சலி,இயேசு காவியம் எனப் பல நூல்கள்

எழுதியவர். இவரது திரைப்படப் பாடல்களே ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சந்தம் இவரது கவிதைகளில் சதிராடும். தத்துவக் கருத்துக்கள் மழையெனப் பொழியும், பழம் பாடல்களுக்குப் புது வடிவமும் ஏற்றமும் தந்தவர் இவர்.

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்:**

திரைப்படப் பாடல்களில் பொதுவுடைமைக் கருத்துக்களை வழங்கியவர். எளிய நடை கொண்ட இவர் பாடல்கள் சமுதாயச் சீர்த்திருத்தத்துக்கு வழி காட்டுபவை. “என்னருமைக் காதலிக்கு வெண்ணிலாவே’’ என்பதும் “ஆரம்பம் ஆவதும் பெண்ணுக்குள்ளே’’ என்பதும் ஆளும் வளரணும் அறிவும் வளரணும்’’ என்பதும் இவருக்குப் பெருமை சேர்த்த பாடல்கள்.

**முடிவுரை:**

கவிஞர் முடியரசன், சுரதா., ச.து.சு.யோகியார், கொத்தமங்கலம் சுப்பு, சாலை இளந்திரையன், மீரா, சிற்பி, அப்துல் ரகுமான், கவிஞர் வாலி, வைரமுத்து போன்றவர்கள் மரபுக் கவிதை எழுதிப் புகழ் பெற்றவர்கள். மரபுக் கவிதை ஆக்கங்கள் காலத்தால் சுருங்கவே புதுக் கவிதைகள் தோன்றலாயின.

**(ஆ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்:**

**முன்னுரை:**

பழங்காலத்து யாப்புத் தளைகளை அறுத்துக் கொண்டு புதிய வேகத்தில் தோன்றியதே புதுக்கவிதையாகும். வடிவத்தில் முற்றிலும் மாறுபட்டது புதுக்கவிதை. பாரதியாரே இதைத் தோற்றுவித்தவர் ஆவார். வசனகவிதை என்ற பெயரில் எழுதினார். சாலை இளந்திரையன் உரைவீச்சு என்கிறார். ஆங்கிலத்தில் Blank Verse என்பர்.

புதுக்கவிதையில் சமுதாய உணர்வும் அங்கத அமைப்பும் மிகுதியாக இருப்பதைக் காணலாம். பரபரப்பு உடையதாகவே புதுக்கவிதையின் வளர்ச்சி காணப்படுகிறது.

குறிப்பு

பாரதியாரின் வசனகவிதைகள் புதுக்கவிதையின் தோற்றுவாயாகும். ஆங்கிலக் கவிதைகளின் தாக்கம் பாரதியார் காலத்திலேயே இருந்ததால் “ஷெல்லிதாசன்'' என்ற பெயரில் Sonnet சாயலில் பாரதியாரே எழுதத் தொடங்கினார்.

ஆங்கிலக் கவிஞர் வால்ட் விட்மன் எழுதிய “புல்லின் இதழ்கள்'' என்ற புதுக்கவிதையின் தாக்கமே நா காமராசனின் “புல்'' என்னும் கவிதையாகும். சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் பாரதிக்குப்பின் புதுக்கவிதையினைத் தொடர்ந்தவர் ஆவார். அவர் உணர்ச்சியின்றி பொருண்மைச் சிறப்பினை உரைநடைக் கோவையாக எழுதிய சிலரைக் கேலி செய்தார்.

**புதுக்கவிதைக்கு வளர்ச்சிக்கு அடிகோலியவர்கள்:**

ந. பிச்சமூர்த்தி இத்துறையில் முதலில் நிற்பவர் ஆவார். பாரதியின் எழுத்துக்கள் இவரைப் புதுக்கவிதை எழுதத் தூண்டின. சமுதாயப் பார்வையோடு குறியீட்டுத் தன்மையை இவர் அதிகம் கையாண்டவர் ஆவார். உவமைகளும், உருவகங்களும் இவர் கவிதைகளில் உள்ளன. “பிரம்ம தேசப் பறவைகள்'' ‘‘கிளிக் கூண்டு'' ஆகியவை இவரது சிறந்த புதுக்கவிதைகளாகும்.

1930 முதல் 1945 வரை “மணிக்கொடிக் காலம்'' என்பர். இக் காலத்துக் கவிஞர்கள் புதுத் துறையை தோற்று விக்க வேண்டும் என்ற ஆர்வத்துடனேயே வந்தனர். ஆனாலும் அது அவர்களுக்கு ஒரு சவாலாகவே இருந்தது.

புதுக் கவிதைப் படைப்புகளைத் தொகுத்து நூலாக்கியவர் சி.சு.செல்லப்பா என்பவர் ஆவார். இவர் “எழுத்து'' என்னும் இதழைத் தொடங்கி புதுக்கவிஞர்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பைத் தந்தார். ஒரு பத்தாண்டை “எழுத்துக்காலம்'' எனலாம்.

படிமம், குறியீடு ஆகியவற்றைக் கையாளும் முயற்சியில் கே.இராசகோபாலின் கவிதைகள் அமைந்தன.

கு.இராசகோபாலன், வல்லிக்கண்ணன், பசுவய்யாவின் கவிதைகள் இத்துறையில் வளம் சேர்த்தன.

குறிப்பு

நடை, கணையாழி, கசடதபற என்னும் இதழ்கள் புதுக்கவிதை இயக்கத்தை வலுப்படுத்தின. நீல.பத்மனாபன் பாலகுமாரன், ஞானக் கூத்தன் போன்றவர்களும் புதுக்கவிதை வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களே.

அடுத்து புதுக்கவிதைத்துறை வெற்றிநடை போடலாயிற்று. பலப்பல கவிஞர்கள் புதுக்கவிதை படைப்பதில் ஆர்வம் காட்டினர். கொள்கைத் தெளிவோடும் கூட்டுறவுச் சிந்தனையோடும் இவர்கள் பாடுபடலாயினர். தெளிந்த உள்ளடக்கம், புதுவகை உத்திகள், உருவகச் சிறப்புக்கள், படிமம், குறியீடு முதலியவற்றுடன் புதுக் கவிதைகள் பொலிவு பெற்றன. நா.வானமாமலை, நா.காமராசன் மீரா. சிற்பி,அப்துல் ரகுமான், மு.மேத்தா, தமிழன்பன், அபி, அக்கினிபுத்திரன், ஞானி, பாலா, ஆகியோர் பல படைப்புக்களைத் தந்தனர். “தாமரை’’ இதழ் இத்துறையில் ஊக்கம் தந்தது. இவர்கள் இன்றைய சமுதாயச் சிக்கல்களை, சாதி, சமய, பொருளாதார வேறுபாடுகளைக் களைய நினைப்பவர்கள். இவர்களில் பலர் மரபுக் கவிதைகளிலும் வல்லவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நா.காமராசனின் “கறுப்பு மலர்கள்’’ மீராவின் “ஊசிகள்’’ ஆகியவை சிறப்புடையவை. “தேசப்பிதாவுக்குத் தெருப் பாடகனின் அஞ்சலி’’ என்னும் மேத்தாவின் புதுக் கவிதை புகழ் பெற்றது. சிற்பியின் “ஒளிப்பறவை’’ புகழ் பெற்றது. அபியின் “மௌனத்தின் நாவுகள்’’என்னும் கவிதை நல்ல படைப்பாகும்.

இன்குலாப் எழுதிய “நீங்கள் என்னைக் கம்யூனிஸ்டு ஆக்கினீர்கள்’’ “தொங்கு தோட்டம்’’, போன்றவை சிந்தனைக்கு விருந்தாகும். “வெளிச்சங்கள்’’ என்னும் புதுக்கவிதைத் தொகுப்பு இந்த வானம்பாடிகளின் புதுக்கவிதைகளைக் கொண்டது.

புதுக்கவிதைகளில் செய்திகளை நேரடியாகச் சொல்லாமல் குறியீட்டு வழியாகச் சொல்லுவது ஒரு சிறப்பாகும். படிமம் புதுக்கவிதையை மரபுக் கவிதையிலிருந்து வேறுபடுத்துகிறது. நேரடியாகக் கருத்தைச் சொல்லும் கவிதைகளும் உள்ளன. சுருங்கிய அளவிலும் புதுக்கவிதை அமைகிறது. பாடு பொருள் வரையறை

இல்லாமல் எதையும் தலைப்பாகக் கொள்ளுதல், பச்சையாகச் சொல்லுதல், குறியீடுகளை அதிகமாகப் பயன்படுத்துதல், நிறைய எழுத நினைத்தல், தான் சொல்லுவதே சரி என்ற மனப் போக்கு - இவையெல்லாம் புதுக்கவிதைகளின் - கவிஞர்களின் குறைபாடுகள் எனலாம்.



**முடிவுரை:**

இன்றைய காலக்கட்டத்தில் புதுக் கவிதைகளுக்கு அதிக வரவேற்பிருக்கிறது. மரபுக் கவிதைகளைக் கேட்கும் கூட்டம் குறைந்தும் வருகிறது. ஆகவே இன்று எல்லோரும் விரும்பும் கவிதைகள் புதுக்கவிதைகளே. இத்துறைக்கு எதிர்காலத்தில் நல்ல வளர்ச்சி இருக்கும் என்று நம்பலாம்.

**பயிற்சி வினாக்கள்:**

**1..மரபுக் கவிஞர்களுள் பாரதி பெறுமிடத்தை ஆராய்க.**

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மகா கவி ஆவார். இவர் கவிதைகளில் தமிழ் உணர்வு, சமுதாய உணர்வு, விடுதலை உணர்வு, பக்தி உணர்வு ஆகியவை ததும்பி நிற்கும். தமிழ்ச் சமுதாய மேம்பாட்டுடன் இந்திய ஒற்றுமையையும் உலக ஒற்றுமையையும் இணைத்துக் கண்டவர். ‘‘எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே” என்றும்,‘‘செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே” என்றும் ‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்றும் ‘‘பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரதநாடு” என்றும் பாடி மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் உருவாக்கினார்.

“சிந்து நதியின் மிசை நில வினிலே’’ என்று பாடி தேசிய ஒருமைப்பாட்டுக்கு வித்திட்டார். “காக்கை குருவி எங்கள் சாதி’’ என்று உயிரனைத்தையும் போற்றுவதற்கு வழிகாட்டினார். ‘‘சாதிகள் இல்லையடி பாப்பா.... உயர்வு தாழ்ச்சி சொல்லல் பாவம்” என்று அறிவுரை வழங்கினார். அவரது தெய்வீக ஈடுபாட்டைக் கண்ணன் பாட்டும்,

கண்ணம்மா பாட்டும் பறைசாற்றும். குயிற் பாட்டு தத்துவ விளக்கம்,''பாஞ்சாலி சபதம்'' காப்பியச்சுவை காட்டுவது.

குறிப்பு

**2. கவியரசு கண்ணதாசன் குறித்து எழுதுக**

பழைய இலக்கியக் கருத்துக்களை எளிமையாகக் கையாண்டு எல்லோருக்கும் தமிழின்பம் வழங்கியவர். தம் பாடல் திறனால் திரை உலகுக்குப் பெருமை சேர்த்தவர். மாங்கனி, ஆதிமந்தி ஆட்டனத்தி, தைப்பாவை, கவிதாஞ்சலி, இயேசு காவியம் எனப் பல நூல்கள் எழுதியவர். இவரது திரைப்படப் பாடல்களே ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சந்தம் இவரது கவிதைகளில் சதிராடும். தத்துவக் கருத்துக்கள் மழையெனப் பொழியும், பழம் பாடல்களுக்குப் புது வடிவமும் ஏற்றமும் தந்தவர் இவர்.

**3. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் - குறிப்பு வரைக**

திரைப்படப் பாடல்களில் பொதுவுடைமைக் கருத்துக்களை வழங்கியவர். எளிய நடை கொண்ட இவர் பாடல்கள் சமுதாயச் சீர்த்திருத்தத்துக்கு வழி காட்டுபவை. "என்னருமைக் காதலிக்கு வெண்ணிலாவே'' என்பதும் "ஆரம்பம் ஆவதும் பெண்ணுக்குள்ளே'' என்பதும் ஆளும் வளரணும் அறிவும் வளரணும்'' என்பதும் இவருக்குப் பெருமை சேர்த்த பாடல்கள்.

4. ந. பிச்சமூர்த்தியின் சிறப்புகளைத் தருக.

ந. பிச்சமூர்த்தி இத்துறையில் முதலில் நிற்பவர் ஆவார். பாரதியின் எழுத்துக்கள் இவரைப் புதுக்கவிதை எழுதத் தூண்டின. சமுதாயப் பார்வையோடு குறியீட்டுத் தன்மையை இவர் அதிகம் கையாண்டவர் ஆவார். உவமைகளும், உருவகங்களும் இவர் கவிதைகளில் உள்ளன. "பிரம்ம தேசப் பறவைகள்'' ''கிளிக் கூண்டு''ஆகியவை இவரது சிறந்த புதுக்கவிதைகளாகும்.

## கூறு: 11

குறிப்பு

**1 அ. உரைநடை இலக்கியங்கள் தமிழ்க் கட்டுரை இலக்கியம் - தோற்றமும் வளர்ச்சியும்**

பாட்டுக்கு அமைந்த இலக்கண வரம்புகளின்றி எளிமையாக எழுதவும் பேசவும் பயன்படுவது உரைநடையாகும். பழங்காலத்தில் ஏட்டுச் சுவடியில் எழுதியதாலும் நினைவு கூர்வதற்கு எளிமை காரணமாகவும் செய்யுள் நடையே பெருவழக்காக இருந்தது.

**காலங்களில் உரைநடை:**

மேனாட்டார் வருகையும் அச்சுப்பொறிகளின் கண்டுபிடிப்பும் தமிழ் உரைநடை வளர்ச்சியை வேகப்படுத்தின.

அக்காலத்தில் பாட்டோடு உரைநடையும் கலந்த நூல்கள் வழக்கில் இருந்ததனை,

"தொன்மைதானே
உரையோடு புணர்ந்த பழமை மேற்றே''

என்னும் தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது. மேலும் உரையாகவே அமைந்த நூல்கள் ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து செல்லும் நூல்கள் பொருளோடு தொடர்ந்த நகைப்பிற்குக் காரணமாகிய நூல்கள் என உரைநடை நூல்கள் இருந்ததை இந்நூற்பா விளக்குகிறது.

தமிழின் முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரம் 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என அழைக்கப்படுகிறது. அடுத்து வருபவை உரையாசிரியர்கள் எழுதிய உரைநடை நூல்களே. இறையனாரின் களவியலுரை முதலிடம் பெறுகிறது. இது செய்யுளோசை தழுவிய உடைநடையாகும். வினாவிடை முறையில் அமைந்த உரைநடை என்ற இரண்டுவகை நடைகளும் இதில் காணப்படுகின்றன.

கி. பி. 13 ஆம் நூற்றாண்டு தொடங்கிச் சில நூற்றாண்டுகள் உரையாசிரியர் காலம் என்றே குறிக்கப்பெறுகிறது. இக்காலத்தில் தொல்காப்பியம், சங்கநூல்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள், நாலாயிர

**குறிப்பு**

திவ்ய பிரபந்தம், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, திருக்கோவையார், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம், ஆகிய நூல்களுக்கெல்லாம் உரைகள் எழுதப்பெற்றன. உண்மை காணும் அவாவோடு இந்த உரைகள் அமைந்தன. இந்த உரைகள் இன்றேல் பிற்காலத்தவர்கள் இந்நூல்களை உணர்வதற்குப் பெரிதும் இடர்ப்பட்டிருப்பர்.

நக்கீரர், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், கல்லாடர், தெய்வச் சிலையார், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், திருக்குருகைப்பிரான் பிள்ளான், நம்பிள்ளை போன்ற உரையாசிரியர்கள் பெரும் புகழ் பெற்றவர்கள்.

**கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள்:**

இலக்கண இலக்கியங்கள் மூலம் வளர்ந்த தமிழ் உரைநடை கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள் மூலமும் வளர்ந்தது. இவை சில தனித்தமிழிலும், தமிழும் வடமொழியும் கலந்தும், வடசொற்கள் கலந்த தமிழும் என விளங்குகின்றன. மணிப்பிரவாள நடை தோன்ற இவையும் காரணமாகும்.

**மேனாட்டார் வருகை:**

மேனாட்டார் தங்கள் மதம் பரப்பத் தமிழகம் வந்தார்கள். அந்தப் பதினேழாம் நூற்றாண்டு உரைநடை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக, அமைந்தது. அச்சுப் பொறிகளின் வரவு உரைநடை வளர்ச்சிக்குப் பெருங் காரணமாக அமைந்தது. கி.பி.1517 இல் தம்பிரான் வணக்கம் என்ற நூல் அச்சிட்டு வெளிவந்தது. அதுவே இந்திய மொழிகளில் வெளிவந்த முதல் உரைநடை நூலாகும்.

சீகன்பால்கு ஐயர் சமயநூல்களாகப் பதினெட்டு உரைநடை நூல்களை வெளியிட்டார். வீரமாமுனிவர் உரைநடையை மேலும் எளிதாக்கும் பொருட்டு தமிழ் எழுத்து வடிவங்களிலே சில சீர்திருத்தங்கள் செய்தார். உரைநடையை இலக்கியத்துக்கும் பயன்படுத்த முடியும் என்பதைத் தமது “பரமார்த்த குரு கதை” மூலம் தெளிவுபடுத்தினார். இது அங்கதச்சுவை ததும்பும் அரிய நூலாகும்.

குறிப்பு

மாதவச் சிவஞான முனிவர் தம் உரைநூல்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் சமயத்துறையிலும் தர்க்கத் துறையிலும் சிறந்த உரைகளாக விளங்கின.

பத்தொன்பதாம் நூற்றாண்டு உரைநடையில் வளர்ச்சி கண்ட காலமாகும். வள்ளலாரின் மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் போன்ற நூல்கள் நீண்ட தொடரமைப்பும் மணிப்பிரவாள நடையுமாக விளங்கின.

ஆறுமுகநாவலர் சிறுசிறு சொற்றொடராக எழுதினார். குறியீடுகளைத் தமிழில் முதன்முதலில் பயன்படுத்தியவர் இவரே. வேதநாயகம் பிள்ளை, பரிதிமாற் கலைஞர், போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்களே. தாண்டவராயரின் பஞ்சதந்திர மொழிபெயர்ப்பும் வீராசாமி செட்டியாரின் விநோதரசமஞ்சரியும் உரைநடையில் வந்த கதை நூல்களாகும். அக்காலப் பத்திரிக்கைகளும் உரைநடையை வளர்த்தன.

இருபதாம் நூற்றாண்டை உரைநடைக்காலம் என்றே குறிப்பிடலாம். எல்லாத்துறைகளிலும் உரைநடை சிறந்து விளங்கியது.

வ.வே.சு.ஐயர் அவர்கள் இதழ்கள் மூலம் சிறுகதையை வளர்த்தார். பம்மல் சம்பந்த முதலியார் பேச்சு வழக்கு கலந்த உரைநடையைத் தந்தார். பாரதியார் கவிதையின் அழகுகளை உரைநடையில் காட்டினார்.

தேசபக்தன், நவசக்தி போன்ற இதழ்களின் ஆசிரியராகிய திரு.வி.க. இன்றைய உரைநடைக்கு வழிகாட்டினார். முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை போன்ற நூல்கள் எழுதிய இவர் பத்திரிகைத் தமிழுக்கு வித்திட்டார். மறைமலை அடிகள் தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை ஆவார். முல்லைப் பாட்டாராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, அம்பிகாபதி அமராவதி, கோகிலாம்பாள் கடிதங்கள், குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்று பல செந்தமிழ் நூல்களை எழுதினார்.

பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் மொழிபெயர்ப்பு நூல்கள் உட்பட பல தமிழ் உரைநடை நூல்களை வழங்கியுள்ளார். வையாபுரிப்

பிள்ளை இலக்கிய உலகம் இலக்கிய தீபம் போன்ற ஆராய்ச்சி நூல்களை வழங்கியுள்ளார்.



உ.வே.சாமிநாத ஐயர் சுயசரிதையையும் ஆராய்ச்சி முன்னுரைகளும் எழுதிப் புகழ் பெற்றார்.

இரா.இராகவையங்கார், கா.சு.பிள்ளை, சதாசிவ பண்டாரத்தார், மயிலை சீனி வேங்கடசாமி, கா.அப்பாத்துரை, மா.இராசமாணிக்கம், சி.இலக்குவனார், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் போன்றோர் தொடக்க கால உரைநடை ஆசிரியர்களாவர்.

இலக்கிய, இலக்கண ஆய்வுநூல்கள்,புதினங்கள் பலப்பல எழுதிப் புகழ்பெற்றவர் மு.வரதராசன்.

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் நளினமான உரைநடையை எழுதியவர்கள்.

**முடிவுரை:**

தமிழ்ப் புலவர்களால் காலம் காலமாக வளர்க்கப்பெற்றது உரைநடை அது இன்று அறிவு நூல்கள், பயண நூல்கள் இதழியல், மொழியியல் என்று எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்படும் செம்மை வாய்ந்ததாக விளங்குகிறது.

**1 ஆ. சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்:**

கதை என்பது தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வரும் ஒரு செல்வமாகும். இராமாயணம், மகா பாரதம் போன்ற இதிகாசங்களிலும், பெருங்காப்பியங்களிலும் கதைகள் இடம் பெறுவதைக் காண்கிறோம். மேனாட்டார் தொடர்பில் தமிழில் உரைநடை நல்ல வளர்ச்சி கண்டது. அதன் காரணமாகப் பத்திரிகைகளும், அதன் பயனாகச் சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வகைகள் விரைந்த வளர்ச்சியைப் பெற்றன.

‘‘சுவையான நிகழ்ச்சி, கவர்ச்சியான ஒரு காட்சி நன்றாகப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள். ஒருவரின் தனிப்பண்பு, ஒரு அனுபவம், வாழ்க்கையின் ஒரு கூறு, அறவுணர்ச்சியால் ஏற்பட்ட ஒரு சிக்கல்- இவற்றுள் ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதைக்கு அடிப்படையாக

குறிப்பு

அமையலாம். ‘‘சிறுகதைகளில் நீண்ட வருணனைகளுக்கு இடமில்லை” ‘‘கதைமாந்தரின் பண்பை விளக்குவதற்கோ, கதை நிகழ்ச்சியைப் புலப்படுத்தற்கோ ஏற்ற அளவிற்கு உரையாடல் அமையலாம்” என்பார் செட்ஜ்விக்.

‘‘அரைமணி முதல் 2 மணி அளவில் படித்து முடிக்கக் கூடியதாகச் சிறுகதை அமைய வேண்டும்” என்பர் எட்கர் ஆலன்போ.

தமிழில் பஞ்சதந்திரக் கதைகளும் மதன காமராசன் கதையும் விக்கிரமாதித்தன் கதையும் பழமையானவை.

சிறுகதையில் சொற்சுருக்கமும் கதைக் கட்டுக்கோப்பும் மிக இன்றியமையாதவை. ‘‘எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்” என்றவாறு கதை விறு விறுப்புடன் இறுதிவரை சுவையுடன் செல்ல வேண்டும். தொடக்கம், வளர்ச்சி, முடிவு எல்லாமே கட்டுக்கோப்புடன் விளங்க வேண்டும். நடை எளிமையும் இனிமையும் கலந்ததாக இருத்தல் நன்று. கதை முடியும் போது ஒரு முழுமை - நிறைவு மனத்தில் தோன்ற வேண்டும்.

வீரமாமுனிவர் பரமார்த்த குரு கதையைத் தமிழில் எழுதினார். வீராசாமி செட்டியார் விநோத ரசமஞ்சரி என்னும் சிறுகதைத் தொகுப்பைத் தந்தார்.

கி.பி.19 ஆம் நூற்றாண்டில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை பிரதாப் முதலியார் சரித்திரம் எழுதினார். இது கதைகள் அடங்கிய முதல் நாவலாகும். அடுத்து சுகுணசுந்தரி கதையை எழுதினார்.

மறைமலையடிகளார் கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் நூலை இயற்றினார். இது கடிதத் தொகுப்பு என்றாலும் சிறுகதை போலத் தோற்றமளிப்பது. வ.வே.சு.ஐயரின் ”மங்கையர்க்கரசியின் காதல்” சிறந்த கதைத் தொகுப்பாகும். பாரதியார் சிறந்த சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

**புதுமைப்பித்தன்:**

இவரைச் சிறுகதை மன்னர் என்பர். புதிய கரு, புதிய வடிவம், புதுப்புது உத்திகள் புதிய நடையில் எண்ணற்ற சிறுகதைகள் எழுதினார். வாழ்வின் இருண்ட பகுதிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். அங்கதச் சுவை நிரம்பியவை இவரது கதைகள். இவரது கடவுளும்

கந்தசாமியும், பொன்னகரம், சாபவிமோசனம் துன்பக் கேணி போன்ற கதைகள் வாழ்க்கைச் சித்திரங்களாம்.

குறிப்பு

**கு.ப.ராசகோபாலன்:**

கற்பனையும், மனோதத்துவமும் இவர் கதைகளில் சிறந்து நிற்கும். ‘‘விடியுமா” என்ற கதை இவரது சிறந்த படைப்பாகும். காணாமலே காதல், புனர்ஜன்மம் போன்றவை இவரின் சிறுகதைத் தொகுதிகளாகும்.

**கல்கி:**

சிறுகதை, நாவலில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றவர் கல்கி எனப்படும் ரா. கிருஷ்ண மூர்த்தியாவார். இவர் ஆசிரியராக இருந்த ஆனந்த விகடன், கல்கி, பத்திரிகைகளில் எண்ணற்ற கதைகளை எழுதிக் குவித்தவர். நகைச் சுவையுடன் கதை சொல்லும் பண்பாளர். வீணை பவானி, மயில் விழி மான், ஒற்றை ரோஜா போன்றவை இவரது சிறந்த படைப்புகளாகும்.

**இராஜாஜி:**

சமுதாய முன்னேற்றம் கருதிய கதைகள் இவருடையவை. எளிய நடையைக் கையாள்பவர்.

**கி.வா.ஜகந்நாதன்:**

இவரின் பவள மல்லிகை ஒரு உயர்ந்த படைப்பு. பி.எஸ். ராமையா மணிக்கொடி பத்திரிகை மூலமும் தினமணிக் கதிர் மூலமும் பல நல்ல கதைகளைத் தந்தவர் ஆவார்.

கல்லறை மோகினி, கேளாத கானம் முதலியன சோமுவின் அரிய படைப்புகளாகும்.

ஏழைகளின் நெஞ்சக் குமுறலைக் காட்டுவதில் விந்தன் வல்லவர். மு.வரதராசனாரின் “விடுதலையா’’ “குறட்டை ஒலி’’ என்னும் கதைகள் சிந்தனைக்கு விருந்தாகும்.

**ந.பிச்சமூர்த்தி:**

கற்பனை கலந்த கதைகளைப் படைப்பார். அவரது முள்ளும் ரோஜாவும், கொலு பொம்மை என்பவை சிறந்த சிறுகதைகளாகும்.

பெண் எழுத்தாளர்களில் லக்ஷ்மி, வசுமதி ராமசாமி, ராஜம் கிருஷ்ணன், கல்கி மகள் ஆனந்தி, கு.ப.சேது அம்மாள், கோமகள், இந்திரா முதலியோர் சிறந்தவர்கள்.

ரா.கி.ரங்கராஜனின் பல்லக்கு, நிலா நனையுமா என்ற கதைகள் சிறப்புடையவை ஆகும்.

**ஜெயகாந்தன்:**

நாவலாசிரியர் போலவே சிறுகதைகளிலும் சிறந்த எழுத்தாளர் ஆவார். யாருக்காக அழுதான், ஒரு பிடி சோறு, இனிப்பும் கரிப்பும் முதலிய கதைகள் சிந்தனைக்கு விருந்தாகும்.

கோ.வி.மணிசேகரன் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதிக் குவித்தவர். காளையார் கோயில் ரதம், உயிரும் ஒளியும் போன்ற சரித்திர சமூகச் சிறுகதைத் தொகுதிகள் சுவை நிறைந்தவை.

ந. பிச்சமூர்த்தி மணிக்கோடி எழுத்தாளர் ஆவார். இவர் எழுதிய மோகினி முதலிய கதைகள் சிறந்தனவாகும்.

தி.ஜானகிராமனின் கொட்டுமேளம் சிறந்த சிறுகதைத் தொகுதியாகும்.

லா.ச.ராமாமிருதம் சிந்தனைச் செறிவோடு கதை எழுதுபவர் ஆவார்.

நா.பார்த்தசாரதி எழுதிய மூவரை வென்றான் என்ற கதைத் தொகுதி சுவை நிறைந்தது.

ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்தவை டி.கே.சீனிவாசனின் கதைகள். பம்பாய்ச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டவை மாயாவியின் கதைகள்.

**அகிலன்:**

கலைமகள் இதழில் வெளிவந்த “எரிமலை“ அகிலனின் சிறந்த சிறுகதையாகும்.

சமுதாயச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட கதைகள் அறிஞர் அண்ணாவினுடையவை.

காலங்கள் தோறும் சிறுகதைகள் தோன்றி வருகின்றன. இன்றைய நாளிதழ், மாத இதழ்கள் போன்றவை சிறுகதைத் துறையை வளர்த்து வருகின்றன.

**1. இ. தமிழ்ப் புதினங்களின் வளர்ச்சி**

பழங் காலத்தில் காப்பியம் பெற்ற இடத்தை இன்று புதினம் பெற்றுச் சிறப்படைகிறது. வாழ்க்கையே காப்பியம் ஆகியது அன்று. புதினமாகிறது இன்று.

நல்ல எழுத்தாளர்கள் பலர் வாழ்விலே நடக்கின்ற சுவையான நிகழ்ச்சிகளை ஒருவர் வாழ்விலே நடப்பதாகக் கோவைப்படுத்திப் புதினமாக எழுதுவர். கிளைகள் படர்ந்த ஆலமரத்தின் நிலையே புதினம் என்றால் அதன் ஓர் இலையைச் சிறுகதை எனலாம்.

இருபதாம் நூற்றாண்டில் மேல்நாட்டிலிருந்து பல புதுமைகள் தமிழகம் வந்தன. அவற்றுள் ஒன்றுதான் புதினம் என்ற இலக்கிய வகையாகும். ஆங்கில அறிவு பெற்ற வேதநாயகம் பிள்ளை அவர்கள் இந்த வகையைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார். அவருடைய "பிரதாப முதலியார் சரித்திரம்'' தான் தமிழில் வந்த முதல் நாவலாகும். 1878 இல் வெளிவந்தது. நம் நாட்டு இயல்புக்கு ஏற்ப நீதி மொழிகள் நிறைந்தது.

வாழ்க்கையை உள்ளவாறு காட்டும் பாங்கு நடப்பியல் (Realism) எனப்படுவதை முதன்முதலில் தமிழில் ராஜம் ஐயர் (1872-1898) எழுதிய "கமலாம்பாள் சரித்திரம்'' என்னும் நாவலில் காண்கிறோம்

அதே முறையில் எழுதப்பட்டது மாதவையாவின் "பத்மாவதியின் சரித்திரம்'' இதில் பல நிகழ்ச்சிகள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கிடக்கின்றன. பத்மாவதியின் மேல் அவள் கணவனுக்கு ஏற்படும் ஐயமே நீண்ட சிக்கலாய் வளர்ந்து முடிகிறது. "விஜயமார்த்தாண்டம்'' என்னும் நாவலில் மறவர் சமுதாயமும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களும், வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் பல கோணங்களில் காட்டப்படுகிறார்கள்.

"முத்து மீனாட்சி'' என்னும் நாவல் புரட்சியானது. இளமையில் விதனவயானவள் ஒருத்தி தான் படும் துன்பங்களைத் தானே - எடுத்துரைக்கும் முறையில் இது அமைந்துள்ளது. இவற்றின் வாயிலாக .

மாதவையா, தமிழ் நாவல் துறையில் உள்ளடக்கம் (Content) வடிவு (Form) ஆகிய இருவகையிலும் புதுமை வளர்த்தவர் எனலாம்.



**கல்கி:**

தமிழ் இலக்கியத்திற்கு வரலாற்றுப் புதினங்கள் எழுதிச் சிறப்புச் செய்தவர் கல்கி. புதினங்களை விறுவிறுப்போடும் வேகத்தோடும் எழுதிப் படிப்போர்க்கு ஆர்வத்தை ஊட்டியவர். எதிர்பார்ப்பு என்னும் பெரிய உத்தியைக் கையாண்டு மக்களிடம் ஆவலைத் தூண்டியவர். பல்லவர் காலத்தைப் பின்புலமாகக் கொண்ட சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, இராஜராஜசோழன் காலத்திய பொன்னியின் செல்வனும் இவருக்குப் பெரும்புகழ் சேர்த்தன. தியாகபூமி, மகுடபதி, அலையோசை போன்றவை அவரது சிறப்பான சமூக நாவல்களாகும். தெளிந்த எளிய நடை அவருடைய தமிழ் நடையாகும். பிற நாவல்கள் கள்வனின் காதலி (திரைப்படமாகவும் வந்தது) வீணை பவானி, சோலைமலை இளவரசி, சுதந்திரப் போராட்டப் பின்னணியில் எழுந்தவை “அலையோசை“ “அமரதாரா“ போன்றவை. இவர் வரலாற்றுப் புதினங்களின் தந்தை ஆவார்.

**சாண்டில்யன்:**

மலைவாசல், ஜீவபூமி, கன்னிமாடம், யவனராணி, கடல்புறா போன்ற நாவல்களை எழுதியவர். வர்ணனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்.

**கோ.வி.மணிசேகரன்:**

கலிங்கத்துப்பரணியை அடியொற்றிச் செம்பியன் செல்வியைத் தந்தார். களப்பிரர் காலத்தை ஒட்டி முகிலில் முளைத்த முகம், விஜயநகர வேந்தர் காலச் சூழலில் “பொற்காலப் பூம்பாவை“ போன்றவை இவர் படைத்தவை.

**அகிலன்:**

நாவல் உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தவர் அகிலன் ஆவார். “வேங்கையின் மைந்தன்“ சோழர் காலச் சூழலில் பிறந்த நாவலாகும். நெஞ்சின் அலைகள், கயல்விழி, வெற்றித் திருநகர், சித்திரப்பாவை போன்றவை பிற நாவல்கள்.

குறிப்பு

**ஜெகசிற்பியன்:**

திருச்சிற்றம்பலம், மகரயாழ் மங்கை, பத்தினிக்கோட்டம் போன்ற நாவல்கள் எழுதியவர்.

**அரு.ராமநாதன்:**

வீரபாண்டியன் மனைவி, அசோகன் காதலி போன்ற வரலாற்று நாவல்கள் எழுதியவர். ஆர்வத்தைத் தூண்டும் நடை இவருடைய நடை.

**விக்கிரமன்:**

நந்திபுரத்து நாயகி. காஞ்சி சுந்தரி போன்ற நாவல்களைப் படைத்தவர்.

**சோமு:**

கடல் கண்ட கனவு, வெண்ணிலவுப் பெண்ணரசி என்ற நாவல்களின் ஆசிரியர்.

**நா. பார்த்த சாரதி:**

பாண்டிமாதேவி என்னும் நாவலை எழுதியவர். அதில் வரும் மகாமண்டலேசுவரர் மறக்க முடியாத பாத்திரமாகும். "குறிஞ்சி மலர்" அழியாத நாவலாகும். கபாடபுரம், ஆன்மாவின் ராகங்கள் இவர் எழுதியபிற இவர்கள் எல்லோரும் வரலாற்றைப் பின்னணியாக வைத்துக் கொண்டு கற்பனை பூட்டிய தமிழ் ரதத்தில் பவனி வந்தவர்கள். காலத்தால் அழியாத எழுத்தோவியங்களைப் படைத்தவர்கள். ஞாலத்து மக்களுக்குத் தமிழ் ஆர்வத்தை ஊட்டிய பெருமக்கள்.

**சமுதாய நாவல்கள்:**

தூய எளிய தமிழ்நடையில் சமுதாய நாவல்களை எழுதிக் குவித்தவர் மு.வரதராஜன் (மு.வ.) அவர்கள். பாவை, அந்த நாள், அல்லி, கயமை, மலர்விழி, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு, கள்ளோ காவியமோ, பெற்ற மனம், போன்றவை அவர் எழுதியவை. பெயருக்கேற்ப கள்ளின் மயக்கத்தைத் தருவது அவருடைய கள்ளோ காவியமோ என்ற நாவல்.

குறிப்பு

**விந்தன்:**

வாழ்வியல் உண்மைகளைக் கொண்டு இவர் படைத்த நாவல் “பாலும் பாவையும்“ ஆகும்.

**கொத்தமங்கலம் சுப்பு:**

இவர் எழுதிய நாவல் “தில்லானா மோகனாம்பாள்“ திரைப்படமாகவும் வெளிவந்தது. மோகனா, சண்முகசுந்தரம், வைத்தி போன்றவர்கள் நாவலில் வரும் அழியாத பாத்திரங்களாகும்.

**ர.சு.நல்லபெருமாள்:**

“கல்லுக்குள் ஈரம்’’ என்னும் நாவலைப் படைத்தவர். (திரைப்படமாகவும் எடுக்கப்பெற்றது)

**ஜெயகாந்தன்:**

சிறு கதைகளிலும், நாவல்களிலும், தனக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டவர் ஜெயகாந்தன். எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சாது எழுதியவர். பாரிஸீக்குப்போ, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் போன்றவை இவருடைய படைப்புகளாகும்.

**ராஜம் கிருஷ்ணன்:**

குறிஞ்சித் தேன் போன்ற சிறந்த நாவல்கள் எழுதிய பெண் எழுத்தாளர்.

**லஷ்மி:**

பெண்மனம், காஞ்சனையின் கனவு என்று பல நாவல்கள் எழுதியவர். ஈர்ப்பாற்றலோடு நாவல் எழுதும் வல்லமை படைத்தவர்.

**மொழிபெயர்ப்பு நாவல்கள்:**

கா.ஸ்ரீ.ஸ்ரீ.என்பவர் பிரபலமான மொழி பெயர்ப்பு ஆசிரியர் ஆவார். காண்டேகர் நாவல்களைத் தமிழில் தருகிறார். இருமனம், சுகம் எங்கே, கிரௌஞ்சவதம் முதலானவை சிறப்பானவை.

ஆரணி குப்புசாமி முதலியார் ரெய்னால்ட்ஸ் நாவல்களைத் தமிழில் கொண்டு வந்தவர்.வடுவூர் K. துரைசாமி ஐயங்கார் ஆங்கில நாவல்களைத் தழுவித் தமிழ்நாட்டு இடங்களையும் சூழலையும் புகுத்தி நாவல்கள் எழுதினார். மேனகா, திகம்பரசாமியார். இது திரைப்படமாகவும் ஆக்கப் பெற்றது.

ரங்கராஜீவின் இராஜாம்பாள், சந்திரகாந்தா என்னும் நாவல்கள் புகழ்பெற்றவை.

**மர்ம நாவல்கள்:**

பொன்னுசாமி பிள்ளை, டி.டி.சாமி என்பவர்கள் மர்ம நாவல்கள் எழுதிப் புகழ் பெற்றவர்கள்.

**வேங்கடரமணி:**

தேசபக்தன், முருகன் ஓர் உழவன் என்னும் நாவல்கள் எழுதினார்.

**வை.மு. கோதைநாயகி அம்மாள்:**

பெண்ணின் மன ஆழத்தை விளக்கு வதாகவும், வாழ்வின் துன்பங்களைக் காட்டுவனவாகவும் நாவல்கள் எழுதிப் புகழ் படைத்தவர்.

**மறைமலை அடிகள்:**

தனித்தமிழ்த் தந்தை மறைமலை அடிகளார் ரெய்னால்ட்ஸ் நாவல் ஒன்றைக் "குமுதவல்லி நாகநாட்டரசி" எனத் தமிழில் தந்தார்.

அத்தனை பேரும் நாவல் என்னும் இலக்கிய வகையைத் தமிழில் செழிப்புறச் செய்த சான்றோர்களாவர்.

**1. ஈ. தமிழ் நாடகங்களின் தோற்றமும் வளர்ச்சியும்:**

தமிழ் மொழியை "முத்தமிழ்" எனக குறிக்கிறோம். அது இயல், இசை, நாடகம் என மூவகைப்படும். நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம் என வரும் தொல்காப்பியத் தொடர் தமிழ் நாடக வழக்கினை உணர்த்துவதாகும்.

தமிழ் நாட்டில் பழங்காலத்திலிருந்தே சிறப்புடன் நாடகக் கலை இருந்து வந்திருக்கிறது. நாடகங்கள் ஆடலும் பாடலும் கலந்தவை. ஆகையால் பாடலில் வல்ல பாணர்களும், ஆடலில் வல்ல விறலியர்,

குறிப்பு

கூத்தர், பொருநர் முதலியோரும் இருந்தார்கள். அவர்கள் பெயரால் ஆற்றுப்படை நூல்கள் அமைவதும் அவர்கள் சிறப்பைக் காட்டுவதாகும்.

தொல்காப்பியர் மெய்ப்பாடுகளை விளக்கிய இடத்தில் "பண்ணைத் தோன்றிய" என்று குறிப்பிடுகிறார். கலையரங்குகளில் வெளிப்படும் மெய்ப்பாடுகள் என்பது கருத்து. நாட்டியக் கலையைக் கொண்டு மெய்ப்பாடுகளை விளக்கினார் என்பது வெளிப்படை. நாட்டியக் கலையோடு தொடர்பு கொண்டு வளர்ந்தது நாடகக் கலை.

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் "கதை தழுவி வரும் கூத்துக்கள்" பற்றிய குறிப்புகள் உள்ளன. அரசர்க்கு உரிய நாடகங்கள் வேத்தியல் என்றும், பொது மக்கட்கு உரியவை பொதுவியல் என்றும் பெயர் பெற்றன. சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் நாடக நூல்கள், நாடகம் பற்றிய இலக்கண நூல்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிக்கிறார்.

சங்க காலத்துக்குப் பிறகும் நாடகக்கலை, கோவில் திருவிழாக்கள் மூலமாக வளர்ந்து வந்திருக்கிறது.

பல்லவர்களும் பிற்காலச் சோழர்களும் நாடகக்கலை வளர்ச்சிக்கு உதவினார்கள். 16,17 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு குறத்தி குறி கூறுவதாக அமையும் குறவஞ்சி நாடகங்கள், உழவர் வாழ்க்கையைக் காட்டும் பள்ளு நாடகங்கள் தோன்றி வளர்ந்தன. இவை செய்யுள் நாடகங்கள்.

**கீர்த்தனை நாடகங்கள்:**

18 ஆம் நூற்றாண்டில் எழுந்த அருணாசலக் கவிராயரின் இராமநாடகம், கோபால கிருஷ்ண பாரதியார் இயற்றிய நந்தனார் சரித்திரம் முதலானவை சிறப்புடையவை.

**நொண்டி நாடகம்:**

தீய வழியில் நடந்து, ஒழுக்கம் கெட்டு பரத்தையர் தொடர்பால் நொந்து துன்புற்று நொண்டியாகி ஒருவன் வருந்துவதாகக் கற்பனை செய்து பாடுவது நொண்டி நாடகமாகும். திருக்கச்சூர் நொண்டி நாடகம் ஐயனார் நொண்டி நாடகம் போன்றவையும் உள்ளன. இவற்றின் நோக்கம் தீயவழியில் நடந்தவர்களைத் திருத்துவதாகும். இவை சிந்து என்னும் பாவால் இயற்றப்பட்டன.

குறிப்பு

19 ஆம் நூற்றாண்டில் இலக்கியமாய்ப் படிப்பதற்கு ஏற்ற வகையில் சுந்தரம் பிள்ளையால் (1855-1897) “மனோன்மணீயம்'' இயற்றப் பட்டது. ஆங்கிலத்தில் லார்டு லிட்டன் எழுதிய “மறைவழி'' என்னும் கதையைத் தழுவியது. எனினும் தமிழில் அமைந்த முதல் நாடக நூலாகும்.

20 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் சங்கரதாஸ் சுவாமிகள் நீதி புகட்டும் புராணக் கதைகளை நாடகமாக்கித் தந்தார். பலருக்கு நடிப்புக் கலையையும் சொல்லிக் கொடுத்தார். டி, கே. எஸ். சகோதரர்கள் அவருடைய மாணவர்களே. இந்த நாடகங்கள் செய்யுளும் உரைநடையும் கலந்து அமைந்தவை.

பம்மல் சம்பந்த முதலியார் அரை நூற்றாண்டுக் காலம் நாடகத்திற்கெனவே உழைத்தவர். நாடகங்களை இயற்றியும் அறிஞர்களை நடிக்கச் செய்தும் தாமே நடித்தும் நாடகக்கலைக்குச் சிறப்புச் செய்தார்.

**இக்கால நாடகங்கள்:**

பல நாவல்களை நாடகமாக்கிப் புகழ்பெற்றவர் கந்தசாமி முதலியார் என்பவர். நாவலின் வரிகளையே நாடகத்திலும் பயன்படுத்தினார்.

தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர் விடுதலையை ஒட்டி “கதரின் வெற்றி'' “பம்பாய் மெயில்'', முதலிய நாடகங்களைத் தந்தவர்.

வீர பாண்டிய கட்டபொம்மன் வரலாறு “முதல் முழக்கம்'' என்ற பெயரில் ரா.வேங்கடசாமி அவர்களால் நாடகமாக்கப்பட்டது.

“குமாஸ்தாவின் பெண்'', கவி காளமேகம், ராஜா பர்த்ருஹரி முதலிய நாடகங்களை T.K. முத்துசாமி இயற்றினார்.

S.D.சுந்தரத்தின் “கவியின் கனவு'' என்னும் நாடகம் தேசீய நாடகமாகும்.

**கலைஞர் கருணாநிதி:**

மந்திரிகுமாரி (திரைப்படமாக ஆக்கப்பட்டது) மணிமகுடம், பூம்புகார் (திரைப்படமாக ஆக்கப்பட்டது) முதலிய நாடகங்களைச் சிறப்பாக எழுதினார்.

நாட்டிய நாடகங்களும் புதியனவாக இயற்றப்பட்டன.

குறிப்பு

பாரதியாரின் "பாஞ்சாலி சபதம்" இசை நாடகமாகவே நடிக்கப்பட்டது.

**T.K.S.சகோதரர்கள்:**

நாடகக்கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர்கள். பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளோடு நாடகங்களை நடத்தியவர்கள். பெரும்புகழ் பெற்றவர்கள். சிவகாமியின் சபதம், ஔவையார் முதலிய நாடகங்களை நடத்தினர்.

**அறிஞர் அண்ணா:**

வேலைக்காரி, ஓர் இரவு (இவை திரைப்படங்களாக வந்தன.) சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் முதலான நாடகங்கள் எழுதியும் தாமே நடித்தும் "நாடகக் கலைக்குப் புகழ்" சேர்த்தார்.

பிற்காலத்தில் நாடகங்களின் இடத்தைத் திரைப்படங்கள் பிடித்துக் கொண்டன. வானொலியும் நாடகங்களை ஒலி பரப்பியது.

மக்களுக்கு நல்லறிவை, நல்லொழுக்கத்தைப் புகட்டுவதிலும், கலையுணர்வைப் பெருக்குவதிலும் நாடகங்கள் உதவின.

**பயிற்சி வினாக்கள்:**

**1.. திரு.வி.க வின் இலக்கியப் பணி குறித்து விளக்குக.**

தேசபக்தன், நவசக்தி போன்ற இதழ்களின் ஆசிரியராகிய திரு.வி.க. இன்றைய உரைநடைக்கு வழிகாட்டினார். முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை போன்ற நூல்கள் எழுதிய இவர் பத்திரிகைத் தமிழுக்கு வித்திட்டார்.

**2. கல்கியின் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை விவரி**

தமிழ் இலக்கியத்திற்கு வரலாற்றுப் புதினங்கள் எழுதிச் சிறப்புச் செய்தவர் கல்கி. புதினங்களை விறுவிறுப்போடும் வேகத்தோடும் எழுதிப் படிப்போர்க்கு ஆர்வத்தை ஊட்டியவர். எதிர்பார்ப்பு என்னும் பெரிய உத்தியைக் கையாண்டு மக்களிடம் ஆவலைத் தூண்டியவர். பல்லவர் காலத்தைப் பின்புலமாகக் கொண்ட சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, இராஜராஜசோழன் காலத்திய பொன்னியின் செல்வனும் இவருக்குப் பெரும்புகழ் சேர்த்தன. தியாகபூமி, மகுடபதி, அலையோசை

போன்றவை அவரது சிறப்பான சமூக நாவல்களாகும். தெளிந்த எளிய நடை அவருடைய தமிழ் நடையாகும். பிற நாவல்கள் கள்வனின் காதலி (திரைப்படமாகவும் வந்தது) வீணை பவானி, சோலைமலை இளவரசி, சுதந்திரப் போராட்டப் பின்னணியில் எழுந்தவை "அலையோசை" "அமரதாரா" போன்றவை.

இவர் வரலாற்றுப் புதினங்களின் தந்தை ஆவார்.

**3.. சிறுகதையின் இலக்கணத்தைச் சுட்டியுரைக்க.**

கதை என்பது தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வரும் ஒரு செல்வமாகும். இராமாயணம், மகா பாரதம் போன்ற இதிகாசங்களிலும், பெருங்காப்பியங்களிலும் கதைகள் இடம் பெறுவதைக் காண்கிறோம். மேனாட்டார் தொடர்பில் தமிழில் உரைநடை நல்ல வளர்ச்சி கண்டது. அதன் காரணமாகப் பத்திரிகைகளும், அதன் பயனாகச் சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வகைகள் விரைந்த வளர்ச்சியைப் பெற்றன.

''சுவையான நிகழ்ச்சி, கவர்ச்சியான ஒரு காட்சி நன்றாகப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள். ஒருவரின் தனிப்பண்பு, ஒரு அனுபவம், வாழ்க்கையின் ஒரு கூறு, அறவுணர்ச்சியால் ஏற்பட்ட ஒரு சிக்கல்- இவற்றுள் ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதைக்கு அடிப்படையாக அமையலாம். ''சிறுகதைகளில் நீண்ட வருணனைகளுக்கு இடமில்லை" ''கதைமாந்தரின் பண்பை விளக்குவதற்கோ, கதை நிகழ்ச்சியைப் புலப்படுத்தற்கோ ஏற்ற அளவிற்கு உரையாடல் அமையலாம்" என்பர் செட்ஜ்விக்.

''அரைமணி முதல் 2 மணி அளவில் படித்து முடிக்கக் கூடியதாகச் சிறுகதை அமைய வேண்டும்" என்பர் எட்கர் ஆலன்போ.

**4.நொண்டி நாடகம் குறித்து விளக்குக**

தீய வழியில் நடந்து, ஒழுக்கம் கெட்டு பரத்தையர் தொடர்பால் நொந்து துன்புற்று நொண்டியாகி ஒருவன் வருந்துவதாகக் கற்பனை செய்து பாடுவது நொண்டி நாடகமாகும். திருக்கச்சூர் நொண்டி நாடகம் ஐயனார் நொண்டி நாடகம் போன்றவையும் உள்ளன. இவற்றின் நோக்கம் தீயவழியில் நடந்தவர்களைத் திருத்துவதாகும். இவை சிந்து என்னும் பாவால் இயற்றப்பட்டன.

**5.மேனாட்டார் வருகையும் உரைநடை வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க**

குறிப்பு

மேனாட்டார் தங்கள் மதம் பரப்பத் தமிழகம் வந்தார்கள். அந்தப் பதினேழாம் நூற்றாண்டு உரைநடை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக, அமைந்தது. அச்சுப் பொறிகளின் வரவு உரைநடை வளர்ச்சிக்குப் பெருங் காரணமாக அமைந்தது. கி.பி.1517 இல் தம்பிரான் வணக்கம் என்ற நூல் அச்சிட்டு வெளிவந்தது. அதுவே இந்திய மொழிகளில் வெளிவந்த முதல் உரைநடை நூலாகும்.

சீகன்பால்கு ஐயர் சமயநூல்களாகப் பதினெட்டு உரைநடை நூல்களை வெளியிட்டார்.

வீரமாமுனிவர் உரைநடையை மேலும் எளிதாக்கும் பொருட்டு தமிழ் எழுத்து வடிவங்களிலே சில சீர்திருத்தங்கள் செய்தார். உரைநடையை இலக்கியத்துக்கும் பயன்படுத்த முடியும் என்பதைத் தமது "பரமார்த்த குரு கதை'' மூலம் தெளிவுபடுத்தினார். அங்கதச்சுவை ததும்பும் அரிய நூலாகும் இது.

## கூறு: 12

**1. இக்கால இலக்கியக் களங்கள்:**

**திரைப்படம்**:

**முன்னுரை:**

தமிழகத்தில் இன்று வலிமை வாய்ந்த ஒரு பொழுது போக்குச் சாதனமாக விளங்குவது திரைப்படமே ஆகும். திரைப்படம் பாமரர் முதல் படித்தவர் வரை எல்லோரையும் கவர்கிறது. திரைப்படத்தின் மூலம் சொல்லப்படும் கருத்து மக்கள் மனத்தில் அழியா இடம் பெற்றுவிடுகிறது.

**பழைய காலம்:**

மேலைநாடுகளில் முதன்முதலில் ஊமைப் படங்கள் தோன்றின. சைகைகள் மூலம் கருத்தை வெளிப்படுத்தினர். சார்லி சாப்ளின், லாரல் ஹார்டி போன்றவர்கள் நடித்தனர். பின்னர் திரைப்படம் பேசும்படமாயிற்று.

ஆதியில் தமிழகத்தில் புராணக் கதைகளே படமாக எடுக்கப்பெற்றன. முழுவதும் பாடலாகவே இருக்கும். நடிகர்கள் பாடத்

தெரிந்தவர்களாக இருந்தார்கள். மக்களும் விடிய விடியப் பார்க்கின்ற மாதிரி நீளமான படங்களாக இருந்தன.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் நாடகங்களும் திரைப்படங்களும் மக்களுக்கு எழுச்சியூட்டும் கருவிகளாக விளங்கின. வீர பாண்டியக் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்றவை இவ்வகையில் சிறந்து நின்றன. பாரதியாரின் பாடல்களும், கனல் கக்கும் வசனங்களும் மக்களுக்கு வீர உணர்ச்சியைத் தந்தன.

தீண்டாமை ஒழிப்பு, விதவை மணம் போன்ற சமுதாயச் சீர்திருத்தங்கள் திரைப்படங்களிலே இடம் பெற்றன. சகோதர பாசம் (பாசமலர்) உயர்ந்த காதல் (லைலா மஜ்னு, அம்பிகாபதி அமராவதி) கடமை உணர்வு (ஏழை படும் பாடு) முதலான பண்புகளை வலியுறுத்துவனவாகப் படங்கள் வந்து மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றன.

அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, ஓர் இரவு போன்ற படங்களும் கலைஞர் கருணாநிதியின் பராசக்தி, மனோகரா, மந்திரிகுமாரி போன்ற படங்களும் சமுதாயச் சீர்திருத்தத்தைக் கருத்தில் கொண்டு அனல் பறக்கும் வசனங்களுடன் வெளிவந்தன. இவர்கள் தமிழ்மொழிக்கு வசனத்தால் சிறப்புச் செய்தவர்கள் ஆவர். மக்களுக்குத் தமிழ் மொழி மீது ஓர் அடங்கா ஆர்வத்தை உண்டாக்கினர். இந்தப் படங்கள் திரை உலகின் திருப்பு முனையாக அமைந்தன. குடிப்பழக்கத்தின் தீமையை உணர்த்தவே நல்லதம்பி என்று ஒரு படம் எடுத்து நடித்தார் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன். நகைச்சுவையின் வற்றாத பேரூற்றாக விளங்கியவர் அவர். இன்றும் திரைப்படங்களில் நகைச்சுவைக்கெனத் தனிக் கதைகள் இணைக்கப்படுகின்றன.

ஒரு பாடல் கூட இல்லாமல் ஒரு படம் எடுத்து (அந்த நாள்) வெற்றியை நாட்டியவர் ஏ.வி.எம்.

இன்று சமுதாயத்தின் ஒரு அங்கமாகவே திரைப்படமாகிவிட்டது.

**திரைப்படத்தின் களம்:**

மக்கள் சமுதாயமே திரைப்படத்தின் களமாகும். சமுதாயத்தில் மக்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதையும் திரைப்படங்கள் காட்டுகின்றன. எப்படி இருக்க வேண்டும் என்பதையும் காட்டுகின்றன. விடுதலைக் காலத்தில் அடக்குமுறைகளையும் விடுதலை

வேட்கையையும் களமாகச் கொண்டன. பின்னர் சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளைப் பேசுவனவாகப் படங்கள் வந்தன. சமூகத்தில் ஜாதிப்போராட்டங்கள் அவற்றால் விளையும் தீமைகள் சுட்டிக் காட்டப்பட்டன. அதிகார வர்க்கத்தின் கொடுமைகள் அரசியல் ரீதியாக விளக்கப்படுகின்றன. மேட்டுக்குடி, தாழ்ந்த குலம் என்று பொருளாதார சம்பந்தமாகவும் படங்கள் வெளிப்படுகின்றன. காதலும் மோதலும் படங்களின் கதியாக அமைந்து விடுகின்றன.

குறிப்பு

**திரைப்படத்தின் கதை::**

திரைப்படத்திற்கு அடிப்படையாக அமைவது நல்ல கதையாகும். கதை இல்லாத ஆட்ட பாட்டங்கள் வெற்றி பெறுவதில்லை. நல்ல கதை மக்களுக்கு நல்ல உணர்ச்சியை எழுச்சியைத் தருகிறது. திரும்பத் திரும்பப் பார்க்கும் வேட்கையை உண்டாக்குகிறது. புராண வரலாற்றுக் கதைகளுக்கு எப்பொழுதும் மக்கள் மனத்தில் இடம் உண்டு. பின்னர் வந்தன சமூகத் திரைப்படங்கள். கதைப்பஞ்சம் வந்த போது பிறமொழிப்படங்கள் தமிழில் தழுவப்பட்டன. குறிப்பாக வங்கமொழிக் கதைகள் தமிழ் நாட்டிற்கு உகந்ததாயின. தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, ஆங்கில மொழிப் படங்கள் தமிழக மக்களால் பார்க்கப்பட்டன.

காம உணர்வைத் தூண்டுகிற மாதிரி படங்கள் வந்த போது அவற்றைத் தணிக்கை செய்ய அரசு ஒரு குழுவை அமைத்தது. இதுவே திரைப்படத்தின் ஆற்றலை விளக்கப் போதுமானதாகும்.

**திரைப்படத்தில் வசனம்:**

முதலில் சாதாரண மக்களின் அன்றாடப் பேச்சுடன் திரைப்படம் வெளியாகியது. பின்னர் எதுகை மோனையோடு பேச்சு வந்த போது அது வசனம் என்ற தகுதியைப் பெற்றது. அண்ணா, கருணாநிதி, எஸ்.டி.சுந்தரம், ஏ.எஸ்.ஏ.சாமி, கண்ணதாசன் போன்றோர் சிறந்த வசன கர்த்தாக்களாக விளங்கினர். திரைப்படப் பாடல்களும், வசனங்களும் தனித்தனியே நூல் வடிவிலும் வந்தன.

சிறந்த சிறுகதைகள் படமாகின. சிறை, உதிரிப்பூக்கள் போன்றவை வெற்றி பெற்றன. சிறந்த நாவல்கள் படமானதற்கு அளவே இல்லை. பாவை விளக்கு, பார்த்திபன் கனவு,மதுரையை மீட்ட

குறிப்பு

சுந்தரபாண்டியன், தில்லானா மோகனாம்பாள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் போன்றவை தரம் வாய்ந்தவை.

**திரைப்படத்தில் இசை:**

ஆதியில் இசை மயமாகவே இருந்தன புராணப் படங்கள். பின்னர் இசையும் உரைநடையுமாக வந்தன. சமூகப் படங்கள். கீர்த்தனைகளாக இருந்த இசை பிறகு மெல்லிசையாக மாறிற்று. கவியரசு கண்ணதாசன், உடுமலை நாராயண கவி, பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் போன்றோர் சிறந்த பாடலாசிரியர்களாக விளங்கினர். இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், தேவா போன்றோர் சிறந்த இசை அமைப்பாளர்களாக விளங்கிவருகின்றனர். மதுரமாகப் பாடல்களைப் பாடியவர்களுக்கு அளவே இல்லை. அவர்கள் நாத வெள்ளத்தில் தமிழக மக்களை ஆழ்த்தினர். திரைப்படப் பாடலை இசைக்காத இளைஞனை இன்று தமிழகத்தில் காண்பது அபூர்வம். நாட்டுப்புறப் பாடல்கள் திரைப்படங்களின் மூலமாகப் புத்துயிர் பெற்றன.

மக்களுடைய வாழ்வில் இரண்டறக் கலந்த திரைப்படத்துறையை அரசும் கௌரவிக்கிறது. நல்ல திரைப்படங்கள், நல்ல கலைஞர்கள், நல்ல காட்சிகளைச் சிறப்புற எடுத்தவர்கள், நடிகர்கள், நடிகைகள், பாடலாசிரியர்கள், இசைப் பாடகர்கள், இசை அமைப்பாளர்கள் என்று எல்லாத் துறையினருக்கும் பரிசும் பட்டமும் அளித்து அரசு போற்றுகிறது.

இவற்றால் திரைப்படங்கள் சிறந்த இலக்கியக் களமாக விளங்குவதை நாம் அறிகிறோம்.

**இக்கால இலக்கியக் களங்களில் வானொலி,தொலைக்காட்சி:**

தகவல்களை அறிவிப்பதிலும் அறிந்து கொள்வதிலும் மக்கள் எப்போதுமே ஆர்வம் காட்டி வந்துள்ளனர். முரசு அறைந்து திருமணச் செய்தியை நகருக்கு அறிவித்ததைச் சிலப்பதிகாரக் காப்பியம் கூறுகிறது. போர்ச் செய்தியையும் மன்னர்கள் முரசறைந்து தெரிவித்திருக்கிறார்கள். பழக்கப்படுத்தப்பட்ட பறவைகள் மூலமும் செய்திகள் சென்று இருக்கின்றன. மார்க்கோனி ரேடியோ கண்டுபிடித்ததும் உலக முழுவதற்கும் செய்திகள் பரவின. செய்திகள் மட்டும் அல்லாமல் மக்களுக்கு வேண்டிய எல்லா அறிவையும் இன்பத்தையும் தரத்தக்க இலக்கியக் களமாக ரேடியோ அமைந்தது.

குறிப்பு

தமிழகத்தில் திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள் முதலில் தோன்றின. பின்னர் மதுரையிலும் நிலையம் அமைந்தது. நிலையத்தின் செயற்பாடுகள் தமிழக மக்களைக் கவர்ந்தன. பொழுது புலர்ந்தது முதல் இரவு 11 மணி வரையும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாயின. மங்கல இசை முதலில் தொடங்கும். 5 அல்லது 10 நிமிடங்களுக்கு ஒன்றாக நிகழ்ச்சிகள் தொடரும். தமிழில், ஆங்கிலத்தில் இந்தியில் செய்திகள் ஒரு நாளில் பலமுறை அறிவிக்கப்படும். பெரியோரது ஆசி உரைகள், அனுபவ மொழிகள், நாட்டு நடப்புகள், இசை, திரையிசை, நாடகம், சினிமா என்று பல நிகழ்ச்சிகளுக்கு ரேடியோ களமாக அமைகிறது. இப்போது கல்வி ஒலிபரப்புக்களும் ரேடியோவில் வருவது ரேடியோவின் பயன்பாட்டைப் பெரிது படுத்தியுள்ளது. உழவும் தொழிலும் வளம்பெற வேண்டிய செய்திகளை அந்த அந்தத்துறை நிபுணர்களைக் கொண்டு வானொலி நிலையம் ஒலி பரப்பும். அது மக்களுக்குப் பலவகையிலும் உதவி செய்வதாகும். நாட்டின் எந்தப் பகுதியில் நடக்கும் நிகழ்ச்சியானாலும் அது நேரடி ஒலி பரப்பின் மூலம் வீட்டில் இருந்தே கேட்கத் தக்கதாகி விடுகிறது. ரேடியோ நாடகங்கள் என்ற நிகழ்ச்சி மூலம் நடிகர்கள், பாடல் ஆசிரியர்கள், வசன கர்த்தாக்கள், பல்வகைக் கலைஞர்கள் என்று பல தரப்பினரும் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இசைக்கலை, நாடகக்கலை, பேச்சுக்கலை எனப்பலதுறை வளர்ச்சிக்கும் ரேடியோ வழிகாட்டியது. ஆனால் இன்று புதுவரவாகத் தொலைக்காட்சி வந்த பின்னர், ரேடியோவின் பயன்பாடு இரண்டாம் தரமாகி விட்டது.

ரேடியோவில் கேட்ட எல்லாவற்றையும் தொலைக்காட்சியில் மக்கள் பார்க்கத் தொடங்கினர். இன்று தொலைக்காட்சி இல்லாத வீடே-நாடே இல்லை எனலாம். அவ்வளவிற்குத் தொலைக்காட்சியின் பயன் பெருகியிருக்கிறது. சிறுவர் முதல் வயோதிகர் வரை அத்தனை பேருக்கும் இன்பம் தருவதாக, அறிவு தருவதாகத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அமைகின்றன.

செல்வர்கள் தங்களுக்கென ஒரு வழியை (Channel) அமைத்துக் கொண்டு செயற்கைக் கோளோடு தொடர்புபடுத்தி நிகழ்ச்சிகளைக் காலைமுதல் இரவு வரை ஒளிபரப்புகின்றனர் அரசு நடத்தும் நிகழ்ச்சிகள் - DD-1,DD-5 என்ற சானல்களில் ஒளிபரப்பாகின்றன. சன், ராஜ், ராஜ், ஜெயா, விஜய் என்று தனியார் சானல்களும் நிகழ்ச்சிகளைப்

பரப்புகின்றன. உலகளாவிய அளவிலும் பி.பி.சி, ஸ்டார் மூவிஸ், ஸ்டார் +, ஸ்டார் ஸ்போர்ட்ஸ்,ஈ.எஸ்.பி. என். என்ற சானல்களும் மக்களுக்குப் பயன்படுகின்றன. அறிவியல் பூர்வமாகவும்,கண்டுபிடிப்புக்கள் பற்றியும் சானல்கள் மக்களுக்கு அறிவுறுத்துகின்றன.

பொழுதுபோக்குக்காகப் பயன்படலாம் என்று எண்ணப்பெற்ற ரேடியோ, தொலைக்காட்சி போன்றவை இன்று மக்கள் வாழ்க்கையின் அங்கமாகவே மாறிவிட்டன. எவ்வாறு ஒரு வீட்டிற்கு ஒரு பூஜை அறை இன்றியமையாததோ அதுபோல ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும் அமைந்து விடுகிறது.

பல சானல்களில் பலப்பல கதைத்தொடர்கள் ஒளிபரப்பாகின்றன. அவை பார்க்கப்பட வேண்டும் என்பதற்காக சானல் உரிமையாளர்கள் பரிசுகளும் அறிவிக்கிறார்கள்.எல்லாவற்றுக்கும் மேலாகப் பல சினிமாப் படங்களும் ஒளிபரப்பாகின்றன. ஆகவே திரையரங்குகளில் சினிமா போய்ப் பார்க்கிற பழக்கம் பெருமளவிற்குக் குறைந்துள்ளது. வீட்டிலேயே சினிமா பார்க்கலாம். இசைக் கச்சேரிகளைக் கேட்கலாம். இன்றைய ராசி பலனையும் தெரிந்து கொள்ளலாம். காற்றழுத்தம், மழை பற்றிய செய்திகள், புயல் அறிவிப்பு, வெப்பநிலை, வியாபாரச்சந்தைக்கு வரும் புதிய பொருள்கள் பற்றிய அறிவிப்புகள் என்று மக்களுக்கு வேண்டிய எல்லாச் செய்திகளையும் தரும் நிலையில் தொலைக்காட்சி அமைகிறது.

இலக்கிய நூல்கள், நாள், வார, மாத, இதழ்கள் எவ்வாறு சமுதாய மேம்பாட்டிற்குப் பயன்படுகின்றனவோ அது போல வானொலியும் தொலைக்காட்சியும் பயன்படுகின்றன என்று துணிந்து கூறலாம்.

**இக்கால இலக்கியக் களமாக இதழ்கள்:**

“காலை எழுந்ததும் படிப்பு” என்று பாரதி சொன்னது இன்று பத்திரிகை படிப்பவர்களுக்குப் பொருந்துவதாக இருக்கிறது. அன்றாடச் செய்திகளை அறிந்து கொள்ளுவதற்கு மக்கள் இப்போது பேரார்வம் காட்டுகின்றனர். பத்திரிகைகள் பல கால அளவுகளில் வெளிப்படுகின்றன. நாளேடுகள், வார, மாத இதழ்கள் போன்றவை, இக்கால இலக்கியக் களமாக விளங்குவதை இங்கு காண்போம்.

**நாளிதழ்கள்**

தினமணி, தினமலர், தினகரன், தினத்தந்தி என்ற பெயர்கள் தினந்தோறும் வருவதைக் குறிக்கின்றன. சுதேசமித்திரன், திராவிடன், தமிழ்நாடு, விடுதலை, ஜனசக்தி, முரசொலி, நாத்திகம், நவமணி, நவசக்தி, மக்கள் குரல், தினச்சுடர், தினக்கதிர் போன்று பிற இதழ்களும் உள்ளன. இவை அன்றாடச் செய்திகளைத் தருவதோடு இலக்கியக் களமாகவும் விளங்குகின்றன. The Hindu, IndianExpress என்று ஆங்கில இதழ்களும் வெளி வருகின்றன. மாலையில் வரும் நாளிதழ்கள் மாலைமுரசு, மாலை மலர், மதுரை மணி போன்றவை. பெரும்பாலும் எல்லா இதழ்களும் சமுதாய நிகழ்ச்சி பற்றிய தங்கள் கருத்துக்களைத் தலையங்கங்களில் தருகின்றன - வாசகர் குரலுக்கும் பத்திரிகைகளில் இடம் உண்டு.

**தினமணி**

தமிழ் அறிஞர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. தமிழண்ணல் போன்றவர்கள் எது சரி என்று சொற்கள் பற்றிய இன்றியமையாத கருத்துக்களை மக்கள் அறிவதற்காக எழுதிவருகின்றனர். இது பொதுமக்களுக்கு நீடித்த பயனைத் தருவதாகும். நூல் மதிப்புரை என்ற பகுதியில் புதிதாக வெளிவந்த நூல்கள் பற்றிய அறிமுகம் மதிப்புரையும் இடம்பெறுகின்றன. இதனால் வியாபாரம் பெருகுகிறது. இது இதழ் ஆற்றும் சமுதாயத் தொண்டாகும். ஞாயிறு தினமணிக்கதிர் வெள்ளிமணி போன்ற இலவச இணைப்புக்கள் கதை, கட்டுரைகளைத் தாங்கிச் சிறுவர் முதல் பெரியவர் வரை பயன்பெறுமாறு அமைகின்றன.

**தினமலர்**

செய்தித் தலைப்புக்கள் தந்து செய்திகளை வெளியிடுவதில் இணையற்றது. “ஆன்மீகம் அறிவோமா’’ “இவர்கள் கூறுகிறார்கள்’’. உலகம் இவ்வளவு தான் (உலகச் செய்திகள்) ஊர்தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகள், வானிலை பற்றிய குறிப்பு, விலைவாசிகள், விளம்பரங்கள் என்று எல்லாப் பிரிவினர்க்கும் வேண்டிய செய்திகளை உடையதாக நாளேடு விளங்குகிறது. சிறுவர் மலர், வார மலர் என்று இலவச இணைப்புக்களும் உண்டு. கதைகள், படக்கதைகள், போட்டிகள், என்று சிறுவர்க்கு அறிவு வளர்ப்பனவாக இவை அமைகின்றன. மக்களை

மகிழ்வுறுத்துவது சினிமா என்பதால் சினிமா பற்றிய செய்திகள் ஞாயிறுமலரில் வருகின்றன. இராசி பலன் பார்க்க ஆவலோடு காத்திருப்பவர்களும் உண்டு.

குறிப்பு

**தினத்தந்தி**

கடினமான தமிழ்நடை இல்லாமல் எல்லோரும் படித்தறியத் தக்க வகையில் எளிய நடையோடு விளங்குவது, படங்கள் நிறைந்த பத்திரிகை. நிறைந்த மக்களுக்குச் செய்தியைக் கொண்டு சேர்ப்பது இதன் தொண்டாகும். இப்போது யோகத்தை நம்புகிற மக்கள் நிறைய இருப்பதால் ஒரு பக்கம் லாட்டரி ரிசல்ட்டாகவே இருக்கும். அது தரும் வாசகம் விழுந்தால் வீட்டுக்கு விழாவிட்டால் நாட்டுக்கு.

நாளிதழ்கள் செய்திக்கு முதலிடம் தருமே தவிர தமிழ் மொழி நடைக்குச் சிறப்புத் தருவதில்லை. அதனால் பெரும்பாலும் பேச்சுவழக்கே பயன்படுத்தப்படும்.

**வார இதழ்கள்**

இவை ஆற்றும் பணி பெரியது. சிறுகதைகள், தொடர்கதைகள், தலையங்கங்கள், துணுக்குகள், மொழிபெயர்ப்புத் தொடர்கள் போன்றவை புகழ்பெற்ற பத்திரிகைகளின் உள்ளடக்கமாகும். குமுதம், ஆனந்தவிகடன், குங்குமம், கல்கி, கல்கண்டு, இதயம் பேசுகிறது, சாவி, ராணி, தேவி, முத்தாரம், ஜீனியர் விகடன், தராசு போன்றவை தொடர்ந்து வருகின்ற சிறந்த வார இதழ்களாகும். காலத்திற்கேற்ற வகையில் சிறந்த புதிய பகுதிகளையும் கொண்டு விளங்குகின்றன. படித்தவர் வீடு தோறும் ஏதாவது இதழ் இருப்பதைக் காணலாம்.

விகடத்துக்கு என்றே தோன்றிய ஆனந்தவிகடன் இன்று அவள் விகடன், சுட்டி விகடன் என்று பல இதழ்களாக வளர்ந்து வெளிவருகிறது. வாரந்தோறும் முன்னர் முத்திரைக் கதைகளை வெளியிட்டுத் தங்கம் பரிசு கொடுத்தது விகடனின் சாதனையாகும். கல்கி, விகடன், குமுதம் போன்ற இதழ்களில் வெளிவந்த சமுதாயப் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள் மிகமிகச் சிறப்புடையவை. பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வந்த பெருமை அவற்றிற்கு உண்டு. பத்திரிகைகளும் வளர்ந்தன. சமுதாய மக்களும் பயன்பெற்றனர்.

கவிதைகளுக்கும் புதுக் கவிதைகளுக்கும் அங்கே இடமிருந்தன. எழுத்தாளர்களும் வளர்ந்தனர் - வாழ்ந்தனர்.

குறிப்பு

**மாத இதழ்கள்**

இலக்கியத் தரம் வாய்ந்த இதழ்களாக இவை வெளிவந்தன. குறிப்பாகக் "கலைமகள்" இதழைக் குறிக்கலாம். கட்டுரைகளுக்கு - கதைகளுக்கு என்று தோன்றிய இதழ் இது என்றே கூறலாம். சிறந்த தொடர்கதைகளை வெளியிட்டுப் புகழ் பெற்றது இந்த இதழ்.

மாத இதழ்களில் தொடர்கதைகளாக வந்தவை பின்னர் நூல்களாக வெளிவந்தன. சில திரைப்படங்கள் ஆகவும் மாறின.

இப்போது பெண்களுக்கென்றும் விளையாட்டுக்கு என்றும் வணிகத்துக்கு என்றும் சோதிடத்துக்கு என்றும் India Today என்றும் ஆங்கில இதழ்களும் தமிழ் இதழ்களும் மாத இதழ்களாக வந்து சமுதாயப் பணியும் இலக்கியப் பணியும் ஒருங்கே ஆற்றுகின்றன.

**முடிவுரை**

அரசியல், மருத்துவம், சட்டம், வணிகம், கல்வி, தொழில், சோதிடம், அறிவியல், திரைப்படம்... முதலிய அனைத்துத் துறைகளைச் சார்ந்ததாகவும், அனைத்துத் துறைகளுக்கும் உதவக் கூடியதாகவும் இதழ்கள் அமைந்து சமுதாய நலம் காக்கின்றன என்று கூறலாம்.

**பயிற்சி வினாக்கள்**

**1.திரைப்படத்தின் கதைக்களம் குறித்து விளக்குக.**

திரைப்படத்திற்கு அடிப்படையாக அமைவது நல்ல கதையாகும். கதை இல்லாத ஆட்ட பாட்டங்கள் வெற்றி பெறுவதில்லை. நல்ல கதை மக்களுக்கு நல்ல உணர்ச்சியை எழுச்சியைத் தருகிறது. திரும்பத் திரும்பப் பார்க்கும் வேட்கையை உண்டாக்குகிறது. புராண வரலாற்றுக் கதைகளுக்கு எப்பொழுதும் மக்கள் மனத்தில் இடம் உண்டு. பின்னர் வந்தன சமூகத் திரைப்படங்கள். கதைப்பஞ்சம் வந்த போது பிறமொழிப்படங்கள் தமிழில் தழுவப்பட்டன. குறிப்பாக வங்கமொழிக் கதைகள் தமிழ் நாட்டிற்கு உகந்ததாயின. தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, ஆங்கில மொழிப் படங்கள் தமிழக மக்களால் பார்க்கப்பட்டன.

குறிப்பு

காம உணர்வைத் தூண்டுகிற மாதிரி படங்கள் வந்த போது அவற்றைத் தணிக்கை செய்ய அரசு ஒரு குழுவை அமைத்தது. இதுவே திரைப்படத்தின் ஆற்றலை விளக்கப் போதுமானதாகும்.

**2.திரைப்படத்தில் வசனம் பெறுமிடத்தை ஆராய்க.**

முதலில் சாதாரண மக்களின் அன்றாடப் பேச்சுடன் திரைப்படம் வெளியாகியது. பின்னர் எதுகை மோனையோடு பேச்சு வந்த போது அது வசனம் என்ற தகுதியைப் பெற்றது. அண்ணா, கருணாநிதி, எஸ்.டி.சுந்தரம், ஏ.எஸ்.ஏ.சாமி, கண்ணதாசன் போன்றோர் சிறந்த வசன கர்த்தாக்களாக விளங்கினர். திரைப்படப் பாடல்களும், வசனங்களும் தனித்தனியே நூல் வடிவிலும் வந்தன.

சிறந்த சிறுகதைகள் படமாகின. சிறை, உதிரிப்பூக்கள் போன்றவை வெற்றி பெற்றன. சிறந்த நாவல்கள் படமானதற்கு அளவே இல்லை. பாவை விளக்கு, பார்த்திபன் கனவு,மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன், தில்லானா மோகனாம்பாள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் போன்றவை தரம் வாய்ந்தவை

**3.இதழ்களில் தினமணி பெறுமிடத்தை ஆராய்க.**

தமிழ் அறிஞர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. தமிழண்ணல் போன்றவர்கள் எது சரி என்று சொற்கள் பற்றிய இன்றியமையாத கருத்துக்களை மக்கள் அறிவதற்காக எழுதிவருகின்றனர். இது பொதுமக்களுக்கு நீடித்த பயனைத் தருவதாகும். நூல் மதிப்புரை என்ற பகுதியில் புதிதாக வெளிவந்த நூல்கள் பற்றிய அறிமுகம் மதிப்புரையும் இடம்பெறுகின்றன. இதனால் வியாபாரம் பெருகுகிறது. இது இதழ் ஆற்றும் சமுதாயத் தொண்டாகும். ஞாயிறு தினமணிக்கதிர் வெள்ளிமணி போன்ற இலவச இணைப்புக்கள் கதை, கட்டுரைகளைத் தாங்கிச் சிறுவர் முதல் பெரியவர் வரை பயன்பெறுமாறு அமைகின்றன.

**4.தமிழகத்தில் வானொலி நிலையங்கள் ஆற்றிய தமிழ்ப்பணிகளை விரித்தெழுதுக.**

தமிழகத்தில் திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள் முதலில் தோன்றின. பின்னர் மதுரையிலும் நிலையம் அமைந்தது. நிலையத்தின் செயற்பாடுகள் தமிழக மக்களைக் கவர்ந்தன. பொழுது புலர்ந்தது முதல்

குறிப்பு

இரவு 11 மணி வரையும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாயின. மங்கல இசை முதலில் தொடங்கும். 5 அல்லது 10 நிமிடங்களுக்கு ஒன்றாக நிகழ்ச்சிகள் தொடரும். தமிழில், ஆங்கிலத்தில் இந்தியில் செய்திகள் ஒரு நாளில் பலமுறை அறிவிக்கப்படும். பெரியோரது ஆசி உரைகள், அனுபவ மொழிகள், நாட்டு நடப்புகள், இசை, திரையிசை, நாடகம், சினிமா என்று பல நிகழ்ச்சிகளுக்கு ரேடியோ களமாக அமைகிறது. இப்போது கல்வி ஒலிபரப்புக்களும் ரேடியோவில் வருவது ரேடியோவின் பயன்பாட்டைப் பெரிது படுத்தியுள்ளது. உழவும் தொழிலும் வளம்பெற வேண்டிய செய்திகளை அந்த அந்தத்துறை நிபுணர்களைக் கொண்டு வானொலி நிலையம் ஒலி பரப்பும். அது மக்களுக்குப் பலவகையிலும் உதவி செய்வதாகும். நாட்டின் எந்தப் பகுதியில் நடக்கும் நிகழ்ச்சியானாலும் அது நேரடி ஒலி பரப்பின் மூலம் வீட்டில் இருந்தே கேட்கத் தக்கதாகி விடுகிறது. ரேடியோ நாடகங்கள் என்ற நிகழ்ச்சி மூலம் நடிகர்கள், பாடல் ஆசிரியர்கள், வசன கர்த்தாக்கள், பல்வகைக் கலைஞர்கள் என்று பல தரப்பினரும் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இசைக்கலை, நாடகக்கலை, பேச்சுக்கலை எனப்பலதுறை வளர்ச்சிக்கும் ரேடியோ வழிகாட்டியது.

**5.மக்கள் வாழ்வியலில் தொலைக்காட்சி பெறுமிடத்தைக் கட்டுரைக்க.**

பொழுதுபோக்குக்காகப் பயன்படலாம் என்று எண்ணப்பெற்ற ரேடியோ, தொலைக்காட்சி போன்றவை இன்று மக்கள் வாழ்க்கையின் அங்கமாகவே மாறிவிட்டன. எவ்வாறு ஒரு வீட்டிற்கு ஒரு பூஜை அறை இன்றியமையாததோ அதுபோல ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும் அமைந்து விடுகிறது.

பல சானல்களில் பலப்பல கதைத்தொடர்கள் ஒளிபரப்பாகின்றன. அவை பார்க்கப்பட வேண்டும் என்பதற்காக சானல் உரிமையாளர்கள் பரிசுகளும் அறிவிக்கிறார்கள்.எல்லாவற்றுக்கும் மேலாகப் பல சினிமாப் படங்களும் ஒளிபரப்பாகின்றன. ஆகவே திரையரங்குகளில் சினிமா போய்ப் பார்க்கிற பழக்கம் பெருமளவிற்குக் குறைந்துள்ளது. வீட்டிலேயே சினிமா பார்க்கலாம். இசைக் கச்சேரிகளைக் கேட்கலாம். இன்றைய ராசி பலனையும் தெரிந்து கொள்ளலாம். காற்றழுத்தம், மழை பற்றிய செய்திகள், புயல் அறிவிப்பு, வெப்பநிலை, வியாபாரச்சந்தைக்கு வரும்

புதிய பொருள்கள் பற்றிய அறிவிப்புகள் என்று மக்களுக்கு வேண்டிய எல்லாச் செய்திகளையும் தரும் நிலையில் தொலைக்காட்சி அமைகிறது

குறிப்பு

## கூறு: 13

**1.தமிழும் சமயங்களும்**

தமிழகத்தில் சமயங்களைப் பரப்ப வந்த மேல் நாட்டவர்களும் பிறரும் தமிழ்மொழி கற்றுத் தமிழ் வாயிலாகவே தங்கள் கொள்கைகளைப் பரப்பினர். அதனால் தமிழ் மொழியில் இலக்கிய இலக்கண வளமும் பெருகியது.

சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாமியம் முதலான சமயங்களுக்குரிய நூல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது தமிழுக்குரிய தனிச்சிறப்பாகும். ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு கடல்போல. அவ்வச் சமயத்தாரின் சிறந்த கொள்கைகளால் அவ்வக் காலத்தில் தமிழக மக்கள் பண்பாட்டுச் சிறப்புடன் திகழ்ந்தனர். அது சமயங்களால் தமிழகம் பெற்ற நன்மையாகும்.

**அ. சைவசமயமும் தமிழும்**

சங்கம் மருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. அதை இருண்ட காலம் எனக் குறிப்பிடுவர். தமிழ் மொழியின் வளர்ச்சியும் தமிழரின் பழம் பெருமையும் குன்றியது. புறச் சமயங்களான சமண பௌத்தம் செல்வாக்குப் பெற்றன.

ஆறாம் நூற்றாண்டில் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் களப்பிரரை வென்றான். தொண்டை மண்டலத்தில் பல்லவராட்சி ஏற்பட்டது. அது முதல் சைவ வைணவ சமயங்கள் மறுமலர்ச்சி பெற்றன. இக்காலம் சமய காலம் எனப் பட்டது.

நாயன்மார்களில் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் 7 ஆம் நூற்றாண்டில் எண்ணற்ற பாடல்கள் பாடினார்கள். இப்போது ஏழாயிரம் பாடல்கள் கிடைக்கின்றன. அடுத்த நூற்றாண்டில் சுந்தரர் பாடிய பாடல்களில் ஆயிரம் பாடல்கள் கிடைக்கின்றன. இவை தேவாரம் என்ற

பெயரில் சிறந்த பக்தி இலக்கியமாகத் திகழ்கின்றன. இவை பண்ணோடு பாடப் பெற்றன.

குறிப்பு

**திருஞான சம்பந்தர்**

பிள்ளைப் பருவத்திலேயே இறைவனைப் பாடியவர். ஆடல், பாடல் கலைகளை வழிபாட்டுக்கு உரியவை ஆக்கியவர். கோயில்களைப் பாடும் போது இயற்கை அழகுகளை எடுத்துரைத்துள்ளார். “கோயிலை வலம்வரும் மகளிர் நடமிடும் ஓசையையும் அதற்கேற்ப முழங்கும் முழவு ஓசையையும் கேட்ட பெண் குரங்குகள் மரமேறி மேக முழக்கமா மழையா என வானம் பார்க்கும் திருவையாறு'' எனப் பாடுகிறார்.

பதிகந்தோறும் இராவணன் கயிலை மலையைத் தூக்க முயன்று துன்பப்பட்டதையும் சிவபக்தன் ஆனதையும், பிரமனும் திருமாலும் தேடிக் காணமுடியாத பெருமை உடையவன் சிவன் என்பதையும் சமண பௌத்தத் துறவிகளின் போலி வாழ்க்கையைக் கடிந்தும் பாடுவார். சமண பௌத்தர் இல்லறத்தைப் பழித்தும் துறவறத்தைப் போற்றியும் கூறுவர். பெண்களைப் பெருமைப்படுத்தியவர் ஞானசம்பந்தர்.

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்ல.ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.”

என்னும் பாடல் சைவர்களின் திருமணங்களில் இடம் பெறுவதாகும்.

அடியார்களுக்கு எல்லா நாளும் நல்ல நாள் என்னும் கொள்கை உடையவர்.

**திருநாவுக்கரசர்**

வடமொழியும் தமிழும் நன்கு கற்றவர். சைவக் குடும்பத்தில் பிறந்து சமணராக விளங்கியவர். பின்னர் தமக்கையாரால் சைவ சமயத்திற்கே வந்து திருத்தொண்டு செய்தவர். திருத்தாண்டகம் என்னும் செய்யுள் வகையில் பாடல்கள் பாடினார். இவரைத் தாண்டக வேந்தர் எனப் பிற்காலத்தார் அழைத்தனர்.

“நாமார்க்கும் குடியல்லோம்'' என்று பாடி அரசன் ஆணையை மறுத்தார். நாவுக்கரசர் பாடல்களில் பக்தியின் உருக்கம் இருக்கும். பணிவும் குழைவும் இருக்கும்.

குறிப்பு

**சுந்தரர்**

இவரை இறைவன் திருமண நாளில் தடுத்தாட் கொண்டார். வேளாளர் குடும்பத்தைச் சார்ந்த சங்கிலியாரையும் பரத்தையர் குடும்பத்தைச் சார்ந்த பரவையாரையும் திருமணம் செய்து கொண்டார். "பரவை என்னும் என் காதலிக்கும் எனக்கும் பற்றாக உள்ள பெருமானே" என்று தம் பாடலில் குறிப்பிடுகிறார். துறவையும் உலக வெறுப்பையும் விடுத்து உலக வாழ்க்கையில் பெறும் இன்பங்கள் பற்றிப் பாடியவர். சம்பந்தரின் பாடல்கள் போல இவர் பாடல்களும் இசையமைப்பு உடையவை.

"வீரத்தின் மிடுக்கு இல்லாத செல்வனை வீமன், அருச்சுனன் என்று புகழ்வதாற் பயனில்லை கொடுக்க மனம் இல்லாதவனைப் பாரியே என்று புகழ்ந்தாலும் கொடுப்பார் இல்லை. சிவபெருமானைப் பாடிப் பயன்பெறுங்கள்" என்று புலவர்களுக்குக் கூறுகிறார்.

**மாணிக்க வாசகர்**

எட்டாம் நூற்றாண்டில் இவர் பாடிய பாடல்கள் திருவாசகம் எனப்படும். திருக்கோவையாரும் இவர் பாடியதே. திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்னும் மொழி இவர் பாடல்களின் கனிவைக் காட்டுவதாகும். பெண்கள் ஆடிப் பாடும் பாடல் வடிவங்களிலும் இவர் பக்திப் பாடல் களைத் தந்துள்ளார். அவை திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பொன்னூசல் போன்றவையாகும். பாவைப்பாட்டு மகளிர் பாடுவதற்கு உரியதாகும். அதைத் திருவெம்பாவை என்று பாடுகிறார். மார்கழி நீராடல் குறிக்கப்பெறுகிறது. இறைவனை வணங்கி நல்ல கணவர் பெறுவதற்காக நோன்பு நோற்பதாக இப்பாடல் அமைகிறது.

"ஆதியும் அந்த மும் இல்லா அருட் பெருஞ்சோதி" என்று இறைவனைப் பாடுகிறார்.

சைவ சமய குரவராகிய இந்நால்வர் பாடிய வை எட்டுத் திருமுறைகளாகின்றன.

குறிப்பு

**ஒன்பதாம் திருமுறை**

திருமாளிகைத் தேவர் கருவூர்த்தேவர் போன்ற ஒன்பது பேர் பாடிய பாடல்கள் “திருவிசைப்பா'' என்னும் ஒன்பதாம் திருமுறை ஆகிறது.

**பத்தாம் திருமுறை**

திருமூலர் பாடிய 3000 பாடல்கள் திருமந்திரம் எனப்படும். சுருங்கிய சொற்களில் ஆழ்ந்த பொருள்களைத் தரும் பாடல்கள் இவை. தத்துவக் கருத்துக்கள், யோக நெறி, சித்த வைத்தியக் கருத்துக்கள் எனப் பலவும் இப் பாடல்களில் அமைந்துள்ளன.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.”

மக்களுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்பார். இவ்வாறு இவர் பாடல்கள் அரிய பெரிய உண்மைகளைத் தாங்கி உள்ளன.

**பதினோராந் திருமுறை**

பன்னிருவர் பாடிய 40 நூல்கள் பதினோராந் திருமுறை எனப்படும். அத்தனையும் இறைவன் புகழைப் பாடுவனவாகும்.

**பன்னிரண்டாம் திருமுறை:**

**பெரிய புராணம்**

சேக்கிழார் பாடிய பெரியபுராணம் சைவ நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவதாகும். ‘பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ’ என்று பிற்காலத்தார் இவரைப் பாராட்டுகின்றனர். சுந்தரர் எழுதிய திருத்தொண்டத்தொகை யையும் நம்பியாண்டர் நம்பி எழுதிய திருத்தொண்டத்திரு வந்தாதியையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல் இதுவாகும்.

இவை தவிர இறைவன் புகழ் பேசுவனவாக கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், தலபுராணங்கள், சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் முதலியன விளங்குகின்றன.

*Self-Instructional Material*

காலத்துக்குக் காலம் தோன்றிய குமரகுருபரர், பகழிக் கூத்தர், அருணகிரிநாதர், இராமலிங்க அடிகள், தாயுமானவர், சிவப்பிரகாசர் போன்றோரும் இறைப் பணி செய்த சான்றோராவர். இறைவன் புகழ்பாடி இவர்கள் எல்லோரும் மக்களின் உள்ளங்களைச் சிவமயமாக்கிய பெருந்தகைகள் ஆவர். சைவ மடங்களும் தோன்றிய சமயத்தைக் காத்தன.

**ஆ. வைணவ சமயமும் தமிழும்:**

தொல்காப்பியர் கால முதற் கொண்டே திருமால் வழிபாடு தமிழகத்தில் இருந்திருக்கிறது. "மாயோன் மேய காடுறை உலகமும்'' என்பது தொல்காப்பிய நூற்பா. முல்லைநில மக்களின் தெய்வம் திருமால். பின்னர் எல்லா நில மக்களாலும் வழிபடப்பட்டார். சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்கள் இதை உணர்த்துகின்றன. பரிபாடலில் திருமால் பற்றிய பாக்கள் உள்ளன.

சங்க காலத்தில் இருந்த திருமால் வணக்கம் சமண பௌத்தக் காலத்தில் குறைந்து பின்வந்த ஆழ்வார்கள் காலத்தில் மேலோங்கியது. ஆழ்வார்களும் ஆழ்வார் வழிக் குரவர்களும் வைணவத்துக்குச் செய்த தொண்டு தமிழ் இலக்கியத்துக்குச் செய்த தொண்டாகவே கருதப்படும்.

பன்னிரு ஆழ்வார்களும் தங்கள் ஊனினும் உயிரினும் திருமாலையே உவந்தனர். இவர்கள் 108 வைணவத் தலங்கள் தோறும் சென்று திருமாலைப் பாடினர். இவை நாலாயிர திவ்யப் பிரபந்தம் எனப்பட்டது. இவற்றைத் தொகுத்தவர் நாதமுனிகள் ஆவார்.

**முதல் ஆழ்வார்கள் மூவர்:**

பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும் ஆழ்வார் முதலிகள் எனப்பெயர்பெற்றனர். இவர்கள் பாடியவை முறையே முதலாம், இரண்டாம், மூன்றாந் திருவந்தாதி எனப்படுகின்றன. ஒவ்வொன்றும் அந்தாதித்தொடை அமைந்த நூறு வெண்பாக்களைக் கொண்டது. இவர்கள் காலம் கி.பி.6ஆம் நூற்றாண்டென்பர்.

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

குறிப்பு

என்கிறார்பூதத்தாழ்வார்.

**திருமழிசை ஆழ்வார்:**

இவர் திருமாலை,

''அன்பாவாய் ஆரமும் ஆவாய் அடியேனுக்கு
இன்பாவாய் எல்லாமும் நீயாவாய்''

என்று பாடுகிறார்.

பிற சமயத்தாரைச் சாடுகிறார்.

''நிற்கின்ற தெல்லாம் நெடுமா லென்று ஓராதார்
கற்கின்ற தெல்லாம் கடை'' என்றும்
''அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார்'' என்றும் கூறுகிறார்.

**பெரியாழ்வார்:**

இறைவனுக்கே பல்லாண்டு பாடியதால் பெரியாழ்வார் எனப் பெயர் பெற்றார். இவர் பாடியவை திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் ஆகும். கண்ணனை வளர்க்கும் தாய் யசோதையாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு பெரியாழ்வார் பாடும் பாடல்கள் தாய்மையின் பிழிவாகும். பிற்காலப் பிள்ளைத் தமிழுக்கு வித்திட்டவர் இவரே.

**ஆண்டாள்:**

பெரியாழ்வாரின் திருமகள் தந்தை தொகுத்த பூமாலையைச் சூடிக் கொடுத்ததால் இவர் சூடிக்கொடுத்த நாச்சியார் எனப்பட்டார். இவர் பாடியவை நாச்சியார் திருமொழியும் திருப்பாவையுமாகும். திருமால் தன் கைத்தலம் பற்றுவதாகக் கனாக் கண்டேன் தோழி நான் என்று பாடுகிறார்.

**நம்மாழ்வார்:**

திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்ற நூல்கள் இவர் பாடியவை. இவற்றை வைணவ சமயத்தார் நான்கு வேதமாகப் போற்றுவர். திருவாய் மொழிக்கு எழுந்த உரைகளை ''பகவத் விஷயம்'' என்பர்.

குறிப்பு

**மதுரகவி ஆழ்வார்:**

இவர் நம்மாழ்வாரின் சீடர் இவர் பாடிய பிரபந்தம் “கண்ணிநுண் சிறுத்தாம்பு“ என்பது இப்பதினோரு பாடலிலும் ஆசிரியனையே தெய்வமாகக் கருதிப் பாடுகிறார்.

**திருமங்கையாழ்வார்:**

இவர் இயற்றியவை ஆறு நூல்கள். சிறிய திருமடல், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் ,திருவெழுகூற்றிருக்கை, பெரிய திருமொழி ஆகும். இவற்றைத் திருவாய் மொழிக்கு ஆறு அங்கங்களாகக் கருதுகின்றனர். இவர் பாடல்களில் இயற்கை வருணனை மிகுதி.

**தொண்டரடிப் பொடியாழ்வார்:**

இவரது இயற்பெயர் விப்பிரநாராயணர். திருமால் அடியார்களின் அடிப்பொடியாகத் தம்மைக் கருதுபவர். அதனால் இவரைத் தொண்டரடிப் பொடியாழ்வார் என அழைத்தனர்.

‘‘பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.”
என்று அருமையாகப் பாடியுள்ளார்.

**திருப்பாணாழ்வார்:**

பாணர் மரபினர். இசைப்பாடல்கள் பாடியவர். “அமலனாதிபிரான்’’ எனத் தொடங்கும் 10 பாசுரங்களைப் பாடியுள்ளார். இவை திருமாலின் மேனி அழகில் ஈடுபட்டுப் பாடியவை.

**குலசேகராழ்வார்:**

இவர் சேர அரசர் “பெருமாள் திருமொழி’’ இவர் பாடியது. கண்ணனின் இளமைக் குறும்புகளைக் காணாத தாய் தேவகி புலம்புவது போலவும் இராமனைப் பிரிந்த தசரதன் புலம்புவது போலவும் இவர் பாடிய பாடல்கள் அருமையானவை. எந்தப் பிறப்பானாலும் திருவேங்கடமலையில் பிறக்க அருள்புரி என்று திருமாலை வேண்டுகிறார

கம்பராமாயணமும், வில்லிபாரதமும் திருமால் பெருமையை இயம்புவன. ராம் என்ற இரண்டு எழுத்தால் பாவம் தொலையும் என்கிறார் கம்பர். கண்ணனின் ஒப்பற்ற தன்மையைப் பாடுகிறார் வில்லிபுத்தூரார். பிள்ளைப் பெருமாளையங்கார் பாடிய அஷ்டப் பிரபந்தம் சிறந்த சிற்றிலக்கியமாகும். அழகர் கலம்பகம், திருவேங்கடக் கலம்பகம், முக்கூடற்பள்ளு, பாகவதம், குருகூர்ப் பள்ளு முதலிய சிற்றிலக்கியங்களும் திருமால் பெருமையை எடுத்து இயம்புவன.

ஆழ்வார்கள் நூலுக்குத் தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் உரைகள் தோன்றின. இவை கற்பார்க்கு இன்பம் நல் கும் இனிய உரைகளாகும். ஆகவே இவை ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி என எழுத்தெண்ணிக் காக்கப்பட்டு வருகின்றன.

ஆழ்வார்கள் தோற்றத்தால் திருமாலைப் பரவும் வைணவ சமயம் தமிழகத்தில் தழைத்தது.

**இ. சமணமும் தமிழும்**

**இலக்கணங்கள்:**

கி.மு.3ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் புகுந்த சமயம் சமணம். சமணத்தின் வாழ்விடங்களாகத் திகழ்ந்தவை காஞ்சியும் மதுரையும் ஆகும். உலோச்சனார், நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் போன்ற சங்கப் புலவர்கள் சமணர்கள். கொல்லாமை, துறவு, துன்பம் பொறுத்தல் போன்ற சமணக் கொள்கைகள் தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

“உற்ற நோய் தோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு”

என்பார் வள்ளுவர். அதனால் இச் சமயம் தமிழகத்தில் வேரூன்றியது. அவர்கள் தமிழ்மொழிக்குத் தந்த இலக்கியக் கொடையும் பெரிது. அதை இங்கு பார்ப்போம்.

**சமணர் தமிழ்ச் சங்கம்:**

சமணர் பற்றிய செய்திகளைச் சங்க காலத்தில் பார்க்க முடிவதில்லை. ஆனால் சங்கமருவிய காலத்தில் சமணர் இயற்றியனவாகப் பல நூல்கள் உள்ளன. சமணப் பள்ளிகளில் கல்விப் பணியும் செய்தனர் உடல்நோயையும் உளநோயையும் ஒருங்கே போக்கினர். அதனால்தான் ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்ற நூல்கள்

மருத்துவப் பெயர்களோடு விளங்குகின்றன. மதுரையில் "வச்சிரநந்தி சங்கம்'' என்று அமைத்துத் தமிழ்த் தொண்டு செய்து வந்தனர். மதுரை அருகே உள்ள ஆனைமலை இவர்கள் வாழ்விடமாக இருந்தது. தேவார காலத்துக்கு முன்னே இவர்கள் செல்வாக்கோடு இருந்தார்கள்.

**இலக்கணங்கள்**:

அறநூல்கள், காப்பியங்கள், இலக்கணங்கள் எனப்பல நூல்களைச் சமணர்கள் இயற்றியுள்ளனர். அவ்வகையில் தமிழ் மொழிக்குப் பெருஞ்சிறப்புச் செய்துள்ளனர். தொல்காப்பியர் தந்தது தொல்காப்பியம். பழமையான இலக்கண நூல். இந் நூலுக்குப் பாயிரம் செய்த பனம்பாரனார் தொல்காப்பியரை பல்புகழ் நிறுத்த படிமையோன் என்று குறிப்பிடுகிறார். படிமை என்பது சமண சமயத்தைக் குறிப்பதாகும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, நேமிநாதம், நன்னூல், நம்பியகப் பொருள், வெண்பாப் பாட்டியல் முதலான நூல்கள் சமணர் இயற்றியவையே.

**காப்பியங்கள்:**

காலத்தால் முந்தியது சிலப்பதிகாரம். ஐம்பெருங்காப்பியங்களில் முந்தியது, இயற்றிய இளங்கோ அடிகள் சமணரே என்பர். கவுந்தி அடிகள் என்னும் சமணத் துறவியைக் காப்பியத்தில் படைத்து அவர் மூலமாகச் சமயக் கொள்கைகளை வெளிப்படுத்துகிறார். ஆயினும் பல சமயங்களையும், சமயக் கடவுள்களையும் நடுவுநிலைமையோடு போற்றிக் குறிப்பிடுகிறார்.

சீவக சிந்தாமணி யும் சமணக் காப்பியமே. இயற்றியவர் திருத்தக்கதேவர். இவர் விருத்த யாப்பு என்னும் புது வகையினைக் கையாண்டார். இதுவே பிற்காலக் காப்பியங்களுக்கெல்லாம் யாப்பாக அமைந்தது.

அடுத்தது வளையாபதி காப்பியம். இந்நூலில்

"துக்கம் துடைக்கும் துகளறு காட்சியர்

நிக்கந்த வேடத்து இருடி கணங்களை" என்னும் தொடர் சமணரைக் குறிப்பதாகும்.

குறிப்பு

பல்லவ மன்னன் முதலில் சமணனாக இருந்தான். சமணம் அரசியல் செல்வாக்கோடு வாழ்ந்தது. ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்தில் இச் செல்வாக்கு சரிந்தது.

அடுத்தது வளையாபதி காப்பியம். இந்நூலில்
"துக்கம் துடைக்கும் துகளறு காட்சியர்
நிக்கந்த வேடத்து இருடி கணங்களை" என்னும் தொடர் சமணரைக் குறிப்பதாகும்.

**சிறுகாப்பியங்கள்:**

சூளாமணி, யசோதர காவியம், உதயணகுமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம், ஆகிய ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்களாகும். அத்தனையும் சமணக் காப்பியங்களே. தோலாமொழித்தேவர் இயற்றியது சூளாமணி. இதன் கதை இந்து சமயக் கதையோடு ஒத்திருக்கும்.

யசோதர காவியம் 330 விருத்தப் பாக்களால் இயன்றது. உதயணன் கதையை விருத்தப்பாவால் கூறுவது உதயணகுமார காவியம். நீலகேசி-பௌத்த சமயக் காப்பியமாகிய குண்டலகேசிக்கு எதிராக எழுந்த நூல்.

இவை தவிர கொங்குவேள் இயற்றிய பெருங்கதையும் சமணக் காப்பியமாகும்.

**நீதிநூல்கள்:**

நாலடியார், பழமொழி, அறநெறிச்சாரம், சிறுபஞ்சமூலம், ஏலாதி முதலியவை சமணசமய நீதிநூல்களாகும். திருக்குறளோடு சமமாகக் கருதத்தக்கது நாலடியார். இதை 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்னும் பழமொழி விளக்கும்.

**புராணங்கள்:**

மேருமந்தர புராணம், ஸ்ரீபுராணம், மாபுராணம் போன்றவையும் சமணரால் இயற்றப்பட்டவை ஆகும்.

மேரு, மந்தரன் என்ற இருவர் வரலாற்றைக் கூறுவது மேருமந்தர புராணமாகும்.

**நிகண்டுகள்:**

இக்காலத்து அகராதிகள் போலப் பழங்காலத்தில் சொற்களுக்குப் பொருள் காண உதவியவை நிகண்டுகளாகும். திவாகர நிகண்டு,பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலாகியவையும் சமணரால் இயற்றப்பட்டவையே.

விருத்தம், அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களையும் படைத்துள்ளனர். நரி விருத்தம், திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி போன்றவை சமணர் இயற்றியவையே.

ஸ்ரீபுராணம், கத்ய சிந்தாமணி போன்ற உரைநடை நூல்களும் சமணரால் இயற்றப்பட்டுள்ளன. இவையே மணிப்பிரவாள நடைக்கு வழிவகுத்தன.

இளம்பூரணர், குணசாகரர் போன்றவர்கள் சிறந்த உரையாசிரியர்களாவர். இவர்கள் சமணர்களே.

**முடிவுரை:**

இன்பத்தை வெறுத்தவர்கள் சமணர்கள். அதனால் இசை, நாடகத்தைத் துறந்தனர். ஆனால் அறநெறியைச் சிறிதும் மறந்தாரில்லை. மக்கட் சமுதாயத்தை அறவழியில் கடைத்தேற்றுவதே அவர்கள் குறிக்கோளாகும். தமிழ் மொழிக்கு எல்லா இலக்கியத்துறைகளிலும் ஏற்றம் விளைவித்தனர். ஆகவே சமணசமயம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

**ஈ. பௌத்தமும் தமிழும்::**

தமிழ் நாட்டில் சைவ சமயமும் வைணவ சமயமும் பக்தி மார்க்கத்தைப் பரப்புவதற்கு முன்னர் சமண பௌத்த சமயங்கள் செல்வாக்கோடு திகழ்ந்தன. கி.மு.3ஆம் நூற்றாண்டில் வடநாட்டை ஆண்ட அசோகன் காலத்தில் பௌத்த சமயம் தமிழ்நாட்டில் பரவியது என்பர். அவன் மூவேந்தரையும் தன் நண்பர்களாகக் குறிக்கின்றான். இங்கு வந்த பௌத்தர்கள் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பினர். பௌத்தக் கொள்கைகளான உயிர்க்கு இரங்கல், சாதி வேறுபாடு இன்மை, அறநெறி நிற்றல் முதலியன தமிழ் மக்களிடையே பேரார்வத்தை ஏற்படுத்தின. இவர்களும் தம் மதம் பரப்பத் தமிழ்மொழி

இலக்கிய இலக்கணங்களைக் கற்றனர். கற்றுத் தெளிந்த பின்னர் தமிழில் பல நூல்கள் இயற்றித் தமிழ்மொழிக்கு வளம் சேர்த்தனர்.

**பௌத்தப் பள்ளிகள்:**

தமிழ் நாடெங்கணும் பௌத்தப் பள்ளிகளையும் விகாரைகளையும் அமைத்துத் தம் சமயத்திற்குத் தொண்டாற்றினர். பூதமங்கலம், போதிமங்கை, காவிரிப்பூம்பட்டினம், பொன்பற்றி, மதுரை, நாகப்பட்டினம் முதலிய இடங்களில் பெருமளவில் வாழ்ந்தனர்.

**சங்க இலக்கியங்கள்:**

சங்க இலக்கியங்களில் புத்தமதக் கருத்துக்கள் காணப்படுகின்றன. மதுரைக் காஞ்சியில் புத்தப்பள்ளிகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. சங்ககாலப் புலவராகிய இளம்போதியார் புத்த சமயத்தினர் ஆவார். அறவணவடிகள், மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார், சங்கமித்திரர், புத்தமித்திரர் போன்றவர்கள் பௌத்தர்களே.

காஞ்சியில் வாழ்ந்த தின்நாகர், தருமபாலர் போன்றவர்களே நாலந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைவர்களாக விளங்கினார்கள். சீனம் சென்ற போதி தருமர், வச்சிரபோதி போன்றவர்களும் காஞ்சியில் வாழ்ந்த பெருமக்களே. கல்வியிற் சிறந்த காஞ்சிமாநகர் என அது பெயர் பெற்றிருந்தது.

**பௌத்த சமயக் காப்பியங்கள்:**

பெருங்காப்பியங்களில் மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயக் காப்பியங்கள் ஆகும். கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையை இயற்றினார். மஹாயான புத்த சமயம் சார்ந்தது இந்நூல். புத்த சமயக் கொள்கைகளைப் போதிக்கவே இந்நூல் எழுந்தது, இதற்கு மணிமேகலை துறவு என்றே பெயரிட்டார் சாத்தனார்.

‘‘வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கின் புலால் புறத்திடுவது” என்பன

புத்தக் கருத்துக்களை வலியுறுத்துவனவாகும்.

மக்களுக்கு வேண்டிய அறத்தையும் இந்நூல் வலியுறுத்துகிறது. ”மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும், உடையும் உறையுளும் அல்லது கண்டதில்லை ” என்கிறது.

குறிப்பு

நாதகுத்தனார் இயற்றியது குண்டலகேசி. இது விருத்தத்தாலும் கலிப்பாவாலும் அமைந்தது. சமண வைதிக சமயக் கருத்துக்களைத் தக்க முறையில் மறுக்கிறது. நிலையாமையை வலியுறுத்தும் பாடல் ஒன்று.

“பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும் காளையாம்
தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரு மூப்புமாகி
நாளும்நாம் சாகின்றோமால் நமக்குநாம் அழாதது என்னே”

**பிம்பிசாரார் கதை:**

புத்தர் காலத்தில் வாழ்ந்த பிம்பிசாரர் பற்றிய நூல் தற்போது கிடைக்கவில்லை.திருப்பதிகம் என்றும் சித்தாந்தத் தொகை என்றும் பௌத்த நூல்கள் இருந்தனவாகக் குறிப்புக்கள் உள்ளன.

**இலக்கண நூல்கள்:**

புத்தமித்திரனார் எழுதிய இலக்கண நூல் வீர சோழியம் ஆகும். ஐந்திலக்கணங்களையும் இந்நூல் கூறும். வீர சோழன் என்னும் மன்னனால் ஆதரிக்கப்பெற்றவர் இப்புலவர். அதனால் மன்னனின் பெயரையே நூலுக்கு வைக்கிறார். இந்நூல் 11 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர்.

இவ்வாறு தமிழ் மொழிக்கும் சமுதாயத்துக்கும் பல சிறப்புக்களைத் தந்த பௌத்த சமயம் பின்னர் வந்த சைவ, வைணவ சமயங்களால் நலிவுற்று மறைந்தது. ஆயினும் மணிமேகலை போன்ற காப்பியங்களால் பௌத்தக் கருத்துக்கள் என்றும் நிலைத்து நிற்கும் எனலாம்.

**உ. இசுலாமும் தமிழும்**

மாலிக்காபூர் என்ற தளபதி கி.பி.14ஆம் நூற்றாண்டில் தென்னாட்டை வென்று முகமதிய ஆட்சியை நிறுவினான், அது முதல் தமிழ் நாட்டில் இஸ்லாம் பரவியது. அச்சமயம் சார்ந்த வர்கள் தமிழ் கற்றுப் பெரும்புலவர்களாய் விளங்கினர். இவர்களில் சிறந்தவர்கள் உமறுப்புலவர், சவ்வாதுப்புலவர், வண்ணக்களஞ்சியப் புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு, சதாவதானி செய்குதம்பிப் பாவலர் முதலியோராவர்.

இவர்கள் படைத்தவை தனிப்பாடல்கள், பேரிலக்கியம், சிற்றிலக்கியம் ஆகும். சமயச் சார்பான நூல்களில் அரபுச் சொற்கள் கலந்துள்ளன.



**சீறாப்புராணம்:**

இயற்றியவர் உமறுப்புலவர். சீறா என்றால் வாழ்க்கை வரலாறு என்று பொருள். இவர் எட்டயபுரம் அரசவைக் கவிஞராக விளங்கியவர். வள்ளல் சீதக்காதியால் ஆதரிக்கப் பெற்றவர். அவர் வேண்டுகோளுக்கு இணங்கி நபிகள் நாயகத்தின் வரலாற்றை சீறாப்புராணம் எனப்பாடினார். மூன்று காண்டங்களில் 5026 பாடல்களில் வரலாறு அமைகிறது.

உமறுப்புலவர் இயற்றிய வேறு நூல்கள் சீதக்காதிக் கோவை, முதுமொழி மாலை என்பன. தமிழ் இலக்கியங்கள் போலவே சீறாப்புராணத்தில் நாட்டுப் படலம், நகரப் படலம் என அமைக்கிறார். குறவர் - குறத்தியர், பரண், தினைப்புனம், யாழ்-பறை, மா, பலா, வாழை எல்லாம் நாட்டுப் படலத்தில் இடம் பெறுகின்றன. நகரப் படலம் என மெக்காவைப் பாடுகிறார். மதுரையைப் பாடுவது போலவே அது அமைகிறது. அவரது தமிழ் நூல்களின் தோய்வு தெரிகிறது. உவமை,உருவகங்களைக் கையாளுகிறார். அவரது கடவுள் வாழ்த்து அருமையான பாடலாக விளங்குகிறது.

“திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக்கு அணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
கருவினும் கருவாய்ப் பெருந்தவம் புரிந்த
கருத்தனைப் பொருந்துதல் கருத்தே”

**குணங்குடி மஸ்தான் பாடல்கள் (1788-1835):**

இவரது பாடல்கள் இஸ்லாமியக் கருத்துக்கள் கொண்டவை எனினும் சமரச நோக்கம் உடையவை, அவரைப் போற்றி ஐயாசாமி முதலியார் என்பவர் குணங்குடி நாதர் பதிற்றுப் பத்தந்தாதி என்றும் சரவணப்பெருமாளையர் நான்மணிமாலையாக 40 பாடலும் பாடினார்கள்.

தாயுமானவரைப் போலவே கருத்தும், சந்த இனிமையும் உருக்கமும் நிறைந்த பாடல்களைப் பாடினார். இறைவனைத் தலைவியாகக் கருதி,

குறிப்பு

"என்னை விட்டால் மாப்பிள்ளை மார் எத்தனையோ உன்றனுக்கே
உன்னை விட்டால் பெண் எனக்கு உண்டோ மனோன்மணியே"
என்று "மனோன்மணிக் கண்ணியில்' பாடுகிறார்.

**சவ்வாது புலவர்:**

தனிப் பாடல்கள் பல பாடியவர்.

**வண்ணக் களஞ்சியப் புலவர்:**

வண்ணம் என்னும் சந்தப் பாப் பாடுவதிலே வல்லவர். அதனால் வண்ணக் களஞ்சியப் புலவர் என அழைக்கப் பெற்றார். முகைதீன் புராணம் பாடியவர். நாகூர் தர்காவின் சாதுவைப் போற்றிப் பாடினார்.

**செய்குதம்பிப் பாவலர்**:

சதாவதானி என்னும் சிறப்புப் பெற்றவர். சொல்வேந்தர். நினைவுக் கலைஞர். நாகைக் கோவை, கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், திருநாகூர்த் திரிபந்தாதி, இன்னிசைமாலை முதலிய நூல்கள் இயற்றியவர்.

இவர் மறைந்த போது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை
"ஓரவதானம் ஒரு நூறு செய்திந்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச்-சீரிய
செந்தமிழ்ச் செல்வனைச் செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி"
என்று இரங்கற்பா பாடுகிறார்.

**முகம்மது உசேன்**:

பெண்புத்தி மாலை என்ற நூல் இயற்றினார். பெண்களுக்கு வேண்டிய அறிவுரைகளைக் குறள் வெண்பாக்களால் பாடியுள்ளார்.

**பனைக்குளம் அப்துல் மஜீத்:**

கவிப் பூஞ்சோலை, இலக்கியப்பூங்கா, தமிழ்நாட்டு இஸ்லாமியப் புலவர்கள் என்ற நூல்கள் இயற்றியவர்.

அராபிய பாரசீக இலக்கிய அமைப்புக்களைத் தழுவித் தமிழிலும் இஸ்லாமியப் புலவர்கள் பல இலக்கியங்களைப் பாடியுள்ளனர்.

**குறிப்பு**

**அவையாவன:**

(1) படைப்போர் : அது முகமதியருக்கும் ஏனையோர்க்கும் நடந்த போரைப் பற்றிக் கூறியது.

(2) முன்ஜாத்து : அல்லாவிடம் அருள் வேண்டிப் பாடுவது

(3) கிஸ்ஸா : கதையாகக் கூறுவது

(4) மசாலா : வினா-விடையாக அமைவது

(5) நாமா : வரலாறு கூறுவது

இந்த ஐந்து வகை இலக்கியங்களையும் புத்திலக்கியம் என்பர்.

இவ்வாறு முகம்மதியப் புலவர்கள் இலக்கியங்கள் படைத்துத் தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடித் தந்தனர். பாரசீக - அரேபிய உருதுச் சொற்கள் பலப்பல தமிழில்கலந்தன. இன்றும் நம்மிடையே இஸ்லாமிய அறிஞர் பலர் புலமை சான்றவர்களாக விளங்குகின்றனர்.

**ஊ. கிறித்துவமும் தமிழும்:**

தமிழ் நாட்டில் பிறந்த மதங்கள் சைவமும் வைணவமும். புகுந்த மதங்கள் சமணமும் பௌத்தமும். அவைபோலவே பின் வந்த மதங்கள் கிறித்துவமும் இஸ் லாமும். எல்லாச் சமயங்களும் இலக்கியங்களைத் தந்து தமிழ்மொழியைச் செழிக்கச் செய்தன. இக்கட்டுரையில் கிறித்துவ சமயத்தால் தமிழ் பெற்ற சிறப்பினைப் பார்ப்போம்.

உலக மதங்களில் கிறித்துவமும் ஒன்று. அதைச் சார்ந்த ஆங்கிலேயர், போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர்கள் போன்றவர்கள் வாணிகத்தின் பொருட்டு நம் நாட்டுக்கு வந்தனர். தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்ப வேண்டுமெனில் இங்கு உள்ள மொழிகளைக் கற்க வேண்டுமென அறிந்தனர். நம் மொழிகளில் புலமை பெற்றனர். அவர்கள் சமயத்தொண்டு தமிழ்த் தொண்டாகவும் மலர்ந்தது.

பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் சேவியர், பிரிட்டோ - என்பவர்கள் கிறித்துவக் கொள்கைகளை, செபங்களை, வழிபாட்டு முறைகளைத் தமிழில் மொழிபெயர்த்தார்கள்.

**தத்துவ போதகர்:**

அக்காலத்தில் ஐரோப்பியப் பாதிரியார் தெநொபிலி என்பவர் பிராமணக் கோலம் பூண்டு மதுரையில் தங்கிக் கிறித்துவ சமயத் தொண்டாற்றினார். புலாலுணவைக் கைவிட்டு வடமொழி கற்று

குறிப்பு

மந்திரங்களும் ஓதினார். தன் பெயரைத் தத்துவ போதகர் என ஆக்கிக் கொண்டார். "ஆத்ம நிர்ணயம்" ஞானோபதேச காண்டம் முதலான உரைநடைகளை கிறிஸ்துவமும் தமிழும்

**வீரமாமுனிவர்:**

கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பது இவரது இயற்பெயர். சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றார். திருக்குறளும் சிந்தாமணியும் கம்பராமாயணமும் அவர் மனத்தைக் கவர்ந்தன. சிந்தாமணி போலக் காப்பியம் செய்ய நினைத்தார். அதன் பயன் ஏசுநாதரை வளர்த்த சூசையப்பர் வரலாற்றை தேம்பாவணி என்னும் காப்பியமாகப் படைத்தார். திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மன் அம்மானை, அடைக்கலமாலை, தொன்னூல் விளக்கம் முதலிய சிற்றிலக்கியங்களையும் இயற்றித் தமிழுக்கு அணி செய்தார். சதுரகராதி என்னும் பெயரில் முதன்முதலில் தமிழுக்கு அகராதி தந்தவர் இவரே. பரமார்த்த குரு கதை இவரெழுதிய நகைச்சுவை கலந்த உரைநடையாகும். இவரை உரைநடையின் தந்தை என்பர். ஏ, ஏ, ஒ,ஓ, என்ற எழுத்துக்கள் முதலில் வேறுபாடின்றி இருந்தன. அவற்றை மாற்றி இன்றைய எழுத்து முறையைத் தந்தவரும் இவரே. தம் பெயரையும் தமிழ் முறைப்படி வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டதோடு மது, மாமிசம் சாப்பிடாமலும் இருந்தார். தமிழின் பல துறைகளுக்கு இவர் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

**சீகன்பால்கு ஐயர்:**

தமிழ் நாட்டில் முதன்முதலாக பிராடஸ்டன்ட் மதத்தை பரப்பிய குரு இவரே ஆவார். இவர் பைபிளின் சில பகுதிகளைத் தமிழ்ப் படுத்தியுள்ளார். தமிழ் இலத் தீன் ஒப்பிலக்கண ஆய்வு என்னும் அரிய நூலை இயற்றியுள்ளார்.

**எல்லிஸ் துரை:**

திருக்குறள் முதல் பதின்மூன்று அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதியுள்ளார்.

குறிப்பு

**போப்பையர்:**

தமிழின் சிறப்பை உலகறியச் செய்த பெருமக்களுள் டாக்டர் போப் தலைசிறந்தவர் ஆவார். தமிழ் நாட்டில் நாற்பதாண்டுகளும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் இருபத்து மூன்று ஆண்டுகளுமாகத் தமிழ்ப்பணி செய்தவர். திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புறநானூறு, நாலடியார், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களின் சில செய்யுட்களை மொழிபெயர்த்துள்ளார். தமிழ் மக்களின் நீதிச் சிறப்பை மேனாட்டாருக்குக் காட்டிய பெருமகன் இவர். தமது கல்லறையில் தமிழ் மாணவன் என்று பொறிக்கச் செய்தவர்.

**கால்டுவெல்:**

திருநெல்வேலியில் அமர்ந்து சமயப் பணி ஆற்றியவர். அயர்லாந்து நாட்டினர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் அரிய நூலை இயற்றினார். இதன் மூலமாக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு எல்லாம் ஒரு குடும்ப மொழிகள் என்பதை நிறுவினார்.

**இராபர்ட் டி நொபிலி:**

இத்தாலி நாட்டுக்காரர் தமிழ்நாட்டுத் துறவிபோல வாழ்ந்தார். தத்துவ போதக சாமி“ எனத் தம் பெயரை அழைத்துக் கொண்டார். முதலில் தமிழ் உரைநடை எழுதிய பெருமை இவரைச் சாரும். ஏசுநாதர் சரித்திரம், கடவுள் நிர்ணயம், ஆத்தும நிர்ணயம், முதலான நூல்களை எழுதினார்.

**தமிழ்நாட்டுக் கிறித்துவர்கள்:**

இவர்களும் தமிழுக்கு அரும் பெரும் பணியாற்றியவர்கள் ஆவர்.

**மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை:**

மாயூரத்தில் பணிபுரிந்தவர். நீதிநூல், பெண்மதிமாலை, சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் என்று இசைக்கும் தமிழுக்கும் தொண்டாற்றினார். தமிழில் பிரதாப முதலியார் சரித்திரம் என்று முதன்முதலில் நாவல் (புதினம்) எழுதியவர் இவரே. “பெண்கல்வி” உரைநடை நூல். நீதியையும் நேர்மையையும் வலியுறுத்துபவர்.

குறிப்பு

**வேதநாயக சாஸ்திரியார்:**

தஞ்சையில் சமயப் பணி ஆற்றியவர். பெத்லகேம் குறவஞ்சி, ஞான உலா, ஞானக்கும்மி போன்றவை இவர் இயற்றிய நூல்களாகும்.

**ஆபிரஹாம் பண்டிதர்:**

இசைத்தமிழுக்குப் புத்துயிர் கொடுத்தவர். தஞ்சையில் மருத்துவராக வாழ்ந்தவர். மேனாட்டு இசை, தமிழிசை இரண்டையும் ஒப்பிட்டு ஆராய்ந்தவர்.

**H.A.கிருஷ்ண பிள்ளை:**

ஜான் பனியன் என்பவர் எழுதிய The Pilgrims Progress என்னும் நூலைத் தழுவித் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்று நூலியற்றினார். 4000 விருத்தப் பாக்கள் கொண்டது. இவ்வாறாகக் கிறித்துவ சமயம் தமிழுக்குப் பெருஞ் சிறப்புச் செய்தது.

**பயிற்சி வினாக்கள்:**

**1.திருஞான சம்பந்தரின் சமயப்பணி, தமிழ்ப்பணி குறித்து எழுதுக**

பிள்ளைப் பருவத்திலேயே இறைவனைப் பாடியவர். ஆடல், பாடல் கலைகளை வழிபாட்டுக்கு உரியவை ஆக்கியவர். கோயில்களைப் பாடும் போது இயற்கை அழகுகளை எடுத்துரைத்துள்ளார். “கோயிலை வலம்வரும் மகளிர் நடமிடும் ஓசையையும் அதற்கேற்ப முழங்கும் முழவு ஓசையையும் கேட்ட பெண் குரங்குகள் மரமேறி மேக முழக்கமா மழையா என வானம் பார்க்கும் திருவையாறு'' எனப் பாடுகிறார்.

பதிகந்தோறும் இராவணன் கயிலை மலையைத் தூக்க முயன்று துன்பப்பட்டதையும் சிவபக்தன் ஆனதையும், பிரமனும் திருமாலும் தேடிக் காணமுடியாத பெருமை உடையவன் சிவன் என்பதையும் சமண பௌத்தத் துறவிகளின் போலி வாழ்க்கையைக் கடிந்தும் பாடுவார். சமண பௌத்தர் இல்லறத்தைப் பழித்தும் துறவறத்தைப் போற்றியும் கூறுவர். பெண்களைப் பெருமைப்படுத்தியவர் ஞானசம்பந்தர்.

‘‘மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்ல.ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.”

என்னும் பாடல் சைவர்களின் திருமணங்களில் இடம் பெறுவதாகும்.

அடியார்களுக்கு எல்லா நாளும் நல்ல நாள் என்னும் கொள்கை உடையவர்.

குறிப்பு

**2.சமணர்கள் தமிழுக்குப் படைத்தளித்த இலக்கணங்கள்: குறித்து விவரி**

அறநூல்கள், காப்பியங்கள், இலக்கணங்கள் எனப்பல நூல்களைச் சமணர்கள் இயற்றியுள்ளனர். அவ்வகையில் தமிழ் மொழிக் குப் பெருஞ்சிறப்புச் செய்துள்ளனர். தொல்காப்பியர் தந்தது தொல்காப்பியம். பழமையான இலக்கண நூல். இந் நூலுக்குப் பாயிரம் செய்த பனம்பாரனார் தொல்காப்பியரை பல்புகழ் நிறுத்த படிமையோன் என்று குறிப்பிடுகிறார். படிமை என்பது சமண சமயத்தைக் குறிப்பதாகும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, நேமிநாதம், நன்னூல், நம்பியகப் பொருள், வெண்பாப் பாட்டியல் முதலான நூல்கள் சமணர் இயற்றியவையே.

**3.பௌத்த சமயக் காப்பியங்களை விளக்கி வரைக**

பெருங்காப்பியங்களில் மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயக் காப்பியங்கள் ஆகும். கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையை இயற்றினார். மஹாயான புத்த சமயம் சார்ந்தது இந்நூல். புத்த சமயக் கொள்கைகளைப் போதிக்கவே இந்நூல் எழுந்தது, இதற்கு மணிமேகலை துறவு என்றே பெயரிட்டார் சாத்தனார்.

“வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கின் புலால் புறத்திடுவது” என்பன

புத்தக் கருத்துக்களை வலியுறுத்துவனவாகும்.

மக்களுக்கு வேண்டிய அறத்தையும் இந்நூல் வலியுறுத்துகிறது. ”மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும், உடையும் உறையுளும் அல்லது கண்டதில்லை ” என்கிறது.

நாதகுத்தனார் இயற்றியது குண்டலகேசி.இது விருத்தத்தாலும் கலிப்பாவாலும் அமைந்தது. சமண வைதிக சமயக் கருத்துக்களைத் தக்க முறையில் மறுக்கிறது. நிலையாமையை வலியுறுத்தும் பாடல் ஒன்று.

“பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும் காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்

மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரு மூப்புமாகி நாளும் நாம் சாகின்றோமால் நமக்கு நாம் அழாதது என்னே"



**4.சீறாப்புராணம்: - கட்டுரைக்க**

இயற்றியவர் உமறுப்புலவர். சீறா என்றால் வாழ்க்கை வரலாறு என்று பொருள். இவர் எட்டயபுரம் அரசவைக் கவிஞராக விளங்கியவர். வள்ளல் சீதக்காதியால் ஆதரிக்கப் பெற்றவர். அவர் வேண்டுகோளுக்கு இணங்கி நபிகள் நாயகத்தின் வரலாற்றை சீறாப்புராணம் எனப்பாடினார். மூன்று காண்டங்களில் 5026 பாடல்களில் வரலாறு அமைகிறது.

உமறுப்புலவர் இயற்றிய வேறு நூல்கள் சீதக்காதிக் கோவை, முதுமொழி மாலை என்பன. தமிழ் இலக்கியங்கள் போலவே சீறாப்புராணத்தில் நாட்டுப் படலம், நகரப் படலம் என அமைக்கிறார். குறவர் - குறத்தியர், பரண், தினைப்புனம், யாழ்-பறை, மா, பலா, வாழை எல்லாம் நாட்டுப் படலத்தில் இடம் பெறுகின்றன. நகரப் படலம் என மெக்காவைப் பாடுகிறார். மதுரையைப் பாடுவது போலவே அது அமைகிறது. அவரது தமிழ் நூல்களின் தோய்வு தெரிகிறது. உவமை, உருவகங்களைக் கையாளுகிறார். அவரது கடவுள் வாழ்த்து அருமையான பாடலாக விளங்குகிறது.

"திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக்கு அணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
கருவினும் கருவாய்ப் பெருந்தவம் புரிந்த
கருத்தனைப் பொருந்துதல் கருத்தே"

**5. .ஜி, யு. போப்பின் தமிழ்ப் பணிகளைச் சுட்டியுரைக்க.**

தமிழின் சிறப்பை உலகறியச் செய்த பெருமக்களுள் டாக்டர் போப் தலைசிறந்தவர் ஆவார். தமிழ் நாட்டில் நாற்பதாண்டுகளும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் இருபத்து மூன்று ஆண்டுகளுமாகத் தமிழ்ப்பணி செய்தவர். திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புறநானூறு, நாலடியார், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களின் சில செய்யுட்களை

மொழிபெயர்த்துள்ளார். தமிழ் மக்களின் நீதிச் சிறப்பை மேனாட்டாருக்குக் காட்டிய பெருமகன் இவர். தமது கல்லறையில் தமிழ் மாணவன் என்று பொறிக்கச் செய்தவர்.

குறிப்பு

## கூறு: 14

**இணையம்:**

இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கமே கம்ப்யூட்டர் (கணினி) யுகமாக அமைகிறது. எந்தத் துறையிலும் கணினியின் இன்றியமையாமை உணரப்படுகிறது. வலைப்பின்னல் (Networks) பல விந்தைகள் சாதனைகள் புரிகின்றன. தொலைக்காட்சி இணைப்பு, ரெயில்வே இணைப்பு, தபால் தந்தி இணைப்பு என்று எல்லா வலைப்பின்னல்களும் பொதுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. பல இடங்களில் அமைந்த இவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவை. ரயில்வே வலைப்பின்னல் பல இடங்களில் அமைந்த நிலையங்களை ஒன்றொடொன்று தொடர்புபடுத்திப் பிணைக்கிறது. அது பொதுத் தேவையான பயணம் என்பதை நிறைவேற்றுகிறது. அதுபோலவே பிற இணைய இணைப்புக்களும் பயன்படுகின்றன.

ஒரு நாட்டிலுள்ள பலநூறு கணினி இணையங்கள் ஒரு முதுகெலும்புப் பிணையத்தில் இணைக்கப்படுகின்றன. (Backbone network ) இதன் காரணமாகஒரு பிணையத்தில் இணைக்கப்பட்டுள்ள ஒரு கணினியில் இருந்து வேறொரு பிணையத்தில் இணைக்கப்பட்டுள்ள கணினியுடன் தொடர்பு கொள்ள முடிகின்றது.

இவ்வாறு ஒவ்வொரு நாட்டில் உள்ள முதுகெழும்புப் பிணையங்கள் அந்தந்த நாட்டின் நுழைவாயில் கணினி அமைப்பு ( Gate way ) அமைப்பு வழியாகத் தமக்குள்ளே இணைக்கப்படுகின்றன. இதன் காரணமாக ஒரு நாட்டில் உள்ள கணினியில் இருந்து வேறொரு நாட்டில் உள்ள கணினியுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. நாடு முழுவதும் உள்ள இணைய சேவைகள் (Internet service providers )தத்தம் மையக் கணினி அமைப்புகளை முதுகெலும்பு இணையத்தில் இணைத்துள்ளனர். நமது வீட்டில் உள்ள கணினியில் கணக்கு

குறிப்பு

வைத்துள்ள இணையதள சேவையாளரின் மையக் கணினியுடன் தொலைபேசி மூலமாக தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் உலகின் எந்த மூலையிலும் உள்ள கணினி அமைப்புடன் தொடர்பு கொள்ள முடிகிறது. ஆகவே இணையம் என்பது பல்லாயிரக்கணக்கான கணினிப் பிணையங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட பிணையங்களின் பிணையமாய்ச் (Network of Network) இருக்கிறது. பயனாளர்கள் தனிப்பட்ட கணினியிலிருந்து இணையத்தில் இணைத்து பயன் பெற முடிகிறது. எனவே உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் தொலைபேசிக் கட்டமைப்பு இணையத்தின் வளர்ச்சி நேரடிப் பங்கு வகித்துள்ளது.

வலைப்பின்னல் என்பதன் மூலம் கணினிகள் பங்கேற்றுச் செய்திகளைச் சிறிய தூரங்களுக்கு அல்லது உலகிற்குத் தருகின்றன. Around the World in eighty days என்பது பழைய நாவல். Around the world in eighty seconds என்பது கணினி மொழியாகும். அவ்வளவுக்கு கணினி செயற்படுகிறது.

இந்த இணையங்களை நன்றாகப் பயன்படுத்துவது என்பது வணிக அபிவிருத்திக்கும், திறமையோடு பொருள்களை உற்பத்தி பண்ணுவதற்கும் விலையைக் குறைத்து வியாபாரத்தைப் பெருக்குவதற்கும் உதவுவதாகும். ஒரு குழுவில் அமைந்துள்ள ஒவ்வொருவருக்கும் இந்த இணைப்பு உதவுகிறது. சிறிய அலுவலகங்கள் கொண்ட குழுக்களையும் பெரிய நிறுவனங்கள் கொண்ட அமைப்புக்களையும் இணைக்கின்ற மாதிரி இந்த இணைய இணைப்புக்கள் விளங்குகின்றன.

இணையம் (Internet) என்பது பலப் பல இணைப்புக்களைக் கொண்ட இணைப்பாகும். அது உலகளாவிய பல ஆயிரம் வியாபார நிறுவனங்களை - பல்கலைக் கழகங்களை - ஆராய்ச்சி அமைப்புக்களைக் கொண்டதும், இணைப்பதும் ஆகும். தொடர்பு கொண்ட பல கோடி மக்களுக்கு இவ்வாறு பயன்படுகிறது. ஐம்பது நாடுகளில் உள்ள பல லட்சம் மக்கள் இன்று இன்டர்நெட்டைப் பயன்படுத்துகிறார்கள். நாடோறும் இப் பயன்பாடு பெருகிக் கொண்டே போகிறது. ஒவ்வொரு ஆறு மாதத்திலும் பயன்படுத்துவோர் எண்ணிக்கை இரட்டிப்பாகிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.கணினி மூலம் செய்திகள்

மிக விரைவில் பரவுகின்றன. "பெருவழி மூலம் தகவல்'Information Super highway' என்று இதனைக் குறிப்பர்.

இந்த இணையத்தின் பெருஞ்சிறப்பு என்னவென்றால் இதை நிர்வகிப்பவர், நெறிப்படுத்துவர் என்று எவருமில்லை என்பது தான். சிறிய குழுவின் இணைப்பும் பெரிய அளவில் பயன்தரத் தக்கதாக அமைந்து விடுகிறது.

**இணையத்தின் பயன்பாடுகள்:**

இன்று இணையம் மக்கள் வாழ்க்கையைப் பெருமளவில் மாற்றியுள்ளது. நமக்குக் கைக்கு எட்டிய தொலைவில் உலகச் செய்திகளைக், கொண்டு வந்து நிறுத்துகிறது. நம்முடைய தகவல்களை-கருத்துக்களை வெளிப்படுத்துகிற வாய்ப்பை நமக்குத் தருகிறது. உலக நாடுகளின் வியாபாரப் பெருக்கத்திற்கும் மக்களுடைய வாய்ப்புக்கள் பெருகுவதற்கும் இணையம் பேருதவி புரிகிறது. இவ்வாறு ஒரு பெருஞ் சக்தியாக அது விளங்குகிறது.

**தகவல் களஞ்சியம்**:

இணையத்தில் மனித சமூகம் இதுவரை சேமித்து வைத்த அறிவுக்களஞ்சியம் முழுக்க கிடைக்கிறது. அத்தகைய மனித அறிவின் பயனைப் பெற விரும்புவோர் தேடும் தகவலை இணையத்தில் எளிதில் பெற முடியும். இது மனித சமுகத்தின் நேரத்தினை மிச்சப்படுத்துவதுடன் உடனடிச் செயல்பாட்டிற்கும் வழிவகுக்கின்றது.

**தேடல் தளம்:**

மனிதனின் மூளையானது எல்லாத் தகவல்களையும் சேகரித்து தன்னகத்தே அழியாமல் பாதுகாக்கக் கூடியதல்ல. இதன் காரணமாக, நம்முடைய ஞாபக மறதிகளுக்கான மருந்தாக வாய்த்திருக்கிறது இணைய தேடுபொறிகள் (Search engines).

நாம் அறிய விரும்பும் பொருள்கள் எதுவானாலும் கூகுளில் தேடினால் கிடைக்கும் என்கிற நம்பிக்கையை அந்நிறுவனம் மக்களிடையே, பல்வேறு துறைசார்ந்தவர்களிடையே ஏற்படுத்தியிருக்கின்றது. நான் படித்து மறந்து போன ஏதோ ஒரு கவிதை வரியின் ஒரு வார்த்தையை உள்ளிட்டால் மொத்தக் கவிதைத் தொகுப்பையும் கண்முன் நிறுத்துகின்றன இணைய தேடுபொறிகள்.

அவ்வகையில் இணையத் தமிழ் முன்னெப்போதும் அடையாத வளர்ச்சியைக் கடந்த சில ஆண்டுகளில் பெற்றுள்ளது. தமிழில் உள்ள வளங்கள் யாவும் மின்வடிவில் சேகரிக்கப்படுவதன் மூலமாக எதிர்காலத் தலைமுறையினருக்குமாக தொண்டாற்றுகிறது இணையம்.

**செய்தித்தளம்:**

பத்திரிக்கைகள் நாளிதழ்கள் தரும் செய்திகளை போன்ற செய்திகளையும் இணையம் தருகின்றது இணையத்தில் வெளிப்படும் பத்திரிகைகளில் சில மணி நேரத்திற்கு ஒரு தடவை செய்திகள் புதுப்பிக்கப்படுகின்றன எனவே அச்சில் வெளிவந்து கொண்டிருக்கும் பிரபலமான பத்திரிக்கைகள் அனைத்தும் இணையத்தில் இலவசமாகக் கிடைக்கின்றன. இவை தவிர இணையத்தில் மட்டுமே பிரசுரிக்கப்படும் இன்னும் ஏராளமாக உள்ளன.

**கடிதப் போக்குவரத்து:**

இணையத்தின் பெரும் பயன்களில் அடுத்ததாக அறியப்படுவது மின்னஞ்சல் ( E – mail) வசதியாகும். ஒருவரிடம் இணைய இணைப்பு ( Internet Account ) பெறும் போது மின்னஞ்சல் வசதியும் கிடைத்துவிடுகிறது. இலவச மின்னஞ்சல் சேவையை வழங்கும் நிறுவனங்களும் காணப்படுகின்றன. மின்னஞ்சல் மூலமாக உலகின் எந்த மூலையில் வசிப்பவர்கள் கடிதம் அனுப்ப முடியும். அவருக்கு ஒரு மின்னஞ்சல் முகவரி இருந்தால் போதுமானது. மின்னஞ்சல் முகவரி உலகுக்கு மனிதர்களைத் தனித்து அடையாளம் காட்டுகிறது

**மின்வழிக் கற்றல்:**

கல்வி பயிலும் மாணவர்களுக்கு தேவையான தகவல்கள் யாவும் இணையத்தில் உள்ளன. கல்வி கற்பது இணையம் மூலம் சாத்தியமாகும் என்ற நிலை இன்று உருவாகியுள்ளது. இணைய வழிக் கற்றல் பெருகத் தொடங்கியிருப்பதன் மூலம், மாணவர்களுக்கும், கற்றலின்பால் ஆர்வங்கொண்ட பலருக்கும் இணையம் குருவாக விளங்கத் தொடங்கியிருக்கிறது. பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைகழகங்கள், கல்வி அமைப்புகள் இணையவழி கற்றலை சான்றிதழ்கள் மூலம் அங்கீகரிப்பதும், தொடர்ச்சியாக அதை முன்னெடுப்பதும் ஆரோக்கியமான நிகழ்வுகள் எனலாம். இதன்வழி

வீட்டிலிருந்தே கல்வி பயில்வதற்கான வாய்ப்பை ஆர்வமுள்ள எல்லோருக்கும் வழங்குகிறது இணையம்.

குறிப்பு

**மின்வாசிப்புக் களம்:**

தமிழ் மொழியின் பிரபல எழுத்தாளர்களாகக் கருதப்படும் பலருடைய படைப்புகளும் இணையத்தில் மின் நூல்களாகக் கிடைக்கின்றன. என்னும் இம்முயற்சியானது மேலும் மேற்கொள்ளப்படவேண்டிய தேவை அதிகரித்து உள்ளது. ஓலைச்சுவடிகளை அச்சுநூல்களாக மாற்றிய சென்ற நூற்றாண்டுகளின் தொடர்ச்சியாக, காலத்தால் அழியாத வகையில் முக்கியமான படைப்புகளை மின்வடிவில் ஆவணப்படுத்துவது இப்போது முக்கியமானதாகும். முக்கியமாக நாட்டுடைமையாக்கப்பட்ட படைப்புகளை முழுமையாக ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. இது அடுத்த தலைமுறையினருக்குத் தமிழின் அறிவுத்தளங்களை அறிமுகப்படுத்தவதாய் அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

**வணிகம்**:

வீட்டிலிருந்தபடியே கணினி முன் அமர்ந்து கொண்டு இணையத்தில் கடை பரப்பி உள்ள மெய்நிகர் அங்காடிகளில் ( Virtual Shops ) பொருள்களைப் பார்வையிட்டு பற்று அட்டை ( Credit card) மூலம் இணையம் வழியாகவே பணம் செலுத்தி பொருள் வாங்கும் மின் வணிகம் ( E- Commerce ) இப்போது பரவலாகி வருகிறது. இணையவழி வணிக பரிவர்த்தனைகளின் தாக்கம் தற்போது சாதாரண மக்களையும் எட்டியுள்ளதால், மின் வணிகம் நல்ல மதிப்பையும், வளர்ச்சியையும் பெற்றுள்ளது. அதிலும் தற்போதைய இளைஞர் சமுதாயத்தின் தேவைகள் அனைத்தும் இணையத்தின் மூலமாக எளிதில் கிடைக்கின்றன. சலுகை விலையில் அன்றாடத் தேவைக்கான பொருட்கள், அழகுசாதன, அலங்காரப் பொருட்கள், புத்தகங்கள், ஒலி, ஒளி குறுந்தகடுகள், புத்தகங்கள், ஒலிப் பேழைகள், வாழ்த்து அட்டைகள், மென்பொருள் தொகுப்புகள் இன்னும் இன்னும் நிறைய பொருட்கள் மின்வணிக நிறுவனங்கள் மூலமாக இணையத்தில் கிடைக்கின்றன. இவ்வாறாக வாங்கப்படும் பொருட்களின் தரமும், விலையும் வாடிக்கையாளர்களிடையே நம்பகத்தன்மையை தொடர்ந்து

அதிகரித்துக் கொண்டே இருப்பதால், இணையத்தில் இவ்வகை வணிகங்களின் எதிர்காலம் வளமாகவே உள்ளது. மக்களின் நேரத்தினையும், பணத்தினையும் மிச்சப்படுத்துவதற்கு இவை உதவியாக உள்ளன. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, பிரபல அமெரிக்க மின்வணிக நிறுவனமான அமேசான் ஆளில்லா விமானங்களின் மூலம் பொருட்களை அனுப்பி வைக்கும் முறையை பரிசீலித்து வருவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. பயணச்சீட்டு முன்பதிவு, திரைப்பட சீட்டு முன்பதிவு, தங்குமிடம் முன்பதிவு, வங்கி நடைமுறைகள் என்பன போன்ற வணிக நடவடிக்கைகள் பலவும் இணையம் வழியாக நடைபெறத் தொடங்கியுள்ளன.

**பொழுதுபோக்கு**:

இணையம் ஒரு பொழுதுபோக்கு தளமாகவும் விளங்கி வருகிறது. பல்வேறு நிகழ்ச்சிகளை இணையத்தில் கண்டு ரசிக்க முடியும். தனிமையை விரட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களும் இணையத்தில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

**வேலைவாய்ப்பு**:

இணையத்தை ஒரு சிறந்த வேலைவாய்ப்பு அலுவலக பயன்படுத்திக்கொள்ள முடியும். வேலைவாய்ப்பு தொடர்பான விவரங்களை இணையம் மூலம் அறிந்து கொள்ள முடியும். வேலைக்கு ஆள் தேவை விளம்பரங்களையும் பார்க்க முடியும் இல்லத்தில் இருந்தபடியே இணையம் வழியாக அலுவலகப் பணிகளை மேற்கொள்வோரின் எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகரித்து வருகிறது. பிரபலமான பெருநிறுவனங்களும் தங்கள் ஊழியர்களுக்கு இதனைப் பரிந்துரைக்கின்றன. இதன்மூலம் நிறுவனத்தின் பணிகள் விரைவாக முடிக்கப்படுவதுடன் ஊழியர்களுக்குக் காலம், பணம், பயண அலைச்சல் குறைவதுடன் மனநிறைவும் ஏற்படுகிறது.

**உரையாடும் களம்:**

தனிமனித உரையாடல்கள் ஏறக்குறைய மறைந்துவரும் சமூகத்தில், இணையம் அதற்கான வடிகாலாக் மாறியிருக்கிறது. மணிக்கணக்கில் நேரத்தை இணையத்தில் செலவிடும் இளைஞர்களின் மனப்போக்கில் மூலம் இதை எளிதாக அறிய முடியும். உலகளவில்

சமூக வலைத்தளங்களுள் முதன்மையானதாகக் கருதப்படும் ∴பேஸ்புக்கை அதிகம் பயன்படுத்தும் உலக நாடுகளில் இந்தியாவும் முன்னணியில் உள்ளது. அதே நேரம் இந்தியாவில் 8 முதல் 12 வயது வரையிலான 89 சதவீதம் குழந்தைகள் பெற்றோர் அனுமதியுடன் ∴பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களை அணுகுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது சிறந்த அணுகுமுறை ஆகும்.

மேலும் மனிதர்கள் வெளிநாடுகளில் இருக்கும் மகனிடமோ, உறவினரிடமோ உரையாடுவதற்கான வாய்ப்பையும் இணையம் வழங்குகிறது. அருகில் அமர்ந்து பேசும் வாய்ப்பினை, உரையாடல்கள் நீர்த்துப் போன இக்காலத்தில் இணையம் எளிய முறையில் பக்கத்தில் அமர்ந்து பேசுவதுபோல் உணரும் வகையில் Skype முதலானவை பலவழிகளைக் காட்டுகின்றன.

**வலைப்பூக்கள்–வலைத்தளங்கள்:**

ஒன்றினை எழுதும் விருப்பம் உள்ள யார் வேண்டுமானாலும் எழுதலாம். எந்தப் பிரிவின் கீழும் எழுதலாம். அவர்களே அதனை வெளியிடவும் செய்யலாம். அவ்வாறு வெளியிட்ட கருத்துகளுக்கு, பதிவுகளுக்கு உடனடியாக எதிர்வினையையும் பெறலாம் என்கிறபடியாக பல்வேறு நல்லியல்புகளைக் கொண்டிருப்பதாலோ என்னவோ தமிழ் வலைப்பதிவுகளின் எண்ணிக்கையும், அதில் இயங்குபவர்களின் பங்களிப்பும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகின்றது. சமுகத்தின் பல்வேறு தளங்களில் வாழும் மக்களும் இதில் பங்களிக்கத் துவங்கியிருப்பதால், தமிழ்ச்சமூகத்தின் வாசிப்பு வளம் பெருகத் தொடங்கியிருப்பதைக் காணமுடிகின்றது. அத்தோடு, புதிய எழுத்தாளர்கள் பலரும் உருவாகிவருவதும் மறுக்க முடியாத உண்மை ஆகும்..

**கலைக்களஞ்சியங்கள்–அகராதிகள்:**

இணையவெளியின் கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிபீடியாவின் தமிழ்ப் பக்கத்திற்கு பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களின் நெடும் பங்களிப்பினை அளித்து வருகின்றனர். அதனால் தமிழ்மொழியானது ஆரம்பிக்கப்பட்டே பத்தே ஆண்டுகளில் இந்திய மொழிகளில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்

குறிப்பு

விக்கிபீடியாவில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட பங்களிப்பாளர்கள் 57 ஆயிரத்துக்கும் மேலான கட்டுரைகளை எழுதியுள்ளனர். உலக அளவில் 287 மொழிகளில் 60-ஆவது இடத்தில் தமிழ் விக்கிபீடியா உள்ளது.

இணையத்தில் உள்ள மின் அகராதிகள், மொழிமாற்றிகள் மூலமாக பல்வேறு மொழிகளையோ, அல்லது குறிப்பிட்ட வேற்றுமொழிச் சொல்லுக்கான பொருளையோ உடனடியாக அறிய முடிகிறது.

**சமூக மாற்றங்கள்:**

அண்மையில் ட்விட்டர், ∴பேஸ்புக் போன்ற தளங்களில் நடைபெற்ற விரைவான தகவல் பரிமாற்றங்களின் காரணமாய் சில நாடுகளில் சமூக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவிலும் சமூகவலைதளங்களின் தாக்கம் தற்போது அதிகரித்து வருகிறது. பல்வேறு இந்திய அரசியல் மற்றும் சமூக நிகழ்வுகளின் பின்னணியில் ட்விட்டர், ∴பேஸ்புக் உள்ளிட்ட சமூகவலைதளங்களின் தாக்கங்கள், எதிரொலிகள் இருக்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை எதிர்வரும் காலங்களில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரச்சாரத்திற்கு சமூகவலைதளங்கள் பெருமளவு உதவும். பெரும்பாலான இளைஞர்கள் இவற்றைப் பயன்படுத்துவதும், உடனடியாக எதிர்வினை தருவதுமாய் இருப்பதால் சமூக நிகழ்வுகள் இதில் முக்கியத்துவப்படுத்துகிறது. ஆனாலும் ஆழமான விவாதங்கள் அதிகளவில் முன்னெடுக்கப்படு வதில்லை என்கிற குறை இருந்து வருகின்றது. எதிர்வரும் காலங்களில் ஆழமான சமூக விவாதங்களுக்கும் சமூக வலைதளங்கள் களம் அமைக்கக் கூடும் என நம்பலாம்.

**பயிற்சி வினாக்கள்:**

**1. இணையம் என்பது குறித்து எழுதுக.**

இணையம் (Internet) என்பது பலப் பல இணைப்புக்களைக் கொண்ட இணைப்பாகும். அது உலகளாவிய பல ஆயிரம் வியாபார நிறுவனங்களை - பல்கலைக் கழகங்களை - ஆராய்ச்சி அமைப்புக்களைக் கொண்டதும், இணைப்பதும் ஆகும். தொடர்பு கொண்ட பல கோடி மக்களுக்கு இவ்வாறு பயன்படுகிறது. ஐம்பது நாடுகளில் உள்ள பல லட்சம் மக்கள் இன்று இன்டர்நெட்டைப் பயன்படுத்துகிறார்கள். நாடோறும் இப் பயன்பாடு பெருகிக் கொண்டே போகிறது. ஒவ்வொரு ஆறு மாதத்திலும் பயன் படுத்து வோர்

எண்ணிக்கை இரட்டிப்பா கி றது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.கணினி மூலம் செய்திகள் மிக விரைவில் பரவுகின்றன. “பெருவழி மூலம் தகவல்'Information Super highway' என்று இதனைக் குறிப்பர்.

குறிப்பு

இந்த இணையத்தின் பெருஞ்சிறப்பு என்னவென்றால் இதை நிர்வகிப்பவர், நெறிப்படுத்துவர் என்று எவருமில்லை என்பது தான். சிறிய குழுவின் இணைப்பும் பெரிய அளவில் பயன்தரத் தக்கதாக அமைந்து விடுகிறது.

**2 இணையத்தின் வணிகப் பயன்பாட்டினை விளக்குக.**

**இணையத்தின் வணிகப் பயன்பாடு:**

வீட்டிலிருந்தபடியே கணினி முன் அமர்ந்து கொண்டு இணையத்தில் கடை பரப்பி உள்ள மெய்நிகர் அங்காடிகளில் ( Virtual Shops ) பொருள்களைப் பார்வையிட்டு பற்று அட்டை ( Credit card) மூலம் இணையம் வழியாகவே பணம் செலுத்தி பொருள் வாங்கும் மின் வணிகம் ( E- Commerce ) இப்போது பரவலாகி வருகிறது. இணையவழி வணிக பரிவர்த்தனைகளின் தாக்கம் தற்போது சாதாரண மக்களையும் எட்டியுள்ளதால், மின் வணிகம் நல்ல மதிப்பையும், வளர்ச்சியையும் பெற்றுள்ளது. அதிலும் தற்போதைய இளைஞர் சமுதாயத்தின் தேவைகள் அனைத்தும் இணையத்தின் மூலமாக எளிதில் கிடைக்கின்றன. சலுகை விலையில் அன்றாடத் தேவைக்கான பொருட்கள், அழகுசாதன, அலங்காரப் பொருட்கள், புத்தகங்கள், ஒலி, ஒளி குறுந்தகடுகள், புத்தகங்கள், ஒலிப் பேழைகள், வாழ்த்து அட்டைகள், மென்பொருள் தொகுப்புகள் இன்னும் இன்னும் நிறைய பொருட்கள் மின்வணிக நிறுவனங்கள் மூலமாக இணையத்தில் கிடைக்கின்றன. இவ்வாறாக வாங்கப்படும் பொருட்களின் தரமும், விலையும் வாடிக்கையாளர்களிடையே நம்பகத்தன்மையை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருப்பதால், இணையத்தில் இவ்வகை வணிகங்களின் எதிர்காலம் வளமாகவே உள்ளது. மக்களின் நேரத்தினையும், பணத்தினையும் மிச்சப்படுத்துவதற்கு இவை உதவியாக உள்ளன. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, பிரபல அமெரிக்க மின்வணிக நிறுவனமான அமேசான் ஆளில்லா விமானங்களின் மூலம் பொருட்களை அனுப்பி வைக்கும் முறையை பரிசீலித்து வருவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.பயணச்சீட்டு முன்பதிவு, திரைப்பட சீட்டு

குறிப்பு

முன்பதிவு, தங்குமிடம் முன்பதிவு, வங்கி நடைமுறைகள் என்பன போன்ற வணிக நடவடிக்கைகள் பலவும் இணையம் வழியாக நடைபெறத் தொடங்கியுள்ளன.

**வலைப்பூக்கள்–வலைத்தளங்கள் குறித்து எழுதுக.**

ஒன்றினை எழுதும் விருப்பம் உள்ள யார் வேண்டுமானாலும் எழுதலாம். எந்தப் பிரிவின் கீழும் எழுதலாம். அவர்களே அதனை வெளியிடவும் செய்யலாம். அவ்வாறு வெளியிட்ட கருத்துகளுக்கு, பதிவுகளுக்கு உடனடியாக எதிர்வினையையும் பெறலாம் என்கிறபடியாக பல்வேறு நல்லியல்புகளைக் கொண்டிருப்பதாலோ என்னவோ தமிழ் வலைப்பதிவுகளின் எண்ணிக்கையும், அதில் இயங்குபவர்களின் பங்களிப்பும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகின்றது. சமுகத்தின் பல்வேறு தளங்களில் வாழும் மக்களும் இதில் பங்களிக்கத் துவங்கியிருப்பதால், தமிழ்ச்சமூகத்தின் வாசிப்பு வளம் பெருகத் தொடங்கியிருப்பதைக் காணமுடிகின்றது. அத்தோடு, புதிய எழுத்தாளர்கள் பலரும் உருவாகிவருவதும் மறுக்க முடியாத உண்மை ஆகும்..

**குறிப்பு**

## மாதிரிவினாத்தாள்- I

## அழகப்பா பல்கலைக்கழகம்

## தொலைதூரக் கல்வி இயக்ககம்

## 13721 பகுதி I- தமிழ் - தாள் - II

### பகுதி - அ

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக:**

**( 10 X 2 = 20 )**

1. ‘தோடுடைய செவியன்’ எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியவர் யார்?

2. ‘அஞ்சுகுடிக்கொரு சந்ததி’ எனப்பட்டவர் பெயரைத் தருக.

3. சிதம்பர மும்மணிக்கோவையின் ஆசிரியர் பெயரைக் குறித்துரைக்க.

4.நீலபத்மநாபன் தனது எந்தப் படைப்பிற்காகச் சாகித்ய அகாதெமி விருது பெற்றார்?

5. ‘தேடிப்போனபோது’ சிறுகதையின் கதைத்தலைவன் பெயரைச் சுட்டுக.

6.நூழிலாட்டு என்றால் என்ன?

7.முதலெழுத்துக்களைச் சுட்டியுரைக்க.

8.ஆகுபெயர் – குறித்துரைக்க

9.முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர் யார்?

10. 'Information Super highway' என்பதன் தமிழாக்கம் யாது?

### பகுதி – ஆ

I. **அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக. ( 5 X 5 = 25 )**

11( அ) தொண்டர்மனப் பொற்கோயில் குடிகொண்ட மாணிக்கவல்லி குறித்து மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் உரைப்பன யாவை?

( அல்லது )

**குறிப்பு**

**(ஆ)** **'**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்' என்பதனைத் திருப்பாவை கொண்டு விளக்குக.

12 (அ) வானவீதியில் சிறுகதையின் கதைப் பொருளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கம்பன் காட்டும் தார்நிலை குறித்து எழுதுக

13 (அ ) சார்பெழுத்துக்களின் வகைகளை விவரி

(அல்லது)

(ஆ) பெயர்ச்சொல் - விரித்தெழுதுக

14 (அ) மரபுக் கவிதையில் பாரதி பெறுமிடத்தை நிறுவுக

(அல்லது)

(ஆ) கல்கியின் புதினங்கள் குறித்து விவரி

15( அ )முதல் ஆழ்வார்கள் - குறித்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஜி. யு. போப்பின் தமிழ்ப்பணி குறித்து எழுதுக.

## பகுதி - இ

**II. எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.**

**(3 X 10 = 30 )**

16.'வேயுறு தோளிபங்கன்' பதிகம் உணர்த்தும் சிவபெருமானின் அருட்திறத்தினைக் கட்டுரைக்க.

17.நீலபத்மநாபனின் சிறுகதைகளில் காணப்படும் சமுதாயச் செய்திகளைத் தருக.

18.புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

19.இதழ்கள் தமிழுக்கு ஆற்றிவரும் பணிகளை விரித்தெழுதுக.

20.இணையத்தின் பயன்பாடுகளை விளக்கி வரைக.

**குறிப்பு**

## மாதிரிவினாத்தாள் - II

## அழகப்பா பல்கலைக்கழகம்

## தொலைதூரக் கல்வி இயக்ககம்

## 13721 பகுதி I- தமிழ் - தாள் - II

### பகுதி - அ

**I.அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக:**

**( 10 X 2 = 20 )**

1.பாண்டிய நாட்டில் திருஞானசம்பந்தரைக் கொண்டு சைவத்தை தழைக்கச்செய்த அரசியின் பெயரைத் தருக.

2.‘சுரும்பார் குழற்கோதை’ என அழைக்கப்பட்டவர் யார்?

3.கந்தர் கலிவெண்பா யாரால் பாடப்பெற்றது?

4.நீலபத்மநாபன் தனது எந்தப் படைப்பிற்காகத் தமிழக அரசின் விருது பெற்றார்?

5.அன்புள்ள கல்பனாவிற்கு சிறுகதை உணர்த்தும் பொருள் யாது?

6.பாசிநிலை என்றால் என்ன?

7.தற்சமம் என்பதனைச் சுட்டியுரைக்க.

8.அன்மொழித்தொகை – குறித்துரைக்க

9.உமறுப் புலவரால் எழுதப்பெற்ற காப்பியத்தின் பெயர் யாது?

10.மணிமேகலை எச்சமயக் காப்பியம்?

### பகுதி – ஆ

**II.அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

**( 5 X 5 = 25 )**

11( அ) கோளறு பதிகம் எழுந்த சூழலை விளக்குக?

( அல்லது )

(ஆ) மழவிளங் களிறீன்ற பிடியே வருக – விளக்கி வரைக.

**குறிப்பு**

12 (அ) விமோசனம் சிறுகதையின் கதைப் பொருளைத் தொகுத்துரைக்க.

( அல்லது )

(ஆ) கம்பன் காட்டும் இந்திரசித்து போர்முறைமை குறித்து எழுதுக

13 (அ) வல்லெழுத்துகள் மிகும் இடங்களைச் சுட்டியுரைக்க.

( அல்லது )

(ஆ) குற்றிலுகரத்தின் வகைகளை விரித்தெழுதுக

14 (அ) பாரதிதாசனின் தமிழ்ப்பணி குறித்தெழுதுக

(அல்லது)

(ஆ) புதுமைப்பித்தன் சிறுகதைகள் குறித்து விவரி

15. (அ) குணங்குடி மஸ்தான் படைப்புகளின் சிறப்புகளைத் தருக.

(அல்லது)

(ஆ) இணையத்தின் வணிகப் பயன்பாடு குறித்து எழுதுக.

**பகுதி - இ**

**III.எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.**

**(3 X 10 = 30 )**

16. ஆண்டாள் தோழியைத் துயிலெழுப்பிய திறத்தினைத் திருப்பாவை கொண்டு கட்டுரைக்க.

17. நீலபத்மநாபனின் படைப்புத்திறனை நும் பாடப்பகுதி சிறுகதைகளின் வழி ஆராய்க.

18. கம்பன் காட்டும் புறத்திணைகள் குறித்து விளக்கி வரைக.

19. வானொலி தமிழுக்கு ஆற்றிவரும் பணிகளை விரித்தெழுதுக.

20. சைவமும் தமிழும் குறித்து விவரி